# பல்கலைப் புலவர்

# தமிழ்க்கா.சு.

## நூற்றாண்டு விழா மலர்



2018 திருவள்ளுவராண்டு. [1987

"விண்ணில் விளங்கும் கதிரவன்
(பிரபாத்) வரவு
மண்ணில் சோளக் கதிரின்
(மக்காச் சோளம்)
செழுமையின் திறவு"

தமிழ்க் கா. சு.வின் நூற்றாண்டு விழா சிறக்க
வாழ்த்தும்

# பிரபாத்
# மேச் பாக்டரி,

25, ஆழ்வார் தெரு,
கோவில்பட்டி - 627 701.

பல்கலைப் புலவர்

கா. சுப்பிரமணியம் எம்.ஏ.,எம்.எல்.

# நூற்றாண்டு விழா மலர்

திருவள்ளுவராண்டு 2018 ஐப்பசி 22

(8 - 11 - 87)



தமிழ்க் 'கா.சு.' இலக்கியக் குழு

குழித்தலை - 639104

# தமிழ்க் 'கா.சு. நூற்றாண்டு மலர்

மலர்ப்பதிப்பாசிரியர்கள்

இனமானப் பேராசிரியர்
**திரு க. அன்பழகன்**

இலக்கியச் செம்மல்
**திரு. இராமு. இளங்குமரன்**

பேராசிரியர் முனைவர்
**திரு. ஆறு. அழகப்பன்**

பொறுப்பாசிரியர்கள்

பேராசிரியர் **திரு. மது. ச. விமலானந்தம்**

பேராசிரியர் **திரு. து. வெள்ளமுத்து**

பாவலர் **திரு. கடலூர் மணிமாறன்**

பாவலர் **திரு. மணமேடு குருநாதன்**

பாவலர் **திரு. ப. எழில்வாணன்**

பாவலர் **திரு. வலம்புரி எழிலன்**

பாவலர் **திரு. கன்னல்**

விழாச் செயலர்கள்

**மீ. சு. இளமுருகுபொற்செல்வி — சு. நடராசன்**

# தமிழ்க் 'கா. சு.' அவர்களின் கையெழுத்து

**K. Subrahmaniam**, M.A., M.L.,
ADVOCATE
TAGORE PROFESSOR OF LAW

MYLAPORE,

*Dated* 3. 10. 1923.

அன்பார்ந்த ஐயா

தாங்கள் அன்புடன் அனுப்பிய திலக
வதியார் என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன். இந்நூல்
[illegible] மாணவர்க்குத் தமிழ் மொழியாலும், தமிழ்
நாட்டு [illegible] இனிய
[illegible] நடையில் எழுதிய நல் பாடமாக
அமைந்திருக்கின்றது. [illegible]
[illegible] திலகவதியார் என்னும் [illegible]
கருத்து [illegible]
இருக்கிறது. பெண்பாற்குப் பெருந்தகைமை [illegible]
[illegible]
[illegible]
[illegible] இயற்கைப் பொருள் [illegible] வாழ்க்கையும், மன்னர்
மக்கள் உள்ளப் பண்பின் இயல்பையும், இவை
தெரிக்கும் சிறப்பையும் அவள் பெறக் கூறியிருத்தல்.
[illegible]
[illegible]
[illegible] அவை யாவும்
பயனுடையவாகும். ஆதலால் அவை [illegible]
[illegible] வெளியாக்கி [illegible]
பள்ளிக்கூட மாணவர்க்குத் [illegible]
[illegible]
[illegible] போல் [illegible]
[illegible]
[illegible]
பெறுவார்களே.

K. Subrahmaniam

# பதிப்பு விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கா.சுப்பிரமணியம் நூற்றாண்டு விழா மலர் |
| ஆசிரியர் | : | பேராசிரியர் க. அன்பழகன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| நூல் வெளியீடு | : | 8-11-87 |
| உரிமை | : | கா. சு. இலக்கியக் குழு<br>குழித்தலை—639104 |
| தாள் | : | 14. 6 Kg |
| புத்தக அளவு | : | 21 × 13½ செ.மீ. |
| எழுத்துவடிவம் | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 238 + 20 = 258 |
| அச்சிட்டோர் | : | அன்னை அஞ்சுகம் அச்சகம்<br>சென்னை—600014. |
| விலை | : | ரூ **26 - 00** |
| வெளியிட்டோர் | : | தமிழ்க் கா.சு. நினைவு இலக்கியக் குழு,<br>ஈசுவரவடிவகம்,<br>குழித்தலை—639104. |

# என்னுரை

''தாகூர் சட்ட விரிவுரையாளர், பல்கலைப் புலவர், கா.சுப்பிரமணியம் எம்.ஏ.எம்.எல்., அவர்கள் தமிழர்களின் ஆற்றலுக்கோர் கலங்கரை விளக்கம். தமிழுக்கோர் விடிவெள்ளி'' இப்படி என்னிடம் கூறியவர் ஆங்கில மொழிப் பேராசிரிய ராவார்.

தமிழ்க் 'கா. சு' அவர்களுடைய சிறப்பியல்புகளை, எனது தாயார் ஈசுவரவடிவு அம்மாள் அவர்கள் எடுத்துக்கூறும் அழகே தனியானதாகும். ''கா. சு. தமிழ் நாட்டில் தமிழராக—அதுவும் சைவக் குடும்பத்தில் பிறந்ததனால் அவருடைய அருமை பெருமை பாராட்டப்படவில்லை'' யென்று அடிக்கடி கூறி ஏக்கங் கொள்வார்கள்.

அந்தச் சொற்கள் மந்திர சக்தி வாய்ந்ததைப்போல் என்னை 'கா. சு'வின் தொண்டனாக்கியது.

அதன் பின் அவர்களெழுதிய திருக்குறள் பொழிப்புரை, இலக்கிய வரலாறு மற்றைய நூல்களும் அவருடையவனாக்கியது என்பது ஓர் புறமிருக்க—உணர்வுள்ள தமிழனாக—நேர்மைக்கு குரல் கொடுப்பவனாக அமைத்தது என்பதும் உண்மை.

என் அறிவறிந்த கால முதல் நான் கா. சு. நெறியை உணர்வை பரப்பிடும் தொண்டனானேன்.

குழித்தலையில் பல்கலைப் புலவர். தமிழ்க் 'கா சு.' நினைவு இலக்கியக் குழு அமைத்து கடந்த 23–ஆண்டுகளாக தமிழ்த் தொண்டையும்—திருக்குறள் நெறியையும் பரப்பிடும் பணியாளனாகியிருக்கிறேன்.

தோள் கொடுக்கும் தொண்டர்கள்—அறிவு வழியால் துணை நிற்கும் பேராசிரியப் பெருமக்கள்—உற்றுழி நிதி உதவி செயலாக்கத்துக்கு உயிர் கொடுக்கும் செல்வந்தர்கள்! மறக்க முடியாது.

திருவள்ளுவராண்டு 2018 ஐப்பசி 19–ஆம் நாள் தமிழ்க் 'கா. சு.'வின் நூற்றாண்டு நாளாகும். எனது மதிப்பிற்குரிய இனமானப் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களிடம் கூறியபோது ''விழாவைச் சிறப்பாக நடத்தவேண்டும். நூற்றாண்டு நினைவு மலர் வெளியிடவேண்டும். அச்சில் இல்லாத அவருடைய நூல்கள் மறு பதிப்புப் பதிப்பிக்கப்பட வேண்டும்'' என்றெல்லாம் ஆர்வந் தூண்டுமாறு கூறினார்கள்.

நான், 'மலர்ப் பதிப்பாசிரியர் பொறுப்பை நீங்கள்ஏற்றுக் கொள்ளுதல் வேண்டு'மென்று கோரினேன். தனக்குள்ள பல்வேறு பணிகளுக்கு நடுவில் பொறுப்பை ஏற்று நூற்றாண்டு விழா மலரின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று வழி காட்டுத லாகத் துணை நின்ற பாங்கை மறக்க முடியாது.

அதுபோலவே அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் திரு. ஆறு. அழகப்பன் அவர் களுடைய சிந்தனையும் செயலும் மலருக்கு ஆக்கந் தந்தது.

கா. சு. நூற்றாண்டு மலருக்குக் கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துச் செய்தி; 'கா. சு'வின் சிறப்பியல்பு சிந்தனைகள் என மாரிபோல் வாரி வழங்கிய தமிழ்ப் பெருமக்களை— பேராசிரியர்களை — சிந்தனையாளர்களை — பாவலர்களை நினைக்கிறேன்! நெஞ்சு நிறைந்த நிம்மதி பெறுகிறேன். "நடத்துபவன்யார் என்பதைக் கடந்து, நடப்பது எது?" என்ற ஒப்பாய்வுடன்—அப்பொருள் மெய்ப்பொருள் கண்டு வள்ளுவர் நெறியில் துணை நின்ற அறிவுலகப் பெருமக்கள் இருக்கும் திக்கு நோக்கி வணங்கி நிற்கிறேன்.

மலர் கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாற்றுப் பெட்டக மாக—தாய் மொழி தமிழின் நிலை விளக்கும் காலக் கண்ணாடி யாக மலர்ந்திருக்கிறது.

'கா.சு' மலர் அமைப்பு முறையை இலக்கியச் செம்மல் திரு. இராமு. இளங்குமரன் அவர்கள் வடித்தெடுத்து அமைப் பாக்கிய அன்பு மறக்க முடியாததாகும்.

தொட்டுத் தொடர்ந்து 'எழுதுவதென்றால் அதுவே ஒரு பெரிய மலராகும் அளவுடையதாகும்.

துணை நிற்கும் தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

மொழியால் ஒன்றாவோம். பெருமை படைப்போம். அறிஞர் பெருமக்களை—புலவர்களைப் போற்றுவோம். நன்றி காப்போம்.

குழித்தலை
திருவள்ளுவராண்டு
ஐப்பசி 22
8—11—1987

அன்புடன்,
**மீ. சு. இளமுருகுபொற்செல்வி**

# வாழ்த்துச் செய்தி

திருக்கயிலாய பரம்பரை தருமையாதீனம்
அருட்டிரு.
**சிவப்பிரகாசதேசிக பரமாசாரியசுவாமிகள்**

திருக்கைலாய பரம்பரை
திருவாவடுதுறை ஆதீனம்

## வாழ்த்துரை

குழித்தலை—பல்கலைப்புலவர் தமிழ்க் ''கா.சு.'' நினைவு இலக்கியக் குழுவினர், பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளையவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவது தெரிந்து மகிழ்கிறோம்.

உயர்தனிச் செம்மொழியாம் நம் செந்தமிழ்மொழிக்கும் சித்தாந்த சைவச் செந்நெறிக்கும் கா.சு. பிள்ளையவர்கள் ஆற்றியுள்ள அரிய பணிகள் தமிழ் நன்மக்கள் என்றும் நன்றியொடு போற்றிப் பெருமை கொள்ளுதற்குரியன. அவர்களது பெரும் புலமை நலந்தெரிந்து நாடு நலம்பெற இலக்கியக் குழுவினர் மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டுகிறோம்.

நூற்றாண்டு விழா இனிது நிகழவும், விழா நினைவு என்றும் அகலாதமைந்து நலம் பயக்க வெளிவரும் மலர் செந்தமிழ் மணமும் சிவமணமுங் கமழ மலர்ந்து உயரிய பயன் விளைக்கவும் எம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

## அருட்டிரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
## தருமபுரம்

தமிழ் மொழியில் முயன்று முதல் ஆய்வு தொடங்கிய ஆய்வாளர்களுள் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களும் ஒருவராவார். சட்டத் துறையில்—தமிழர்களில் முதல் எம்.எல்., பட்டம் பெற்று அன்பர்களால் எம்.எல். பிள்ளை என்று அழைக்கப்பட்ட இவர் முயன்று ஆய்ந்து வெளிப்படுத்திய தமிழ் இலக்கிய வரலாறும்-ஏனைய பல்துறை ஆய்வு நூல்களும், சைவ சித்தாந்த உரைகளும் இவர்தம் அழியாப் புகழுக்குத் துணை நிற்பன. தமிழ்ப்புலமையும், சைவ சமய ஈடுபாடும் கொண்டு வாழ்ந்த திரு. கா.சு. பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ் அன்பர்களால் கொண்டாடப்படவிருப்பது மகிழ்ச்சிக் குரியது.

'பல்கலைப்புலவர்' தமிழ்க் கா.சு. நினைவு இலக்கியக்குழு ஒன்றைக் குழித்தலையில் நிறுவி அன்பர் இளமுருகு பொற்செல்வி அவர்கள் பல ஆண்டுகளாகப் பல்வேறு தமிழ் விழாக்களை நிகழ்த்தி வந்திருப்பது பாராட்டிற்குரியது. தற்போது இவ்விலக்கியக்குழுவினர் கா.சு. பிள்ளையின் நூற்றாண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு விழாமலர் ஒன்றையும் வெளிக்கொணர முயன்று வருவது மகிழ்ச்சி தருகிறது.

விழாச்சிறக்கவும், விழாமலர் இனிதே மலர்ந்து மணம் பரப்பவும், இவ்வினிய முயற்சியில் ஈடுபட்டு உழைக்கும் அன்பர்களுக்கு நலமெலாம் நிறையவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

## திருப்பெருந்திரு மதுரை ஆதீனம்
## குருமகாசந்நிதானம்
## மதுரை

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங் களும் எய்துக! தங்களுடைய 01-10-1987 ஆம் நாள் மடலும், நூற்றாண்டு விழா அழைப்பும் கிடைத்து, நமது திருப் பெருந் திரு. குருமகாசன்னிதானம் அவர்கள் திருக்கண் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். நமது தமிழ்க் ''கா.சு.'' அவர்களின் நூற் றாண்டு விழா, மிகச் சிறப்பாக நடந்தேறிடவும், அவ்விழாவின் மூலம் ஞானப் பெருமக்கள், வள்ளல்கள், தமிழ்ச் சமுதாயத்தின் காவலர்கள் உயிரோடு வாழ்கின்ற போதே அவர்களைப்போற்றி, மதித்து, அவர்தம் சொல்கேட்டு, இச்சமுதாயம் நல்ல வள மோடும், தமிழ் இன உணர்வோடும், ஒற்றுமையோடும் வாழ்ந் திடவும், தங்களுடைய சிறந்த தமிழ்ப்பணி பல்லாண்டு தொடர்ந் திடவும் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றார்கள்!

எல்லோருக்கும் ஆசீர்வாதம்!

**தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்**
**பேரூராதீனம்**
பேரூர்

## சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

உலகின் சிறந்த மொழிகளுள் ஒன்றாய் உயர்தனிச் செம் மொழியாம் சிறப்புக்குரியது தமிழ். செந்தமிழையும், சிவநெறி யையும் போற்றிச் சிறந்த நுண்மாண் நுழைபுலம் மிக்கவர் கா.சு. பிள்ளையவர். தமிழினத்தின் பெருமையை உலகுணர விரித் துரைத்த பெருந்தகையார். சைவசித்தாந்தச் சமயக்கருத்துகள் வடசொற்களால் தெள்ளிதின் உணர்தற்கு இயலாதனவாக இருந்தன. அவற்றை அழகு தமிழில் தெளிவாக்கியவர். ''பன்னூல்களின் முடிபுகளையும் தமது உறுப்புகளாகக் கொண்டு தலையாய உண்மைப் பொருளை தன்னகத்து நன்கு விளக்கி முழுமுதற் கடவுளை அங்கை நெல்லிக் கனியெனக்கண்டு கலந்து எல்லையற்ற பேரின்பம் எய்தினார். எய்துதற்குரிய நெறி ஈதெனக் காட்டுவதில் இணையற்ற பெருமை வாய்ந்த அருநூற்றொகையே சைவ சித்தாந்தமாகும்'' எனக் கூறும் அவர் தெளிந்த தமிழ்க்கொள்கை நமக்கெல்லாம் பேருவகை தருவ தாகும். தமிழ் நெறிக்காக தம்மை ஈந்த அவரது நினைவு விழாவை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தும் சான்றோர் செந் தமிழ்ச் செம்மல் திரு. இளமுருகு பொற்செல்வியாவார். கனிந்த நெஞ்சினர், தமிழைக் கண் எனப் போற்றுபவர். தமிழ் உலகம் இத்தகைய சான்றோர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எதிலும் தமிழ்! எங்கும் தமிழ்! என்று வாய்முழக்கமே பெருகி நின்ற இந்நாளில் எண்ணமும் செயலும் இனியதமிழுக்காக்கித் தமிழ் நெஞ்சங்களை உறவாகக் கொண்டு வாழும் பண்புமிகு குடும்பம் குளிர்தண்டலை இளமுருகு பொற்செல்வியரது குடும்பம். கா.சு. பிள்ளையவர்கட்கு நூற்றாண்டு விழா எடுக் கின்றனர். இது தமிழ் நெறிக்கு ஏற்ற விழா. விழாமலர் பொங்கும் நயம் புதுமை இதழ்களுடன் மலர அம்பலவாணர் அடியினை நினைந்து வாழ்த்துகிறோம்.

அன்புள்ள

**சாந்தலிங்க இராமசாமியடிகள்**

Dr. M.A M. Raamswamy *B A.,D Litt*
**Founder-Pro Chancellor**
**Annamalai University**

**Chettinad House,**
**Rajah Annamalaipuram,**
**Madras-600 028.**

# பெருந்தகை 'கா.சு.'

பல்கலைப் புலவர் தமிழ்க் 'கா.சு.' நினைவு இலக்கியக் குழு, பல்கலைப் புலவர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடவும் நூற்றாண்டு மலர் வெளியிடவும் திட்டமிட்டு இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் 'கா.சு.' அவர்கள், ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எம். ஏ. பட்டமும், எம் எல், பட்டமும் பெற்று 'குற்றங்களின் நெறிமுறைகள்' என்னும் நூலியற்றி பதினாயிரம் ரூபாய் பரிசுடன் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' பட்டமும் பெற்று புகழ் அடைந்தார்கள். பல்கலைப்புலவர் 1939ஆம் ஆண்டு முதல் 1944 ஆம் ஆண்டு வரை அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியராகச் சிறந்த பணியாற்றினார்கள்.

தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் பல்லாற்றானும் பணிசெய்த பெருந்தகை 'கா.சு.' அவர்களைப் பற்றி மரியாதைக் குரிய எனது தகப்பனாரும், பாட்டனாரும் புகழ்ந்துள்ளார்கள்.

இத்தகைய பெருந்தகை 'கா.சு.' அவர்களின் நூற்றாண்டு விழா மலர் பொலிவுடன் வெளிவர என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

**மு. அ. மு. இராமசாமி**

*Brigadier (Hony)*
**B. Ramamurthi**
**Head of the Department of Neurosurgery**
**And Neurosurgeon**
**V.H S. Medical Centre**
**Madras-600 113.**

# போற்றத்தக்கது!

திரு. இளமுருகு பொற்செல்வி அவர்களுக்கு வணக்கங்கள் வாழ்த்துக்கள்.

மானிட வாழ்விலே நூறாண்டு என்பது மிக நீண்டகாலம். ஆனால் நம் நாட்டின் சரித்திரத்தில் ஒரு சிறிய பொழுதுதான். 4000ஆண்டுகளாக தொன்றுதொட்டு சரித்திரத்திலேயே ஆதியாக விளங்கும் நமது தாய்மொழி தமிழ்மொழிக்கு திரு. தமிழ்க் கா.சு. அவர்களும் தாங்களும் செய்யும் தொண்டு போற்றத் தக்கது. இன்றியமையாதது. தமிழும், தமிழ்நாடும் மீண்டும் உலகத்திலேயே முதலிடம் பெறவேண்டுமானால் இத்தகைய முயற்சியால்தான்.

இந்த நூற்றாண்டுவிழாவிற்கு என்னுடைய வாழ்த்துக்களையும், உங்களுக்கெல்லாம் நன்றியையும் கூற மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

உங்கள் அன்புள்ள,

**டாக்டர் இராமமூர்த்தி**

**வி. இராமகிருஷ்ணன்**
மேலாண் இயக்குநர்
இராமகிருஷ்ணா இரும்புத் தொழிற்சாலை
காரமடை

# பாராட்டுகிறேன்

பல்கலைப் புலவர் தமிழ்க் கா.சு. நூற்றாண்டு விழாவிற்கு என் உளம் கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழுக்காக, தமிழால் வாழ்ந்த கா.சு. அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சட்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். ஆங்கிலத்திலிருந்த சட்ட நுணுக்கங்களை தமிழில் விளக்கி மொழி பெயர்த்து சாதனை புரிந்தவர். சாந்தி நிகேதனில் சமய விரிவுரையாற்றி 'தாகூர் விரிவுரையாளர்' என்ற பெருமதிப்புடைய பட்டத்தை பெற்றவர்.

எம். எல். பிள்ளை என்று அன்பாக அழைக்கப்படும் கா.சு. அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக அமைய என் வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா.சு. அவர்களின் புகழையும், அவர் ஆற்றிய சாதனை களையும் என் போன்ற இளம் தலைமுறையினருக்கு எடுத்துக் கூறி, சாதனை புரியும் பெரியார் மீ.சு. இளமுருகு பொற்செல்வி அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

நன்றி.

**வி. இராமகிருஷ்ணன்**

**டாக்டர். கி. வேங்கடசுப்ரமணியன்,**
எம்.ஏ., பி.எல்., பிஎச்.டி.
**துணை வேந்தர்,**
**புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி,**

# கருவூலமாகத் திகழ...

அன்புகெழுமிய சிந்தனைச் செல்வர் திருமிகு. இளமுருகு பொற்செல்வி அவர்களுக்கு,

''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' என்று சட்டத்துறையில் தேர்ச்சி பெற்று, செந்தமிழ் வளர்ச்சிக்கு பல்லாற்றானும் பணி புரிந்து தொண்டாற்றிய தமிழ்க் ''கா.சு'' அவர்களின் நூற்றாண்டு விழா மலர் வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன்.

குவலயத்தின் பிறபகுதிகள் எல்லாம் நயத்தக்க நாகரிகம் இன்றி, இருளில் மூழ்கி இருந்த காலை, பண்பாட்டில் சிறந் தோங்கிய தமிழர்தம் தாய்மொழியின் இலக்கிய வரலாற்று நூல் ஏதுமின்றி இருந்தபோது, செம்மையுற 'தமிழ் இலக்கிய வரலாற்றை'ப் படைத்தளித்தவர் நம் ''கா.சு'' அவர்கள்.

> ''செந்தமிழே, உயிரே நறுந்தேனே!
> செயலினை மூச்சினை உனக்களித்தேன்.''

என்ற பாவேந்தர் கூற்றைப் போன்று தம் வாழ்நாளை தமிழ் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துக்கொண்ட செம்மல் ''கா.சு''வின் சிறப்புக் கமழ மலர் தொடுப்பது மாண்புறு பணியாகும்.

இம்மலர், ''கா.சு''வின் கடிமணம் பரப்பி, கவின் தமிழின் கருத்துக் கருவூலமாகத் திகழ என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,

**கி. வேங்கடசுப்ரமணியன்.**

**A. Gnanam, F.N.A., F.N.A.Sc.**
*Vice-Chancellor*

*Bharathidasan University*
**Thiruchirapalli**

# வாழ்த்து

''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' பட்டம் பெற்ற தமிழ் வித்தகர், பல்கலைப் புலவர் பேராசிரியர் கா. சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சீரும் சிறப்புமாக 1987 நவம்பர்த் திங்களில் நிகழ்த்தவிருப்பது கேட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். அவரது வாழ்க்கைக் குறிப்பினை நினைவு கூர்ந்தால் அன்னாரது ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் நம்மை வியப்பிலாழ்த்துவதோடு அவர் தமது வாழ்நாளில் தமிழுக்கு ஆற்றிய நற்றொண்டு தெள்ளெனப் புலனாகிறது. நூற்றாண்டு விழாவெடுத்து அவரது சேவையினை நினைவு கூர்தலும் ஓர் சிறந்த சேவையாகும். விழா இனிது நிறைவேறவும் நூற்றாண்டு விழா மலர் நன்கு மணம் வீசித் திகழவும் எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**ஆ. ஞானம்**
துணைவேந்தர்.

பேராசிரியர்

**அ. மு. பரமசிவானந்தம்**

சென்னை.

# 'கா.சு. பிள்ளை'

''காசு'' என அழைக்கப்பெறும் கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் கல்வியில் ஆழ்கடல்; சிறந்த புலமையாளர். தாகூர் சட்டவிரிவுரையாளர்; சைவத்தையும் தமிழையும் இருகண் களெனப் போற்றியவர். அறிவால் உயர்ந்த அவரிடம் எளிமை, அடக்கம், பணிவு ஆகிய பண்புகள் நிறைந்திருந்தன, 'கல்வி ஆங்காரம்' எள்ளளவும் இல்லாதவர். நேரிய மனிதர்; அதனால் தனக்கு வர இருந்த பதவிகளையும் பட்டங்களையும் இழந்தவர்; எனினும் அவற்றால் மனம் வருந்தாது உண்மைக்கும் நேர்மைக் கும் பாடுபட்ட உத்தமர்.

தமிழ் அறிந்த பெருமக்களுள் தலையாயவர்; தமிழால் அவர் வாழவில்லை, தமிழுக்காக அவர் வாழ்ந்தவர். அதனால் அல்லலுற்றார். ஆயினும் 'அஞ்சல் நெஞ்சே' என்று இறைவனை வழிபட்டு ஏற்றங்கண்டார். வாழ்வில் செல்வ வளம் பெறாத நிலையிலும் மன அமைதியோடு அன்னைத் தமிழுக்கு ஆக்கப்பணி கண்டார். பொய்யறியா வாய்மையாளர். ஆம்! அத்தகைய பண்பாளரை—தமிழ் அறிஞரை—சிறந்த மனிதரை இன்று காண முடியாது.

இன்று அவருடைய நூற்றாண்டினைக் கொண்டாடு கிறோம். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அவர் காஞ்சியில் என் இல்லத்தில் சில காலம் தங்கியிருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். சென்ற காலத்தின் அருமை என் கண்முன் நிழலிடு கின்றது. அத்தகைய நல்லறிஞரை அவர் வாழுங்காலத்தில் மதித்து—போற்றி அவரைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழகம் தவறிவிட்டது. அதனால் தமிழினம் எங்கோ பின் தங்கிவிட்டது என்று கூறலாம்.

'கா. சு' அவர்தம் நூற்றாண்டு விழாவினைக் கொண் டாடும் 'இலக்கியக்குழு' அவர்தம் கொள்கைகளை—கருத்துக் களை நாட்டில் பரவ வழி காட்டி, தமிழினத்தை வளமுறச் செய்யும் என நம்புகிறேன். வாழ்க 'கா.சு.' அவர்தம் பண்பு! வளர்க அவர் கண்ட தமிழ் நலம்! தெய்வ நெறி!

**அ. மு. பரமசிவானந்தம்**

**ஜி. சுப்ரமணியன்**
**நிலைய இயக்குநர்**

**ALL INDIA RADIO**
**MYLAPORE, MADRAS-600 004.**

# பணிபுரிவோமாக

தமிழக வரலாற்றில் அவ்வப்போது பலதாரகைகள் தோன்றி ஒளி சிந்தி ஓய்வது வழக்கம். ஆனால், இந்த ஒளிசிந்தும் தாரகைகளால் பயன் பெற்றோர் தமது நன்றி உணர்வைக் காட்ட அவர்களது நினைவைப் போற்ற விழா எடுக்கும் முகத்தான் எனது அருமை நண்பர் திருமிகு. இளமுருகுபொற்செல்வி அவர்கள், பல ஆண்டுகளாக 'தமிழ்க் கா.சு. நினைவு இலக்கியக் குழு', குழித்தலையிலே அமைத்து ஆண்டுதோறும் விழா எடுத்து வருவதை நான் அறிவேன். புகழுடன் தோன்றி பல துறைகளில் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல, ஒளிபரப்பிய பல்கலைப் புலவர் திருமிகு. கா. சுப்ரமணியம் அவர்களது நூற்றாண்டு விழா, வரும் நவம்பர் திங்கள் ஐந்தாம் நாள், குழித்தலையிலே நடப்பதற்கு என்னுடைய நல்வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்து 'கா.சு.' அவர்களின் புகழ் தமிழ் கூறும் நல்லுலகில் இனிது ஏற்றமுற நாம் அனைவரும் பணிபுரிவோமாக!

**ஜி. சுப்ரமணியன்**

**ந. தருமலிங்கம்**
*முத்துப்பேட்டை*

# இளைஞர்கள்...

பல்கலைச் செல்வர் கா.சு. பிள்ளை அவர்கள் திருவாசகத்திற்கு முதலில் உரை எழுதியவர்; இலக்கிய வரலாறு படைத்தவர். திருக்குறளுக்குத் தெளிந்த உரை எழுதியவர் ஆவார்.

உண்மையாகவே தமிழ் மொழியையும் தமிழ் நாட்டையும் தமிழ்ப் பண்பாட்டையும் போற்றும் இளைஞர்கள் கா.சு.பிள்ளை அவர்களை அறிந்து தெளிந்து அவர் வழிநடப்பார்களாக. கா.சு. பிள்ளை நூற்றாண்டு விழா சிறக்க என் வாழ்த்துக்கள்.

அன்பன்

**ந. தருமலிங்கம்**

**தெ. வேணுகோபால் ரெட்டி**
**வானொலி நிலைய இயக்குநர்,**
**திருச்சி**

# பாராட்டுக்குரியது

தன்னலம் கருதாது தமிழுக்குத்தொண்டு செய்த சான்றோர் பலருண்டு. அவர்களுள் தமிழ்க் 'கா.சு.' என்று போற்றப்படும் கா. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் தனிச்சிறப்புப் பெற்றவர். அவரது ஆழ்ந்த புலமையும், ஆய்வு நோக்கும் தெளிந்த ஞானமும் தேர்ந்த சிந்தனையும் பலஆய்வுக் கருத்துக்கள் வெளிவர உதவின. அவரது ஆங்கில அறிவும் சட்ட அறிவும் அற்புதமான சில மொழி பெயர்ப்பு நூல்கள் உருவாக வழி செய்தன.

பல்கலைப் புலவராக விளங்கிய தமிழ்க் கா.சு. அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி மலர் வெளியிடும் குழித்தலை தமிழ்க் 'கா.சு.' நினைவு இலக்கியக் குழுவினரின் நன்முயற்சி பாராட்டுக்குரியது.

இருபத்தி மூன்று ஆண்டுகளாக இலக்கியப்பணி ஆற்றிவரும் இந்தக் குழு தொடர்ந்து பணியாற்றி வெற்றி பெற வாழ்த்து கிறேன்.

**எஸ். வேணுகோபால் ரெட்டி**

**ஏ. ஆர். வேலுப்பிள்ளை**

*(ஆசிரியர் ஜனநேசன்)*

சிந்தனைச் செம்மல், பல்கலைச் செல்வர், தாகூர் சட்ட விரி வுரையாளர் திரு. கா.சு. பிள்ளை அவர்களின் நினைவாக ஆண்டு தோறும் குழித்தலையில் நடைபெற்று வரும் விழா நாடறிந்தது.

இந்த ஆண்டு கா.சு. பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது. விழா சிறக்கவும் அதனையொட்டி வெளியிட விருக்கும் மலர் மணக்கவும் என்நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அன்பன்

**ஏ. ஆர். வேலுப்பிள்ளை**

**ஜே. கோதைப்பிள்ளை,**
**துணைவேந்தர்.**

அன்னை தெரசா பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்.

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழ்க் ''கா.சு.'' இலக்கியக் குழு இலக்கியப்பணி அடிப்படையில் 23 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருவது போற்றுதற்கும் பாராட்டுதற்கும் உரியதாகும்.

அறிவாண்மைச் சான்றோன், தனிப் பெரும் தமிழ் மேதை கா. சுப்பிரமணியம் அவர்கள் நூற்றாண்டு விழாவிற்கு ''கா.சு.'' இலக்கியக்குழு மலர் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

கா.சு. அவர்களின் திருக்குறள், திருவாசகம் பொழிப்புரைகள், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழர் சமயம், வானநூல், மெய்கண்ட நூல்களின் உரைநடை, நீதி நெறி விளக்கம், சிவப்பிரகாசம் இவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகள், இந்தியத் தண்டனைத் தொகுதி விரிவுரைகள் போன்ற பலதிறப்பட்ட வெளிப்பாடுகள், படைப்புகள் அவர் காலத்தும், பின்வரும் காலத்தும் சமுதாயத் தேவைக்குப் பயன்படும் ஆராய்ச்சிக் கருவூலங்களாகும்.

செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்த கா. சு. பிள்ளையின் திறனாய்வுகள் தீவிரமானவை. கா. சுப்பிரமணியம் என்ற இயற்பெயரையுடைய இவரை கா.சு. பிள்ளை என்று சொன்னாலே அறியுமளவிற்குத் தமிழ் உலகத்திற்குத் தொண்டு புரிந்தவர்.

தமிழுக்குழைத்து உயிரை அளித்த தமிழ்ப் பெரியார்கள் திருநாள் எங்கும் என்றும் கொண்டாடப்படுதல் வேண்டும். தமிழர், தமிழரல்லாதோர் வீடுதோறும் தமிழ்ப் பெரியார்களைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

அன்னாரின் நூற்றாண்டு விழாவன்று அவரைப் பற்றிய மலர் வெளியீடு இத்தமிழ் உலகுக்கு அவசியமானதாகும்.

புதிதாய்ப் பிறக்கவிருக்கும் மலருக்கு வாழ்த்துக்கள் பல கூறி வரவேற்கிறோம்.

நன்றி!

**ஜே. கோதைப்பிள்ளை**

விஜய திருவேங்கடம்
நிலைய இயக்குநர்.

அகில இந்திய வானொலி நிலையம்
மதுரை - 625 002.

பெருமதிப்பிற்குரியீர்,

தமிழ்ர் 'கா.சு.'வின் நூற்றாண்டு விழா மற்றும் 'கா.சு.' இலக்கியக் குழுவின் 23-ஆம் ஆண்டுவிழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி.

தமிழ்த் தாயின் தவப்புதல்வராம் 'கா.சு.' அய்யாவின் நினைவைத் தவறாது போற்றி விழா எடுத்திடும் தங்கள் பணி விழுமியது; ஈடு இணை அற்றது. இம்முறை நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக அமைத்திருக்கிறீர்கள். தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர் பெருமக்களைக் கொண்டு 'கா.சு.'வின் தமிழ்ப் பணியினை உலகம் அறியச் செய்துள்ளீர்கள்.

வாழ்த்தும், பாராட்டும்.

பழைய நாட்கள் நினைவிலுறுகின்றன. இருபது ஆண்டு களுக்கு முன்னால் காவிரிக் கரையில் கன்னித் தமிழுக்குக் 'கா.சு' செய்த அரும்பணியைப் புலவர்கள் எடுத்தோத என் சகோதரர் திரு. எ. நடராசனுடன் வானொலிப் பதிவுக்காக வந்த நாட்கள் —தங்களது மேலான அன்பில் திளைத்த நாட்கள்—நினைவி லுறுகின்றன.

தங்கள் பணி வெல்க.

மிக்க அன்புடன்,
**விஜய திருவேங்கடம்**

# கா. சு. மலர்




பல்கலைப் புலவர் தோழர் **கா. சுப்பிரமணியம் எம். ஏ., எம். எல்., அவர்களின் மறைவால் வருந்தாத தமிழ் மக்கள் ஒருவரும் இரார்** என்பது எனது துணிவு! அவர் அறிஞர்க்கு ஆசிரியராகவும்; புலவர்கட்குத் தலைவராகவும், தன்னுணர் வாளர்களுக்கு அன்பராகவும் இருந்த காரணத்தால்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் துறைபோகக் கற்று இருமொழிகளிலும் எம்.ஏ, பட்டம் பெற்றவர். சட்டக் கல்வியைச் சரிவரக்கற்று **தமிழ் மக்களுள்** முதன் முதலாக எம்.எல்., பட்டம் பெற்ற பேரறிவுப் பெருமையும் இவருக்கே உரியது. இவருடைய அறிவாற்றல் இவரைச் சட்டக்கல்லூரியின் பேராசிரியர் ஆக்கியதுடன்; தாகூர்சட்ட விரிவுரையாளர் பட்டத்தையும், பதினாயிரம் வெண் பொற்காசுகளைப் பரிசாக வும் பெறச் செய்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருதடவைகளில் பேராசிரியராக அமர்ந்து மாணவர்கட்குத் தமிழறிவை ஊட்டி யவர். இவருக்கிருந்த சட்டக் கல்லூரி பேராசிரியப் பதவிக்கு... ஏற்பட்ட எதிர்பாராத முற்றுப்புள்ளி நிகழ்ந்திராவிட்டால் அவரது அறிவாற்றல் உயர்நீதி மன்றத் தலைவரின் பதவிக்கும் மேற்பட்ட நிலையை அடையச் செய்திருக்கும். சட்டக்கல்லூரிக்கு ஒரு நிலையான தலைவர் இருத்தல் நலமென்றும், அதற்குத் தோழர். கா. சுப்பிரமணியம் அவர்களே தகுதி வாய்ந்தவர் என்றும் பேசப்பட்டபோது, அந்த நோக்கம் அவ்வளவு இன்றி யமையாததல்லவென அப்போது சட்டக் கல்லூரியிலிருந்த...... பலர் கருத்து வெளியிட்டு; அவ்வப்போது ஒருவரைத் தலைவ ராக்குவதே நல்லதென்று முடிவுக்கு வந்ததால் தோழர் கா. சு. அவர்கள் சட்டக்கல்லூரியினின்றும் விலக வேண்டியவரானார்.

தோழர் கா.சு. அவர்கள் சாதிப்பூசல் ஒழிய வேண்டும் என்பதிலும், கருத்துடையராய் இருந்தார் என்பதற்கும் ஒரு

நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறேன்: தோழர் கா. சு. அவர்கள் வீட்டுக்கு ஒருநாள் சைவர் ஒருவர் வந்தார்: சாப்பாடு நடந்த போது அங்கிருந்த மற்றொரு சாதிக்காரர் தாம் சாப்பிடுவதைப் பார்க்கக் கூடாதென்றார். அதற்குத் தோழர் கா.சு. அவர்கள், அந்த வேற்றுச் சாதிக்காரன் சோற்றைப் பார்த்தால் அதை யாரும் மறுப்பதில்லை. தங்களுடன் பேசினால் அதற்கும் தடையில்லை. ஆனால் தங்களையும் சோற்றையும் சேர்த்துப் பார்த்துவிட்டால் மட்டும் எங்கிருந்து தீட்டு வந்துவிடும்? என்று கேட்டார். வந்த சைவர் மனம் வெந்து பதில் சொல்ல முடியாது திகைத்துவிட்டார்.

தோழர் கா.சு. அவர்கள் **கலப்பு மணமே நாட்டு முன்னேற்றத்திற்கு நல்வழி யென்றும், கைம்பெண் மறுமணம் செய்து கொள்வதில் தடை இருக்கப்படாதென்றும், ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சொத்து முதலான எல்லா வகையான உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்** என்றும், கோயில்களிலும் மடங்களிலும் வறிதே முடங்கிக் கிடக்கும் பெருந்தொகைப் பொருள்களை எல்லாம் முடியுமானால் சட்டவாயிலாகவேனும் எடுத்து ஏழைகளின் கல்வி நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும் பல முறைகளில் சொல்லியும், எழுதியும் வந்திருக்கிறார்.

அவரால் அளவுகடந்த பயன்களைப் பெற்ற சைவ சித்தாந்த உலகம் அவரின் வாழ்நாள்களை வறுமையாலும், அது காரணமாக ஏற்பட்ட நோயாலுமே கழித்து மறையும்படி செய்துவிட்டதென்பதையும் இங்குக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

சைவமாம் கடலில் நீந்திச் செல்லும்பொழுது எதிரே வந்த **சில சீர்திருத்தமாம் 'பொற்றுரும்பு'களை எம்மிடம் வீசி எறிந்துவிட்டு** மீண்டும் அச்சைவக் கடலிலேயே நீந்திச் சென்றவரை சைவ உலகம் கைவிட்டதென்றால் அது பெரிதும் வருந்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். ○○

---

## கருத்து மொழி

ஒழுங்கும் நுட்பமும் உள்ள உயர்ந்த தத்துவக் கருத்துக்களை உடைய இந்திய நாகரிகமானது அதை உண்டாக்கி வளர்க்கக்கூடிய மக்கள்பால் தோன்றியிருக்கவேண்டும். அத்தகைய ஆற்றல் அம் மக்கள் பேசும் மொழியாக்கத்திலும் காணப்படும். தூய திராவிட மொழியானது அவ்வாற்றலை மற்ற எந்த இந்திய மொழியினும் மிகுதியாகக் காட்டுகிறது. திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் தமிழே கருத்து நுட்பத்தைத் திட்பமாகக் காட்டக்கூடிய கருவியாகும். மேலைநாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் நடத்தற்குரிய வணிகத்திற் சிறந்த வணிகராவார் ஆங்கிலமுந் தமிழும் கற்றவர்களே. —கா.சு.

---



# பல்கலைப்புலவரும் அவரது குறிக்கோளும்

**இனமானப் பேராசிரியர் க. அன்பழகன்**

பல்கலைப் புலவர், தமிழ்க் காசு, எம். எல். பிள்ளை—என்று பல்வேறு சிறப்புப் பெயர்களால் போற்றிக் குறிப்பிடப்படும் நெல்லை. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தோன்றிய நாளின் நூற்றாண்டுத் திருநாள் வருகின்ற நவம்பர் ஐந்தில் (5-11-87) அமைகிறது. தமிழ் உணர்வுடையார் அனைவரின் நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியவரின் தோற்றத்தால் விளைந்த பயனையும் பேற்றையும் நினைவு கூர்ந்திட வேண்டிய நாள் இந்நாள்.

அவர் இளமையிலேயே கல்வியில் கருத்தூன்றியவரானார். உடன் மாணாக்கர் பலரினும் மேம்பட்டு விளங்கினார். நினைவாற்றல் மிக்கவராதலின் எந்த நூலையும் ஒரு முறை பயின்ற அளவில் அது குறித்து எழக்கூடிய கேள்விகட்குத் தெளிவான விடையளிக்க வல்லவராய்த் திகழ்ந்தார். நுண்மாண் நுழைபுலத் திறத்தால் பலதுறை அறிவிலும் தேர்ச்சி கொண்டார்.

அவரது தந்தையார் காந்திமதிநாத பிள்ளை—அக்காலத்தில் பட்டம் பெற்றவர்களுள் ஒரு முன்னோடியாதலின் பி. ஏ. பிள்ளை என்றே அழைக்கப்பட்டார். அந்தப் பெருமையின் கால்வழியினரான காசு அவர்கள், சட்டக் கல்லூரியில் பயின்று பி. எல். தேர்வு எழுதிய அதே பருவத்தில் எம். ஏ., தேர்வும் எழுதி வெற்றி கண்டார். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் முதுகலைப் பட்டங்கள் பெற்றவர். சட்டத்துறையில்—சென்னையில் முதன் முதலாக எம். எல். பட்டம் பெற்றவர், சட்டக் கல்லூரியில் சில காலம் பேராசிரியராகப் பணியாற்றியபோது, சட்டத் துறையில் அவர் பெற்றிருந்த பேரறிவுத் திறனுக்குச் சான்றாகத் ''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' என்னும் சிறப்பு விருதும் வழங்கப் பெற்றார். அவர் காலத்தில் அவரை விஞ்சிய சட்டத்துறை வல்லுநர் என்று குறிப்பிடத்தகும் தமிழர் எவரும் இல்லை எனலாம். அதன் விளைவே எம். எல். பிள்ளை என்றே தமிழ் உலகம் அவரைக் குறிப்பிட முற்பட்டதாகும்.

எனினும் நீதித்துறையில் நடுவணர் பொறுப்புக்குத் தேர்வு செய்த அந்நாளைய ஆட்சியாளர், அவரது தகுதிக்குரிய மாவட்ட நடுவணராக (**District Judge**) அல்லாமல், மாவட்ட நீதிபதியாகத் (**District Munsiff**) தெரிவு செய்தமையின் அப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அவரது தனி வாழ்வில்

ஏற்றம் பெறவும் வளம் காணவும் முடியாமற் போனதற்கு அது ஒரு காரணமெனினும், அவரது அறிவும் ஆற்றலும், தொண்டும் சிந்தனையும்—தமிழ் அன்னையின் திருப்பணிக்கே ஒப்படைக்கப் பட்ட திறத்தால்—பல்லாற்றானும் தமிழினத்திற்கு வாய்த்த நற் பேறு ஆயிற்று எனலாம்.

பழந்தமிழ் ஏடுகளைப் பயில்வதிலும், அவற்றைக் குறித்து ஆராய்வதிலும் ஈடுபாடு கொண்டார் காசு அவர்கள். தமிழ் மொழியின் தொன்மையும் மேன்மையும், தனித்தியங்கும் ஆற்ற லும், தமிழினத்தின் நாகரிகச் சிறப்பும், தமிழர்களிடை வளர்ந் திருந்த மெய்ப்பொருள் தெளிவும் அவரது உள்ளத்தை ஆட் கொண்டு, தாமொரு தமிழர் என்பதில் பெருமிதம் கொள்ளச் செய்தன.

அக்காலத்தில் நிலவிய அரசியல் கட்சிகளுள்—கல்வியிலும் சமுதாயத்திலும் பின் தங்கிய மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்த நீதிக்கட்சியின் குறிக்கோளினை அவர் வரவேற்றார். நெல்லை நகராட்சி மன்ற உறுப்பினராகவும், திருக்கோவில் அறங்காவலராகவும் அவர் பொதுத்தொண்டும் ஆற்றியுள்ளார்.

அவரது அறிவாற்றல் பற்றி அறிந்திருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், அவரைத் தமிழ்ப்பேராசிரியராக அமரக் கேட்டுப் பெருமை கொண்டனர். சில ஆண்டுகள் பணியாற்றி விலகிய பேராசிரியர் அவர்களை மறுபடியும் அழைத்து 1940 முதல்—பேராசிரியர் பொறுப்பை ஏற்கச் செய்தனர். அவரால் தமிழ்த்துறையும் பல்கலைக்கழகமும் பெருமை பெற்றன. அந்தக் காலகட்டத்தில் தான் அவரால் அன்பும் ஆதரவும் காட்டப்பட்ட மாணவனாகத் தமிழ்த்துறையில் ஆனர்ஸ் வகுப்பில் பயிலும் வாய்ப்பினை நான் பெற்றேன்.

பல்கலைக்கழகத்தின் இடைநிலை வகுப்பில் பயின்ற நாட் களில் ஓரிரு முறை, பல்கலைப் புலவர் அவர்கள் முன்னிலையில் நான் பேசும் நிலை ஏற்பட்டது. எனது பேச்சு—அறிவுத்திறன் காட்டுவதாக அமைந்திருக்கவியலாது எனினும், எனது தமிழ்ப் பற்றையும் கொள்கை ஆர்வத்தையும், துணிச்சலையும் கண்டு என்மீது அன்பு கொண்டார்கள். பாராட்டி ஊக்கமளித்தார்கள். அது முதல் அவருடன் ஏற்பட்ட பழக்கமும் உறவுமே—நான் தமிழ்த் துறையில் பயில்வதற்கு ஏதுவாயின. அவர், தமிழ் பயில வரும் மாணவர் அனைவரிடமும் அன்பு காட்டும் பண்பாளரா யினும், தமிழ் இன உணர்வுடையவனாக என்னைக் கருதியதால் —அவர் கொண்ட அன்பு ஆழமானதாக அமைந்தது. பல்கலைப் புலவர் உரையாற்றுதற்கு அழைக்கப்படும் ஊர்கட்கு என்னையும் துணையாக அழைத்துச் செல்வார். அவருக்குத் துணையாகச் செல்வதும் தொண்டு செய்வதும்—தமிழ்த்தொண்டு என்று நான் உளம் மகிழ்ந்தேன்.

அவர் உரையாற்று முன்னர் என்னையும் உரையாற்றப் பணித்திடுவார். அவரிடம் பயின்றவற்றையே—இலக்கியத்தை ஒட்டி நான் பேசுவேன். சமயச் சார்பு நிகழ்ச்சியானால்—எனது இயலாமையை அவரிடம் கூறிவிடுவேன். ஒருமுறை அவர் பேசிய

உரையைப் பலரும் கேட்க முடியாதவாறு அவர் உடல் நலக் குறைக்கு ஆளாகி இருந்ததால்—அவர் பேசியதையே நான் மறுபடியும் எல்லோரும் கேட்குமாறு பேசப் பணித்தார். ஒருவாறு—அவர் கருத்தை விவரித்தேன். ஒலிபெருக்கி இல்லாத குறையை அவ்வாறு ஈடு செய்தேன். அவர் மகிழ்ந்தார். அவை யோரும் நன்றியுடையவராயினர்.

ஒருமுறை பேராசிரியர்கள் சிலர் அவரது இல்லத்தில் உரையாடிக் கொண்டிருந்தனர். எனது அகவையை ஒத்த வயதினரான அவரது பிள்ளைகள் பற்றிப் பேச்சுத் திரும்பியது. ஒருவர் கேட்டார்— 'பல்கலைப் புலவரின் பிள்ளைகள் எதுவரை படித்துள்ளனர்' என்று. மற்றொருவர் கூறினார்—'அவரது பிள்ளைகள் படிக்கத்தான் அவர் எதையும் விட்டு வைக்க வில்லையே' என்று.

அப்பொழுதுதான் என் உள்ளத்தில் ஓர் எண்ணம் பிறந்தது. தம் மக்கள் கல்வியில் ஆர்வம் அற்றவர்களாய் இருத்த லினால்— உளதாகும் மனக்குறையை—எம்போல்வாரிடம் காட்டும் அன்பினால் ஈடுசெய்கிறார் போலும் என்று. தமிழ்ப் பற்று உடையராய்க் காணப்படும் இளைஞரை எல்லாம் தம் மக்களேபோல் கருதி அன்பு பாராட்டினார் எனில் மிகை யாகாது.

அவர் தம்முடைய அருமை மகனுக்கு **1942**-இல் தமிழ்த் திருமணமே நடத்தினார். அந்தத் திருமணத்தில் இறைவழிபாடு தேவாரப் பண்ணாக இசைக்கப்பட்டது. திருவிளக்கு முன்னர் தாலிகட்டி மாலை மாற்றிடச் செய்து திருமணத்தை நிறைவேற் றினார். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். வரலாற்றுத்துறை பேராசிரியரான சீக்கா என்னும் சீனிவாசாச்சாரியார் (ஐயங்கார்), அந்தத் தமிழ்த் திருமண முறையையும் வரவேற்று மணமக்களையும் வாழ்த்திப் பேசினார்.

''நாம் தமிழர்கள், நமது தாய்மொழி தமிழ், அது உயர் தனிச் செம்மொழி, நமது இனமும் அதன் நாகரிகமும் வரலாற் றுச் சிறப்புடையவை, இலக்கியமும் பண்பாடும் மேல்நாட் டாரும் மதிக்கும் தகுதியுடையவை'' என்னும் எண்ணமோ— தெளிவோ தமிழ் மக்களிடம் எடுத்துரைக்கப்படாத காலத்தில்— அவற்றை எடுத்துக் கூறத் தலைப்பட்ட மிகச் சில தமிழறிஞருள் அவர் ஒருவர்.

தமிழ் மக்களோ–ஒரு தாழ்நிலைக்கு மட்டுமன்றித் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி நின்றனர். தமிழர்கள் மதவழியில் வடமொழியே தேவமொழி—கடவுள் வழிபாட்டுக்குரிய மொழி— எனவும்—தமிழ் அதற்கான தகுதி பெறாத நீசமொழி எனவும் நம்பிக் கிடந்தனர். புரோகிதர்களே மதகுருமார்களாக மதிக்கப் பட்டதனால்—வடமொழிகொண்டு நிகழ்த்தப்படும் வழிபாடும் திருமணமும் பிற சடங்குகளுமே—தெய்வம் ஏற்பன என்றும் அதுவே தம் மதம் என்றும் உள்ளங்கொண்டிருந்தனர்.

அதன் விளைவே—தமிழும் தமிழரும் தாழ்வுற்ற நிலை எய்தியது எனத் தெளிந்த கா.சு. அவர்கள், தமிழின் உயர்வையும், தமிழினத்தின் தனிப் பெருமையையும் வரலாற்றுச் சான்றுடனும்—ஆய்வு முடிவுகளுடனும் விளக்குவதையே ஒரு பெருங் கடமையாகக் கொண்டார். வகுப்பறையாயினும்—மாநாடாயினும் எழுதும் நூலாயினும் ஏடுகட்கான கட்டுரையானாலும், தமிழின் மாட்சியையும் தமிழரின் தனித் தகவினையும் விவரிப்பதே அவரது குறிக்கோள் ஆயிற்று.

அவரால் வலியுறுத்தப்பட்ட கொள்கைகள் பல. அவற்றை விவரித்திட இயலாததால் ஒருபட்டியலாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. தன்னிகரற்ற தொன்மையுடைய தமிழ்மொழி—பிறமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் திறனுடையது. வடமொழியின் கலப்பால் தமிழின் சிறப்பு குன்றியது. எனவே தமிழை வடமொழி நீக்கி எழுதுவதும் பேசுவதுமே—தமிழுக்கு ஆக்கம் செய்வதாகும்.

2. தமிழர்கள் தென்னாட்டின் தொல் குடிமக்கள். ஆரியர்கள் இந்தியாவில் காலூன்றுவதற்கு முன்னரே நானிலம் போற்றும் நாகரிகத்துடன் வாழ்ந்தவர்கள்.

3. ஆரிய மொழியில் பிறந்த நூல்களினும்—தமிழ் இலக்கியங்கள்—இலக்கணங்கள் பழமையும்—மேன்மையும் கொண்டவை. அவை வடமொழி இலக்கண இலக்கிய வழிப்பட்டவை அல்ல.

4. தமிழ்ச் சொற்கள் பல வடமொழியில் சென்றேறியுள்ளன. அவையே பின்னர் தமிழ்மொழியில் கலக்குமிடத்து—அந்த வடசொற்கள் துணைகொண்டே தமிழ் வழங்குவதாக ஒரு தவறான எண்ணம் வளர்க்கப்படுகிறது.

5. தமிழர்களின் சமய தத்துவங்களும் சிந்தனைகளும் தனித்தன்மையுடையவை. ஆரியர்களிடை வளர்ந்த சமய தத்துவங்களின் மூலம்—வேர் தமிழர் சிந்தனையே.

6. தென்னாட்டவரின் சிவ வழிபாட்டு வழிவளர்ந்த சைவமோ—மால் வழிபாட்டு வழி வளர்ந்த வைணவமோ, வடமொழி வழிவந்த வைதிக, சுமார்த்த மதங்களைச் சார்ந்த நிலையில்—புரோகித ஆதிக்கத்தின் மறுபெயராக உள்ள 'இந்து மதம்' என்று கொள்வது அறியாமை.

7. ஒரு மதத்திற்கு உரிய இலக்கணப்படி இந்து என்பது ஒரு மதமல்ல; இந்தியாவில் வாழ்ந்த மக்களைக் குறிப்பதாக ஐரோப்பியரால் வழங்கப்பட்ட சொல்லே. இந்த விளக்கத்தால் தமிழர்களைச் சைவர்—வைணவர் என்னும் மதமுடையவர்களாகக் குறிப்பிடாமல் 'இந்து' என்று குறிப்பது உண்மைக்கு மாறானதாகும்.

8. ஆரியர்களின் ஆதிக்கத்தால் வடபுலத்தில் வடிவுகொண்ட, பிறவியில் பேதம் கற்பிக்கும் நால்வருண சாதிமுறையும்—

அதனை என்றும் நிலைநிறுத்துவதற்கென வரையப்பட்ட மனுதருமமும் தமிழர் நாகரிகத்துக்கு மாறுபட்டவை; தமிழர்களிடம் புகுத்தப்பட்டவை; தமிழர்களை அடிமைப் படுத்தியவை.

9. சாதி வேறுபாடுகள் உண்மையுமல்ல; நியாயமுமல்ல. பிறப்பினால் உயர்வு தாழ்வுகொள்ள இடமற்ற குலவேறுபாடுகளும் நீங்கித் தமிழர்கள் ஓர் குலமாக உயரவேண்டும். சமுதாயப் பழக்கங்களில் உள்ள வேறுபாட்டில் உணவுப் பழக்கமே வலிவுடையது. எனவே உணவுப்பழக்க அடியாக, புலால் உண்பவர்களும் உண்ணாதவர்களும் தம்மிடையே குலவேறுபாடு கருதாது உறவு கொண்டிட வேண்டும். அந்த உறவு வளர கலப்பு மணம் பெருக வேண்டும்.

10. கோயில் வழிபாட்டிற்கோ — திருமணச் சடங்கிற்கோ வடமொழியைக் கொள்ளலாகாது. வடமொழி நுழைப்புக்கு முன்னர் அடியார்கள் தமிழில் வழிபட்டது போன்று, தமிழ்ப் பண் பாடியே வழிபாடு நிகழவேண்டும். வடமொழிச் சாத்திர வழிப்பட்ட சடங்கு எதுவும் தமிழர்களின் மண நிகழ்ச்சிகளில் இடம் பெறக்கூடாது. தமிழ் மரபுக்கொத்த வகையிலேயே தமிழர்கள் தங்கள் குடும்பச் சடங்குகளை நடத்தவேண்டும்.

11. திருமணங்களை நடத்த புரோகிதர்களை அழைப்பது தமிழர்க்கு இழுக்கு. சைவனோ வைணவனோ —சுமார்த்தம் என்னும் வேற்று மதத்தானும் வைதிகனுமான புரோகிதனை அழைப்பது—தமது மதக்கொள்கைக்கே மாறுபட்டது,

12. சைவ—வைணவ தத்துவத்தின் மூலம் தமிழர் மெய்யுணர்வே. அந்தக் கொள்கைகளை வடமொழி வேதங்களில் தேடுவதும்-வேத வாக்கியங்கட்கு சைவ—வைணவத்திற்கு ஒத்த பொருள் காண முயல்வதும்,—சைவ வைணவக் கொள்கைகளை விவிலியத்திலும், திருக்குரானிலும் தேடும் முயற்சியோடு ஒக்கும்.

13. பண்டைத் தமிழர்களிடம் வளர்ந்திருந்த பலதுறைக்கலை அறிவையும்...கூத்து, இசை—(சித்த) மருத்துவம் முதலான துறைகளைப் பற்றிய திறனையும் தமிழர்களிடம் பயின்ற வடவர் அவற்றைத் தம் மொழியில் எழுதி வைத்துக்கொண்டனர்.

தமிழர்கள் தாம் நாளும் நடைமுறையில் பயின்று வருவதை நூல்வடிவாக்கும் தேவையை உணரவில்லை எனலாம். அஃதன்றியும் பண்டை நாட்களில் அவைபற்றிய நூல்கள் பல தமிழில் இயற்றப்பட்டிருந்தன என்பதும் அவை கடல் கோள்களினாலும்—பிற காரணங்களாலும் அழிந்திருக்க வேண்டும் என்பதும் ஆய்வாளர் முடிபு.

அவ்வாறு தம்மொழியில் நூல்களாக இயற்றிக்கொண்டதனாலேயே—அவை எல்லாம் ஆரியரிடமிருந்து தமிழர்கட்கு

—வடபுலத்திலிருந்து தென்னகத்திற்கு வழங்கப்பட்ட கலைகள் ஆகா.

**14.** கருனாடக இசை என்பது—தமிழிசையே. வழிவழிவந்த தமிழ்ப்பண்களே—இன்று பிறமொழிப் பெயர் கொண்டு வழங்கப்படுகின்றன.

இசைத் தமிழ்—முத்தமிழில் ஒரு கூறாக வளர்ந்து நின்றும்—இன்று கருநாடக சங்கீதம் என்று பெயரிட்டு தெலுங்கில் கீர்த்தனங்கள் இசைப்பதும் அதைத் தமிழர்களிடையே பாடுவதும் தமிழரிடம் பல்வகையால் வடிவுகொண்ட தாழ்வுமனப் பான்மையின் விளைவே. தாய்மொழி தாழ்ந்தது என்னும் எண்ணம்—தமிழில் பாட்டுக் கேட்கும் ஆர்வத்தையும் ஒழித்துவிட்டது. தமிழ் மக்களிடையே தமிழ்ப்பண்களையே பாடச் செய்வது நமது உரிமை.

**15.** ஆட்சித் துறையின் நிருவாகம், நீதி மன்றம்—சட்ட மன்றம் உயர் கல்வி வழங்கும் கல்லூரி-முதலான யாவும் தாய் மொழியான தமிழையே பயன்படுத்தவேண்டும். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும். அறிவியல் முதலான அனைத்துத் துறை அறிவும் தமிழிலேயே எல்லோரும் கற்றுத் தெளியுமாறு, அவையாவும் தமிழில் இயற்றப்பட்டு நூல்களாக வருதல் வேண்டும்.

**16.** இந்தியாவின் பொதுமொழியாக 'இந்தி'யை ஏற்க வேண்டும் என்பது அறிவுக்கு ஒவ்வாது. வட நாட்டினர் பேசும் மொழிகளுள் ஒன்றைத் தென்னாட்டினர் மீது திணிப்பது நியாயமன்று. இந்தித் திணிப்பு மூலம் ஆரிய-வடமொழி ஆதிக்கம் மேலும் வலுப் பெறும் என்பதும், தமிழ் அழியும் என்பதும்-வரலாற்று அறிவுடையோர்க்கு விளங்கும்.

எனவே இந்தியை எந்நாளும் நாம் ஏற்றிடலாகாது.

**17.** தமிழ்மொழியின் உரிமையைக் காத்து அதை உயர்த்தினாலன்றித் தமிழரின் இழி நிலையை மாற்ற முடியாது.

**18.** உலக மாந்தர் எல்லோரையும் ஒரு குடும்பமாகக் கருதக் கூடிய அளவுக்கு—விரிந்த நோக்குடையர் தமிழர். சமய நோக்கிலும் சமன்மை கொள்கையைக் காத்தவர் தமிழர்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்!''
''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''
''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''
''அறத்தால் வருவதே இன்பம்''
''பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர்''
''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்''

என்பன போன்ற கொள்கைகட்கு உறைவிடமான தமிழர்—உலக மாந்தர்-எல்லோருக்கும் ஒத்த நீதியைத் தெளிந்தவர். மாந்தர் எல்லோரையும் ஒரு சேரச் சுட்டுதற்கு உரிய தகுதி தமிழர் என்னும் சொல்லுக்கு உண்டு.

ஆனால் தமிழர் என்பதையே மறந்து, தமிழையும் துறந்து, தம் சமய நெறியையும் தெளியாது, வடமொழி—வேத—சுமார்த்த—புரோகித ஆதிக்கத்தை ஏற்கும் அடிமை என்பதற்கான குறியீடாக வழங்கும் 'இந்து' என்று நம்மைக் கருதிக் கொண்டதுடன், உண்மையல்லாத 'சாதி' எண்ணத்திற்கு இடந்தந்து நமது இனத்தைப் பிளவுபடுத்தி—வேற்றின மேலாண்மை நிலைக்க வழிசெய்து—நம்மை ஒரு அடிமைக் கூட்டமாக வைத்து, கண்டவர்கள் மேய்த்திட வாய்ப்பளித்து விட்டோம்.

இனியாகிலும், தமிழர்கள் உண்மை உணர்ந்து தமது உரிமை காத்திடும் உறுதி கொண்டு, அயராது செயற்பட்டு ஓரினமாக ஒன்றுபட்டவராக உருக்கொண்டு தாழ்வகற்றித் தலை நிமிர்ந்து—ஆதிக்க அமைப்புகளைத் தகர்த்து உலகோர் மதிக்கும் மக்களாக வாழத் தலைப்பட வேண்டும். ஆம்—பல்கலைப்புலவர் தமிழ்க் கா.சு. பிள்ளை அவர்களின் உள்ளத்தினின்றும் வெளிவந்த — சீரிய கொள்கைகளே இவை. அவரது எழுத்தும் பேச்சுமாக, அவரது நடையில் காட்டப்பட்ட மேற்கோள் மொழியாக இவை எடுத்து வைக்கப்படவில்லை எனினும், அவரது உள்ளத்தின் வெளிப்பாடாக நான் அறிந்தவற்றையே இங்கு குறித்துள்ளேன்.

அவரது குறிக்கோள் வெற்றி பெறப் பாடுபடுவதே—நாம் ஒவ்வொருவரும் அவரது தொண்டுக்குக் காட்டும் நன்றியாகும். வாழ்க பல்கலைப்புலவர் புகழ்; வெல்க தமிழ்க் கா.சு.வின் குறிக்கோள்!

---

## ஆங்கிலேயர் அறிந்திருந்த அளவு ..!

ஆங்கில அறிஞர்கள் தமிழின் பெருமையை உணர்ந்திருக்கும் அளவு தமிழ் மக்கள்கூடத் தெரிந்திருப்பதாகத் தோன்றவில்லை. டாக்டர் வின்சிலோ என்பவர் தமிழுக்குப் பெரிய அகராதி வகுத்தவர். அவர் கூறுவதாவது : 'தமிழ் ஒரு கீழான மொழியன்று. ஆங்கிலத்தின் அடிப்படையான பேச்சிற்கு எழுத்து ஏற்படு முன்னரே தமிழானது உயர்ந்த நயமுடைய மொழியாய் விளங்கிற்று. செய்யுள் நடையில் தமிழானது கிரேக்க மொழியைப் பார்க்கிலும் மென்மையும் திட்பமும் உடையது. செய்யுள் வழக்கிலும் உரைநடையிலும் கடன் கொண்ட பகுதியையும் சேர்த்து நோக்கின் தமிழானது இலத்தீன் மொழியினும் வளம் உடையது.

—கா.சு.

---



# சிந்தனைச்சுருக்கம் செயலாக்கம் கிடைக்குமா?

அருட்திரு தவத்திரு அடிகளார் சன்னிதானம்

கா. சு. பிள்ளை அவர்கள் பேரறிஞர்; சிறந்த சிந்தனை யாளர்; செழுந்தமிழ் வழக்கின் நெறி பேணியவர்; பழமையின் உள்ளீடாக முகிழ்த்துவரும் புதுமைகளை இனம் கண்டவர்; வரவேற்றவர். ஆயினும் என்? அவர்தம் சிந்தனைகள் செய லாக்கம் பெறவில்லை. செயலாக்கம் பெற இயலாதவாறு அயல் வழக்கினரின் ஆதிக்கம் தடை செய்கிறது. தமிழ் நெறியை வளர்க்க வேண்டிய மடங்கள், திருக்கோயில்கள்கூட இன்று கலப்படமாகி அயல் வழக்கின்வழி செல்கின்றன. ஐயகோ! வேளாண்மைப் பண்ணைகள் களைகளின் பண்ணைகளாகி வரு கின்றன. இறைவா! தமிழ்ச் சாதியின் எதிர்காலம் எப்படி இருக் கும்? அன்னை மொழியாம் தமிழிற்குத் தமிழ் நாட்டில் இடம் கிடைக்குமா? வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த சமயம் மக்களிடையே தவழுமா? இறைவா! நின் திருவுள்ளக் குறிப்பு தான் என்ன? கா. சு. பிள்ளை அவர்களின் சிந்தனைகளைச் செயலாக்கம் பெறச் செய்வதே இன்றுள்ள முதற்கடமை.

திருக்கோயில்கள் தமிழருடைய நாகரிக மையங்கள் என்பது பிள்ளை அவர்களுடைய தெளிவான முடிவு. திருக்கோயில் நிகழ்வுகளிலும் நடைமுறைகளிலும் சுமார்த்தர்களுடைய கலப்பை, பிள்ளை அவர்கள் வன்மையாக மறுத்தார்கள்; கண்டித்தார்கள். நமது சமயமும் சமய நிறுவனங்களும் சுமார்த்தக் கலப்பிலிருந்து மீட்கப்படவேண்டும் என்று எண்ணி னார்கள்; எழுதினார்கள். இன்று நடந்திருப்பது என்ன? நம்முடைய சமய நெறிக்கு வைணவம் பகையன்று; இசுலாமிய, கிறித்துவ சமயங்கள் பகையல்ல; சுமார்த்த நெறியினரே பகைப் புலத்தினர்; சுமார்த்த நெறியினரே மிண்டிமாயாவாத நெறிச் சார்பினர். இவர்கள்தாம் ஆதி சங்கரர் மரபினர். இவர் களுள்ளும் உண்மையில் வழிவழி சங்கரர் மரபில் வராத காஞ்சி காமகோடி பீடத்தினர் ஆதிக்க வெறி பிடித்து நன்னெறிகளை யெல்லாம் மாசூரச் செய்கின்றனர். இந்த மடத்தினரிலும்கூட தலைக்காவிரி ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்களுக்கு இந்து சமய சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னராக விளங்க ஆசை. நமக்கொன்றும் இதில் மறுப்பு இல்லை. மறுப்பு இல்லாதது மட்டுமல்ல. வரவேற்கவும்கூட ஆயத்தமே! ஆயினும் தங்கத்

திற்கு ஈடாக தவிடு வாங்க இயலுமா? இவர் நமது நாட்டில் தொடர்ந்து செழித்து வளர்ந்து வந்துள்ள சிவநெறியைப் பற்றிக் கற்கவேண்டும். சூரியனைக் கடவுளாக நினைத்து வணங்குபவர்களுக்கு நமது சைவநெறித் திருக்கோயில்களில் என்ன தொடர்பு வேண்டியிருக்கிறது? முதலில் இவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை யாவது உண்டா? அருள்கூர்ந்து அவரவர் வழி அவரவர் ஒழுகுவதே முறை. ஆதலால் சைவநெறியில் சுமார்த்தக் கலப்பைச் செய்து எல்லோரையும் முட்டாளாக்காமல் இருப்பது நல்லது. நம்மனோரும் சுமார்த்தக் கலப்பை விழிப்புடன் இருந்து தடுக்க வேண்டும்.

அடுத்து, பிள்ளையவர்கள் தமிழில் வழிபாடு, அருச்சனை செய்யும் உரிமையை வலியுறுத்தினார்கள். இத்துறையில் தமிழர்கள் பின்னடைவிலேயே உள்ளனர். இறைவனைத் தமிழ் மொழியில் பாடலாம்; பாராட்டலாம். எளிதில் பயன் கிடைக்கும். தமிழ்மொழியில் இயற்றும் வழிபாடு மிகுதியும் பலனைத் தரும் என்று வள்ளல் பெருமான் கூறினார்.

தமிழ்நெறியே சிவநெறி. சிவநெறியில் சாதிகள் இல்லை; குலகோத்திரச் சண்டைகள் இல்லை. சுந்தரர்,

'' தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்''

என்று உயர்வு தாழ்வற்ற நிலையில் சமநிலையில் வைத்துப் பாடியதை அறிக. திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் முருக நாயனாரும் உடனிருந்து கலந்துபேசி, உண்டு மகிழ்ந்து உடனுறைந்து உயர்பயன் எய்தியமையை அறிக. இன்று நம்மிடையே நிலவும் என்புருக்கி நோயாகிய சாதி வேற்றுமைகளும் குலப் பிரிவினைகளும் சுமார்த்தம் பெற்றெடுத்த நச்சுக் குழந்தைகள். இவைகள் நீங்காதவரை நமது சமுதாயம் வளராது; வாழாது.

திருக்கோயில் சடங்குகளைச் சிக்கனமாகச் செய்யும்படி பிள்ளை அவர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டார். திருக்கோயில்—திருமடங்கள் உபரி வருவாய்களைச் சமூக நலன்களுக்குச் செலவிடும்படி கேட்டுக்கொண்டார். இத்துறையில் சிறிது மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது உண்மையே! ஆயினும் தேவைக்குத் தகுந்த அளவு மாற்றங்கள் இல்லை. வளர்ச்சியும் இல்லை. சடங்குகள் பல்கிப்பெருகி வளர்ந்து வருகின்றன என்பது உண்மை.

இந்நிலையில் கா. சு. பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா வந்துள்ளது. நாம் அனைவரும் கா. சு. பிள்ளை அவர்களின் நினைவை, அவர்கள் வழி நிற்றலின் மூலம் தான் காட்ட வேண்டும். சைவ மடங்கள் முன் வருமா? அல்லது அருமைக்குரிய மீ. சு. இளமுருகு பொற்செல்வியின் தலைமையில் போராடத்தான் வேண்டுமா? விடை கூறுங்கள்.



# நாம் போற்றும் தமிழ்க் கா.சு.

**மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கம்**

தமிழ்த் தொண்டு செய்த பெரு மக்கள் பலருளர். தமிழ்த் தொண்டின் வகையும் இனங்களும் கூறுகளும் பலப்பல. எந் நிலைத் தமிழ்த் தொண்டும் போற்றற்குரிய பிறப்பின் கடமை யாகும். பழைய நூல்களைப் பதிப்பித்தும் தேடியும் உரை வரைந்தும் விளக்கஞ் செய்தும் நிறுவனங்கள் அமைத்தும் புலவர்களைப் புரந்தும் பொது மக்களிடம் தமிழ்ப்பறை முழங்கி யும் ஆட்சியில் பல திட்டங்கள் கொணர்ந்தும் அயன் மொழித் தாக்குதல்களை எதிர்த்துச் சிறை புக்கும் உயிர் விட்டும் அயல் நாடுகளிற் பரப்பியும் மொழி பெயர்த்துப் பரவுச் செய்தும் ஞால மாநாடுகள் கொண்டாடியும் தூய தமிழ் காத்தும் புதுச் சொல்லாக்கங்கள் படைத்தும் இதழ்கள் கண்டும் தமிழ்ப் பெயர் கள் வைத்தும் ஆட்சித் தமிழாக்கியும் செந்தமிழைப் பழந்துறை யிலும் புதுத்துறையிலும் காத்து வளர்த்துப் பேணும் செந்தமிழ்த் தொண்டர் குழாம் வழி வழியுண்டு.

இத் தொண்டுக் குலம் சார்ந்த ஒரு பெருந் தோன்றலே காசு என்னும் வெண்பாச் சீருடைய நம் கா. சு. பிள்ளை. இவர் தம் தொண்டு பொதுத் தொண்டன்று; பிறர் செய்யாத சிறப்புத் தொண்டு. தமிழ்த் தொண்டு செய்த பலர் வளமான கதைகளை நாம் அறிவோம். அது குற்றமன்று, குறைவன்று. அதுவே பின் பற்றத் தக்க உலகியல். அப்பொது நெறிச் செல்லாது, தன் பதவியைத் தன் உடைமையைத் தன் உடல் நலத்தை அழித்துக் கொண்ட பேரீகி நம் பல்கலைச் செல்வர். நாட்டு விடுதலைப் போரை எண்ணும்போது வ.உ.சி.யின் தன்னீகம் நம் கண் முன் நிற்கின்றது. தமிழ்க் காப்பையும் சைவக் காப்பையும் கருதுங் கால், முழுமுதற் பலியான பேராசிரியர் கா. சு. நினைவே நம் நெஞ்சத்தில் ஓடிப் பாய்கின்றது. அவர் சட்டக்கல்வித் திறம் என்ன, தாகூர்ப் பரிசு பெற்ற ஆற்றல் என்ன, இருமொழி பன் மொழி ஆழம் என்ன, பல வரலாறுகள் தொடுத்து வரைந்த பெரும் புலமை என்ன, நின்று தடைப் படாது பெயர்ப்புச் செய்யும் வன்மை என்ன, சைவ மெய்ப் பொருட்களை அறிவியல் முறையில் தருக்கம் செய்யும் செம்மாப்பு என்ன, அண்ணாமலைப் பல்கலைப் கழகத்தில் இருமுறை தமிழ்ப் பேராசிரியராக வீற்றி ருந்த பொலிவு என்ன, இத்தகைய நன்மகனை விடாது இறுகப்

பற்றிய நல்குரவு எனப்படும் வறுமை என்ன, அவ்வறுமைப் பாட்டிலும் குறிக்கோள்கள் விடாத வீரநெஞ்சம் என்ன?

தமிழின்பமும் வறுமைத் துன்பமும் பெற்ற முதுபெருந் தமிழ்த் தோன்றலுக்கு அவர் வழியினராகிய நாம் வணங்கித் தொழுது நூற்றாண்டு விழாக் கொண்டாடுகின்றோம். அரசும் அனைத்துச் சங்கங்களும் கொண்டாட வேண்டிய நூற்றாண்டு விழா என்பது என் வேண்டுகோள். தமிழ்ப்புலவர் பலர்க்கு நூற்றாண்டு விழா அரசு விழாவாக நடைபெற்ற பெருமையை நாம் அறிவோம். இணையில்லாத தன்னீகம் செய்த கா. சு. பிள்ளைக்கும் அப்பெருமை சேர வேண்டுமல்லவா?

பல்கலைப்புலவர் கா. சு. பிள்ளை இரண்டாவது முறையாக அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆன காலத்து (**1940—44**) நானும் தமிழ்த்துறையில் ஆசிரியப் பணி செய்தேன். அவர்க்கும் கூட இருந்து தொண்டுப் பணி செய்தேன். மெய்ப் பொருள் கண்ட பல்கலைச் செல்வர்க்கு மெய்ப் பணி செய்யும் தவப் பேறு பெற்றேன். அப்போது நடைமுறையில் அப்பெரு மகனிடம் நான் கண்ட எளிமையும் பண்பும் பற்றின்மையும் உறுதியும் சாலப் பல.

சைவநெறி தழைத்த கா. சு. பிள்ளை சடங்குகளிலும் சமய மூடப் பழக்கங்களிலும் நம்பிக்கையற்றவர். அவர் வரைந்த பல்துறை நூல்களுள் தமிழ் இலக்கிய வரலாறு என்ற இரு பாகங் களும் தமிழர் சமயம் என்னும் நெறி நூலும் மனங்கொள்ளத் தக்கவை. தமிழர் சமய நூலில் சீர்திருத்தங்கள் என்ற கட்டுரை புரட்சியும் தெளிவும் சான்றது. புறச்சடங்கில் நம்பிக்கையில்லா மையினால், ஈசனை மனத்துள் என்றும் சிந்திப்பதில் நம்பிக்கை கொண்டமையினால், முகம் மழித்த நிலையில் நீராடாமல் தில்லைக் கோயில் செல்வார் கா. சு. பிள்ளை. இது அவர் பக்குவ நிலையைக் காட்டும். பத்துத் திருப் பெயர்கள் சொல்லக்கூடிய நேரத்தில் ஆயிரம் பெயர் சொல்லிப் பாசாங்கு செய்து பணம் பறிப்பதை இச்சமயப் பெருமகன் உடன்படவில்லை.

யாரையும் எளிதில் நம்பும் இயல்புடையவர். இந் நம்பிக்கை அவர் சிறப்புக் குணங்களுள் ஒன்று. காய்கறி விற்பவனிடமும் மோர் விற்பவனிடமும் தன் பணப்பையைக் கொடுத்து எடுத்துக் கொள்ளச் சொல்வார். உரியது எடுத்துக் கொண்டாயா என்று கேட்டுப் பையை வாங்கிக் கொள்வார். இக் குணத்தை அருமை யில் எளிய அழகு என்று பாராட்ட வேண்டும்.

மாநிலக் கல்லூரியில் தமக்குத் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த தமிழ்த் தந்தை உ.வே.சா. மறைவுற்றது கேட்டுக் கலங்கி அன்று உண்ணவில்லை. அவர் பெருமைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். சுப்பிரமணியனுக்குப் பாடப் புத்த கம் வேண்டியதில்லை என்று உ.வே.சா. ஏனை மாணவர்கட்கு நினைவு படுத்துவாராம். இவ்வாற்றல் பல்கலைச் செல்வர்க்கு

இயல்புப் பேறாகும். கற்றவையெல்லாம் அவர்க்கு உடைமையாகிவிடும். மறப்பெனும் பகைவன் அவரை வெல்ல முடியவில்லை. இந்நினைவுப் பேற்றினாற்றான் விரிந்த பல துறைப் பனுவல்களை இப் பல்கலைத் தோன்றலால் நூலகத் துணையின்றி விரைந்து எழுத முடிந்தது. இப்பெருமகன் எத்துறையில் எந்நூல் எழுதினாலும் தமிழின் ஆற்றல், தமிழ் நாகரிகத்தின் பரந்த நோக்கு, தமிழர் சமயத்தின் தூய நெறிகள் என்றிவற்றைப் பலதுறைச் சான்றுகளோடு நிறுவுவதாக அமையும். தமிழின் பெருமையைக் காக்கப் பிறந்தவரே கா. சு.

> *''உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் தமிழர் நெறியானது விரிந்த நோக்கமும் அமைப்பும் உடையது. பிறப்புத் தடை, நூற்கட்டுப்பாடு, மணத் தடை, சடங்கு முறைக் கட்டுப்பாடு என்பவற்றுள் ஒன்றும் அதற்கில்லை. மொழிப் பற்றும் கொள்கையுமே இன்றியமையாதன. ஆதலின் தமிழர் சமயம் உலகப் பொது நெறியாய் விளங்கும் தகுதியுடையது.''*
>
> **—கா. சு. தமிழர் சமயம்**

## தமிழ் மொழி தமிழாக வாழட்டும்

தமிழில் நெடுங்கணக்கிற்கு வடிவம் தனியே அமைந்திருப்பதாகிய செய்தியை மறைத்தல் வரலாற்று உண்மையை மறைத்தலாகும். ஆதலானும் தமிழின் வரியெழுத்துக்களை மாற்றுவது தவறாகும். அவ்வாறே தமிழ்ச் சொற்களையும் பாதுகாத்தல் வேண்டும். பிற சொற்களின் கலப்பு, தமிழில் ஏற்படுங்காலத்தில் தமிழ் எழுத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறே அவைகள் சேர்க்கப்படவேண்டும் என விதி இருப்பினும் தமிழில் உள்ள சொற்களை இழவாதிருத்தற் பொருட்டும் தமிழ் மொழியின் ஆற்றல்களை விளக்கிக் காட்டுதற் பொருட்டும் புதுக்கருத்துக்களைத் **தனித்தமிழ்ச் சொற்களாற்** புலப்படுத்துதலே பொருத்தமாகும். தமிழ் மொழியிலே பிற மொழிச் சொற்களைக் கலத்தல் கூடாது என்பதைச் சிலர் குறுகிய மனப்பான்மை என்பர். அது தவறு, நூல் இழைப்பதும், ஆடை செய்வதும் அறவே ஒழிந்த இந்நாட்டில், அவை தழைத்தற் பொருட்டுக் கதராடை அணிதல் வேண்டுவோரைக் குறுகிய மனப்பான்மையினர் என்று கூறுதல் தவறாதல் போலத் தூய தமிழ்ப் பேச்சு மிகக் குறைந்து தமிழ்ச் சொல்லாக்க முறைகள் பெரிதும் மறைந்தொழிந்து இத் தமிழ் நாட்டிலே அவை நிலைத்தற் பொருட்டுத் தூய தனித்தமிழ் வழங்கல் வேண்டும் என்றல் தக்கதேயாதல் காண்க.'' **—கா.சு.**



# பேராசிரியர் தமிழ்க் கா.சு

## வ. அய். சுப்பிரமணியம்

1943 சூலை மாதத்தில், தமிழ்ச் சிறப்பு வகுப்பில் சேர்வதற்காக நாகர்கோவிலிலிருந்து நாங்கள் மூவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம்.

பல்கலைக்கழகத்திலிருந்து வகுப்பில் சேர்வது பற்றி எவ்விதத் தகவலும் இல்லை. அன்றுள்ள இடைநிலைத் தேர்வில் இரண்டாவது வகுப்பில் தேறியதால், பெருமையாகக் கருதப் பட்ட சிறப்பு வகுப்பில் இடம் கிடைக்கவில்லையோ? என்ற அச்ச எண்ணமும் வாட்டியது. பிற பல்கலைக்கழகக் கல்லூரிகளில் உள்ள வகுப்புகளில் சேர அனுமதி கிடைத்திருந்தும் அதனைப் பொருட்படுத்தாது சிறப்பு வகுப்பில் சேரும் ஒரே நோக்கத்துடன் புறப்பட்டோம்.

திரு. பன்னிருகைப் பெருமாள் முதலியார் திருவிதாங்கூர் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்ததால் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக்குழுவில் ஓர் உறுப்பினராக அடிக்கடி அங்குச் சென்று திரும்புவார். எல்லோருக்கும் சான்றிதழும் அறிமுகக்கடிதமும் கொடுத்துதவும் பரந்த மனத்தினர். பிறரைப் போன்று நானும் ஒன்று பெற்றிருந்தேன்.

மதச் சொற் பொழிவாற்றும் க. ஆறுமுக நாவலர் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு அறிமுகமானவர். என் தாய் வழி உறவினர். எனவே அவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாருக்கும், பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்களுக்கும் கடிதம் எழுதித் தந்தார். அவ்வாறு கடிதம் எழுதும்போது இலக்கணப் பிழை இல்லாமல் தக்க சொல்லைத் தேர்ந்தெடுத்து, மிகக் கவனமாக எழுதினார். 'அவர்கள் இருவரும் புலவர்கள்! கவனமாக எழுதாவிட்டால் எழுத்துக்கும், எழுதும் தனக்கும் மதிப்புத் தர மாட்டார்கள்' என்றார்.

நெடுந் தொலைவில் இருக்கும் சிதம்பரத்திற்கு அதுதான் நான் தனித்துச் செல்லும் முதற் பயணம். வயதில், நான்தான் இளையவன். பக்கத்து வீட்டு நண்பர்கள் உடன் வந்தமையால் பயம் எதும் அன்று இல்லை.

இரயில் ஏறிய அடுத்த நாள் மதியம் பன்னிரண்டு மணிக் கெல்லாம் அண்ணாமலை நகரை அடைந்தோம். அன்று பிற்பக லில் சென்று கண்ட பல்கலைக்கழக அலுவலர், 'மூவரையும் சிறப்பு வகுப்பில் சேர்ப்பதற்காகத் துறைத்தலைவரின் கருத் தறிய விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன' என்றார். தமிழ்த் துறைத்தலைவர் அன்று கா. சுப்பிரமணிய பிள்ளை என்ற எம். எல்., பிள்ளை. அடுத்த நாள் காலை மூவரும் அவர் வீட்டிற்குச் சென்றோம். அறிமுகக் கடிதம் என்னிடம் இருந்தா லும் மூவரும் சென்றதால் அதனை என்னுடன் எடுத்துச் செல்ல வில்லை. அவர் வாழும் வீட்டின் பக்கவாட்டில் இருந்த முன்ன றையில் நாற்காலி ஒன்றில் தலைப்பாகை. கோட்டு பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய ஆடையுடனும் எப்போதும் புன்முறுவல் பூத்த முகத்துடனும் அவர்கள் இருந்தார்கள். கை விரல்கள் பக்க வாதத்தால் மடக்க முடியாமல் இருந்ததால் முன்கையை நீட்டி வைத்திருந்தார்கள். படிப்பாலும் நன்னடத்தையாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். நோய்வாய்ப்பட்டு. முகம் உலர்ந்து, பொலி விழந்து அன்று தோற்றமளித்தார். இரக்க உணர்வை உள்ள டக்கி மதிப்புக் கலந்து குரலில் எங்களில் ஒருவர் 'நாங்கள் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் சேர தூரத்தொலைவிலிருந்து வந்துள்ளோம். எங்களுக்கு இடம் கிடைக்கத் துணை செய்ய வேண்டும்' என்றார். எங்கள் பெயரையும் சொன்னோம். 'மூவர் விண்ணப் பங்களையும் பரிந்துரைத்து அனுப்பிவிட்டேன்' என்றார். அதிகம் பேசவில்லை. பல கவலைகள் இருக்கலாம். நாங்கள் விரும்பியது கிடைத்தது. எனவே திரும்பி விட்டோம்.

அடுத்த ஒன்றிரண்டு நாட்களில் துணைவேந்தர், பேராசிரியர் இரத்தினசாமி எங்களை ஒரு நிமிடம் நேர்முகத் தேர்வு செய்தார். வாயால் ஒன்றும் கேட்கவில்லை. கண்ணால் பார்த்துப் புரிந்துகொண்டார். உரிய கட்டணத்தைச் செலுத்தி வகுப்பில் சேர்ந்தோம்.

சிறப்பு வகுப்பில் மூன்றாண்டு ஆங்கிலத் தேர்வு! அதில் வெற்றி பெறா விட்டால் இறுதித் தேர்வு எழுதிப் பட்டம் பெற இயலாது. முதல் சிறப்பு வகுப்பில் நால்வர் மட்டும். இரண் டாவது சிறப்பு வகுப்பில் பத்துப்பேர் என்று நினைவு. மூன்றாவது சிறப்பு வகுப்பில் பத்துப் பேர். பேராசிரியர் க. அன்பழகன் (அன்று க. இராமையா) மாண்புமிகு நெடுஞ் செழியன் (அன்று வி. ஆர். நாராயணசாமி) பங்களூரில் வாழும் திருமதி நாகம்மாள் முதலியவர்கள் ஐந்தாவது ஆண்டில் படித் தார்கள். அன்று எனக்குப் பிள்ளை என்ற வாலும் என் பெயருடன் ஒட்டியிருந்தது.

பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கள் இறையனார் களவியல் பாடம் நடத்தினார்கள். மூன்று, நான்கு ஆகிய இரு வகுப்பு களுக்குப் பொதுவாக இந்தப்பாடம் நடந்தது. கவனமாகப் படிக்கும் மாணவர் ஒருவர் அதனைப் படிப்பார். ஏதேனும் விளக்க வேண்டிய சொற்களுக்கு மட்டும் பிள்ளையவர்கள் விளக்கம் சொல்வார்கள். இது அவர்கள் நினைவிலிருந்து சொல்

வ்தாகத் தோன்றியது: வகுப்பு சிறியதாகையாலும், அவர்களிடம் எல்லாமாணவர்களும் பெருமதிப்பு வைத்திருந்ததாலும், நோயினால் அல்லல் பட்டு வாடியதாலும் கேள்வி எழுப்புவது, வாதிப்பது முதலியவை அவர்கள் வகுப்பில் குறைவாக நிகழ்ந்தன. ஆனால் கேள்வி கேட்டால் குறிப்பாக விடை சொன்னார்கள். உடல் வளம் வரவரக் குறைந்து வந்ததால் இந்த வகுப்பு இறுதிவரைத் தொடர்ந்து நடக்கவில்லை. ஆனால் அவர்களுடைய சொற்பொழிவுகள் வழியும், அவர்கள் எழுதிய நூல்கள் வழியும், உடன்படிக்கும் மாணவர்கள் துறையில் பணி செய்யும் ஆசிரியர்கள் முதலியவர்கள் மூலமும் பல செய்திகளைத் தெரிந்து கொண்டோம்.

கா.சு. பிள்ளை அவர்கள் **1942** முதல், இரண்டாவது, முறையாகக் குறைந்த சம்பளத்தில் பேராசிரியர் பதவியில் அமர்த்தப்பட்டார். அதன் முன்னர் முதல் தமிழ் பேராசிரியராக ஐந்து ஆண்டுக்காலம் பணியாற்றினார்கள். நோய்வாய்பட்டு துன்புறுவதால் இரண்டாவது முறை நியமனத்தில் முன்னூறு ரூபாய் மட்டும் சம்பளம் பெற்றார். இரு ஆண்மக்கள் ஒரு பெண். இரு ஆண்மக்களும் போதிய படிப்பு இல்லாதவர்கள். வீட்டில் எந்தச் செழிப்பும் இருந்ததாகத் தோன்றவில்லை. கிடைத்தற்கரிய எம். எல். பட்டம் அன்று கிடைத்த பின்னர் தாகூர் விரிவுரையாளராக பணியாற்றினார்கள். அதன் பின்னர் அந்தப் பதவியை விட்டு விலகி, அரசியலில் இறங்கினார்கள். பழைய நீதிக்கட்சியில் ஈடுபாடுடையவர். ஆனால் பிறரை வெறுக்காதவர். ஆகையினால் அந்தணர்களில் பலர் அவர்களின் நண்பர்கள். பலர் பாராட்டவும் செய்தனர்.

மொழியியல் பற்றி அவர்கள் எழுதிய நூல் ஒன்று பல்கலைக் கழக நூல் நிலையத்தில் தேடிக்கண்டு பிடித்திருந்தேன். அச்சுப் பிழைகள் பல காணப்பட்டாலும் ஆங்கில நூல்களில் காணும் கருத்தோட்டத்தைச் சிறப்பாக, சுருக்கமாக விளக்கியிருந்தார்கள்.

ஆசிரியர் ஒருவர் காலை பத்து மணிக்கு வகுப்பு என்றால் பத்து பதினைந்து நிமிடம் கழித்துத்தான் வருவார். இரண்டு மூன்று தவணை நாங்கள் நாலவரும் பொறுத்திருநதோம். நான்காவது முறை ஐந்து நிமிடம் காத்து இருந்துபின்னர் நாங்கள் நூல் நிலையத்திற்குச் சென்றுவிட்டோம். அவர் வகுப்பிற்கு நேரம் கழித்து வந்தபோது 'நாங்கள் ஒருவரும் வகுப்பிற்கு வரவில்லை' என்று பதிவேட்டில் குறித்துவிட்டார். திரு. கா. சு. பிள்ளையவர்களிடம் இதனைக் கூறியபோது மாணவர்கள் வரவில்லை என்று குறித்திருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை. அதே ஆசிரியர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பிரபந்தம் ஒன்றைப் பாடமாக எடுத்து வந்தார். கதையின் பின் கதையாக இருந்தது. ஆனால் சீர்தூக்கிப் பார்த்து இன்னநிறை; இன்ன குறை; என்று தெரிந்து அறிந்து கூற அவருக்குப் பழக்கம் இல்லை. எனவே முணு முணுக்கும் எங்கள் வகுப்பிற்கு வருவதற்கு அந்த ஆசிரியர் இணங்கவில்லை.

நாங்களும் பேராசிரியர் கா. சு. பிள்ளையிடம் உண்மை நிலையை விளக்கினோம். இளைஞர்களிடம் என்றும் அன்பும், எப்பொழுதும் ஆதரவும் காட்டிய பெரும் பண்பாளர் அவர்கள். இரக்கமும் பெருமதிப்பும் எல்லோரும் அவர்களிடம் காட்டினர்.

வகுப்பு நடத்த இடம் இல்லாவிட்டால், பேராசிரியர் அறை வகுப்பறையாகப் பயன்படும். ஒருநாள் ஓர் ஆசிரியர், தானிருப்பதற்குத் தனியாக நாற்காலி இடுமாறு, சிற்றாளைப் பணித்தார். பேராசிரியர் நாற்காலி புனிதமானது, அதில் உட்காருவதா? என்று நலங்கனிந்த அருணாசலம் பிள்ளை அவர்கள் அன்று பக்தியோடு கூறியது இன்றும் நினைவிருக்கிறது. அதற்கு ஒன்றிரண்டு நாள் முன்னர்தான் ஓர் அரை குறை, அந்த நாற்காலியில் எவ்வித தயக்கமும் இன்றி உட்கார்ந் திருந்து பாடம் நடத்தியது. அதனைக் கண்டு எங்கள் மனம் புகைந்தது. பின்னர் பல துன்பங்களை அனுபவித்து அந்தச் சிறுமனம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. தெய்வ நீதி அதுதானே!

துறையிலிருந்து அலுவல் நிமித்தம் துணைவேந்தரையோ அல்லது பதிவாளரையோ காணச் செல்லும் போதும், அல்லது பதிவாளரையோ காணச் செல்லும் போதும் தலைப்பாகையைச் சிற்றாள் அல்லது பக்கத்து நிற்கும் யாரேனும் பிள்ளையவர்கள் தலையில் வைத்துச்சீர் செய்வர். அவர்களுடைய கைகள் பயன் படுத்த இயலாத அளவிற்குப் பக்கவாதம் பிடித்தாட்டியது.

உடல் நலக் குறைவால் துறைப்பணிகள் முடங்கிக் கிடந்தன. தமிழை நம்பி, எல்லாவற்றையும் துறந்த அந்தப் பெருமகனாரை, இறுதிவரை ஊதியம் நல்கிக் காத்து, தமிழ் வளர்க்க முன்வந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழி செய் திருந்தால் அந்தப் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்ந்திருக் கும். இவற்றையெல்லாம் அண்ணாமலையரசர் அறியாமல் இருந் திருக்க இயலாது எனினும் கா. சு. பிள்ளையவர்களின் பதவி நீடிக்கப்படவில்லை.

வீட்டிற்குத்திரும்ப வேண்டியநிலை, தளர்ந்த உடல், மக்களில் ஒருவரும் படித்து வேலை ஒன்றைத் தேடிக்கொள்ளாத நிலை. மகள் ஒருத்திக்கு மணம் செய்து வைக்க வேண்டிய நிலை இவற்றையறிந்த மாணவர்கள் எல்லோருக்கும் சங்கடம் ஏற்பட்டது. மாணவர்கள் கையிலிருந்த சிறு தொகையைத் திரட்டிக் கொடுத்தனர். பேராசிரியர்கள் ஓரிருவர் சொற் பொழிவிற் கிடைக்கும் பணத்தைச் சேமித்துப் பேராசிரியருக்கு வழங்குவதற்கு முனைந்தனர். தமிழை நம்பி, எல்லா வாய்ப்பு களையும் துறந்து, உடம்பு நலம் கெட்டு, சீரற்ற மக்களுடன், நலிந்து மெலிந்த பட்டத்து யானை போன்று எம். எல். பிள்ளை அவர்கள் அண்ணாமலை நகரைவிட்டுப் புறப்பட்டது நினைவி லிருந்து அகலவில்லை.

சைவசித்தாந்தக் கழகச் செயலாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள், பின்னர் நூல் எழுத வைத்து அதற்கேற்ற சொந்த ஊதியத்தை வழங்கி முட்டில்லாமல் வாழச் செய்தார்.

கா. சு. பிள்ளையவர்களுடைய இரண்டாவது மகன் அவ்வப்போது திருவனந்தபுரத்திற்கு வருவார். பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கும்.

ஆங்கிலப் படிப்பும் உயர்பதவியும் உடையவர்கள் தமிழைப் பெருமைப்படுத்திய கால கட்டத்தில் கா. சு. பிள்ளையவர்கள் வாழ்ந்தார்கள். அளவில்லாத நினைவாற்றலும் எந்த நூலைப் படித்தாலும் அதன் சாற்றைப் பிழிந்து தரும் ஆற்றலும் அவர்களுக்கு இருந்தன. நூல்களையும் தெளிவுரைகளையும் சீர்தூக்கவோ, வாதவன்மையைக் காட்டவோ, பிறர் தரும் சான்றுகளை மறுக்கவோ அவர்கள் முயலவில்லை. தமிழுக்குப் பெருமை தேடுவதும் அதன் மேன்மையை நிறுவுவதும் அவர்கள் குறிக்கோள். மற்றெந்த முயற்சியும் இரண்டாந்தரமானது அவர்களுக்கு. ○○

பேராசிரியர்

**பல்கலைப்புலவர் தமிழ்க் "கா. சு." அவர்கள்**

**சீரிய பாவலரும் ஆவார்கள்.**

## திருமிகு திருவரங்கம்பிள்ளை அவர்களைப் பாராட்டும் பா

"திருவரங்க மெனும்நல்ல தேசுடைய திருப்பெயர்தான்
திருவரங்க நடங்காணும் அம்மைதிரு நாமமதாம்
திருவரங்கப் பெயரோய்நின் திவ்வியபல் லுதவிகளும்
திருவரங்கன் திருவருள்போல் என்னுள்ளம் கவர்வனவே"

"திருவரங்கன் முருகனுக்குத் தாயென்னும் முறையாதல்
திருவரங்கன் குமரனுக்குத் தந்தையெனு மியைபாதல்
திருவரங்கப் பெயரின்வேள் சீர்நாமம் உடையோர்க்கும்
திருவரங்க முயன்றுதவும் செவ்வியினாற் றெளிந்தேனே"



# தமிழ்க் "கா.சு" திருக்குறள் தெளிவுரை

இலக்கியச் செம்மல் இராமு. இளங்குமரன்

கா. சு. அவர்கள் திருக்குறளுக்குத் தெளி பொருள், விளக்கப் பொழிப்புரை வரைந்துளர். அதன் முதற்பதிப்பு 1928இல் வெளி வந்தது. அதனை வெளியிட்டது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். ஏறத்தாழ ஒருபதின் பதிப்புகளை அது கொண்டுள்ளது.

## பொதுமறை, பாயிரம்

திருக்குறள் 'பொதுமறை' எனச் சுட்டும் ஆசிரியர், ஆதித் தமிழ் நான்மறைகள் மறைந்த பின்னர் அந்நான்மறைக் கருத்து களை விளக்கு முகத்தான் ஆசிரியர் திருவள்ளுவரால் செய்யப் பட்டது என்னும் கருத்தைப் பாயிரத்தில் வைக்கிறார். அப்பகுதி யிலேயே கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளின் 'பாயிரம்' என்னும் கருத்தையும் வெளியிடு கின்றார்.

## சிவநெறியும் பொதுவும்

திருக்குறள் வேதவழிப்பட்டது என்பது பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் கருத்து. அதனைக் கருத்தில் கொண்ட தமிழ்க் கா.சு. தமிழ்ச் சைவ நெறிப்பட்டது என்னும் கருத்தை நிலைநாட்டுவார் போலக் கடவுள் வாழ்த்தின் உரையை வரைகின்றார்.

முதற் குறளில், ''உலகத்திலே உடம்பெடுப்பதற்கு அருட் சத்தியோடு கூடிய கடவுளே காரணமாதலால் உலகம் மாதொரு பாகனாகிய கடவுளைத் தலைவனாக உடையது'' என்றும், வான்சிறப்பு முகப்பிலே மழைச் சிறப்புக் கூறுதல் திருவருட் சத்தி வணக்கங் கூறுதலாக முடிகின்றது'' என்றும், மலர்மிசை ஏகினான் என்பதற்கு ''உயிர்களது உள்ளக் கமலத்தின் மேலிட மாகிய பரவெளியிலே கூத்து இயற்றுகின்ற கடவுள்'' என்றும் கூறுவனவற்றாலும் பிறவற்றாலும் இது விளங்கும்.

சிவநெறி வழிப்பட்டது பொதுமறையோ என வினவுதலுண் டாயின், தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை

என்னும் மணிமொழி மறுமொழியாம் எனக் கொண்டு உரை கண்டாராகலாம்.

## புத்துரை

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி''

என்னும் குறளுக்குப் ''புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தினை யும் அடக்கினானது வலிக்கு அகன்ற வானத்துள்ளார் இறைவ னாகிய இந்திரனே அமையும் சான்று'' என்று உரையும், ''தான் ஐந்தவியாது சாபம் எய்தி நின்று அவித்தவனது ஆற்றல் உணர்த் தினான் ஆகலின் இந்திரனே சாலுங் கரி என்றார்'' என்று விளக்கமும் வரைந்தார் பரிமேலழகர். பிறரும், இவ்வுரைக் கருத்தே கொண்டு வரைந்தனர்.

கா.சு. ''ஐம்பொறிகளையும் அடக்கியவனது வல்லமைக்குப் பெரிய விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்றாவன்'' என்கிறார்.

எதிரிடை வழியால் ஐந்தவித்தான் ஆற்றலைப் பரிமேலழகர் காட்டியதை ஒவ்வாத கா.சு. நேரிடை வழியால் காட்டுதல் நூலாசிரியர் முறை வழியில் செல்வதாம். இது, முற்றிலும் அடிகள் உரைக்கு மறுப்புரையாம்.

## நுண்ணிய ஆய்வு

பிறர் உரையை ஏற்று ஒருமருங்கு மறுப்பார்போல் நுண்ணிய வேறுபாடு காட்டவும் செய்கிறார் கா.சு.

''தெய்வம் தொ ழாஅள்''

என்னும் குறளுக்குப் ''பிற தெய்வந் தொழாது தன் தெய்வ மாகிய கொழுநனைத் தொழா நின்று துயிலெழுவாள் பெய் யென்று சொல்ல மழை பெய்யும்'' எனப் பரிமேலழகர் உரை கண்டார். கா. சு. 'தெய்வத்தைத் தொழாத போதும் கணவ னையே தெய்வமாகத் தொழுது காலையில் எழுகின்றவள், மழையைப் பெய்யென்று சொல்ல அது பெய்யும்'' என்கிறார்.

பெய்யெனப் பெய்யும் மழைபோல்வாள் என உவமைப் படுத்து உரைப்பார் உளராயினும் கா.சு. அதனைக் கொண்டிலர் என்பதும், தொழாஅள் தொழுதெழுவாள் என்பதற்குப் புத்துரை வகுக்கிறார் என்பதும் எண்ணத்தக்கன.

இவ்வாறே ''மக்கள் மெய்தீண்டல்'' என்னும் குறளுக்கு ஒருவன் மெய்க்கு இன்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல் எனப் பரிமேலழகர் முதலியோர் பொருள்கூற, ''குழந்தைகள் பெற்றோரது உடம்பைத் தொடுதல் அவர் உடலுக்கு இன்பம் தருவதாகும்'' என்கிறார்.

மக்கள் மெய் தீண்டல் என்னும் தொகைச் சொல்லுக்குப் ''பெற்றோர், மக்களது மெய்யைத் தீண்டுதல்'' எனப்

பரிமேலழகர் பொருள் கொள்ள, ''மக்கள் பெற்றோரது உடம்பைத் தீண்டுதல்'' எனக் கா.சு. உரைகொள்ளத் தீண்டு வார் தீண்டப்படுவார் மாற்றியுரைக்கப்படுதல் அறியத்தக்கதாம்.

குழந்தையரின் மழலைச்சொல் பெற்றோர் காதில் விழுந்து இன்புறுத்துதல்போல், அவர்கள் மெய்வந்தும் விழுந்து இன்புறுத்துவதாகக் கொள்ளலே பொருந்தும் உரையாம் எனக் கா.சு. கண்டுரைத்தார் எனலாம்.

## உரைமேல் உரை

குறளை எழுதிப் பொழிப்புரை எழுதும் கா.சு. தழுவல் உரையாகவும், பிறருரையாகவும் குறித்தலும் மேற்கொண்டார்.

தென்புலத்தார் என்பதற்குப் பொருள் கூறும் கா.சு., ''இறந்த உயிர்க்குத் துணை நிற்கும் பிதிரர்கள்'' என்கிறார். மேலும் ''தென்புலத்தார் என்பார் தமிழ்நாட்டுப் புலவரென வும், தமிழர் குருமார் எனவும் கூறுவாரும் உளர்'' என்கிறார்.

தம்மின் தம் மக்கள் என்னும் குறளில் வரும் 'மன்னுயிர்' என்பதற்கு 'உள்ள உயிர்' என்று உரை கூறுவதுடன், ''மன்னுயிர் என்பது அறிஞரைக் குறிக்கும் என்பாரும் உளர்'' என்றும் வரைகிறார்.

''செய்யாமற் செய்த உதவிக்கு'' என்னும் குறளுக்குப் பொழிப்புரை வரைந்து அதன்பின் வேறொரு வகையில் பொருள் கோடலுமுண்டு என வரைகின்றார், இவ்வாறே வேட்ட பொழு தில் என்னும் குறளுக்கும் ஈருரை காட்டுகின்றார்.

ஒருரை கூறுவதுடன் அல்லது என்னும் குறிப்புடன் ஈருரை யும் தரும் என்னும் முறையிலும் உரை வகுக்கின்றார்.

> '' நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
> கெடுநீரார் காமக் கலன்''

என்னும் குறளில் வரும் 'காமக் கலன்' என்பதற்கு ''விரும்பி ஏறும் மரக் கலங்களாம் அல்லது விரும்பிப் பூணும் அணிகளாம்', என்பது இதனை விளக்கும். ஆயின், இவ்வுரை இரண்டும் பரிமேலழகர் உரைக்கண் வருவனவே. இவ்விரண்டினுள் ஒன்றைத் தெரிந்து சுட்டாமல் இரண்டையும் ஒப்பக் கொண்டார் இவர் என்க.

இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் என்பதற்கு நான்கு உரைகள் உரைக்கிறார் கா.சு. நான்கும் பரிமேலழகர் முதலாம் உரையாசிரியர்கள் உரைத்தனவே.

இவ்வாறே ''அடியளந்தான் தாயது'' ''தாமரைக் கண்ணான் உலகு'' என்பவற்றுக்கும் பிற்கால உரையாளர் வேறு வேறு புத்துரை கண்டாராக அவ்வுரையிடைக் கருத்தைச் செல விடாமல் பண்டையுரையாசிரியர்களின் உரையைத் தழுவியே செல்கிறார்.

இவற்றை நோக்கும்போது ஒரு கருத்துத் தெளிவாக விளங்குகின்றது. திருக்குறளின் பொருளை எளிமையாக எவரும்விளங்கிக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்திலேயே கா.சு. உரை எழுதியுள்ளார் என்பதாம். இதனைத் தெளிபொருள் விளக்கப் பொழிப்புரை என்னும் பெயரீடும் விளக்குவதாம்.

## விளக்கவுரை

கா.சு. உரை பொழிப்புரை எனப்பட்டாலும், அது தெளிபொருள் விளக்கப் பொழிப்புரை என்பதற்கு ஏற்பவும் நடையிடுதல் விளங்குகின்றது.

சிறப்பொடு பூசனை செல்லாது என்பதற்கு ''முதலிலே திருவிழா நின்று பின்பு வழக்கப் பூசையும் நின்றுபோம் என்றவாறு'' என்கிறார்.

ஒல்லும் வகை என்பதற்கு இயலும் வகை எனப் பொருள் கூறி, ''உடம்பின் நிலைக்கும் பொருளின் அளவிற்கும் தக்கபடி செய்தலே இயலும் வகை செய்தல் என்பது'' என்கிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் என்பதற்கு ''அன்பில்லாதவர்கள் தம்பொருட்டே எல்லாவற்றையும் தேடித் தமக்கே உரியதாக்கிக் கொள்வர்'' என உரை விரிப்பதும், உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு என்பதற்கு, ''உடம்பு எடாதபோது அறிவதற்கு அரிய உயிர்க்கும் எலும்பினை அடிப்படையாக உடைய உடம்பிற்கும் உண்டாகிய தொடர்பு என உரை விரிப்பதும் பேருரை ஒப்பவை.

பனைத்துணை என்பதற்குப் பனையளவு எனப் பொதுப் பொருள் குறித்தாலும் அப்பனைப் பெயர் தூண்டுதலால்'' ஏனைய மரங்கள் போலாது பனை சிறிய உதவி கொண்டு பெரும் பயன் விளைத்தல் காண்க'' என்று விளக்குவது அம் மரவியல் அறிந்த சிறப்பு வழிப்பட்டது.

காலத்தினால் செய்த உதவி ஞாலத்தில் பெரிது எனவும், பயன் கருதாமல் செய்த உதவி கடலிற் பெரிது எனவும், நிலையில் மாறாது அடங்கியவன் தோற்றம் மலையிற் பெரிது எனவும் வள்ளுவர் கூறுவார். அதனை விளக்கும் கா.சு.' உவமையினும் பொருள் உயர்ந்திருத்தலையும் நயமாக விளக்குகிறார்.

''நிலமானது காலத்தில் பயன் விளைப்பதியல்பு. அது காலத்தில் பயன் விளையாமையும் உண்டு. அக்காலத்திலும் நன்றி செய்வார் சிறந்தவர்'' என்றவாறு.

''கடல் தன்பால் மேகம் கொண்ட நீரைமீட்டும் பெறுகின்றது. அங்ஙனம் பெறாதார் கடலினும் சிறந்தவர்'' என்றவாறு.

''தானே உயர்வுடைய மலையினும் தனது ஆற்றலால் உயர்ச்சி பெற்றவன் பெரியவன்'' என்றவாறு.

இவை 'மாண' 'இல்' என்னும் சொற்களை நோக்கி வள்ளுவர் உள்ளம் உணர்ந்து உரைக்கும் நயத்தனவாம். இவை கா.சு. வழங்கும் கொடையாம்.

## குறிப்புரை கருத்துரை :

பொழிப்புரையே பெரிதும் எழுதும் கா.சு. சில இடங்களில் குறிப்புரை கருத்துரை ஆயனவும் வரைகின்றார் ;

''விண்ணின்று பொய்ப்பின்'' என்னும் குறளில் ''கடல் சூழ்ந்த என்பதனால் கடல்நீர் அளவின்றி யிருந்தும் அது பசி நீக்க உதவாது என்பது குறிப்பு'' என்றும், ''துறந்தார் பெருமை'' என்னும் குறளில் ''துறவிகளின் பெருமை அளவில் அடங்கா தென்பது கருத்து'' என்றும், ''எழுபிறப்பும்'' என்னும் குறளில் ''மக்கள் செய்யும் நற்கருமங்களால் பெற்றோரையும் தீயவை தீண்டா என்றார்'' என்றும், ''அன்போடியைந்த'' என்னும் குறளில் ''அன்பு செய்யாக்கால் உடம்பு எடுத்த பயன் யாதுமில்லை என்பது கருத்து'' என்றும், ''சொற்கோட்டமில்லது'' என்னும் குறளில் சொல்லில் மாத்திரம் செப்பமாக இருந்து மனம் ஒருபால் சாயப்பெற்றால் அது நடுநிலைமையாகாது'' என்றும் உரைக்கிறார். இவ்வாறு சொல்வனவெல்லாம் தெளிவும் விளக்கமும் நோக்கியவை என்க.

''ஏரின் உழாஅர்'' என்பதற்குக் கலப்பையால் உழமாட்டார் என்னும் பொருள் கூறும் கா.சு. ''செவ்வையாக உழவு செய்ய மாட்டாதார்'' என்றும் பொருள் கூறுவது இரட்டுறல் பார்வையாம்.

## சுருக்கமும் பெருக்கமும் :

'' ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலிற் காணப் படும் ''

என்பதற்கு, ''பிணக்கில் தோற்றவர் வென்றவராவர்; அது புணர்ச்சியுட் காணப்படும்'' எனக் குறள் போலவே பொழிப்பையும் சுருக்கி யுரைக்கின்றார்.

'' வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் ''

என்பதற்கு, ''புதிது புதிதாக விரும்பிய பொருள்கள் புதிது புதிதாக இன்பஞ் செய்வனபோலப் பூக்கள் நிறைந்த கூந்தலை யுடைய இவளது தோள்கள் எப்பொழுதும் புதுமையான இன்பத்தைத் தருகின்றன என்று பொழிப்புரைத்து ''விரும்பிய பொருள்கள் விரும்பியவுடனே கிடைத்தால் எப்படி இன்பந் தருமோ அப்படி இவளுடைய தோளும் இன்பந் தருவது என்பதும் ஒன்று என்று மேல் விரிவும் தருகிறார். இதனினும் விரிவாக எழுதும் உரை விளக்கங்களும் உண்டு. அவற்றை

முதற்குறள் உரையிலும், 'வினைபகை' என்னும் 674ஆம் குறளுரையிலும் காண்க.

## அதிகார ஆய்வு ;

அதிகாரத் தலைப்பு, பொருள், தொடர்பு ஆகியவற்றையும் உன்னிப்பாக நோக்கி உரை வரைந்துளார் கா.சு.

ஏழாம் அதிகாரம் 'புதல்வரைப் பெறுதல்' என்பது. இதனை, ''ஒவ்வொரு குறளிலும் மக்கள் என்றே நாயனார் ஆண்டு வந்தமையின் இவ்வதிகாரப் பெயர் மக்கட் பேறு என மாற்றப்பட்டது'' என்கிறார்.

இல்வாழ்க்கை என்பதற்கு ''மனையாளோடு வீட்டிலிருந்து வாழ்தல்'' என்னும் கா.சு. அதனை அடுத்து வரும் வாழ்க்கைத் துணை நலத்திற்கு ''முந்திய அதிகாரத்துள் ஆடவர் இல் வாழ்க்கை நடத்தும் முறை கூறப்பட்டது. இவ்வதிகாரத்திலே இல்வாழ்க்கைத் துணையாய மனைவி இன்ன நற்குணங்கள் உடையவளாய் இருத்தல் வேண்டும் என்பது குறிக்கப்படு கின்றது'' என்பது கூர்ந்து அறியத் தக்கதாம். இல்வாழ்வான், இல்வாழ்க்கை வாழ்பவன், வாழ்வாங்கு வாழ்பவன் என இல்வாழ்க்கை அதிகாரத்தில் வருபவற்றைக் கருதின் கா.சு. உரைநயம் புலப்படும்.

சொல்லாலும், பொருளாலும் இனியவாகும் சொற்களைச் சொல்லுதல் 'இனியவை கூறல்' எனவும் (10)

முன் நினைப்பு இல்லாமல் வருவித்துக் கொண்ட நோயைத் தீர்க்கும் 'மருந்து' எனவும் (95)

அழகு துன்புறுத்தல் 'தகையணங்குறுத்தல்' எனவும்(109) நற் செயல்களுக்காகப் பிறர் உதவியை நாடல் 'இரவு' எனவும் (106)

இயற்கையாய் மனிதர்க்கு உளதாகிய பகுத்தறிவுடைமையே இங்கு (அறிவுடைமை என) எடுத்துக்கொள்ளப்பட்டது எனவும் **(43)** அறுவகை மனக்குற்றங்களையும் நீக்குதல் 'குற்றங்கடிதல்' எனவும் **(44)** கூறுவன அவ்வவ்வதிகாரப் பிழிவாகிச் சிறக் கின்றன.

ஒப்புரவறிதல் என்பதை விரியநோக்கித் தெரியவரைகிறார்;

''ஒப்புரவு என்பது தம்மைச் சார்ந்த பிறரைத் தம்மோ டொத்த நன்னிலை யடையும்படி செய்தல். அவருடைய குறை களை உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு வழியறிதல் ஒப்புரவு எனப்படும். தம்முடைய குலத்தினருக்கும் நாட்டினர்க்கும் இடர்வந்தபோது உதவுதல் ஒப்புரவு என்ப'' என முப்பகுப்பில் வரைந்துளார்,

**சில விலக்குகள் :**

இனி இகல் என்பதற்கு "மாறுபடுதல் (சினத்தல்)." என்று சுருக்கம் உரைக்கிறார். *(86)*

நட்பு என்பதற்கு 'சிநேகம் இன்னதென்பது' என வட சொல்லை ஆள்கிறார். அவ்வதிகார உரையில்நேயம் ஓரிடத்தும், சிநேகம் மூன்றிடத்தும்நட்பு பத்திடத்தும் ஆளப்பெற்றுள. எண்ணியிருந்தால் சிநேக ஆட்சியை விலக்கியிருப்பார். என்னெனின், பிரமசரியம்,வானப்பிரத்தம், சந்நியாசம் என வடநூலார் கூறுவனற்றைக் கல்விநிலை, மனைத்தவநிலை, துறவுநிலை எனத் தமிழாக்கம் செய்பவர் அவர். *(41)*

இனி அவையறிதல் என்பதற்குக் கழகத்தில் உள்ளவர்களின் நிலையை அறிந்து பேசுதல் என்றும், அவையஞ்சாமை என்பதற்குப் பேசுதற்குரிய கழகத்தைத் தெரிந்து பேசத் தொடங்கிய பிறகு அதற்கு நடுங்காமை என்றும் *(72-73)* விளக்கம் தருகிறார். ஆயின் வள்ளுவர் காலத்தில் கழகத்தின் பொருள் சூதாடுமிடமாகக் கொள்ளப் பெற்றதைக் 'காசு' நன்கு அறிவார். கவறும் கழகமும் என்பதற்குச் "சூதாடும் கவற்றினையும் அஃதாடும் இடத்தையும்" எனவும் *(935)* கழகத்துக் காலை புகின் என்பதற்குச்"சூதாடுகளத்தில் இளமையிலேயே புகுவராயின்அல்லது சூதாடு களத்திலே ஒருவனுக்குக் காலம் போமாயின்" எனவும் *(937)* உரைவரைபவர் அவர். அறிஞர் அவையம் எனக் கழகத்திற்குப் பொருள் வரவு—கம்பர், பரஞ்சோதியார் முதலியோர் காலத்தின் ஆட்சிப்பட்டது. அதனை ஆள்தல் சைவசித்தாந்தக் கழகம், திருவிடர்கழகம், திராவிடர் கழகம் எனப்பெருவழக்கூன்றி விட்ட கால முத்திரைச் சான்றாம். உரையுள்ளும் கழகம், அவைக்களம், அறிஞர் கூட்டம் என்பவற்றுடன் சபையையும் ஓரிடத்து ஆள்கிறார் *(730)*.

இனிக் "கற்றிலனாயினும் கேட்க" *(414)* "நோக்கினாள் நோக்கி" *(1093)* என்பவற்றுக்குத் தெளிந்த வேறுறை காண வாய்ப்பிருந்தும் பரிமேலழகர் வழியில் எளிமையைப் படுத்தும் அளவிலேயே கா.சு. அமைகிறார். "எற்றென்று இரங்குவ செய்யற்க" *(655)* என்னும் குறளுரையும் அவ்வகையிலேயே அமைகின்றது.

**நிறைவு :**

கா.சு. *1928*இல் எழுதியது தெளிவுரை. அவ்வுரை பரிமேலழகர் உரையைத் தழுவி எளிமைப்படுத்துதல் நோக்கிலும், மிக அரிதாகவே புத்துரை, புது விளக்கம் தருதலிலும் எழுதப்பட்டது என்பது தெளிவுறுகின்றது. பின்னர் அவர் இயற்றிய நூல்களில் காணக்கிடக்கும் சீர்திருத்தக் கருத்துகள், திருக்குறள் தெளிவுரை கண்ட காலத்தில் அழுந்தவில்லை; அழுத்தியுரைக்கப் பெறவும் இல்லை எனலாம். ஒருவர் தம் நூல் வரிசை ஆய்வும், அவர் தம் வரலாற்று ஆய்வுக்குச் சிறந்த இடமாய் அமையும் என ஒரு கருதுகோள் வகுத்துக்கொள்ள இஃது இடமாம். ★★



# தமிழ்க் கா.சு.

## முனைவர் பி. தட்சிணாமூர்த்தி

பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை திருநெல்வேலிச் சைவ வேளாளர் மரபில், முதன் முதலாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்று 'பி. ஏ. பிள்ளை என்று சிறப்பாக அழைக்கப் பெற்ற காந்திமதிநாத பிள்ளையவர் களின் திருமகனாக 5.19.1188-இல் தோன்றினார். தாய் மீனாட்சி அம்மையார் ஆவார். திருநெல்வேலி நகர் புட்டா புரத்தியம்மன் கோவில் தெருவிலுள்ள திண்ணைப் பள்ளியில் இவரது ஆரம்பக் கல்வி தொடங்கியது. ஏழாண்டு நிறைவு பெறு முன் தாயாரை இழந்த இவர் தந்தையார் மேற்பார்வையில் கல்வி பயிலும் நிலையைத் தொடர்ந்தார். தெற்குப் புதுத்தெருவி லுள்ள சாப்டர் உயர்பள்ளியின் கிளையில் 1899-இல் நான்காவது வகுப்பில் முதல்வராகத் தேறினார்.

தொடக்கத் தேர்விலும் 1902-இல் ஏழாவது வகுப்புத் தேர்வான நடுத்தரத் தேர்விலும் மாநிலத்தில் முதல் மாணாக்க னாகத் திகழ்ந்ததால் இவருக்கு எந்த வகுப்பிலும் பள்ளிச் சம்பளம் இல்லை. 1905-இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய தமிழ்த் தேர்வில் முதன்மையாகத் தேறிப் பரிசும் பெற்றார். 1906-இல் மெட்ரிக் தேர்விலும் 1908-இல் எப். ஏ. தேர்விலும் தேறினார். 1910-இல் சென்னை மாநிலக் கல்லூரியில் முதன்மை பெற்றுப் பி. ஏ., பட்டம் பெற்றார். இம்முதன்மைத் தன்மைக்காகத் தமிழாராய்ச்சிக்கென அமைந்த பரிசு இவருக்குக் கிடைத்தது. 1913-இல் ஆங்கிலத்திலும் 1914-இல் தமிழிலுமாக இரு மொழிகளிலும் எம். ஏ. பட்டம் பெற்றார். பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டமும் 1917-இல் எம். எல். பட்டமும் புகழுறப் பெற்றார். இப்பெருந்தகுதியால் எம். எல். பிள்ளை என்றே நண்பர்களால் அழைக்கப் பெற்றார்.

உடைமைச் சட்டத்தை ஆய்வுப் பொருளாகக் கொண்டு எம்.எல்., பட்டம் பெற்றிருப்பினும் இவரது சொத்து சைவ மேன்மைக்குரிய சிவபூசையே. திருநெல்வேலியில் சைவ சித்தாந்த சங்கம் ஒன்றை அமைத்து அதன் தலைவராக வீற்றிருந்து வாரந் தோறும் தெய்வத்தமிழைச் சங்க உறுப்பினர் பன்னிருவருடன் ஆய்ந்து மகிழ்ந்தவர். பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலும்போது தங்குமிடத்தில் மணியடித்துச் சிவபூசை செய்தவராதலின் இவருக்குப் பூசைப்பிள்ளை என்ற பெயருமுண்டு. கீழப்புதுத் தெரு நெல்லைநாயகம் பிள்ளை மகள் பிரமு அம்மாளை மணந்தார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் தாகூர் சட்ட விரிவுரையாளர் என்ற பரிசைப் பெற்று அனைத்திந்தியப் புகழ் அடைந்தார். சட்டக் கல்லூரிப் பேராசிரியரானார்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணி புரிந்தார். திருவாசகம், திருக்குறள் ஆகிய நூல்க ளுக்குப் பொழிப்புரை எழுதினார். நல்ல நினைவாற்றலும் ஆராய்ச்சித் திறனும் மிக்க இவர் தமிழ் இலக்கிய வரலாறு எழுதினார். உலகப் பெருமக்கள் வாழ்க்கை வரலாற்று நூல்க ளும் எழுதியுள்ளார். ''மாசில்லாத மனிதராக மாண்புகளைத் தாம் பிறந்த தமிழ்ச் சமுதாயத்துக்குத் தந்த பெரியார்'' என்று திருமிகு மீ.சு. இளமுருகு அவர்கள் கூறியுள்ளார்கள். (திருநெல்வேலி நகராட்சி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் **1968**- பக்கம் 74) ''மலைகளெல்லாம் பொதிகையாகாது என்பதுபோல் தமிழறிஞர்களெல்லாம் எம். எல். பிள்ளையாகிவிட முடியாதது தான்'' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பொதிகைத் தென்றலின் இனிமையைச் சுவைத்தவராதலின் தமிழ்க் கா. சு. கவிஞராக, கதையாசிரியராக, உரைநடை வல்லுநராக, பத்திரிகை ஆசிரியராக, ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப் பாளராகத் தமிழ்ப்பணி ஆற்றித் தமிழ் உலகில் தனிச் சிறப்புப் பெற்றார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்த தோன்றல் வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் செய்த உதவியை நினைந்து பாடல்கள் பாடியுள்ளார். சேக்சுபியர் வரலாறும் நாடகக் கதைகளும் என்ற நூலை வெளியிட்டார். அதில், ''இரட்டைப் பிள்ளைகள் திகைப்பு விநோதம்'' என்ற கதையை எழுதினார். செந்தமிழ்ச் செல்வியில் **30** க்கு மேற்பட்ட கட்டுரை கள் பல்வேறு பொருள்களில் எழுதிக் கட்டுரை வல்லாராகத் திகழ்ந்தார். செந்தமிழ்ச் செல்வியில் இதழாசிரியர் குழுவில் ஒருவராக இருந்துதொண்டாற்றினார். **1935**-இல் 'மணிமாலை' எனும் பெயரில் மாத இதழ் ஒன்றை நடத்தி வந்தார். சை. சி. கழகம் வெளியிட்ட தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க் கினியர் உரை நூலுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளார். அறிவு விளக்க வாசகம், திருஞான சம்பந்தர் தேவார இயற்கைப் பொருளழகு, இறையனார் அகப் பொருள், பழந்தமிழர் நாகரிகம், மொழி நூற்கொள்கையும் தமிழ் மொழியமைப்பும் ஆகிய இவரது ஐந்து நூல்களும் ஆராய்ச்சித் திறன் மிக்கன. இவற்றுள் பழந்தமிழர் நாகரிகம் என்பது தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு நூல். இது குறித்து நாவலர் சோமசுந்தர பாரதியார் ''ஆங்கிலம் தமிழ் வழக்கு நூல்களிற் புலமை நிரம்பிப் பெறற்கரும் பட்டங்கள் பெற்றுத் தாகூர் சட்டநூல் விரிவுரையாளராய்ப் பலர் பாராட் டுக்கும் உரியராய்த் திகழும் பெரியார் கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் எழுதிய இந்நூலுக்கு எம்மனோர் கருத்துரை மிகையா கும். அளவிற்சிறிதாம் இக்கட்டுரை நூல் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு அகன்று பொருள் கண்ட நச்சினார்க் கினியர் எழுதிய உரைக்கடலைக் கடைந்து நீர் நீக்கி அள்ளற் குரியதைத் திரட்டியெடுத்த நவநீதம் எனில் அதன் அருமை தானே விளங்கும்'' என்பதாகும்.

சிவப்பிரகாசம், நீதிநெறி விளக்கம், திருமந்திரப் பாடல் களிற் சில இவரால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்றன,

ஸைவ சித்தாந்தத்தின் இயற்கைத் தத்துவம் (**Metaphysics of the Saiva Siddhanta System**) இந்து சமயங்களின் சுருக்க வரலாறு; (**A Short Sketch of the Hindu Religion.**) இந்து அற நிலையச் சட்டத் தொகுப்பின் மேல் ஒரு குறிப்பு (**A note on the Hindu Religions Endowments Bill**), தமிழ் மலர்கள் (**Tamil Blooms**) ஆகிய நான்கு நூல்கள் இவர் எழுதிய ஆங்கில நூல்கள். சட்ட நூல்களை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தார். சட்ட நூல்கள் இரண்டு ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். சட்ட நுணுக்கங்களையும் அறிவாராய்ச்சி மூலம் வெளிப்படுத்தினார்.

''சைவ சமயப்பற்று இவருக்குத் தந்தை வழிச் சொத்து. இந்த உண்மையை இவர் தமது கட்சிக் கொள்கைகளுக்கும் இணங்க உருவாக்கி வளர்த்து வந்தார்'' என்று பிஸ்ரீ கூறியுள்ளார். இவரது நாற்பெருங்குரவர்களின் வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் சை. சி. கழகம் வழி வெளிவந்துள. சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும் என்ற நூல் இவரது நூலே. திருநெல்வேலி நகர் வடக்குரத வீதியில் அவர் நிறுவிய மணிவாசக மன்றம் ஐந்து நூல்களை வெளியிட்டது. அவற்றுள் முதலாவதாகிய தாயுமானவர் வரலாறும் நூல் ஆராய்ச்சியும் என்ற நூல் வெளிவரப் பொருள் உதவி செய்தவர்கள் தருமையாதீனமும், சவளிக்கடை அதிபர் ந. சு. சுப்பையா பிள்ளையவர்களும் ஆவர். புலமையும் வறுமையும் பிரிக்க இயலாததென்பர். அறிவு ஆய்வு மிக்க தமிழ்க் கா. சு. இறுதிக் கால வாழ்வில் வறுமையில் செம்மை கண்டவர். 56 ஆண்டுகளே வாழ்ந்த இப்பெருமகன் சைவ சமயச் சடங்கு எனும் அரிய நூலை நெல்லைச்சைவருக்கு விட்டுச்சென்றுள்ளார். பட்டினத்தார், குமரகுருபரர், சிவஞானமுனிவர் வரலாறும் வரலாற்று ஆராய்ச்சியும் எனத் தனிப்பட்ட ஆசிரியர்களின் வரலாற்றையும் நூல்களையும் இணைத்து ஆய்வு செய்துள்ளார். தமிழர் சமயம், மெய்கண்டாரும் சிவஞான போதமும் போல்வன அறிவுக்கு விருந்தாவன.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தலைவராக வீற்றிருந்தார். மெய்கண்ட சாத்திர மாநாடு நடத்தினார். தனித்தமிழ் வித்துவான் தேர்வு இவரது முயற்சியால்தான் தோன்றியது. திருநெல்வேலி மாநகராட்சிக் கழக உறுப்பினராக இவர் 1932இல் தேர்ந்தெடுக்கப் பெற்றார். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் தர்மகர்த்தராக இவர் ஐந்தாண்டுகள் இருந்தபோது திருப்பணிகள் பல நிறைவேறின. மாகாணத் தமிழ்ச் சங்கம் இவருக்குப் **'பல்கலைச் செல்வர்'** எனும் பட்டத்தை அளித்து மகிழ்ந்தது. எழுத்தாளராக, சொற்பொழிவாளராக, உரையாசிரியராக, ஆராய்ச்சியாளராக விளங்கித் தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் அரிய தொண்டாற்றிய மாமேதை தமிழ்க் கா. சு. அவர்களுக்கு நினைவுச் சின்னம் நிறுவ சை.சி. கழகப் பெரியார் தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் பெரும் முயற்சி செய்து பீடும் பெயரும் பொறித்த நடுகல்லை நடும் விழாவைச் சிறப்புறச் செய்தார்கள். திருநெல்வேலிச் சந்திப்பு தாமிரபருணி யாற்றங்கரையில் அறிஞர் அண்ணா சிலைக்குப்பின்னர் அமைந்த நகர் மன்றப் பூங்காப் பகுதியில் இன்றும் இந்நடுகல் தமிழ்க்கா.சு. அவர்களின் நினைவாக விளங்கி வருகின்றது.

★★



# ஈரெழுத்தின் இணையற்ற சிறப்பு

முனைவர். அ. சங்கர வள்ளி நாயகம்

'கா.சு.' என்னும் ஈரெழுத்து ஈடில்லாப் புகழ் பெற்றது. கா. சுப்பிரமணியனார் என்னும் தமிழ்ப் பெரியாரின் முழுப் பெயர் மக்கள் மனத்தில் நிற்கும் ஆற்றலை இழந்து மிகச் சுருக்கமாகக் 'கா.சு.' என்னும் ஈரெழுத்தே தமிழர் நெஞ்சில், நினைவில் இரண்டறக் கலந்துள்ளது. தமிழ்த்துறைப் பேரா சிரியராக மலர்ந்து, பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக வளர்ந்த மு. வரதராசனாரை இத்தமிழகம் 'மு. வ.' என்னும் ஈரெழுத்துத் தந்தே சிறப்பித்துள்ளது. அரசியல் உலகில் இலக்கியத் தும்பியாகச் சுழலும் கலைஞர் மு. கருணாநிதியும் 'மு. க.' என்ற ஈரெழுத்தாகத் தமிழர் உள்ளத்தில் உருவெடுத் துள்ளார். அன்னாரின் பெயர்கள் அமைப்பால் சுருங்கினவே தவிர, அவர்தம் தமிழ்ப்பணி சுருங்கியதன்று. அப்பணி விண்ணி னும் விரிவுடையதாகும்; மண்ணினும் திண்ணியதாகும்; நீலக் கடலினும் நீள் ஆழமுடையதாகும்.

## தமிழ்க் கா.சு.வின் தனிச் சிறப்பு:

'கா.சு.' பிள்ளை எனத் தமிழ் உலகிற்கு அறிமுகமாகி யுள்ள கா. சுப்பிரமணியனார் தமிழ் ஈன்ற பிள்ளைதான்; சைவம் உயிர்த்த மெய்ப் பொருட் பிள்ளைதான்; சட்டத்துறை பெற்ற சட்டாம் பிள்ளைதான். தமிழும் சைவமும் அவர்தம் இரு கண்களாக விளங்கின; சமயம் கலவாத தமிழ் இலக்கியங் களில் சைவப் பார்வையும் சைவ இலக்கியங்களில் தமிழ்ப் பார்வையும் குடிகொண்டிருந்த தமிழ்ச் சமயக் கொண்டலே கா.சு. ஆவார். தமிழ் நெறி தழுவாத சமயமும் சமயக் குறி இழந்த தமிழும் மன்பதைக்கு மறுமலர்ச்சி தர முடியாது என்ற கொள்கையில் கா.சு.வின் உள்ளம் ஊறித் திளைத்திருந்தது. தமிழ்ப் பார்வையில் சங்கப்புலவராகவும் சமயப் பார்வையில் அப்பர் போன்ற அருட் புலவராகவும் விளங்கித் துலங்கி நின்றமையே கா.சு.வின் தனிச்சிறப்பாகும். தமிழ் உணர்வு அவர்தம் யாக்கை என்றால் அவ்யாக்கையினை இயக்கிய உயிராகச் சைவப்பற்று மிளிர்ந்தது. அவர் வண்டமிழ்க்கை எழுதிக் குவித்த நூல்கள் எண்ணிக்கையற்றவை. இருப்பினும் நம் எண்ணத்தை எழுச்சியுறச் செய்யும் நிலையில் அமைந்து இருப்பது அவர் நல்கிய 'அப்பர் சுவாமிகள் சரித்திரம்' என்னும் அரிய நூலாகும்.

## நூலின் நுவல்ரும் நுட்பங்கள்

'சரிதம்' எனில் வரலாறு எனும் பொருள் குறிக்கும் பழமைச் சொல்லாகும். சரிதம் என்பது பின் வழக்கில் சரித்திரமாகி அண்மையில் வரலாறு என்னும் தமிழ்ச் சொல்லாகத் தழைத்துள்ளது. இந்நூல் வெறும செய்திகளின் தொகுப்பன்று. கரை நின்றார்க்குக் கடலின் ஆழம் புலப்படாததைப் போனறு மேற்போக்காய் நூலைப் படிப்போர்க்குக் 'கா.சு.'வின் மேலான கருத்துகள் புலப்படாமல் போகலாம். நடுக்கடலில் மூச்சடக்கி மூழ்குவார்க்கே முத்து உரிமையாவதைப் போன்றே நூலினை நுண்ணிய நிலையில் நோக்குவார்க்கே அவர்தம் புலமை நுட்பம் புலனாகும். காய்தல் உவத்தலகற்றி எதனையும் ஆய்தல், எச் செய்தியினையும் சான்று காட்டி நிறுவுதல், உண்மைக்குப் புறம்பான செய்திகளை உணர்த்தாதிருத்தல், வரலாற்றின் வழியாக வாழ்வார்க்கு நன்னெறி காட்டல் ஆகியவை இந் நூலிற்கு வாய்த்துள்ள சிறப்புக் கூறுகளாகும். இச்சிறப்புக் கூறுகளைச் சிந்தனை செய்தல் எழுத்துலகத்திற்கு ஏற்றம் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## பெயர்க் கரணியம் காட்டல் :

ஊருக்கும் மாந்தர்க்கும் இயல்பாக அமைந்துள்ள பெயர் களின் கரணியத்தைத் துருவி ஆராய்ந்து வெளிப்படுத்துதல் 'கா.சு.'வின் நுட்பப் புலமைக்குத் தக்க சான்றாகும். அப்பரடி களின் திருப்பிறப்பு நிகழ்ந்த 'திருமுனைப்பாடி' என்னும் நடு நாடு அவர் பார்வையில் 'திருமுனைப்பு ஆடி' நாடாகப்படுகின் றது. திருமகள் குதித்து விளையாட அமைந்தாற்போன்று அவ்விடம் விளங்கியதால் 'திரு முனைப்பு ஆடி நாடு' என்பதுவே 'திரு முனைப்பாடி' என்று அழைக்கப்படலாயிற்று எனப் பொருள் பொதிந்த கரணியத்துடன் ஊர்ப் பெயரை இவர் விளக்குகின்றார். சிறந்த சிவஞானத்தைப் பெருக்கும் பெரியவர் பிறக்கும் ஊர் எனப் பொருள்படும். 'திரு ஆம் ஊர்' என்பதுவே 'திருவாமூர்' எனப் பெயர் பெற்றுத் திகழ்கிறது என இவர் குறிப்பதில் இவர்தம் சமய மணம் கமழ்கிறது.

## சைவம் தந்த துய்யமணி :

அப்பர் வரலாற்றில் வாய்ப்புள்ள இடங்களிளெல்லாம் தாம் சார்ந்த சைவ சமயத்தின் வலிவினையும். பொலிவினையும் கா.சு. சுட்டத் தவறியதில்லை எனலாம். அப்பருக்குப் புறச் சமயத்தாரால் நேர்ந்த பேரிடையூறுகள் யாவும் சிவத்துய்ப் பாகவே நிகழ்ந்தன என்றும் அங்ஙனம் நிகழுதல் அப்பர் போன்ற சிவஞானிகட்கே இயல்வதல்லது ஏனையோர்க்கு ஆவதன்று என்றும் உணர்த்தும் வாயிலாகத் தாம் சார்ந்த சைவத்தின் சிறப்பினைக் கா.சு. விதந்தோதுகின்றார். ''கிறித்து முதலி யோர் இடுக்கண் நிகழ்ந்த காலை வருத்தமுற்றனர். 'பிதாவே என்னை ஏன் கைவிட்டீர்' என்று துயர் மிகுந்தபோது

கூறினார்'' என்று கிறித்துவின் துன்ப நிகழ்ச்சியினைச் சொல்லும் இவர் இந்நாட்டிலும் பிற நாட்டிலும் மதங்களை நிலைநாட்டிய பேராசிரியருட் சிலர் பகைஞரால் விளையக் கூடிய துன்பத்திற்கு அஞ்சி ஓடினர் என்ற வரலாற்று உண்மையைக் காட்டி, அப்பர் மட்டுமே அவ்வாறு செய்யாது, எத்தீங்கினையும் நன்மையாகப் பெற்று, யாதொரு குறை பாடில்லாமல் திகழ்ந்தார் என எடுத்து மொழிந்து, அப்பரது ஒப்பற்ற உயர்நிலை உலக வரலாற்றிலேயே யாண்டும் காண்டலரிது என்று குறிக்கும் கா.சு. சைவ சமயமே ஒப்பற்ற சமயமாகும் என்ற உண்மையினை மறைபொருளாகக் காட்டி யுள்ளார். இத்தகைய கருத்து நன் முத்துகள் நூலில் விரவியும் பரவியும் உள்ளன.

## வாழ்த்தும் வணக்கமும்

பேச்சு தமிழாகவும் மூச்சு சைவமாகவும் விளங்கிய கா.சு.வை அவர் பிறந்த இடம் போற்றாதது பெரும் வேதனைக்குரியது. காவிரி பிறந்த இடத்தில் பெருமையுறாது, தமிழகத்தில் பெருமை பெற்றிருப்பதைப் போன்று கா.சு.வும் 'குழித்தலை' மக்களின் நினைவில் மலர்ந்துள்ளார். ஆண்டுதோறும் அவருக்கு அருமைத் தமிழ் விழா நிகழ்த்தி வரும் தமிழாளி திருமிகு இளமுருகுபொற்செல்வி அவர்களும் அவர்தம் தமிழ்த் துணைவி யாரான பொற்செல்விஇளமுருகு அவர்களும் நம் பாராட்டிற் குரியர். இருவரும் தமிழ்த் தோழர்களுடன் இணைந்து நிகழ்த்த விருக்கும் கா.சு.வின் நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்து கின்றோம். திருமிகு இளமுருகுபொற்செல்வியும் திருவாட்டி பொற்செல்விஇளமுருகும் பஃறுளி ஆற்று மணலினும் பலவே வாழத் தமிழன்னையினை வழுத்துகின்றோம். ○○

★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★

## ஆதி மொழி

வட கடற்கரையில் வதியும் **சாமாஎடிக்** என்பாரது பேச்சில் தாயைக் குறிக்கும் சொல் அம்மா என்பதே! நெருப்பைக் குறிக்கும் சொல் தீ என்பதே; தந்தையைக் குறிக்கும் சொல் அப்பா என்பதே, உருசியாவிலுள்ள வால்கா நதிக்கரையில் வழங்கும் பேச்சு ஒன்றில் ஆம், கோழி, தோல் என்ற சொற்கள் காணப்படுகின்றன.

டாக்டர் போப்பையர் மேலை ஐரோப்பாவில் வழங்கும் கெல்டிக் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒற்றுமையிருப்பதைப் பற்றிப் பேசியுள்ளார். இன்னும் அறிஞர் சிலர் ஆப்பிரிக்க மொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்ந் துள்ளனர். இந்த ஒப்புமைகளால் எல்லாவற்றிற்கும் மூலமாக இருந்த ஆதி மொழியோடு தமிழ் தொடர்புடையது என்பது ஊகிக்கப்படும். **—கா.சு.**




இற்றை ஞான்று தமிழறிஞர் பலர் தூய தமிழில் பேசுவதும், எழுதுவதும் இல்லை. தமக்கு அரைகுறையாகத் தெரிந்த மொழிச் சொற்களையெல்லாம் பயன்படுத்துகின்றனர். சிலர் ''மக்களுக்குப் புரியும் மொழி'' என்று கூறி கொச்சைச் சொற்களையும் கலக்கின்றனர்.

இன்றைய சட்ட அறிஞர் (**Lawyer**) சிலர் தமிழ்ப் பக்கமே தலை வைப்பதில்லை.

தமிழ்ப் பேரறிஞர், தமிழ்ப்புலவர் பலர், தமிழ் மொழியியல் அறியாது, தமிழ் வடமொழி (**Sanskrit**) யிலிருந்து பிறந்ததென்று நாணமின்றி நவில்கின்றனர். வடமொழியும், தமிழும் சிவனுக்கு இரண்டு கண்களென்று இயம்புகின்றனர்.

பலமொழிச் சொற்களையும் கலந்தால்தான் தமிழ் வளம் பெறுமென்று மொழி நூலறியா மூடர் மொழிகின்றனர். பிற மொழிச் சொற்கள் தமிழில் கலக்கப்பட்டமையால் பல்லாயிரந் தமிழ்ச் சொற்கள் வழக்கு ஒழிந்தன என்று அறியார் கூற்றஃது. தமிழ் ''உயர்தனிச் செம்மொழி'' என்பதையும் உணரார்.

தமிழ்த்திரு கா.சு. அவர்கள் இவற்றிற்கெல்லாம் அப்பாற் பட்டவர். அவர் வாழ்ந்த காலத்தில் முதுகலை (**M.A.**) பட்டம் பெறுவதும், சட்டக் கலையில் முதுவர் (**M.L.**) பட்டம் பெறுவதும் எளிய செயலன்று. தாகூர் சட்ட விரிவுரையாளராகப் பணியாற்றுதலும் எல்லோர்க்கும் கிடைத்தற்கரியவொன்று.

அத்தகு பெருந்தகையாரின் தமிழ்த் தொண்டும், தன்மானத் தொண்டும் என்றும் போற்றற்குரியனவாகும்.

அவர் தமிழ்ச் செய்தி ஏடுகளில் அன்று எழுதிய கட்டுரைகள் பல படித்துள்ளேன். அவர் தம் படைப்புகள் அனைத்திலும் தனித்தமிழ் மணங்கமழும்.

அவருடைய தமிழ்ச் சொற்பொழிவுகளைப் பலமுறை கேட்டுச் சுவைத்தவர்களுள் யானும் ஒருவன். தமிழ்வளம், தமிழர் வளம், தமிழ்நாட்டுவளம் பேச்சிலும், மூச்சிலும் இழையோடும்.

1943ஆம் ஆண்டு திருவெண்காட்டிலுள்ள கோவிலில் ''திரு. கா.சு. அவர்கள் தலைமையில் திரு. க. அன்பழகன் (B.A. Hons Student Annamalai University) பெரிய புராணம்பற்றிச் சொற்பொழிவு'' என்ற அறிவிக்கை கண்ணுற்றேன்; வியப்புற்றேன்: கோவிலுக்குச் செல்லும் பழக்கமில்லாத யான், அச்சொற்பொழிவைக் கேட்க வேண்டுமென்ற அவாவினால் அன்று ஆங்குச் சென்றேன்.

சொற்பொழிவு திரு. கா.சு. தலைமையிலா? நடைபெறுகிறது என்ற ஐயம் எழுந்தது. திரு. க. அன்பழகன் பொழிவு பெரியார், அண்ணாவையும் விஞ்சியதாயிருந்தது. நனிமகிழ்வுற்றேன்.

பொழிவு முற்றி இருவரும் சென்னைக்குச் செல்லப் புறப்படு முன், அக்கோவில் பெயர் பெற்ற, ''அகோரசாமி'' யைப் பார்க்கக் கா.சு. விரும்பினார். பூசை செய்பவர் எட்டு மணிக்குப் பூசை நடக்கும் போழ்துதான் பார்க்கலாமென்றார். உடன் அறங்காவலரை அழைத்து இசைவு பெற்றுப் பார்த்துச் சென்றனர்.

பல்கலை வல்லுநர் கா.சு. சமயப்பற்றராயினும் பகுத்தறிவுச் செம்மல்; பெரியார்பால் மதிப்புடையவர்.

அவரைப் போற்றிப் புகழ்ந்து, நூற்றாண்டு விழாவயரும் நாம், அவர் கொண்டிருந்த கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்வோமென்று சூள் கொள்வதே அவர்க்கு நாம் செய்யும் பெருஞ் சிறப்பாகும். வாழ்க கா.சு. புகழ்! வளர்க நற்றமிழ்!

---

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## தக்கார் நினைவு

''தமிழ்ப்பிள்ளை கா. சு.வுக்கு நூறாம் ஆண்டைத்
 தலைநகராம் சென்னையிலும் கொண்டா டுங்கள்
தமிழ்வங்கக் கடலோரம் சட்ட மேதை
 தமக்குமொரு சிலையெழுப்ப முயல்க இன்றே.
தமிழ்வழங்கும் உலகுமுற்றும் அன்னார் மேன்மை
 தவழ்ந்திடவே பலநூல்கள் தழைக்கச் செய்வீர்
தமிழுணர்வு மங்கிவரும் இந்நாள் அந்தத்
 தக்காரின் நினைவொன்றே தென்பை ஊட்டும்.''

—கவிஞர் **எஸ். கருணானந்தம்**



# ஆசிரியப் பெருந்தகை

சிவக்கிழார் திருநாவுக்கரசு.

செந்தமிழ் நாட்டின் தீம்புனல்களில் காவிரி நீர் செந்நெல்லை வளர்த்துத் தீஞ்சுவை நிறை இசையையும் வளர்த்தது. அகத்தியன் தவம்செய் பொதிகை யீன்ற பொருநை நீரோ செந் நெல்லை வளர்த்துச் செந்தமிழின் இயல், இசை, நாடகமாம் முத்தமிழையும் வளர்த்தது. முத்தமிழிலும் இயற்றமிழை எழிலுற வளர்த்தது.

தென்பாண்டி நாட்டின் சீர்மிகு தலையாக விளங்கியது திருநெல்வேலிச் சீமை. அச்சீமையில், திருவாய்மொழி தந்த நம்மாழ்வார், குமரகுருபர சுவாமிகள். சிவஞானமாமுனிவர் இச்சீர்மிகு தமிழ்க் களஞ்சியங்கள் பொருநையாற்றுக் கரை பிறந்த புதல்வர்களேயாவர். மேலுமிச்சீமையில் காவடிச்சிந்து பாடிய அண்ணாமலைரெட்டியார், திரிகூடராசப்பக் கவிராயர் போன்ற பல கவிச்சிங்கங்கள் வாழ்ந்து மறைந்தனர். தமிழ் நாட்டில் பிழையற்ற செந்தமிழ் வளர்ப்புப் பண்ணையே நெல் வேலிச் சீமையேயாம்.

முத்துறையில் எம்,ஏ. பட்டமும் சட்டத்துறையில் எம்.எல். பட்டமும் பெற்ற பேராசிரியப் பெருந்தகை கா. சு. பிள்ளை என்னும்திரு.கா.சுப்பிரமணியபிள்ளையவர்கள்! இவர்கள் அன்று சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்ட செந்தமிழ் நாட்டுச் சட்ட வல்லுநர்கள் பன்முறை முயன்றும் அடையப்பெறாத தாகூர் சட்டவிரிவுரைப் பரிசை ஒரு தடவையிலே வென்று அன்று 70 ஆண்டுகளுக்கு முன்பு 10,000 ரூ. பரிசும் பெற்றார்கள் அத்தொகை இக்காலக் கணக்கில் பல லட்சங்கள் பெறுமதி யுடைய தொகையாம்.

மறைமலை அடிகளார் என்னும் சுவாமி வேதாசலம் அவர்களால் பெரிதும் மதிக்கப் பெற்றவர்கள் இப்பெரியார் கா.சு.பிள்ளையவர்கள்! ''எனது பேச்சுக்கள் நிகழும் மேடையில் தலைவராகப் போடத்தக்க தகுதியுள்ளவர்கள் தமிழ்நாட்டில் இருவரே உளர். ஒருவர் மறைத்திரு. ஞானியார் சுவாமிகள். இன்னொருவர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை எம்.ஏ.,எம்.எல். அவர்கள் என்று கூறுவார்கள்'' மறைமலை அடிகள். மறைமலை யின் புலமைப் பெற்றி அறிந்தோரே இதன் பெருமையை அறிய இயலும்.

ஐயா அவர்கள் நீதிக்கட்சி ஸ்தாபகர்களில் ஒருவராய்ப் புகழுடன் விளங்கிய சர். பி. தியாகராச செட்டியாரவர்களின் மதிப்புமிக்க நண்பர். நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவராய் விளங்கியவர்கள். திரு. எம். எல். பிள்ளையவர்கள் நீதிக் கட்சியிலிருந்தபோது பொப்பிலி மந்திரி சபையின் காலத்தில் இவர்களுக்கு பனகல் ராஜா அவர்களால் சப்ஜட்ஜ் உத்யோகம் கொடுக்கத் தீர்மானிக்க அதனைப் பொறாத கட்சித்தூண் போன்ற ஒருவர் பதவி கிடைக்கவிடாது தடுத்து நிறுத்தினார். காரணம் ஐயா அவர்களின் அறிவுசுடர் கண்டு கொண்ட அழுக் காறுதான். உயர்மன்ற நீதிபதியாக இருந்து பெருமை பெற வல்ல நிலையிலிருந்தும் ஆகூழ் ஊட்டாமையால் பெறாநிலை ஏற்பட்டது.

நெல்லையப்பர் கோவிலில் இருந்து வீரராகவபுரம் (சந்திப்பு) செல்லும் சாலை நெல்லையப்பர் கோவிலுக்குப் பாத்தியப் பட்டது. 4 வீதியும் நெல்லையப்பர் கோவிலுக்கே உரிமை. இந்த நீண்ட சந்திப்புச் செல்லும் சாலை 'ரெங்கநாத முதலியார் ஹைறோடு' என்று நகரசபையார் பெயரிட்டுப் பெயர்ப்பலகை களை எழுதி வைத்தார்கள். ஐயா அவர்களே அதை வாதாடி சான்றுகளால் மெய்ப்பித்து நெல்லையப்பர் கோவிலுக்குச் சொந்தமானது 'நெல்லையப்பர் ஹைறோடு' என்று மாற்ற வேண்டுமெனக் கேட்டு வெற்றிபெற்று அவ்வாறே இன்றும் வழங்கப்பெறுகிறது.

சைவ சித்தாந்தக் கல்வியைப் பலர் இவர்களிடம் பயின்று மேன்மையுற்றார்கள். அவர்களில் குறிப்பாக காஞ்சி வச்சிரவேல் முதலியாரவர்களும் ஒருவர்.

சட்டத்துறையில் அவ்வப்போது பல வழக்கறிஞர்களும் சட்டச்சிக்கல் ஏற்படும்போது இவர்களிடம் வந்து ஆலோசனை பெறுவர். மிக்க கீர்த்திவாய்ந்த வழக்கறிஞரான திரு. அல்லாடிக் கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும் இவர்களில் முக்கியமானவர் என்று கூறுவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் போது பக்க வாதநோயால் பீடிக்கப்பட்டு அங்கிருந்து விடுதி பெற்று நெல்லை வந்தார்கள். சந்திப்பு நிலையத்திற்குச் சென்று அடியேன் அவர்களை முதல் வகுப்பிலிருந்து இறக்கி 'ஸ்டிரக்சரில்' வெளியே கொண்டு வந்து காரில் ஏற்றி சைவ சித்தாந்தக் கழகத்தின் பொறுப்பில் இருந்த குமரகுருபர நிலையத்தில் இறக்கினேன் அப்போது திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கழக நிர்வாகி. அவர்கள் தக்கவாறு சிகிச்சை செய்ய கேரளாவி லிருந்து ஆயுர்வேத வைத்தியரைக் கொணர்ந்து அவர்கள் மூலம் 'பிளிச்சல்' நவரக்கிளி போன்ற சிறந்த வைத்திய முறைகளைச் செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் அடியேனும் தூத்துக்குடியில் நடந்த சைவ சித்தாந்த ஆண்டுவிழாவுக்குப் பேசச் சென்றபோது 1945 என்று நினைக்கிறேன், திரு. சிதம்பர இராமலிங்கம் பிள்ளை

ய்வர்கள் அன்றைய விழாத் தலைவர்; அவர்களுக்கும் ஐயா வுக்கும் இடையில் மனக்கசப்புண்டு. அன்று அவர்கள் மறைமுக மாக மாநாட்டில் ஐயாவைத் தாக்கிப் பேச அடியேன் பேசும் முறை வந்தபோது அதற்குத் தக்க மறுப்பும் சொல்லி அவர்கள் பெருமையை விரிவாக எடுத்துரைத்தேன்.

அவ்வமயம் அவையில் இருந்த வக்கீல் திரு. வெண்ணி மாலைப் பிள்ளையவர்கள் எழுந்து என்னைப் பாராட்டியதுடன் சுமார் **300** ரூபாய் வரை ஆசிரியப் பெருந்தகையின் வைத்தியச் செலவிற்கு வசூல் செய்தும் தந்தார்கள். இவர்கள் ஐயா அவர்களின் சட்டத்துறை மாணவரும் ஆவார்கள். திரு. வ. சுப்பையாபிள்ளையவர்கள் ஐயாவிடம் பெரும் மதிப்பு வைத் திருந்தவர்களில் ஒருவர் சகல செலவுகளையும் கழக நிதியி லிருந்தே ஏற்பாடு செய்தார்கள்,

அதுபோது அடியேன் அறநிலையத்துறையின் நெல்லை மாவட்டச் சைவப் பிரசாரகராய் இருந்தமையால் அடிக்கடி ஐயாவைச் சென்று பார்த்துவருவேன். அந்த நாட்களில் மிகக் கீர்த்தி வாய்ந்த நீதிக் கட்சிப்பிரமுகர் திரு. **C. D.** நாயகம் அவர்களும் கழகத்திற்கு அடிக்கடி வருவார்கள். ஒருநாள் அவர்கள் என்னிடம் 'திருவாசகத்தில் நரியைக் குதிரைப் பரியாக்கி' என்று வருகிறதே குதிரை யென்று சொல்லிப் பின்பு பரி என்று கூறுவானேன். இதை பிள்ளையவர்களிடம் கேளுங்கள் என்றார்கள்.

பேராசிரியர் அவர்கள் புத்தகங்களை வரி, வரியாய் படிப்ப தில்லை;பக்கம் பக்கமாகவே படிப்பார்கள்.ஒரு தடவை பார்த்தது நினைவை விட்டு அகலாது. **Photographic-Mind** என்று கூறுவார்கள். இவர்களின் இந்த அறிவுத்திறன் பற்றி யறிந்தோர் கள் **1000** பக்கம் கொண்ட புத்தகமானாலும் சிலமணி நேரங் களில் பார்த்து முடித்துவிடுவார்கள். பின்பு பக்கம் பக்கமாக மேற்கோள் காட்டி மதிப்புரை கொடுப்பார்கள்.

மேடைகளில் பேசும்போது அவர்களின் இயற்கையமைப்பால் சிறிதுமழலை ஏற்படும். ஆனால் எழுத்தின் திறம் மிகச் சிறந்தது இவர்களுக்குச் செய்த வைத்தியம் பலன் தரா நிலையில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள்.

இவர்கள் மறைவிற்குப் பின் இவர்களுக்கு நெல்லைச் சந்திப்பில் ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தி அதில் சுருக்கமாக அவர்கள் வரலாறும் எழுதிக் கல் நட்டு ஒரு சிறிய பூங்கா ஏற்படுத்தினார்கள். ஆனால் அது இன்று ஆக்ரமிப்புக்குள்ளாகி அழிந்துகிடக்கிறது. நெல்லைச் சந்திப்பு அடுக்குமாடிப் பாலத் தின் கீழ் பால முடிவில் அண்ணா சிலைக்குச் சமீபமாயுள்ளது. இந்தப் பாலத்திற்கு இவர்கள் பெயரைச் சூட்டிக் கா. சு.பிள்ளை பாலம் என்று வைக்கவேண்டுமென்று நெல்லை அன்பர்கள் பலர் மனுச்செய்து முயற்சி மேற்கொண்டார்கள். ஆனால் அரசு மறுத்துவிட்டது;

திரு. கா. சு.வின் பெருமை வாழ்வு மிகவும் பெரியது. யான் அவர்கள் மாணவனாயிருந்தபோது அறிந்தவைகளை முழுதும் எழுதினால் கட்டுரை விரிவாகும் என்பதால் விரிவஞ்சி - சில காட்டி விடை பெறுகிறேன்.

வாழ்க தமிழ். வாழ்க தமிழ் வள்ளல். கா.சு.

## விருத்தம்

**பொருநை யங்கரையின் மேவு**
**புனித நெல்வேலி யாங்குத்**
**தருணநன் மணியாய் வந்த**
**தகைமையால் சுப்ர மண்யக்**
**கருணையார் கல்விச் செல்வர்**
**கவின்மிகு தமிழ்த்தாய் மைந்தர்**
**மருணையப் பன்னூல் தந்த**
**வள்ளல்தம் மலர்த்தாள் போற்றி!**

□ □

## கூடும் நினைவு

"கா. சு. வின் தொண்டன் என்றே
கழித்திட்ட நாள்கள், நெஞ்சிற்
கூடும் நினைவை எல்லாம்
பெறற்கரி தென்றே நாளும்
கா.சு.வின் புகழை அன்பைக்
கைதொழு தேத்தி இந்நாள்
கா.சு.வைப் போற்று வார்தம்
கனிவெல்லாம் வாழ்த்து வேனே!

கா.சு.வின் வடிவும் பேச்சும்
கண்கனி யருளின் வீச்சும்
தேசுடன் பெருகிப் பொங்கும்
தெளிதமிழ் ஞான ஊற்றும்
பாசமென் மனத்தின் பாங்கும்
பழகுசெந் தமிழ்ப் பண்பும்
ஓதிடச் சொற்கள் போதா
ஒண்தமிழ் மலைஅக் காசே!"

—**புலவர் புலியூர்க்கேசிகன்**



# கா.சு.வின் தொல்காப்பிய ஆய்வு

பேராசிரியர் கு. வெள்ளைமுத்து

உலகத்தில் முதன்முதல் தோன்றிய உயர்தனிச் செம்மொழி யாம் ஒண்டீந்தமிழின் தனிப்பெரும் இலக்கணமாகவும் இலக்கிய மாகவும் திகழ்வது ஒல்காப் பெருப்புகழ் தொல்காப்பியமாகும். தமிழர்க்குக் கிடைத்துள்ள பழமையான இவ்விலக்கண நூல் இடைக்கழகக் காலத்தில் தோன்றியதாகும். இதன் காலம் கி.மு. 700க்குப் பின் இல்லை என்று வரையறை செய்வார் டாக்டர் சி. இலக்குவனார். இளம்பூரணர், பேராசிரியர், சேனா வரையர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியப் பெரு மக்கள் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு யாத்த உரைகளின் துணை கொண்டும் கற்றறிந்த புலவர்களும் முற்றிலும் அறிய வொண்ணா இந்நூலை ஓரளவு மட்டும் படிப்பறிவு பெற்ற வெள்ளிய அறிவு பெற்ற தமிழர் அறிந்து கொள்வது அரிதினும் அரிது; பல்கலைப் புலவர், தாகூர் சட்ட விரிவுரையாளர் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம்.எல். அவர்கள் இயற்றிய பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து என்னும் இந்நூல் ஓரளவு . இக் குறையைப் போக்க முதன்முதல் எழுதப்பட்ட நூல் எனலாம்.

''கா.சு.'' அவர்கள் எழுதிய இந்நூலை ஆய்ந்த அறிஞர் பெருமக்களின் பாராட்டுரைகளே இந்நூலின் சிறப்புக்குத்தக்க சான்றுகளாம். காட்டாகச் சில காண்பது இந்நூலின் திறமறிய உதவும்,

''தொல்காப்பியத்தைத் தொட்டறியாத மக்களும் இதனைப் படித்து மூலத்தின் பெருஞ்சிறப்பை இலகுவாக அறியத் தக்க எளிய இனிய நடையில் அமைந்திருப்பது.''

—அறிஞர் திரு. மு. சி. பூரணலிங்கம்

''தமிழார்வம் மிகுந்துவரும் இற்றை நாளில் தமிழர் நாகரிகத்தின் மெய்ப்பண்புகளைத் தமிழராவார் நன்கு தெரிந்து கோடற்கு எளிய நடையில் இயற்றப்பெற்ற உரை நூல்.''

—தா. வே. உமாமகேசுவரனார்.

''பொருளதிகாரக் கருத்து முழுமையும் தெளிவுற ஆய்ந்து எழுதிய முதல் உரை நூல் இதுவேயாகும். பழந்தமிழ் நாகரிகம் என்னும் அரும்பெரும் செல்வத்தை எளிதாய் அனைவரும் துய்க்குமாறு எடுத்து வழங்கிய இப்பேரறிவுப் பெருந்தகைக்குத் தமிழ்மக்கள் இயற்றும் கைம்மாறு என்னே.''

—ந. மு. வேங்கடசாமி நாட்டார்

''தொல்காப்பியம் கற்கும் ஆற்றலில்லாத தமிழ் மாணவர்க்கு இந்நூல் இன்றியமையாததாகும். ஆற்றலுடையார்க்கும் இது தொல்காப்பியத்திலுள்ள நுட்பங்களைத் தெரிந்து கொள்ளப் பெரும்பயன் செய்வதாகும்.''

—அறிஞர். அனவரதவிநாயகம்.

''அளவுாற் சிறிதாம் இக்கட்டுரை நூல் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு அகன்ற பொருண்மாண்ட நச்சினார்க்கினியர் உரைக்கடலைக் கடைந்து நீர் நீக்கி அள்ளற்குரியனைத் திரட்டி எடுத்த நவநீதம்.''

—பசுமலை. நாவலர். ச. சோ. பாரதி.

இத்தகைய சிறப்புக்குரிய தம் ஆய்வு நூலில் தாம் ஆய்ந்தறிந்து கண்ட சில கருத்துகளையும் நாம் காணுமாறு கா.சு. அவர்கள் ஆங்காங்கே பெய்து செல்கிறார்.

— தொல்காப்பியக் காலம் கி.மு. 2000க்கு முற்பட்டது.
— தொல்காப்பியத்தின் சில பகுதிகள் பிற்காலத்தன வெனில் அப்பகுதிகள் பிற்காலத்தே சேர்க்கப்பட்டன வென்று கொள்வதே பொருத்தம்.
— அகம், புறம் எனப் பகுத்தாய்ந்தமையால் பண்டைத் தமிழர் உள்வியல் அறிவு சான்றவர்; அகவொழுக்கத்தைச் சிறப்பாகப் போற்றியமையால் உணர்ச்சியென்னும் உள்ளப்பான்மையைக் கூரியதாகப் பெற்றவர்கள்.
— கடவுள், உயிர், மெய், வினை எனும் மெய்ந்நூற் கருத்துகளை உணர்ந்திருந்தனர்.
— அகப்பொருள் ஒற்றுமையை உணர்த்துவது. புறப்பொருள் வேற்றுமையை உணர்த்துவது.
— பெண்பாற் கைக்கிளை உண்டென்பதும் பிற்காலத்தார் கருத்துப்படி மடலேறுதல் என்பது பெண்பாற் கைக்கிளைக்கும் உண்டென்பதும்.
— 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' என்ற சூத்திரத்தில் கூறப்பட்டுள்ள நான்கும் வட நூலார் கூறும் பிரம்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அல்ல.
— முல்லைத் தெய்வம் மாயோன் என்பதற்குப் பதில் மாயோள் என்று கொள்வது சரியானது.

— வண்ணன் என்ற சொல்லே வருணனாயிற்று. வண்ணன் என்பது கடல் நிற வண்ணனாகிய திருமாலினைக் குறிக்கும்.

— முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களின் ஆராய்ச்சி நிலநூல், வானநூல், அறவொழுக்கநூல், மெய்யறிவு நூல், தத்துவநூல், உழவுநூல், விலங்குநூல், புள்நூல், தாவரநூல் முதலியவற்றிற்கு அடிப்படையானது.

— தெய்வ வழிபாடு பெரும்பான்மையும் மர நிழலிலேயே நடந்தது. கனியும், நீரும், பூவுமே பூசனைக்குப் பயன் பட்டன. தூய்மைக்கு நீரும், அழகிற்கு மலரும், உணவிற்குக் கனியும் பயன்பட்டன.

— நானிலவொழுக்கம் களவியல், கற்பியல், பொருளியல் என்பவற்றுள் கூறப்படுதலின் அகத்திணையியலுள் பொது நிலமாகிய பாலைக்குரிய துறைகளையே ஆசிரியர் சிறப்பாக எடுத்து விதந்தோதினார்.

— களவில் ஏற்படும் பிரிவு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் முதலியன கந்தருவத்தில் இல்லையாதலால் களவு என்பது வடநூலார் கூறும் கந்தருவ மணத்தின் இயல்புடையது என்பது தவறு.

— மெய்ப்பாட்டுக் குறிப்புகள் கண் நோக்காலும், செவிக் கேள்வியாலும், திட்ப நுட்பத்தோடும் கூடிய நுண்ணறிவுடையார்க்கல்லது ஆய்ந்தறிதல் அரிதாகும்.

ஆராய்ச்சி அறிஞர்களும் அறிந்து பயன்படுத்தக்கூடிய இது போன்ற எண்ணற்ற கருத்துக்களை நூல் நெடுகிலும் காணலாம்.

அகப்பொருள் சார்பான செய்திகளை எளிதில் விளங்கிக் கொள்ள துறைகளைப்பற்றிய அறிவு அவசியம். தொல்காப்பியத்தில் துறை வரிசை கூறப்படவில்லை. தலைவன், தலைவி முதலியோர் கூற்று நிகழும் இடங்களே தொகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அறிஞர் கா.சு. அவர்கள் தம் நூலில் முன் இணைப்பாக இயற்கைப்புணர்ச்சி முதலாகப் பரத்தையிற் பிரிவு ஈறாக இருபத்து நான்கு பகுதிகளில் காண்டல் முதலாக ஊதிய மெடுத்துரைத்தூடல் தீர்த்தல் ஈறாகவுள்ள திருக்கோவையாருள் காணப்படும் நானூறு துறைகளையும் தொகுத்து உரைக்கும் பாங்கு போற்றற்குரியது. அது மட்டுமின்றி இயல்வைப்பிலும் சிறிய மாற்றம் ஒன்றைச் செய்கிறார். தொல்காப்பியத்தில் அகத்திணையியலை அடுத்து புறத்திணையியல் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நம் பல்கலைப் புலவர் புறத்திணையியலை இறுதியாக வைத்துள்ளார்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுதும் பழந்தமிழர் நாகரிகத்தின் தொகுப்பு என்பது கா.சு. தம் நூலுக்கு இட்ட பெயராலேயே நமக்கு விளங்குகிறது. தொல்காப்பியத்தைக் கற்க விரும்புவார் கா.சு.வின் இவ்வுரைநூலைப் படித்த பின்பு தொல்காப்பியத்தைப் பயின்றால் ஓரளவாவது விளக்கம் பெற வாய்ப்பாயமையும் என்பது வெள்ளிடைமலை. ★★



# 'கா.சு.' தந்த வரலாறுகள்

முனைவர் பழனி இளங்கம்பன்

இலக்கியமும் வரலாறும் இணைந்தவை; பிணைந்தவை. இலக்கியங்களைப் படைப்புக் காலம் தெரிந்து ஆயவும், அதில் நன்கு தோயவும் பெரிதும் பயன்படுவது வரலாறு. அதைப் போன்றே வரலாற்றின் வைப்பாக அமைந்தது இலக்கியமே.

தமிழிலக்கியத்தில் அகம்--புறம் எனப் பிரித்துள்ளதை ஆய்வு முறையில் நோக்கின் மக்களின் அக வாழ்வின் நுண்மை அக இலக்கியங்களிலும் புற வாழ்வின் வரலாற்று நிகழ்ச்சிகள் புறப் பொருள் இலக்கியங்களிலும் மிளிர்வதை நோக்கலாம்.

நம் இலக்கியங்களுள் வரலாறும், வரலாற்றுள் இலக்கியங்களும் இந்த வகையில் பின்னிப் பிணைந்து கிடப்பதை நன்கு காண முடியும். சங்க இலக்கியங்களுள் புறப் பொருள் இலக்கியங்கள் யாவும் வரலாற்றுப் பெட்டகங்களாகவே உள்ளன. ஆனால் சங்க காலத்திற்குப் பிறகு தமிழர்களின் வரலாற்றுப் பேருணர்வு எப்படியோ பாழ்பட்டு விட்டது.

சிறப்பு வாய்ந்த பெருமக்கள், மன்னர்கள், புலவர்கள், சமயப்பெரியோர்கள் வாழ்ந்த காலம், வாழ்ந்த நலம் இவை, வரலாற்றுக்குள் புகவில்லை. அதற்குப் பதிலாகக் கணக்கற்ற கட்டுக் கதைகளையே அவர்களின் பெயரில் கட்டிப் பரப்பி விடலாயினர். இதனால் முறையான வரலாற்றுச் செய்திகள் நமக்குக் கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. இக்குறையால் நம் வரலாற்றை நெறிப்படுத்த இயலாமல் போயிற்று. நம் மக்கள் வரலாற்று உணர்வையே இழந்த கரணியத்தால் நம் வாழ்வில் இருள் சூழ்ந்ததுபோல் வரலாற்றுத் துறையுள்ளும் இருள் சூழ்ந்தது. அதனால் பொற் காலம், நற் காலம் என்பன போல் இருண்ட காலம்: வறண்ட காலம் முதலியன நம் வரலாற்றுள் புகுந்தன.

இந்த நிலையில்தான் முதன் முதலில் ஆங்கில இலக்கிய வரலாற்று அமைவோடு, நம் தமிழிலக்கிய வரலாற்றை உருவாக்க, அறிஞர் கா.சு. பிள்ளை அவர்கள் முயன்றார்கள். அதில் தனிப் பெரும் வெற்றியையும் கண்டார்கள்.

தொன்மையும், மென்மையும் தொடுத்தற்கரிய மேன்மையும் கொண்ட ஒரு மொழியின் வரலாற்றைச் செவ்விய முறையில் உருவாக்குவது எளிய செயலன்று. பேருழைப்பால் உருவாவது அது. இன்னும் சொன்னால் பொறுப்பு மிக்க பணியாகும். அப்பணியில் நம் கா. சு. பிள்ளையவர்கள் இணை துணையற்ற பெரு வெற்றி கண்டமைக்குக் கரணியம் அவர்களுக்கு இயல்பாகவே இருந்த வரலாற்றுப் பேருணர்வேயாம்.

எதனையும் ஆய்ந்து நோக்கும் திறனைப் பெற்றிருந்த அவர்கள் ஆர்வமாக அதிகமாக எழுதியவை வரலாற்று நூல்களேயாம். ஏறத்தாழ நம் 'கா.சு.' அவர்கள் இருபது நூல்களை வழங்கியுள்ளார்கள். அவற்றுள் பெரும் பகுதியானவை வரலாற்றுக் கூறுகளைக் கொண்டதாம். தமிழ் மொழியின் அமைப்பு நலத்தை விளக்கினாலும் அதன் தோற்றமாகிய வரலாற்றையே நுண்மையாக விளக்கியுள்ளார்கள். வரலாற்று ஆழ் நோக்குச் செய்திகளே இவரின் நூல்களில் பரந்து கிடக்கின்ற பாங்கை நன்கறிய முடிகின்றது.

சமய நூல்கள், சமயப் பெரியோர்களான சேக்கிழார், மெய் கண்டார், நால்வர் பெருமக்கள் பற்றிய இவரின் நூல்களில் வரலாற்று நலத்தையே காண்கிறோம். தொன்மைமிகு பழந் தமிழ் நாகரிகம் நம் 'கா.சு.' அவர்களால்தான் செவ்விய முறையில் முதன் முதலில் விளக்கப்பட்டுள்ளது.

அறிஞர் கா. சு. அவர்களின் தமிழிலக்கிய வரலாற்றுச் சுவட்டில்தான் பின்வந்த அறிஞர்களான பலரும் இயங்கலானார்கள். முழுக்க முழுக்க நம் கா. சு. அவர்கள் கண்ட காலவரையறைகளை, (அவற்றை மறுக்க முடியாத நிலையில்) பின் வந்த சதாசிவம் 'பண்டாரத்தார்,' மறைமலையடிகள், மு. அருணாசலம், மயிலையார் போன்றவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எப்பொழுதும் ''வரலாறு படைக்கும் தொடக்க காலத்தில் கால ஆய்வுகளில் சில தவறுகள் நிகழலாம்'' என்பது ஒரு பொதுக் கருத்தாகும். இந்தக் கருத்துக்குச் சற்றும் இடமில்லாமல் கா. சு. அவர்கள் செய்துள்ளதை எண்ணி எண்ணி நாம் மகிழலாம்.

நம் அறிஞர் கா. சு. வின் காலத்தில் ஆய்வு நூல்கள், ஆய்வு அறிஞர்கள் அதிகம் தோன்றவில்லை. யாரையும் வழி காட்டியாகவோ துணையாகவோ வைத்துக் கொண்டு பிள்ளையவர்கள் இயங்கவில்லை.

ஆனால் ஆய்வுத்துறை நன்கு வளர்ந்த பின்னரும், வரலாற்று வாயில்கள் ஒளி கொண்ட பின்னரும்கூட வையாபுரிப் பிள்ளை போன்றவர்கள், எவ்வளவு குழப்பத்தை வரலாற்றுத் துறையில் விதைத்துள்ளார்கள் என்பதை அறியும் போது கா. சு.

அவர்கள் உழைப்பும், நடுநிலையும், வரலாற்று உணர்வும் ஒப்புயர்வற்றன என்பதைத் தமிழன்பர்கள் நன்கு உணர்வார்கள்.

இலக்கியத் துறையுள் மட்டுமின்றி சமய, சைவ சித்தாந்த துறையுள்ளும் இவரின் வரலாற்று உழைப்பு பெரியதே. இந்து சமயங்களானபிரிவுகளின் வரலாற்றையும் இவரே முதன்முதலில் ஒழுங்கு படுத்தியுள்ளார்.

இவ்வாறு வரலாற்றுத் துறையில் முன்னோடியாகி நமக்கு வழி காட்டியுள்ள அறிஞர் கா. சு. அவர்களின் நினைவு தமிழினத்திற்கு என்றென்றும் வேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

அவரின் நூற்றாண்டு விழாவில் அவரின் பன்முகப் பணிகளையும் ஆராய்கின்ற நூல்கள் வெளிவர வேண்டும், அவருக்கு நினைவுச் சின்னம் நெல்லையில் எழுப்புதல் வேண்டும். அவரின் நூல்களின் செம்பதிப்புகள் வருதல் வேண்டும்.

**ஆய்வுக்கு முன்னோடி ஆன்றதமிழ் நன்னூலின்**
**தோய்வுக்குத் தொண்டுசெய்த தூயவராம்-வாய்மைசேர்**
**பேரறிஞர் காசுநற் பிள்ளையவர் நற்றொண்டைப்**
**பாரறியும் என்றே பகர்.** □□

**நீராடல்.........**

சோப்பு அதிகமாகப் பயன்படுத்தினால், அது தோலிலுண்டாகும் எண்ணெயை முற்றிலும் அகற்றிவிடுமென்கிறார்கள். தோலிலுள்ள அழுக்கை நன்றாகத் தேய்த்து முழுகுவது அவசியம். அதற்காகத் தோலை ஊறுபடுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவது நன்றன்று. எலும்பு மூட்டு வாய்களில் வாத நோய் இருந்தால், அவற்றைத் தேய்த்து வெந்நீர் விடுவது நன்று. வயிறு நிறைய உண்டதும் வெந்நீரில் முழுகுதல் தக்கதன்று. மனிதனைத் தவிர மற்றப் பிராணிகள் வெந்நீரை விரும்புவதில்லை, முழுகியவுடன் துண்டு கொண்டு உடம்பை நன்றாகத் துவட்டுவது நன்று.

—**தமிழ்க் 'கா. சு.**



# நுண்மாண் நுழைபுலம்

சைவசரபம் தி.சு. கோவிந்தசாமி

நாற்பது ஆண்டுகட்கு முன்பு ஒருநாள் எனது சொந்த ஊராகிய திருச்சுழியில் பங்குனிப் பெருந்திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். அன்று எங்கள் குடும்பத்தினர் நடத்தும் 6 ஆம் திருவிழா. கோயிற்பட்டி சிவக்கிழார் வா. திருநாவுக்கரசனார் ''குமரகுருபரர்'' பற்றிச் சொற்பொழிவு செய்யலானார். இடையில் குமரகுருபரசுவாமிகள் திருச்சுழியில் வந்து வழிபட்டுச் சென்றுள்ளார் என்று குறிப்பிட்டார். அதுவரை அதை அறியாத நான் சொற்பொழிவு முடிவில் இச்செய்தி எந்த நூலில் உள்ளது என அவரிடம் வினவினேன். அவர் தாம் தமிழ்க் கா. சு. வின் மாணவர் என்றும் அவர் எழுதிய ''குமரகுருபரர் வரலாறும் நூலாராய்ச்சியும்'' என்ற நூலில் உள்ளதாகவும் கூறினார். அப்போதுதான் தமிழ்க் ''கா.சு.''வை அறியலானேன். பின்னர் திரு. கா. சு. பிள்ளையவர்கள் எழுதிய சமயாசாரியர்கள், சந்தானாசாரியர்கள், சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், குமரகுருபரர், சிவஞானமுனிவர் ஆகியோர் வரலாறுகளைப் படித்துச் சுவைத்தேன்.

இவரது நுண்மான் நுழைபுலத்திற்கு ஒரு சான்று மட்டும் காட்டினால் போதும் என்பது என் கருத்து. திருஞானசம்பந்தர் வரலாற்றில் உள்ள கீழ்க்கண்ட செய்திகளை ஒவ்வொருவரும் மனத்தில் பதிப்பது இன்றியமையாதது.

''நம் பரமாசாரியர் தமது ஒவ்வொரு திருப்பதிகத்திலும் எட்டாம் பாட்டில் இராவணனுக்குச் சிவபெருமான் அருள் புரிந்ததையும், ஒன்பதாம் பாட்டில் மாலும் அயனும் அடிமுடி தேடியதையும் பத்தாம் பாட்டில் சமணர் சாக்கியரது இழிந்த கொள்கையையும் பற்றிக் கூறிப் பதினோராம் பாட்டினைத் திருக்கடைக் காப்பாக அமைத்துள்ளார்.

இங்ஙனஞ் செய்ததற்குக் காரணத்தைச் சேக்கிழார் சுவாமிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் தன் கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்க னெடுத்து முறிந்திசை பாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்.''

'' தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாருங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்.''

''வேதகார ணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறிய றிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர் வழிபழியாக்கும்
ஏதமேயென மொழிந்தாரெங்கள் பிரான் சம்பந்தர்.''

சம்பந்தர் புராணம் 77–78– 79

இராவணன் சிவபெருமானை வழிபடுபவனாயிருந்துஞ் செருக்கு மேலீட்டினால் அவர் பெருமையை மறந்து கயிலையை எடுக்கப் புகுந்தனன். 'எண்ணமிலாவல்லரக்கன்' என்றமையாற் கடவுள் எழுந்தருளியிருக்குமால்வரையென்பதைக் கருத்தினில் அமைவுற நினையாது பிற இடங்களைப்போல அதனையுங் கருதி அதனைத் தூக்க முயன்றனனென்பது பெறப்படும். தன்பாகன் அது கடவுள் மலையென்று இடித்துரைத்தும் ''கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே'' என்றபடி அவனை முனிந்து மேற்சென்றமை அவனது அகந்தையை விளக்கும்.

மக்கள் பலரும் அறியாமையினாற் கடவுள் நினைவு இல்லாது தவறிழைத்தல் இயல்பு. அங்ஙனம் தவறிழைத்ததால் அவர்கள் தண்டத்துக்குள்ளாவார்களெனினும் தாம் செய்த பிழைக்காகத் தம்மை நொந்து கடவுள்பால் அடைக்கலம் புகுவாரை அவர் தமது பெருங்கருணையினாற் குற்றம் பொறுத்து ஆட் கொள்வ ரென்பதை வலியுறுத்தியவனாயிற்று.

இனி-செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணா ரென்றபடி அதிகாரத்தாலும், செல்வத்தாலும் உயிருக்கு வாழ் வெனும் மயல் மிகுந்த காலை கடவுள் நினைவு மாறுதல் கூடும். தம்மையே பெரியவராகக் கருதும் மயக்கமுடையார்க்குக் கடவுள் நினைவு ஒழிந்து போதல் இயல்பே. ஒவ்வொருவருந் தம்மையே பெரிதாகக் கருதுமிடத்துப் பிறரை இகழ்வர். இகழ்ச்சியாற் பகைமை விளையும். ஒருயிர்க்கும் மற்றோருயிர்க்கும் பகைமை விளைப்பது ஆணவமலத்தின் செயலாகும். தம் வயமில்லாத சிற்றுயிர்கள் ஒருவருக்கொருவர் பகைமை விளைத்துத் தமக்கு இழிவையும் இறுதியையுந் தேடிக் கொள்வர்.

**கடவுளுணர்ச்சியின்மையால் உயிர்கட்குப் பகைமையுந் துன்பமும் விளையும்** என்பதற்கு அடிமுடி தேடிய கதை பயன் படுவதாயிற்று.

கடவுளின் பேரருட்டன்மையை விளக்கியது போல உயிர் களின் ஆணவ மறைப்பினையும், அதன் கேட்டினையும் விளக்கி அம்மலமும், அக்கேடும் ஒழிவதற்கும், பேரின்பப் பெரு வாழ்வு பெறுதற்கும் **கடவுள் வழிபாடு இன்றியமையாததென்பதை** ஒன்பதாம பாட்டினுள் தெரிவித்தவாறாயிற்று.

ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாட்டின் கண் சம்பந்தப் பெருமான் தமது திருப்பெயரை நிறுவியருளினமைக்குக் காரணம் என்னையோவெனின் ஒரு திருப்பதிகத்தையேனுங் கற்பார்க்குத் தமது சிவானுபவப் பயனை நன்கு அறிவுறுத்தக் கருதிய பெருங் கருணையேயாமென்க. அவ்வனஞ் செய்தது தம் புகழ் விளக்க வன்று, இறைவர் புகழை ஞால முழுவதும் விளக்கக் கருதியே என்க. இதனைத் தற்புகழ்ச்சியாகக் கூறுவோர் தமது அறியா மையைப் புலப்படுத்தியவராவார்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற திரு வுள்ளக் குறிப்போடு நம் பரமாசிரியர் ஊர்தோறுஞ் சென்று திருப்பதிகமருளிச் செய்தமையால் ஒவ்வொரு திருப்பதிகத்தையே கற்றவர்க்கும் உண்மை விளங்குதற் பொருட்டு ஒவ்வோர் பதிகத் துஞ் **சித்தாந்தப் பொருளை**யுந் தமது அனுபவப்பயனையும் அறிவுறுத்தினாரென்க.''

மேற்கூறியவற்றில் திரு கா.சு.வின் நுண்மாண் நுழைபுலம் புலப்படும் அழகு நோக்கற்பாலது. □□

### காத்திடுக

உடம்பினுட் புகும் நச்சுத்தூள்கள் தாவர சம்பந்தமாயும் இருத்தல் கூடும்; உயிர்ப்பிராணிகள் வடிவாயும் இருக்கும். அவற்றிற் பல கடுகின் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவுள்ளவையாய் இருக்கின்றன. அவை எளிதில் கண்ணுக்குப் புலனாவதில்லை. அவை விரைவில் ஆயிரக்கணக்காகப் பெருகுகின்றன. வாந்தி பேதியை உண்டாக்கும் புழு ஒன்று பத்து மணி நேரத்தில் பத்து லட்சம் புழுக்கள் உண்டாவதற்குக் காரணமாகும். அவ்விதப் புழுக்கள் கிணறு, ஆறு, குளம் முதலியவற்றிலுள்ள நீர்களிலும் தெருப்புழுதியிலும், வீட்டுத்தரைகளிலும், சுவர்களிலும் உள்ள புழுதிகளிலும், உண்ணும் உணவுகளிலும், பருகும் பானங் களிலும் கலந்திருக்கும். அவை நம் உடம்பிற் புகாதபடி காத்தலே நன்று.

—**தமிழ்க் 'கா.சு.'**



# அவரின் அடிச்சுவட்டிலே

## புத்தனேரி இரா. நடராசன்

நான் மாணவனாக இருந்தபோது, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செயலாளராகவிருந்த திரு. திருவரங்கம் பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் மெய்கண்ட சாத்திர மாநாடு நடத்தினார்கள். நாங்கள் அவருடைய இல்லத்திற்குப் பக்கத்திலேயே குடியிருந்தோம். அவருடைய துணைவியாரும் மறைமலையடிகளாரின் புதல்வியுமான திருமதி. நீலாம்பிகை அம்மையார் என்னைப் பெற்ற தாய் போலவே பேணி வளர்த்துத் தமிழுணர்வு ஊட்டியவராவார். பெரும்பாலும் அவர்கள் இல்லத்திலேயே இருப்பேன். சில சமயம் அவருடைய மடியிலேயே படுத்துத் தூங்கி விடுவேன். ''வடசொல்—தமிழ் அகர முதலி'' ''தனித்தமிழ்ப் பெயர்கள்''போன்ற நூல்களை வெளியிட்டவர். தனித் தமிழ்ப் பற்றும், தமிழார்வமும் எனக்கு ஏற்பட்டதற்கு அவர்களே முழு முதற் காரணமாவார்.

திருநெல்வேலியிலே நடைபெற்ற மெய்கண்ட சாத்திர மாநாட்டில் நானும் எனது அண்ணன் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களும் தொண்டர்களாகப் பணியாற்றினோம். எனக்கு ''நற்றமிழ்த் தொண்டர்'' என்ற பட்டமும், எனது அண்ணனுக்கு ''நற்பெருந் தமிழ்த் தொண்டர்'' என்ற பட்டமும் வழங்கப் பெற்றது. அப்பொழுது தமிழ்க் ''கா.சு.'' அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவருடனிருந்து அவர் எழுதிக் கொண்டிருந்த ஒரு கட்டுரைக்குப் படிவம் எடுத்த நிகழ்ச்சி இன்னும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றது. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து அவர்கள் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது கீழே அருகிலிருந்து உதவிய பெரும்பேறு எனக்குக் கிட்டியது.

எனது உள்ளத்தில் தமிழ்ப்பற்றும், தமிழார்வமும் பெருகுவதற்கு அடுத்து துணையாக இருந்தவர் ''ஆட்சிச் சொல் காவலர்'' கீ. இராமலிங்கனார் ஆவார்கள். அப்பொழுது அவர்கள் பாளையங் கோட்டை நகராட்சி ஆணையராக இருந்தார்கள். அந்தக் காலத்திலேயே தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்த பெரியார் அவர். இளங்கோவடிகள் தெரு, வள்ளுவர் தெரு, கம்பர் தெரு எனத் தெருக்களுக்குப் பெயரிட ஆவன செய்தவர். படித்து முடித்து நான் மதுரையில் பங்கீட்டு

அலுவலகத்திலும், பின் மதுரை நகராட்சியிலும் பணியாற்றிய போதும் அவர்களுடன் அணுக்கத் தொடர்பு கொண்டிருந்தேன். எளிய, இனிய தமிழில் அவர்கள் எழுதும் மடல்களையெல்லாம் நான் ஓர் இலக்கியக் கருவூலமாகவே போற்றி வந்தேன். எனது தமிழ்ப்பற்றுக்கு உரமூட்டியவை அவை. அவற்றில் ஒன்று!

நாங்கள் அப்பொழுது மதுரையில் ''தமிழ்க்கலைக் கழகம்'' என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கித் தமிழ்ப்பணியாற்றி வந்தோம். தொடக்கவிழா நிகழ்ச்சிக்கு அவரை அழைத்திருந்தேன். அவர்கள் அப்பொழுது காஞ்சிபுரத்தில் பங்கீட்டு அலுவலராகப் பணியாற்றி வந்தார். வர இயலாமையைக் கூறி அவர் விடுத்த மடல் :

''அன்பின் அரசே!

வாழ்க நீடூழி! வளர்க நலம்பல!! தமிழ்க்கலைக் கழகத் தொடக்கவிழா அழைப்பு கைவந்து கனி தந்தது. அண்மையிலுள்ள ஊரா மதுரை? எளிதாகவா இருக்கிறது பயண நிலை? பொறுத்தருள வேண்டுகிறேன்.'' எத்துணைச் சுருக்கமான இனிய எளிய ''கம்பிச்செய்தி'' போன்ற எழுத்து.

எப்பொழுது எழுதினாலும் தவறாது பதில் விடுக்கும் நற்பண்பாளர் அவர். அடுத்து ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

''எனது இனிய ஆடலரசு!

வாழ்க! வளர்க!! முந்திய எழுத்தும், அஞ்சலட்டையும் கிடைத்தது. இங்கு அலுவலகத் தணிக்கை நடைபெறுகிறது, உணவுத்துறைத் தலைவர் வந்திருக்கிறார். இன்றும் நாளையும் இருப்பார். நாளை மறுநாள் செல்வார்.

இது எழுதவும் அவாவின் மிகுதியால் சிறிது காலம் திருடினேன். எழுதாது விடுத்தால் எனது ஆடலரசின் இளமை உள்ளம் ஏங்குமே என நினைந்து இதனை விரைவாகக் கிறுக்கித் தள்ளினேன்''

இன்னும் எத்தனையோ மடல்கள். தமிழ் கொஞ்சி விளையாடும் தனித் தமிழ்க் கருவூலங்கள்.

மொழி நூலறிஞர், பன்மொழிப் புலவர் தேவநேயப் பாவாணரிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தாலே தனித் தமிழ்ச் சொற்கள் பல தானாக வந்து துள்ளி விளையாடும். வழக்கத்தில் உள்ள வட சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைக் கேட்டவுடனேயே சொல்லும் பேரறிவாளர் அவர்; நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே. ''ஐயா! கலர் குடிக்கிறோமே அதற்கு என்ன தமிழ்ச் சொல்'' என்று கேட்டால் ''வண்ணக் குடிப்பு'' என்று விடை வரும். ''காபி குடிக்கிறீர்களா?'' என்று கேட்டால் ''கருந்திராட்சைப் பிழியல் கிடைக்குமானால் கொடுங்கள்; நீர் வேட்கையைத் தணிக்கும்'' என்பார். அப்பொழுது அவர் தங்கியிருந்த ''போர்டிங் லாட்ஜிங்'' பற்றிக் கேட்டோம். ''உணவு விடுதி—தங்கும் விடுதி'' என்ற சட்டென்ற விடை.

அவருடைய தமிழ்ப் புலமை பற்றி டாக்டர்: மா: இராச் மாணிக்கனார் எங்களிடம் பலமுறை கூறியிருக்கிறார். ஒரு நிகழ்ச்சி. அவர் சேலத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது பாவாணரவர்கள் வந்திருந்தாராம். இருவரும் உரையாடிக் கொண்டே சாலை வழியே போய்க் கொண்டிருந்தார்களாம். சாலை ஓரத்திலே பெரிய பெரிய கட்டடங்களிருந்தன. அவற்றைக் கண்ட பாவாணர் அவர்கள் இந்த **வளமனைகளெல் லாம்** தனியாருடையவைதானே என்று கேட்டாராம். அதுவரை பங்களா என்றே சொல்லி வந்த எனக்கு '**வளமனை**' என்ற சொல் மின்னலென ஒளிவிட்டது. அடுத்து உங்களுக்கெல்லாம் **''எய்ப்பினில் வைப்புத் தொகை''** எவ்வளவு இருக்கும் என்று கேட்டாராம். பிராவிடெண்டு பண்டு என்றும், சேமநல நிதி என்றும் பழக்கத்தில் இருந்த சொல்லுக்கு ''எய்ப்பினில் வைப்புத் தொகை'' என்ற இனிய தமிழ்ச் சொல்லைக் கேட்டு வியந்தேன்.

நல்ல தமிழில், தூய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி எழுத முடியுமா? என்று கேலியும் கிண்டலும் புரிவோரின் தலை யிலடித்து ''முடியும் முயன்றால்; முடியும் தமிழார்வம் இருந் தால்; முடியும் நீ உண்மைத் தமிழனாயிருந்தால்'' என்று ஆணித் தரமாக எடுத்துக்கூறி வாழ்ந்து காட்டிய தமிழறிஞர்கள் இவர்கள்.

தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் நிலைத்த பணியாற்றிய தமிழ்க் ''கா.சு.'' அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது அவர்களையும் அவர்கள் அடிச்சுவட்டிலே அவர்களைப் பின் பற்றித் தமிழ் வளர்த்த பேரறிஞர்களையும் நினைவு கூர்வது பொருத்த மரபாயிருக்குமன்றோ. ●●

---

## நாளும்—பல்லும்!

ஒவ்வொரு நாட்காலையிலும் இரவில் படுக்கப் போவதற்கு முன்னும் பற்களைச் சுத்தப்படுத்துதல் நலம். பற்குத்தி உபயோகப்வடுத்துவதானால் அது மரத்தினால் செய்யப்பட்டி ருத்தல் வேண்டும். ஆலங்குச்சி வேலங்குச்சி முதலியனவும் சிறப்பாகம் பயன்படுவன. பற்களுக்குக் கெடுதி செய்யாத பொடிகளையும் பயன்படுத்தலாம். பற்களுக்கு இடையே நுட்ப மாய் இருக்கும் துகள்களை நுண்ணிய நூலினாற் களைதலும் உண்டு. உப்பும், வெற்றிலைச்சாறும் பற்சுத்திக்குப் பயன் படுவனவே. செயற்கைப் பற்குச்சு (Brush) உபயோகப்படுத்துப வர்கள் அதன் மீது உப்பு பொடியிட்டு வைத்திருந்து சுத்தப் படுத்தினால் அதிலுள்ள புழுக்கள் மாயும். நன்கு காய்ச்சின நீரினைக்கொண்டு பல்லைக் கழுவுதல் சிறந்தது. ஒரு பல் அழுகி விட்டால் அதை உடனே பல் வைத்தியர் உதவிகொண்டு எடுத்து விட்டு அதற்குப் பதிலாக வேறு பல் வைத்துக்கொள்ளுதல் நலம்.

—**தமிழ்க் கா.சு.**




மக்களாய் மண்ணில் பிறந்தாரெல்லாம் ஆன்ற குடியில் பிறக்கும் பேறு பெற்றாரில்லை; ஆன்ற குடியில் யிறந்தாரெல்லாம்—தகுதி சான்ற நிலையில் வளர்க்கப்பட்டாரில்லை; தகுதி சான்ற நிலையில் வளர்க்கப்பட்டாரெல்லாம்—கல்வி கேள்வியில் சிறந்தாரில்லை; கல்வி கேள்வியில் சிறந்தாரெல்லாம்—உரிய பட்டம் பெற்று உயர்ந்தாரில்லை; பட்டம் பெற்று உயர்ந்தாரெல்லாம்—பல்துறை மேதகைமை எய்தினாரில்லை; பல்துறை மேதகைமை உற்றாரெல்லாம்—நாடு போற்றும் நன்னிலை உற்றாரில்லை; நாடு போற்றும் நன்னிலை உற்றாரெல்லாம்—நானிலம் போற்ற வாழ்ந்தாரில்லை; நானிலம் போற்ற வாழ்ந்தாரெல்லாம்—இனத்தின் மானமும் மரபும் காக்க முனைந்தாரில்லை; இனத்தின் மானமும் மரபும் காக்க முனைந்தாரெல்லாம்—ஒருபால் கோடாத நடுநிலையாளராய் இலங்கினாரில்லை; நடுநிலையாளராய் இலங்கினாரெல்லாம்—தம் கொள்கையை நிலைபெறச் செய்தாரில்லை.

இதற்கு உலக வரலாற்றில் எண்ணற்ற சான்றுகளை நம்மால் காணவும் காட்டவும் இயலும். ஒன்று வாய்த்தால் பிறிதொன்று வாய்க்காது போவதையே பெருவழக்காய்க் கண்ணுறும் நாம் அனைத்துத் தனித் தன்மைகளும் ஒருங்கே இயைந்து பொருந்தி விளங்கிய பெருந்தக்கார் ஒருவரைத் தமிழ் நிலத்தில் கண்டதில்லையா? கண்டோம்! அந்நிறை மனிதரே தமிழ்க் 'கா.சு' எனும் சுருக்கப் பெயரால் தமிழ்ப் பெருமக்களால் போற்றப்படும் பல்கலைப்புலவர் கா. சுப்பிரமணியனார் ஆவார்.

கல்வி நிலையத்தில் கற்ற கல்வியுடன் இலக்கியம், இலக்கணம், வரலாறு, உளநூல், உளநூல், சமயநூல்கள் பலவற்றையும் தெள்ளிதின் கற்று, மனதில் பதிய வைத்துக் கொண்டார். கூர்த்த நினைவாற்றல் உடையவராய் இலங்கினார்.

தமிழ், ஆங்கில மொழிப் புலமையுடன் மலையாளம், வடமொழி ஆகிய இருமொழிப் புலமையும் பெற்றுத் துலங்கினார்.

கற்பவை கசடறக் கற்றார். கற்றதை உணர்ந்தார்; தெள்ளிதின் ஆய்ந்தார்; ஆகவே கல்வியாளராய், அறிஞராய், சிந்தனையாள ராய், ஆராய்ச்சியாளராய், படைப்பாளராய் விளங்கிச் சிறந் தார். 'கெடிலம்' ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த திரு. கா.சு. அவர்களைப் பார்த்து 'என்னாங்க சுப்பிரமணியம்? கெடிலம் என்றால் ஏதாவது பொருளுண்டா? என்று திரு. வி. க. வினவி னார். கேடு+இலம் எனப் பிரித்துக் கொண்டால் இந்த ஆற்றில் குளிக்கும் நமக்குக் கேடு இல்லை என்று பொருள் கொள்ளலாம் என்றார் திரு. கா.சு. இஃது அவரின் நுண்மாண் நுழைபுலத்தை நன்கு வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், எனும் நன் மொழிக்கு ஏற்ப, தாம் பெற்ற அறிவும், உற்ற அறிவும் உலகிற்கு.குறிப்பாகத் தமிழர்கட்குப் பயன்பட வேண்டும் எனும் உயர் நோக்கால் உந்தப்பட்டு மிகுந்த வருவாய் தரும் வழக் கறிஞர் பணியோ வேறு அரசுப் பணியோ மேற்கொள்ளாது சட்டக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய கல்வி நிறுவனங்களில் பேராசிரியர் பணியினை மேற்கொண்டார். உணர்வும் ஊற்றமும் அறிவும் திறனும்.வாய்ந்த மாணவர் உலகத்தை உருவாக்கினார். சமய இலக்கிய மேடைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி, பயன்தரும் கருத்துக்களைப் பரம் பினார். செந்தமிழ்ச் செல்வி அன்ன இதழ்சட்கு மொழி, இனம், நாடு, சமயம், பண்பாடு குறித்துத் தொடர்ந்து ஆல்வுக் கட்டுரைகள் வரைந்தளித்தார்.

'சமையம் என்பது சமைக்கப்பட்டது என்ற பொருளில் ஒரு தெய்வத்தை வழிபடுவதற்கு வகுக்கபபட்ட நெறியினைக் குறிப்ப தாகும். சமையம் என்ற சொல் சமயம் என்று மருவிற்று''— இது கா. சு. அவர்கள் காட்டும் சமையப் பொருள் விளக்கம்.

தென்சமய உண்மைகள் ஆரியக் கலப்பால் தன் தனித் தன்மையை இழந்து மாசுண்டு, ஒளிகுன்றி, பழிப்புக் கிடனாய் விளங்கியமை கண்டு வருந்தினார். மாசு துடைத்துத் தூய்மை பெறச் செய்து செந்நெறி எதுவெனக் காட்டினார். ''அருச்சனை களைத் (வழிபாடு) தமிழர்கள் கோயில்களில் தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். பொருள் விளங்காத மொழியில் இறைவனை வாழ்த்துவதிலும், தமிழில் திருப்பெயர் சொல்லி மலர் தூவிப் போற்றுதலே வழிபடுவார்களுக்கு அன்பு பயக்கும்'' என் அறுதியிட்டு உரைத்தவர் கா.சு. அவர்கள்.

கா.சு. அவர்கள் ஓரிலக்கியக் கருவூலம்; இலக்கணக் களஞ்சியம்; வரலாற்றின் பொன்னேடு; சைவத்தின் திருவுரு; நுண்ணறிவின் கொள்கலம்; மெய்நெறியின் காவலர்; தனித் தமிழின் வழிகாட்டி. அவர்களின் வரலாறு 'தமிழின் இலக்கிய வரலாறு'. அவர் வான நூலையும் எழுதினார்; வாழ்க்கை இன் பத்தையும் தொட்டார். ஆம்! கா.சு. அவர்கள் தமிழர்க்கு என்றும் வழிகாட்டும் கலங்கரை விளக்காவார். விளக்கு காட்டும் ஒளி வழி நடப்போம். □□



# கா.சு.வின் நுண்மாண் புலமை

பன்மொழிப் புலவர். மு. ச. சிவம்

தமிழ்மொழி காலந்தொறும் எளிமையை நோக்கி மாறுதலடைந்தும் வளர்ந்தும் வந்து கொண்டிருக்கிறது. ஆதனால் இரண்டாயிரமாண்டுகட்கு முற்பட்ட, நடைச்செறிவு மிக்க தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் முதலியவற்றை இக்கால மொழிநடையில் எழுதப்பட்ட உரைகளைக் கொண்டுதான் புரிந்து கொள்ள முடிகிறது. இலக்கியப் பயிற்சி மிக்கவரே உரைகளின் உதவியின்றி அவற்றை உடனே புரிந்து கொள்ள முடியும்.

திருக்குறளுக்கும் காலந்தோறும் உரைகள் தோன்றி வந்தமைக்கு முதன்மையான காரணம் உரையாசிரியர்கள் தம் காலத்தில் வழங்கிய மொழி நடையில் உரை விளக்கங்கள் தர விரும்பியதேயாகும். திருக்குறளுக்குத் தோன்றிய பழைமையான பத்து உரைகளுள் இறுதியாகத் தோன்றிய பரிமேலழகர் உரையும் திருக்குறளைப் போலச் செறிவாக உள்ளமையின் அவருடைய உரைக்கும் விளக்கம் தரும் வேறு உரை வேண்டப்படுகிறது.

இந்நூற்றாண்டில் முப்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் திருக்குறளுக்கு உரைகள் வரைந்துள்ளனர். அவர்களுள் பெரும்பாலோர் பரிமேலழகர் உரையையே பின்பற்றியுள்ளனர். புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார் போன்ற ஒருசிலரே பரிமேலழகர் உரைக்குச் சிறிது மாறுபட்ட உரைகளை எழுதியுள்ளனர். எனினும் முப்பாலுள் ஒன்றான காமத்துப் பாலுக்கு உரை எழுதும்போது அனைவரும் பரிமேலழகர் உரையை அப்படியே ஏற்றுக் கொணடுள்ளனர்.

அறுபதாண்டுகளுக்கு முன்பு, பரிமேலழகர் உரைக்குப் பல இடங்களில் மாறுபட்டுத் திருக்குறளுக்கு இனியதோர் பொழிப்புரை வரைந்தார் பல்துறை அறிஞர் கா. சுப்பிரமணியம் அவர்கள். இவ்வுரை இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் எளிய நடையில் அமைந்து இளைஞர்களும் திருக்குறளின் கருத்துக்களைத் தெற்றென உணருமாறு செய்து வந்துள்ளது. முனைவர் மு. வ. அவர்களின் தெளிவுரை வெளி வருவதற்கு முன்பு தமிழ்க் கா.சு.வின் உரையே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் பலமுறை திரும்பத் திரும்பப் பதிக்கப்பெற்று வெளிவந்தது.

ஒரு பக்கம் மூலமும், எதிர்ப்பக்கம் உரையும் அமைந்துள்ள பாங்கினாலும், கையுடக்கமான வெளியீட்டு அமைப்புச் சிறப்பினாலும் அறிஞர் மு.வ.வின் பெரும் புகழினாலும், மு.வ.வின் தெளிவுரை பொதுமக்களுக்கேற்ற உரையாக அமைந்துவிட்டது.

தமிழ்க் கா.சு. வின் பொழிப்புரையே ஒருங்கே தெளிவுரையாகவும், விளக்கவுரையாகவும் அமைந்துள்ளது.

பரிமேலழகர் ஒவ்வொரு குறளுக்கும் பதவுரை எழுதிப் பின் விளக்கவுரை அல்லது சிறப்புரை எழுதி செல்கிறார். 'பொழிப்புரை'யில் சிறப்புரைக்கு இடமின்மையின் தமிழ்க்.கா.சு. அவர்கள் பரிமேலழகர் சிறப்புரையில் கூறியவற்றையும் இணைத்துக் கொண்டு ஒரே உரையாக அமைத்துள்ளார்.

## தமிழ்க் கா சு. கூறிய புதிய உரைகள், விளக்கங்கள், நயங்கள் ;

1. 'தென்புலத்தார்' என்பார் தமிழ்நாட்டுப் புலவர் எனவும், தமிழர் குருமாரையுங் கூறுவாருமுளர் (கு 43)

2. 7 ஆம் அதிகாரம் மக்கட்பேறு ஒவ்வொரு குறளிலும் 'மக்கள்' என்றே நாயனார் ஆண்டு வந்தமையின், இவ்வதிகாரப் பெயர் மக்கட்பேறு என மாற்றப்பட்டது.

3. சிறுமையுள் தங்கிய இன்சொல் என்பது பிறரை இகழ்ந்துரையாத இன்சொல் என்றும் கூறலாம். (கு 98)

4. பயன் கருதுவதை மனத்திற் செய்யாது செய்த உதவிக்கும், புகழும், புண்ணியமும் பெறுதற்கரிய ஈருலகமும் [வையகமும் வானகமும்] ஈடாகா என்று பொருள் கோடலுமுண்டு. (101)

5. 102, 103, 104 ஆம் குறள்களுக்கு எழுதிய நயவுரைகள்.
''நிலமானது காலத்திற் பயன் விளைப்பது இயல்பு. அது காலத்திற் பயன் விளையாமையும் உண்டு. அக்காலத்திலும், நன்றி செய்வார் சிறந்தவர் என்றவாறு ''கடல், தன்பால் மேகங்கொண்ட நீரை மட்டும் பெறுகின்றது. அங்ஙனம் பெறாதார் கடலினுஞ் சிறந்தவர் என்றவாறு.

'' ஏனையவை மரங்கள் போலாது, பனை சிறிய உதவி கொண்டு பெரும்பயன் விளைத்தல் காண்க.''

6. தெளிவுரை : ''சொல்லில் மாத்திரம் செப்பமாக இருந்து, மனம் ஒருபால் சாயப் பெற்றால், அது நடுநிலைமையாகாது.'' (119)

7. 124, 125 ஆம் குறட்பாக்களுக்கு எழுதிய நுட்பவுரைகள் :
''தானே உயர்வுடைய மலையினும், தனது ஆற்றலால் உயர்ச்சி பெற்றவன் பெரியவன்'' என்றவாறு.

'' உள்ள செல்வத்தைச் சிறப்பிக்குஞ் செல்வ மாதற்கு உரித்து என்ற வாறு.''

## புதிய உரைகள்

8. ''நல்ல சொற்களைக் கூறுமிடத்து, அவற்றுள் என்றாவது தீய சொல்லாக இருந்து அதன் பொருளால் பிறர்க்குத் துன்பமாகிய பயன் விளையுமாயின், பிற நல்ல சொற்களா லாகக் கூடிய நன்மையும் ஆகாததாய்ஒழிந்துபோம். **(128)**

9. ஒழுக்கமுடைமை : ''தத்தங் கடமைகளைச் செய்து உலக வாழ்க்கை நடத்தல்'' (அதிகாரம் 12)

10. ''அறிஞர் ஒழுக்கக் குறைவினால், இடர் விளைதலை அறிந்து, செய்யுங் கடமை அரிதாயினும் அதனைச் செவ்வையாகச் செய்யாது சுருக்கமாட்டார். (136)

11. திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும் (168) :
பரிமேலழகர் உரை : ''தன்னை உடையானை இம்மைக்கண் செல்வத்தைக் கெடுத்து மறுமைக்கண் நரகத்தில் செலுத்தி விடும்.''

கா.சு. உரை : ''தன்னை உடையானது செல்வத்தை இம்மையில் கெடுத்து மறுமையிலும் துன்பத்துள் செலுத்தி விடும் (செல்வத்தைக் கெடுத்துத் தீயவழியில் புகுத்திவிடும் என்றலும் ஒன்று).''

12. ''ஒருவன் பிறரது நன்மையை எடுத்துரைக்க மனமில்லா தவன் என்பது புறங்கூறுகின்ற அவனது இழிகுணத்தால் அறியப்படும்.'' (185)

13. ''அறிவொடு செய்யுஞ் செயல்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது யாதெனில், தம்மைத் துன்பப்படு வோருக்குங் கெடுதியானவற்றைத் தாம் செய்யாது விடுதலே யாம்என்று நல்லோர் சொல்லுவர்'' (203)

14. ஒப்புரவறிதல் (22ஆம் அதிகாரம்) : ''ஒப்புரவு என்பது தம்மைச் சார்ந்த பிறரைத் தம்மோடொத்த நன்னிலை அடையும்படி செய்தல் அவருடைய குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்குவதற்கு வழியறிதல் ஒப்புரவு எனப்படும். தம்முடைய குலத்தினருக்கும் நாட்டினருக்கும் இடர் வந்த போது உதவுதல் ஒப்புரவு என்ப.''

15. ''(நிலம் மன்னன் மீக்கூறும் என்று கொண்டால் அவனுடைய குடிகள் அவனை மிகவும் நல்லவன் என்று புகழும் என்பது பொருள்)'' (386)

16. ''தண்டித்து அடக்குதற்கு உரியவர்களிடத்தும், கண்ணோட் டத்தால் அவர்கள் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே மேலான தன்மையாம்'' (579)

17. தானம் தவம் : ''பிறர்க்கு வேண்டுவன கொடுக்குங் கொடையும், தம் பொருட்டுச் செய்யும் தவமும்'' (19)

18. அல்லவை தேய அறம் பெருகும் (96) குற்றங் குறைந்து குணம் வளரும். ['பாவந்தேய அறம் வளரும்' என்பது பரி உரை].

19. பார்ப்பான் (134)—நூல் கற்பான்.

20. பிறப்பொழுக்கம் (134) குடியின் சிறப்பு.

இங்ஙனம் இன்னும் பலவிடங்களிலும் புதிய உரைகளையும், நயங்களையும் கூறிச் செல்வார் கா. சு. அவர்கள். இவற்றைப் பரிமேலழகர் உரையுடன் ஒப்பிட்டுக் காண்போரே இவருடைய நுண்ணறிவை உணர்ந்து போற்ற முடியும். இடச் சுருக்கங் கருதிப் பரிமேலழகரின் உரைகள் ஈண்டு எடுத்துத்தரப் பெறவில்லை.

மேலும் பரிமேலழகர் உரையிற் காணப்படும் பல சொற்களுக்குத் தமிழர் கா. சு. வின் உரையில் நல்ல விளக்கங்கள் ஏற்படுகின்றன.

1. உலகு (20) —உலகியர் (பரி); உலக வாழ்க்கை (கா. சு.)

2. நீத்தார் — முற்றத்துறந்த முனிவர் (பரி); உலகப் பற்றினை நீக்கிக் கடவுள் திருவருள் பெற்ற பெரியார் (கா. சு.)

3. இருமை வகை தெரிந்து (23)—பிறப்பு, வீடு எனும் இரண்டின் துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து (பரி); உலகியல் வீட்டுநெறி என்னும் கூறுபாட்டையும் அறிந்து (கா. சு).

4. நிறைமொழி மாந்தர் (28)—நிறைந்த மொழியினையுடைய துறந்தார் (பரி); தவறாது பலிக்குஞ் சொற்களைச் சொல்ல வல்ல பெருமக்கள் (கா. சு).

5. ஆருயிர் (73)—பெறுதற்கரிய மக்கள் உயிர் (பரி); உடம்பு எடாதபோது அறிவதற்கு அரிய உயிர் (கா. சு.)

6. அழுக்காறுடையார்க்கு அது சாலும் (265)—அழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா; கேடு பயத்தற்கு அது தானே அமையும் (பரி) பொறாமையானது ஒருவனுக்கு அவன் பகைவர் கேடு செய்யத் தவறினாலும் தான் கேட்டினைத் தவறாது கொடுக்கும் (கா. சு).

பரிமேலழகர் உரையிற் காணப்படும் சில வடசொற்களுக்குப் பகரமாக நல்ல தமிழ்ச் சொற்களை எடுத்தாளுகிறார் தமிழ்க் கா. சு. எ–டு குணம் (29)—நல்லியல்பு; அனுபவிக்குங்கால் (177).

இவ்வாறு தமிழ்க் கா. சு.வின் திருக்குறள் பொழிப்புரை அவர்தம் பெரும் புலமைக்கும், விரிந்த கல்விப் பரப்புக்கும், கூரிய நுண்ணறிவுக்கும் ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிறது.



# தமிழ்க் 'கா.சு.'வின் புகழேந்தி

சான்றாண்மையர் மு. வயலூர்க்குமரன்

நெல்லைச் சீமையிலேயுள்ள பொதிகை மலையில்தான் தமிழ் பிறந்தது என்று கூறுவர். பொதிகையிலிருந்து தவழ்ந்து வரும் தென்றல். பிணிகளைத் தீர்க்கும் மாமருந்தாகும். முழுக்க முழுக்கத் தமிழ் நாட்டிற்கேயுரிய தண்பொருநையாறு பொதிகையில்தான் உற்பத்தியாகின்றது. நெல்லைச் சீமையில்தான் அழகு மிளிரும் குற்றாலத் திருத்தலம் அமைந்துள்ளது. தமிழுக்குத் தொண்டு செய்த திரிகூட ராசப்பக் கவிராயர், காவ்டிச்சிந்து சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் டி.கே. சிதம்பரநாத முதலியார், தமிழிசை யாத்த நகரம். முத்துசாமிக் கவிராயர், செவற்குளம். கந்தசாமிப் புலவர், பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதி, இரா. பி. சேதுப்பிள்ளை, பாசுகரத் தொண்டைமான் இன்னும் விளம்பரமில்லாலே போய்விட்ட தமிழ்ப் பெரும்புலவர்கள் பல்லோரையும் ஈந்து பெருமை கொண்டது நெல்லைச்சீமை.

இத்தனைச் சிறப்புகளுக்குரிய நெல்லையில்தான் நமது தமிழ்ப்பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் பிறந்தார்கள். ஆங்கிலத்தில் உயர்ந்த புலமை பெற்றுப் பல்வேறு பெருமைகளை எய்திய போதிலும் நமது தமிழ்க்கா. சு. அவர்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியின்மீது நீங்காத பற்றுக்கொண்டார்கள். எனவே, தமது வாழ்நாளையெல்லாம் தமிழுக்குத் தொண்டாற்றுவதிலேயே செலவிட்டார்கள்.

எனது நெருங்கிய உறவினர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டவர்கள். அங்கு நீண்டகாலம் பணிபுரிந்த பேராசிரியர் மு. அருணாசலம் பிள்ளையவர்கள் என் தாய்வழி ஆவார்கள். திரு. மீ. முத்துசாமி பிள்ளையவர்கள் மாமா, எனக்குச் சிற்றப்பா முறையாவார்கள். என் தமையனார் திரு. மு. கந்தசாமி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்கள். என் தந்தையார் நகரம். வே. முத்து வீறுக் கவிராயரவர்கள், தமிழிசை இயக்கத்தின் வேண்டுகோளுக் கிணங்கித் தம் முன்னோர்கள் ஏட்டுச் சுவடிகளில் எழுதிவைத்துச் சென்றிருந்த தமிழ்ப் பாடல்களைத் தொகுத்துத் தரும் பணிக்காக அண்ணாமலை நகரில் சிலகாலம் தங்கியிருந்தவர்கள்.

இந்தப் பெரியோர்கள், நான் சிறுவனாக இருந்தபோது தமிழ்க் 'கா. சு' அவர்களைப்பற்றி உரையாடுவதைக் கேட்டிருக்

கின்றேன். தமிழ்க் 'கா. சு' அவர்கள் திருக்குறளுக்கு எழுதியுள்ள உரையை ஓரளவு படித்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ்க் 'கா. சு' அவர்களைப்பற்றி நான் தெரிந்திருந்த செய்திகளெல்லாம் இவைதான்.

நெல்லை தந்த இலட்சிய ஏந்தல் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களுடன் நான் நெருங்கிப் பழகத் தொடங்கிய பின்னர்தான் தமிழ்க் 'கா. சு' அவர்கள் எத்துணைப் பேரறிஞர், தமிழுக்கு எத்துணைப் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

எந்தப் பணியைச் செய்தாலும் அதில் என்ன ஆதாயம் கிடைக்குமென்றும், எந்தப்பக்கம் சாய்ந்தால் பதவிகள் கிடைக்குமெனவும் சிந்திக்கும் கூட்டம் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில் திரு. மீ. சு. 'இளமுருகுபொற்செல்வி என்ற பெயருடைய கிழச்சிங்கம் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய பெரியார் ஒருவரின் நினைவைப் போற்றிப் புகழ் பரப்பும் பணியில் அயராது ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியப்பும் அதே நேரத்தில் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்க் 'கா.' அவர்கள் எந்த ஊரில் தோன்றினாரோ அந்த ஊர் மக்களெல்லாம் அவர்களை மறந்துவிட்ட நிலையில் குழித்தலையில் குடியேறிவிட்ட கொள்கைச் சிங்கம் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் தமக்கேயுரிய உள்ள உறுதியைத் துணையாகக் கொண்டு அயராது, அஞ்சாது தமிழ்ப் பேரறிஞர். 'கா. சு' அவர்களின் நினைவினைப் போற்றி வருவதையும், தமிழ்க் 'கா. சு' அவர்களுக்கு ஆண்டுதோறும் விழா எடுத்துத் தமிழின் உயர்வுக்காக உழைத்த பெருமானார்க்குத் தமிழ் மக்கள் செலுத்த வேண்டிய நன்றிக்கடனைச் செலுத்த வேண்டிய நன்றிக்கடனைச் செலுத்தி வருவதையும் தமிழுணர்வுள்ள தமிழர்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

கிழச்சிங்கம் திரு. மீ. சு. இளமுருகுபொற்செல்வி அவர்கள் தமிழ்க் 'கா.சு' அவர்களின் புகழேந்தியாவார்கள்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்த் தொண்டு!

★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★

**இறை**

'' முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்''

நடுநிலையில் நின்று குடிகளுக்கு நயஞ்செய்து அவர்களைக் காப்பாற்றும் அரசன் மக்கட்குக் கடவுள் எனறு மதிக்கப் படுவான்.

—**தமிழ் 'கா.சு.**



# "கா.சு." போற்றிய அரசு

பேராசிரியர்: ச. திருநாவுக்கரசு

**முன்னுரை :** 'எந்நிலையில் நின்றாலும் எவ் வேடங் கொண்டாலும் மன்னிய சீர் சங்கரன் றாளை' மறவாத செல்வத்தைப் பெற்றவர் தமிழ்த் தொண்டர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள். 'அவரிடத்திருந்து பல திறத் தமிழ்ப் புதுமைகள் பிறக்கும். அவைகளைப் பழமையென்றே அவர் சொல்வர். அஃதெனக்கு வியப்பாகவே தோன்றும்' என்று கா. சு. அவர்களைப் பற்றி திரு.வி.க. எழுதுவார். திருநாவுக்கரசு நாயனாரை 'ஆண்ட அரசு' எனக் குறிப்பிடுவது வழக்கம். 'சைவத் திருநெறித் தலைவராதலின் அரசு என்ற சொல் நமது நாயனாருக்கு மிகவும் பொருத்தமுடையதே' என்றும் 'அருமை பெருமை என்பவற்றிற்கு எஞ்ஞான்றும் அழிவில்லாத எல்லையாக இலங்கும் பெரியோரிற் பெரியோரே நமது திருநாவுக்கரசு நாயனார்' என்றும் போற்றுவார் நமது 'கா.சு' பிள்ளை அவர்கள். அவ்வாறு போற்றுவதற்குக் காரணங்களாய் அமைந்தவை யாவை என ஓரளவு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழும் சைவமும் :** கா. சு. பிள்ளை அவர்கள் தமிழையும் சைவத்தையும் தன் இரு கண்களெனக் கொண்டு வாழ்ந்தவர். இவ்விரண்டிற்கும் பலவகைகளில் அளப்பரிய தொண்டு செய்த பெரியார் திருநாவுக்கரசு ஆவார். பணி செய்தலே கடமை எனக் கொண்டவர் நமது நாவரசர். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற குறிக்கோளைக் கொண்டவர். தமிழிசையோடு கூடிய பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டவர். தென்னாடுடைய சிவபெருமானின் திருக்கோவில்களில் தமிழ் மணம் வீசச் செய்தவர். சைவ சமயத்தைப் பண்டைப் பெருநிலைக்கு மீட்ட முன்னோடி அவர்.

**தமிழ்த் தொண்டு :** நல்ல பண்ணும் இசையும் கேட்கக் கூடாது என்ற, தமிழர்களின் அடித்தளத்தையே தகர்த்தழிக்கும் நாகரிகம் பரவி இருந்த காலத்தில் தமிழ்ப் பண்பின் தனிப் பெருந் தலைவராய் அப்பரடிகள் சந்தத் தமிழ்ப் பாடல்களைப் பாடினார்' 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இருக்கும் இறைவனை இசைப் பாக்களால் பாடிப் பரவினார். ''எண்ண

வன் காண் எழுத்தவன் காண் இன்பக் கேள்வி இசையவன் காண்'' என்று இறைவனைக் கண்டு நமக்குக் காட்டுகிறார். தமிழகத்தின் இசைத் தமிழ் வரலாற்றில் மறுமலர்ச்சியை உண்டாக்கினார். ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்று இவரே கூறுவார். ''அர்ச்சனைப் பாட்டேயாகும்'' என்பதற்கிணங்க இவரது போற்றிப் பாடல்கள் அமைந்துள்ளன. அவை உயிர்கள் இறைவனோடு இரண்டறக் கலந்து பெறும் பேரின்பத்திற்குத் துணை நிற்பன. தமிழில் அருச்சனை புரிவதற்கு ஏற்ற போற்றித் திருத்தாண்டகங்களை இப்போதைக்கு அப்போதே வழங்கிச் சென்ற பெருந்தகை நம் நாவரசர். ''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி'' என்று தொடங்கும் திருக்கயிலாயப் போற்றித் திருத்தாண்டாகப் பதிகமும், ''எல்லாம் சிவனென நின்றாய் போற்றி'' என்று தொடங்கும் திருவதிகை வீரட்டானப் போற்றித் திருத்தாண்டாகப் பதிகமும், ''கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி'' என்று தொடங்கும் திருவாரூர் போற்றித் திருத்தாண்டகமும் தமிழ் வழிபாட்டிற்குரியன.

சிலப்பதிகார வரிப் பாடல்கள், குரவைப் பாடல்களை அடுத்து, சிறந்த தமிழிசை வடிவங்களை வடித்துக் கொடுத்த பெருமை திருநாவுக்கரசருக்கே உரியதாகும். 'வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்' என்று மொழி ஒருமைப்பாட்டைப் புலப்படுத்தியவர்.

**சமயத் தொண்டு :** 'நம்பரருளாமையினாற் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம்' புக்குச் சமணரோடே பலபல காலமெல்லாஞ் சொல்லிய செலவு செய்தார் நம் அப்பரடிகள். இறைவனால் சூலை கொடுத்து ஆட்கொள்ளப் பெற்று ''கனியிருக்க காய்கவர்ந்த'' தன் நிலைக்கு வருந்தி சைவப் பெருநெறியைச் சார்ந்தார்.

உழவாரத்தின் படையறாத் திருக்கரத்தோடு, திருக்கோயிற் சூழல், வலம் வரும் வழிகள், திருக்குளம், திருமதில் ஆகியவற்றுள் கிடக்கும் முட்கள், புதர்கள், செடிகொடிகள் முதலியவற்றை அகற்றித்தூய்மை செய்யும் மெய்த் தொண்டினை, மன மொழித் தொண்டுகளோடு ஆற்றி வந்தவர். ''பூவொடு நீர் சுமந்து புகுவார் அவர் பின் புகுவேன்'' என்று அர்ச்சகர் இல்லாமல் தாமே பூ, நீர் கொண்டு சென்று வழிபட்ட முறையைத் தம் பாடலில் கூறுகிறார்.

''உடல், பொருள்,ஆவி மூன்றும் சிவபெருமானுக்கே உரிமையாக்கி அவர்க்குத் திருவடித்தொண்டு பூண்டு பணி செய்து கிடப்பதே மெய்த்துறவியர் கடனாமென்பதை அறிவுறுத்தி நிறுவ வந்த அருந்தவர் நமது நாயனார்'' எனக் குறிப்பிடுவார் கா.சு. அவர்கள்.

**சமுதாயத் தொண்டு :** சமயத் தொண்டின் ஒரு பகுதியான சமுதாயத் தொண்டிலும் ஈடுபட்டார் நம் அடிகளார். அந்நாளில் மக்களினத்தில், சாதி, குலம், கோத்திரம் முதலியவற்றின் பெயரால் வேற்றுமைகளும், வேறுபாடுகளும் தோன்றி நிலவின,

இறைவன் திருவருட்பேற்றில் நாட்டமுடையார்க்கு இவைகள் கூடா என உணர்ந்து இவற்றைப் போக்குதற்குத்திருநாவுக்கரசர் பெரிதும் பாடுபட்டுள்ளார்.

''சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண் டென் செய்வீர்''

என்று சாடுகிறார்.

''அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே''

எனச் சாதிக் கொடுமையைத் தகர்க்க வழி சொல்லுகிறார்.

**முடிவுரை :** ''சிவநெறியில் நின்றாரது துறவு நிலையை அப்ப மூர்த்திகள் விளக்கிக் காட்டியது போலவே வேறெவருங் காட்டவில்லையென்பது திண்ணம்'' என்று கா.சு. பிள்ளை கூறுவது போலத் துறவு நிலையில் நின்று, பண்டைத் தமிழ் நெறியும், சிவநெறியும் தமிழகத்தில் சிறந்து விளங்க ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதைத் தனது குறிக் கோளாகக்கொண்டு வாழ்ந்து தமிழகமெங்கும் சென்று, உழவாரப்படையோடு பயன்கருதாத் தொண்டாற்றி அதன் பயனாம் இறைநிலை யெய்திய நாவரசரை கா,சு, போற்றுவதில் வியப்பில்லைதானே!

## உடம்பின் உறுதி

தசைகவின் தொழில் உடம்பின் பகுதிகளை அசைப்பதாகும். நாம் நடக்கும்போது தசைகள் தொழிற்படுவதைப் பார்க்கலாம். சும்மா நிற்கும்போதும் சில தசைகள் சுருங்கினாற்றான் உடம்பு நேராய் இருக்கும். உட்கார்ந்திருக்கும்போது முதுகுத் தசை களைத் தளரவிட்டால், முதுகு வளைந்து கூனல் உடையதாகும். ஆதலால், எப்போதும் நேராகவும் நிற்கவும் இருக்கவும் பழகுதல் வேண்டும். உடம்பின் இறுப்புகளை அவற்றின் அமைப்புக் கேற்ப அசைத்துப் பயிற்சி செய்தால், இரத்த ஓட்டமும், சீரண சக்தியும், நல்ல சுவாசமும் ஏற்படும். நல்ல உடம்பு மனத்தின் பயிற்சிக்குத் துணை செய்யும். உபயோகத்தினாலே உறுப்புகள் வளர்ச்சியும், உறுதியும் அடைகின்றன. நடத்தல், ஓடுதல், நீந்துதல், தோட்டவேலை செய்தல், தச்சுவேலை முதலியவற் றால் தசைகள் வளனும் திறனும் உடையனவாகும்.

**—பல்கலைப்புலவர் 'தமிழ் 'கா.சு.'**

# "கா.சு." கண்ட  நலவாழ்வு

பண்டுவர் தி. நா. சு. மீனாட்சிசுந்தரம்

வைகறைத் துயில் எழு.
கூழானாலும் குளித்துக் குடி.
மீதூண் விரும் பேல்.
கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

என்பன முது மொழிகள்.

பொது மறை குறளில்—பொருட்பாலில், நட்பியலில்—'மருந்து' வைக்கப்பட்டுள்ளது. நட்பு—தூய்மை மிக்கது. எனவே உடல் தூய்மைக்கும் அவ்விடம் ஏற்புடைத்து. இதனை வலியுறுத்துமாறு ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்றுள்ளது.

உலகெங்கணுமுள்ள இலக்கியங்களில் இக்குறிப்பு—'ஒழுக்கம் உயிரினும் பேலானதாக'' வலியுறுத்தப் பட்டுள்ளதா என்றால் இல்லை.

மருந்துக்குள்ள பத்துப் பாக்களிலும் உடல் நலம்பேணல், நோய் வருமுன் தடுத்தல் வந்துற்ற நோய்க்கு அதன் காரண மறிந்து—அதன் தன்மையறிந்து—நோயுற்றவர்களின் பருவ மறிந்து, தக்கபடி பிணியகற்ற முற்படுதலாகியவற்றை வகைப் படுத்தி, முறைப்படுத்தப்பட்டுள்ளது. என்றாலும்,

உடலும், உடற் கூறும்—அதன் செயல்பாடுகளும் என்ன—என்பதன் அடிப்படை உண்மைகளை அறிந்து வைத்தல் நலம்.

அதனைப் பல்துறைகளிலும் வல்லுநரான மேன்மை மிகு தமிழ்க் 'கா.சு.' என்றழைக்கப்படும் பெருமகனார்—சிறிதளவே கற்றவர்க்கும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்கதாக உடலின் இயக்கநிலையின் அடிப்படை உண்மைகளை விளக்கியுள்ளார்கள்.

உடலின் தன்மையை, உடலின் உறுப்புகளாம் தசை, நாடி-நரம்பு, என்பு, இரத்தம் ஆகியவைகள் செயல்படும் முறைகளை-மற்ற, மற்ற நூல்களைப் படிக்கும் போது ஏற்படும் குழப்பங்கள் போலன்றிக் குறளே போல—தெளிந்த நீரோடையென எழுத்தில்

வடித்துத்தந்துள்ளார்கள் என்பதனை நினைக்குந்தோறும் வியப்புக்குள்ளாகும் நிலைக்கு வரவேண்டியுள்ளது.

ஆங்கிலத்தில் உள்ளவற்றை, மிக மென்மையாக—தமிழிற் தந்துள்ளமை 'கா.சு.' அவர்களின் தனித் திறனைக் காட்டுவதாகும். சொல்லை அறிந்தவர்க்கு எல்லாம் எளிதன்றோ!

உடற் கூற்று நூல். **(Anatomy)** உடற் செயல் நூல் **(Physiology)** இருதயம் என்ற நெஞ்சப்பை, மூச்சுப்பை, மூளை ஈரல், சிறு நீர்க்காய்—உயிர்வளிச் சிற்றறை—தசைத் திரள்கள் நுரையீரல், மண் ஈரல் காற்றுக் குழல் குரல்வளை கபாலத்தி னடிப் பெருந்துளை, முதுகின் தண்டு—சேர்ப்பிழை செங்கூடுகள் —நீர்க் கோளங்கள்...என்பன போன்ற சொற்களைக் கையாண்டு கற்பவர்களுக்கு எளிமையாக்கித் தந்துள்ளார்கள்.

உடற்கண் : நோய் பற்றிக் கொண்டபின்-மருத்துவ முறை வருகிறது.

உலகந் தழுவிய வளர்ச்சியில் உள்ளது மேல் நாட்டு மருத்துவம். முதன்மையாகச் செவி வழிவந்து நடைமுறையில் முறைப் படுத்தப்பட்ட சித்த வைத்தியமோ எனில் இரக்கத்திற்குரிய நிலையில் உள்ளது. அது ஏன்? அதே போல, உலகின்கண் முதலில் மனிதன் தோன்றிய இடம் தமிழகம், அதில் ஒரு பகுதியாக அழிந்து போன இலெமூரியாக் கண்டம். எனவே முதல் மொழி தமிழ் என்றாகிறது. அதற்கும் இன்று வரை ஒரு தேக்க நிலை. அது ஏன்? அதேபோல, ஊர் பொதுவிடம், சாவடி, கோட்டம் எல்லை—குட ஓலை—தேர்வு-தலைமை—அரசு அரசன். என்பன வற்றை வகைப்படுத்தி, முறைப்படுத்திப் புவி புகழ ஆண்ட பரம் பரையில், அன்று முதல் இன்றுவரை சிக்கல்கள் எழும்போது சாதியால் ஒன்றுபடுவதும்...ஆனால் என்றுமே இன உணர்வால் ஒன்றுபடாமலே இருப்பதும் ஏன்? தமிழனின் கணக்கு, தமிழ்க் கணக்கு—எண் சுவடியாகும் இன்றைய கணிப்பானினும் விரைவாகச் சிலவற்றில் விடையிறுக்க வல்லது.

ஒரு மாகாணி மாகாணி. பத்து மாகாணி அரை அரைக்கால் மாகாணி. நூற்றுமாகாணி ஆறேகால். ஆயிரம் மாகாணி அறுபத்தி இரண்டரை என்பதைக் கணிப்பானில் விரல் வைக்கு முன்னர் வாயால் விடையிறுக்கலாம். இதே போன்று கால், அரை முக்கால் என்பன போன்றவற்றிற்கும் உண்டு. மாற்ற மில்லாத முடிந்த முடிவாக.

அஃதே போன்று 'சித்த' வைத்தியமும் செம்மாந்த முடிந்த முடிபாக, இன்னின்ன நோய்க்கு, இன்னின்ன மருந்துகள் தான் ...இத்தனை காட்டுச் சரக்குகளை உடையது...என்று முடிக்கப் பெற்றது.

ஆனால் ஆங்கில மருந்து வகைகளிலோ அன்று முதல் இன்று வரை, நாளும் கையாளப்படும் மருந்துகள் பலப் பல இல்லாது போவதும், புதிது புதிதாக வருவதும் அதுவும் கூட சில காலமிருந்து பின் இல்லாது போவதும் இயல்பான ஒன்றாகி விட்டது. அவற்றில் சில மருந்துகள் சிலரின் உடலில் வேலை செய்யும் தன்மையையே இழந்து விடுகிறது. சித்த முறையில் அவ்வாறு ஒன்றுமே ஏற்படுவதில்லை என்பது சிறப்பாகும்.

எனினும் ஒன்றை விட ஒன்று சிறந்தது மற்றது அதற்கடுத்தது என்று கொள்ளத் தேவையில்லை.

நீண்டவரலாறு படைத்த நாம் தரையிலிருப்பதும், மேனாட்டவர்கள் விண் வெளியினையே தன் கையகத்தே வைத்திருப்பதும் ...அந்த இடைவெளியைக் கணக்கிடுதல் அரிது. விடுதலைக்குப் பின் நல்ல வளர்ச்சி என்று கொண்டாலும் அது கடிவாள மற்ற குதிரை போல எல்லாவற்றிலுமாகி விட்டது.

காலந்தாழ்த்தியேனும் நோய் தீர்ந்தபின் திரும்பத் திரும்ப வருவதில்லை சித்த வைத்தியத்தில் என்பது காலம் கண்ட உண்மை.

எனவே உடல் நோய்க்குச் சிறந்தது சித்த வைத்தியம் என்பது போல, நாட்டைப் பற்றின பிணி இன உணர்வே மருந்து. அதுவும்—ஒழுக்கமான ஒரு அணியின் கீழ் செயல்படுவதால்தான் நீக்குவதற்கு நிறைவுபெறும்.

**விஞ்சிய புலமை**

''நெஞ்சினில் தமிழை என்றும்
நினைவுடன் போற்றிக் காக்கும்
அஞ்சுகம் ஏட்டின் ஆசான்
அருந்தமிழ்ச் சுடராம் மீ. சு.
விஞ்சிய புலமை வேந்தன்
விரிதமிழ் 'கா.சு.' பிள்ளை
செஞ்சுடர் அனைய தொக்கும்
சீர்புகழ் பரப்பும் சீலர்!
காவிரி சிறக்கும் ஊரில்
கவினுற ஒவ்வோ ராண்டும்
மேவுறு தமிழ்மு ழங்கும்
மேன்மைசால் அறிஞர் கூட்டம்
பூவிரி மணத்தை நல்கப்
பொலிந்திடும் அரங்கம் யாவும்
நாவினில் மகிழ்ச்சி தேக்கும்
நலம்வளர் தொண்டு வாழ்க!''

—பாவலர் கடலூர் மணிமாறன்

# தென்புல ஞாயிறு



பாவலர். கடலூர். மணிமாறன்

தென்பாண்டி நாடு பல்வேறு சிறப்புகளையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டது. செக்கிழுத்த செம்மல் வ.உ.சி; வீரபாண்டிய கட்டபொம்மன், வாஞ்சி நாதன், பெரும்பாவலர் பாரதியார் போன்ற வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்ட மறவர்களையும், இரசிக மணி டி.கே.சி., சொல்லின் செல்வர் இரா.பி.சேது (பிள்ளை), வையாபுரியார், பூரணலிங்கனார், கோ. சுப்பிரமணியனார், வ. சுப்பையா, நாவலர், ச.சோ. பாரதியார், போன்ற தமிழறிஞர்களையும் தமிழகத்துக்குக் கொடையாகத் தந்த சீர்த்தி அவற்றுள் ஒன்றாகும்.

பல்கலைச் செல்வராய், பைந்தமிழ் அறிஞராய், பல்கலைக் கழகப் பேராசிரியராய், சட்டக்கலை வல்லுநராய், தமிழின உணர்வு சான்ற ஏந்தலாய், தன்மான மறவராய், தென் புலத்தின் இலக்கிய எழு ஞாயிறாய் விளங்கிய கா. சுப்பிரமணியனார் அவர்களும் எல்லையிலாப் புகழ் கொண்ட நெல்லையில் பிறந்தவரே ஆவர்.

உண்மைத் தமிழர் ஒவ்வொருவரின் உணர்விலும் செயலிலும் ஒன்றிக் கலந்தவர் கா.சு. எனில் மிகையன்று.

நன்றி மறப்பது தமிழினத்தின், தமிழகத்தின் அண்மைக்கால நடைமுறையாகி விட்டது. போற்றத் தக்காரைப் புறக்கணிப்பதும், விலக்கத் தக்காரை விருதளித்துப் பாராட்டி மகிழ்வதும், தன்னலத்தையே முகாமையாகக் கொண்டு தவறான செயல்களில் முனைந்து ஈடுபடுவோரைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடுவதும், அங்காடி நாய் போல் அலையாய் அலைந்து அவலத்திற்குரியோரின் அடி வருடியாய்த் திரிவதும் தமிழனின் பிறவிக் குணமோ? என்று எண்ணும்படியான காலச் சூழலில் உழன்று வருகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருமுறை பேராசிரியராயும், சென்னை சட்டக் கல்லூரியில் பேராசிரியராயும் பணியாற்றி அறிவும் ஒழுக்கமும் சான்ற பல மாணவர்களை உருவாக்கிய பெருமை கா.சு. அவர்களுக்கு உண்டு,

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு!

என்ற பாவேந்தர் நோக்கில் தமிழ்த் தொண்டு செய்தவர் கா. சு.

''இலக்கியம் மாந்தனது அறிவை வளர்க்கிறது. மாந்தனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது; நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது; மாந்தனின் சிந்தனையைக் கிளறிவிடுகிறது.'' என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப இலக்கியத்தை ஆழ்ந்து கற்று தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்குப் பரிசிலாய் வழங்கியவர் கா.சு.

சாதி சமய வெறி கொண்டு சழக்குகளில் புரளும் இற்றைத் தமிழர்கள் பொதுமை வேட்கையும் பொதுநல நாட்டமும் துளியும் இலாதவர்களாகவே காட்சி தருகின்றனர்.

''எமை நத்துவாய் என்று எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்''

என்ற வைர நெஞ்சம், பதர்களாயும் களைகளாயும் காட்சி தரும் நம்மவரிடத்தில் சிறிதும் இல்லை என்பது இரங்கத்தகுந்த, நாணத் தகுந்த நிலையாகும்.

நெஞ்சில் உரமோ, நேர்மைத் திறமோ எவரிடத்தும் காணப் படாத நிலையில் வலிந்து பிறரைச் சுரண்டி வாழ்வதிலும் கொடுமைகள் இழைப்பதிலும் வல்லவர்களாக இருக்கிற நிலையைக் கண்டு மனம் வருந்தியவர் கா.சு.

அறிஞர்கட்கு ஆசிரியராகவும், புலவர்கட்குத்தலைவராகவும் தன்னுணர்வாளர்கட்கு அன்பராகவும் தமிழ்க் கா.சு. விளங்கியிருக்கிறார்.

'நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்'

என்று பாவேந்தரின் கருத்துக்கேற்ப, தமிழினம் உய்யவும் உயரவும் பல்வேறு சிந்தனைகளை வழங்கியவர் கா.சு.

''பல்வேறு வகையாகப் பிரிந்து நிற்குந் தமிழர் யாவரையும் ஒற்றுமைப்படுத்துதற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப் பற்று ஒன்றேயாகும். தமிழ்மொழிப்பற்று இல்லாத தாய் நாட்டுப் பற்று உயிரில்லாத உடம்பு போலாகும்.''

''தமிழ் அறநூல் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' எனவும் தமிழ்ச் சமய நூல் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனவும் பழந்தமிழ்ப்பனுவல் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனவும் முழங்குங்காலை தமிழ் மக்களைச் சாதியால் வேறு செய்து,


சமயத்தால் மாறுசெய்து மொழியினால் கூறுசெய்து அவர் களுக்குள் ஒற்றுமைக்கேடு உண்டாக்கியது யாது?'' என்று சிந்திக்கத் தூண்டியவர் கா.சு.

மேலும், ''நிறைமொழி மாந்தர் மறைமொழி நடுவிற் பிற மொழி மந்திரப் பெருமை புகுந்ததேன்? மலையிலும் கடலிலும் காட்டிலும் நாட்டிலும் பாலைவனத்திலும் பாமர மக்களும் பண்பாய் ஒலித்த யாழும் குழலும் செய்தியறைந்த பறையும் எங்கே போயின? இசைக்குரியது ஏனைய மொழியெனும் வசைக் கருத்து யாங்ஙனம் வந்தது? பன்னிரு முறையிலும் நாலாயிரப் பனுவலிலும் பயின்ற இன்னிசைப் பண்ணும் திறனும் பரந்து நிலவாமைக்குக் காரணம் யாது? ஓவியக் கலைக்கும் உயரிய சிற்பத்திற்கும் உரிய தமிழ் நூல்கள் எங்கே ஒளிந்தன?

சித்தர் மருத்துவம், சிறந்த வாத நூல், வானூல், கற்பநூல், யோகத் தமிழ் நூல், அறிவர் ஞான நூல் என்பன மாசு படிந்து மங்கிக் கிடப்பதற்கு மந்திரம் செய்தார் யார்? தமிழர் தம் சமய நிலையங்களிலும் மூடபக்தி தலையெடுப்ப முதன்மையான அறிவைக் கொன்றது யாது? என்பன போன்ற வினாக்கட்குத் தக்க விடை தேட வேண்டும்,தேடுமிடத்துக் ''கல்லாமையாலும் நூல் காவாமையாலும் கற்றாரைப் பேணாமையாலும் தமிழினத் தார் தாழ்நிலை அடைந்து விட்டனர்'' என்று தமிழரின் தொன்மைச் சிறப்புகளை விதந்துரைத்து, அவை இற்றைநாள் மறைந்துபோனமை கண்டுமனம் கவன்று உரைக்கிறார் கா.சு.

''இலக்கியம் என்பது மக்களுடைய விழுமிய கருத்துகளைச் செவ்விய சொற்களால் விளக்கும் கருவியாம். இலங்கு இயம் என அச் சொற்றொடரைப் பிரித்துச் சொல்லாலும் பொருளா லும் செம்மை பெற்றொளிரும் நூல் எனப் பொருள் கொள்ளின் மேற் சொல்லிய கருத்து வலியுறுதல் காண்க'' என்ற விளக்கத் தைத் தந்து தமிழ்இலக்கிய வல்லுநராக விளங்கியவர் கா.சு.

இத்தகைய அறிவாண்மையும் பேராற்றலும் நல்லுள்ளமும், இனவுணர்வும் சான்ற தமிழ்ப் பெரியார் கா.சு. அவர்களின் சிந்தனைகளை நினைவு கூர்ந்து செயல்படுவதே இந்நூற்றாண்டு விழா நினைவு நாளில் நாம் அவர்க்குச் செய்யும் தலையாய நன்றிக்கடனாகும்.




**முன்னுரை :** ''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.''

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு வாய்மையாகத் தோன்றியவர் தான் கா. சுப்பிரமணியம் அவர்கள்.

**இளமை :** கற்றவர் போற்றும் கற்பகக் கனியான கா.சு. அவர்கள் படிப்பிலும் செயலிலும் பார்த்தோர் வியக்குமாறு முதன்மை பெற்றார். ''விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்பதுபோல், ஏழாண்டுக் காலத்தில், அன்னையை இழந்து ஆறாத்துயருற்ற நேரத்தில் உற்றார்க்கும் உறவினருக்கும், ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?'' என்று ஔவை மொழியால் ஆறுதல் கூறினார் என்றால், கா.சு.வின் கலங்கா உள்ளமும், தெளிந்த அறிவும் இளமையில் சுடர்விட்டன.

**கல்வி :** இடைநிலை வகுப்பில் படிக்கும்போது திரு. அந்தோணி என்ற ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் தாம் சொல்லச் சொல்ல மாணவர்களை எழுதிக் கொள்ளப் பணித்தார். ஆனால் கா.சு. எழுதவில்லை; கவனமாகக் கேட்டார். முடித்ததும் எழுதியதைப் படிக்குமாறு ஆசிரியர் கேட்க; கா.சு. வோ ஒரு பிழையும் முறை மாற்றமும் இல்லாமல் முழுமையாகச் சொல்லி முடித்தார். அவர் நினைவாற்றலின் சக்தி தான் என்னே! அங்கிருந்தோரின் வியப்பு எல்லை கடந்தது.

**தமிழ்ப்பணி :** 1919 முதல் 27 வரையில் சட்டக் கல்லூரியில் பணியாற்றிய கா.சு.வுக்கு எப்பணி செய்தாலும் எங்கே சென்றாலும் செந்தமிழும் சிவநெறியும் நீங்கா நிழலாக ஒன்றுபட்டு நின்றன. அதன் விளைவாகத் தமிழ்மொழியின் தோற்றம், காலம், முச்சங்கங்கள் இவற்றை வகைப்படுத்திக் காலத்தையும் கணக்கிட்டு விளக்கி எழுதப்பட்ட முழு முதல் நூல்தான் ''தமிழ் இலக்கிய வரலாறு''. தொடர்ந்து குறுகிய காலத்தில் யாரும் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவில் ''மணிமாலை'' என்னும் தாளின் வழியாகத் தமிழ், சமயம், அறிவியல், மருத்துவம், கலை போன்ற ஒன்பது துறைகளில் ஒருவரே கட்டுரை எழுதி வெளியிட்டது அரிய பெரிய செயலாகும்.

சைவசமயக் குரவர் நால்வர் வரலாறு, சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், குமரகுருபரர், ஆண்டாள், சிவ ஞான முனிவர், மெய்கண்டார் ஆகியோர் வரலாறும் ஆராய்ச்சி யும் தெள்ளத் தெளிந்த முறையில், கால வழுவின்றி சான்று களுடன் வெளியிட்டார்.

சிவநெறிச் சீலரான இவர் சித்தாந்த தத்துவத்தை விளக்கி 'சைவ சித்தாந்த உண்மை வரலாறு' என்னும் நூலை யாத்தார். தமிழர் சமயம் அல்லது சைவ சமயம் என்ற அரிய நூலையும் சீரிய சிந்தனைக் கண்ணோட்டத்துடன் வழங்கியுள்ளார். வான நூல், மெய்கண்ட நூல்களின் உரை நடை; நீதிநெறி விளக்கம், சிவப்பிரகாசம் இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள்: இந்தியத் தண்டனைத் தொகுதி விரிவுரைகள் (**Lectures on the Indian Penal code**); மிகப் பழைமையும் பொருளமைதியும் நிறைந்த தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பகுதியை ''பழந் தமிழர் நாகரிகம் என்ற தலைப்பில் உரைநடை நூலாக்கி யிருக்கிறார்.

**மன்றங்களின் மாட்சி** : உயர் வகுப்பில் படிக்கும் போதே நெல்லையில் 'சைவ சித்தாந்த சங்கத்'தைத் தோற்றுவித்தார். சென்னையில் பயிலும் போது 'நண்பர் சங்கம்' உண்டாக்கினார். சட்டக் கல்லூரியில் பயிலும்போது மயிலாப்பூரில் 'திருவள்ளுவர் கழகம்' என்பதைத் தோற்றுவித்தார். நெல்லையப்பர் கோயில் அறங்காவலராக விளங்கியபோது, தேவாரப் பாடசாலை, வேதாகமப் பாடசாலை என இரண்டு பாடசாலைகளைக் கோயிலில் தோற்றுவித்தார். இவர் தொடங்கிய அமைப்புகள் சீரிய முறையில் இயங்கிப் பயன் விளையும் வண்ணம் தாமே தலைமைப் பொறுப்பேற்று உழைத்து வந்தார். பல பேரவை களில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றி வாதத் திறமை யால், கேட்டார்ப் பிணிக்கும் தகைமையாளராய் விளங்கினார்.

**முடிவுரை** : '' தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்''

என்பது வள்ளுவர் வாய்மொழி. கா.சு. விட்டுச் சென்ற செந் தமிழ்ச் செல்வங்களை இவ்வளவு என்று வரையறுக்க முடியுமோ? வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், அறிவுச் சுடர் நூல்கள், சமய நூல்கள், கதை நூல்கள், கலை நூல்கள், பதிப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆங்கில நூல்கள், சட்ட நூல்கள், கட்டுரைகள் என்னும் பல்வேறு தலைப்புகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் தமிழுக்குக் கா.சு. வழங்கிய செல்வங்களாகும். இவரின் எழுத்தோவியங்களின் அசைவிலும் தமிழ்மொழியின் சிறப்பை, தமிழகத்தின் உயர்வைத் தமிழர் களின் செம்மையை எக்காலத்திலும் விளக்கிக் கொண்டிருக்கும். அவை நற்றமிழர் நினைவில் என்றும் வாழ்ந்து கொண்டி ருக்கும்.



# வாழ்விக்கும் இலக்கிய வரலாறு

## புலவர் குறளன்பன்

வளரும் தலைமுறையினர்க்கு வாழ்ந்தாரின் வாழ்வு நிலைகளை வகுத்தும் பகுத்தும் வரைவது வரலாறாகும்.

நமது நெடிய வாழ்வை வரலாறாய் நல்கியவர் தமிழ்க் கா. சு. ஆவார்.

அவரது இலக்கிய வரலாற்றை இளைய தலைமுறையினர் அறிந்து ஒழுகுதல் வாழ்வுக்கு வழிகாட்டும். வளர்ச்சிக்கு உரமூட்டும்.

உலகத் தோற்றம்—உயிரின் ஊற்றம்—உயிர்த்த தமிழரின் ஏற்றம்—அயலார் வருகையால் உற்ற மாற்றம் ஆகிய அனைத்தையும் அவரின் இலக்கிய வரலாறு அறிவிக்கிறது.

உலகம் கதிரிலிருந்து தெறித்து விழுந்த ஒரு பெரும் பொறி.

விழுந்த பெரும்பொறி நாளடைவில் குளிர்ந்து நீரும்—நிலமும் நல்கின.

ஒவ்வொரு உயிரின் உடம்பிலும் நீர் ஒன்றியுள்ளது.

நிலத்தை முப்பது கல் அளவு கீழே அகழ்ந்தால் அனற் பிழம்பு.

நில உருண்டையின் உட்பகுப்பிலுள்ள எரிபொருள்கள் நீரின் கொதிப்பால் நிலத்தின் மேற்புறம் எழுந்ததால் குன்றுகளாய்த் தோன்றி நிலைத்தன.

தொடக்கத்தில் கடற்பூண்டுகள் தலையற்ற உயிருடம்பைத் தோற்றுவித்தன. காலப்போக்கில் மீன்கள், சிறுசெடிகள், கொடிகள் காடுகள் உருவாகி ஊர்வன உருப்பெற்றன. வளர்ச்சிப்போக்கில் தழை செறிந்த மரங்கள் தோன்றி விலங்கினத்தை வாழ்வித்தன. ஈறாய் மக்கள் இங்கு தோற்றமுற்றனர்.

பரிபாடல் இரண்டாம் பாட்டில் காணப்பெறும் இவ்வரிய அறிவியல் செய்திகளைக் கொண்டு உலகத்தோற்றத்தை

உலகுக்கு இலக்கிய எழுத்தால் உயிரூட்டி உணர்த்தி இருக்கிறார்.

உயிரின் ஊற்றம் அறவுணர்விலும் உயிர்த்த தமிழரின் ஏற்றம் மறவுணர்விலும் உயர்ந்து நிற்பதை இருபதாம் நூற்றாண்டு வரை காலவாரியாய்த் தொகுத்துக் கணித்துக் கொடுத்திருக்கிறார்.

3 ஆம் நூற்றாண்டு மாணிக்கவாசகர் காலத்தில் ஆரியக் குருக்களில் பலர் சிவநெறியைக் கைக்கொண்டு சிவனை வழி பட்டனர்.

சைவ சித்தாந்தம் சிறப்புற்றது; புராணக் கதைகள் பெருகின. புத்தமதம் பாழ்பட்டது,

4–5 ஆம் நூற்றாண்டில் வடநூலைத் தழுவி காப்பியங் கள் வெளிவரலாயின.

6 ஆம் நூற்றாண்டில் சிறுகாப்பியங்கள் தோன்றின.

7 ஆம் நூற்றாண்டில் ஆரிய அந்தணர் சைவநெறி ஒழுகினர். சாதியினும் சமயம் சிறப்புறலாயிற்று. சமணரால் இடர்கள். விருத்தப்பா பரவல்.

8 ஆம் நூற்றாண்டில் இலக்கணத்திலும் ஆரியச் சாதிக் கொள்கை ஏறியது. வெண்பா யாப்பும், கோவை முதலிய சிறு காப்பியங்களும் விளைந்தன. வைணவக் கிளர்ச்சிகள் வெடித்தன.

9 ஆம் நூற்றாண்டில் ஆரியச் சொற்களும் கருத்துகளும் பரவின.

10 முதல் 12ஆம் நூற்றாண்டுகளில் சைவ–சமண இலக்கியக் கிளர்ச்சி ஏற்படலாயிற்று.

செல்வச் செழிப்பால் ஆரியப்பார்ப்பனர் சீர்பெற்று நலமுற்றுத் தழைத்தனர். ஆரியக் கொள்கைகள் மிகுதியாயின. கற்பனையாற்றல் போற்றப்பட்டன. காப்பியங்களில் இயற்கை நலப் புனைவுக் குறைகள் ஏற்படலாயின.

13–14ஆம் நூற்றாண்டில் மந்திர நூலும் சோதிடமும் பாட்டுப் பொருத்தங்களோடு கைகோத்துக் கலந்தன.

எழுத்திலும்–செய்யுளிலும் சாதிவேற்றுமை ஏற்பட்டது.

15ஆம் நூற்றாண்டில் பெண்டிரின் ஒவ்வொரு பகுதியையும் புனைந்துரைக்கும் நிலை உருவாயிற்று.

இக்காலத்தில் அவ்வாறு எழுந்த நூல்கள்தான் திருப்புகழ்' கம்ப இராமாயணம், வில்லிபாரதம், நைடதமாகும்.

16ஆம் நூற்றாண்டில் மக்களின் அறிவு ஆரியக் கட்டுக்கு அடங்கிச் செல்ல வேண்டியதாயிற்று.

17ஆம் நூற்றாண்டு வடமொழி, தமிழை முற்றிலும் அடக்கியாண்ட காலமாகியதால் சைவக் கிளர்ச்சி நூற்றாண்டாய்த் தலையெடுத்தது,

18ஆம் நூற்றாண்டில் கிறித்தவமும், வீரசைவமும் கிளைத்தன.

19 ஆம் நூற்றாண்டு பொதுமக்களுக்கு இலக்கியம் என்ற நிலையை ஏற்படுத்தியது.

ஆங்கிலத் தொடர்பால் ஆரியக் கட்டு அவிழ்ந்தது.

கா. சு. பிள்ளையின் இலக்கிய வரலாறு இத்தனைச் செய்திகளையும் உள்ளடக்கியதாய் எழுந்து நிற்கிறது.

ஏறத்தாழ அவரின் இலக்கிய வரலாற்றை 1953ஆம் ஆண்டிலேயே கற்றறிந்தவர்கள் நாம்.

கற்றறிந்த நாம் தமிழுக்கு-தமிழினத்திற்கு என்ன செய்தோம்?

தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்
எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்
எப்போது தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்
அமைவாகக் குந்திநினைத் தோமா? இல்லை
அனைவரும்இவ் வாறிருந்தால் எதுந டக்கும்?

பாரதிதாசனின் வினாதான் விடையாய் விஞ்சி நிற்கிறது.

வினா விடையாய் நிற்காமல் மீட்சிக்கு வழிவகுப்பது கா. சு.வின் இலக்கிய வரலாறாகும்.

வாழ்விக்கும் இலக்கிய வரலாறு வழங்கிய அறிஞர் கா. சு. பிள்ளைக்கு நாம் செய்யும் அறிவார்ந்த நன்றிக்கடன் அவரது நூற்றாண்டில் இதுவன்றி வேறுண்டோ?

நினையுங்கள்! நினைந்து நடவுங்கள்!!

வாழ்க கா. சு.

வாழிய அவர்தம் இலக்கிய வரலாறு!

□□



# தமிழ்க் கா.சு. தந்த தமிழ்

குறளன்பன் ஆ. வே. இராமசாமி

நற்றமிழ் நாட்டை உள்ளடக்கிய இந்தியாவில் ஆங்கிலம் அரியணையேறி, அருந்தமிழ் மதிப்பாரற்று ஒதுக்கப்பட்டிருந்த காலத்தில், துணிந்து பைந்தமிழின் பெருமையைப் பாருக் குணர்த்தி, தீந்தமிழ்த் தொண்டுசெய்த தலைசிறந்த சான்றோர் களுள் ஒருவர், பல்கலைப்புலவர் தமிழ்க் கா. சுப்பிரமணியம் எம்.ஏ.,எம். எல். அவர்கள்.

**பல்கலை வல்லுநர் :** தமிழ், சமயம், அறிவியல், மருத்துவம் முதலிய பல்துறைகளிலும் புலமை பெற்று, 'மணிமாலை' என்னும் திங்களிதழில் அனைத்தும் திகழ எழுதியும், இதழை நடத்தியும் பல்கலைப் புலவராகப் பெரும் புகழ் பெற்றவர் கா. சு. அவர்கள்.

**இலக்கிய வரலாறு :** தமிழ்மொழியின் தொன்மை, செம்மை, வண்மை, இனிமை, தமிழினத்தின் மாண்பு, நாகரிகம் ஆகியவையெல்லாம் உலகம் உணரும் வண்ணம் 'இலக்கிய வரலாறு' என்னும் ஒப்பற்ற முழுமுதல் ஆராய்ச்சி நூலை முதன் முதலாகக் கா. சு. அவர்கள் தமிழன்னைக்கு அளித்தது, அவரது தமிழ்ப் பணிகளில் தலையாயதாகும்.

'தமிழ் மக்கள் யார்?' என்னும் முதல் தலைப்பில், உலகத் தோற்றம், மனிதத் தோற்றம், தமிழினத்தின் தொன்மை, மேன்மை ஆகியவற்றை, அறிவியல், நிலவியல், இயற்கையியல் முதலிய பல்வேறு துறைச் சான்றுகளும், பன்னாட்டறிஞர்களின் ஆய்வுரைகளும் காட்டி விளக்கியிருக்கும் மாண்பு பெருவியப்பிற் குரியதாகும்.

முச்சங்கங்களின் காலம் முதல், இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதி வரை, தமிழ்மொழியில் தோன்றிய ஏராளமான இலக்கியங்கள், இலக்கணங்கள், புலவர்கள் வரலாற்றைக் கால முறைப்படிபகுத்தும் விரித்தும் விளக்கியுள்ள பாங்கு, தமிழுக்கும் தமிழருக்கும் ஏற்றந் தருவதோடு, அவருடைய ஆழ்ந்தகன்ற கல்வியையும் நுண்மாண் நுழைபுலத்தையும் நானிலத்திற்கு விளக்குவதாகும்.

ஐம்பத்தேழு ஆண்டுகளே (1888–1945) வாழ்ந்த பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணியம் அவர்கள், தம் அயராஉழைப்பாலும், நுண்மாண் நுழை புலத்தாலும், தாய்மொழிப் பற்றாலும், வானளாவிய வண்டமிழின் புகழையும் தமிழினத்தின் புகழையும் உலகறியச் செய்தார்.

★★

# எல்லாம் இன்பமயம்



## பாவலர் ஆ.தங்கவேல்

எல்லா உயிர்களும் இன்பந் துய்த்திட எண்ணியே அந்த எண்ணத்தின் உந்துதலால் உறுதிபெற்று இவ்வுலகின்கண் பயணம் தொடங்கின. ஏனைய உயிர்களைவிட உயர்திணை உரிமம் பெற்ற மாந்தர் இனத்தின் மனப்பாங்கினை மட்டுமே இவண் ஆய்விற்குரியது.

தொலை நிகழ்வுகளை மட்டுமே மனத்திற் கொண்டு ஆய்வு நடாத்தி அதன் வழி நடந்து செல்லும் மாந்தனைக் காண்பதே மிகமிக அரிதாக உள்ளது எனும்போது தானும் நடந்து தமைச் சார்ந்த மாந்தர்களையும் அழைப்பித்துச் செல்வது எவ்வளவு கடினமான காரியம் என்பதனை நாம் உணர வேண்டும்.

நிகழ்கால இன்ப நிறைவுகளை மட்டுமே மனத்திற்கொண்டு செயல்பட்ட மாந்தக் குழுவினர்களில் ஒரு சிலரின் விபீடணச் செயல் வினைகளால், எண்ண முடியா இன்னல்கள் பட்டுச் செத்து மடியும் தமிழ் மாந்தர்களின் உள்ளப் பாங்கினையாய்ந்து, தமது இன்ப வாழ்விற்கென செப்பனிட்ட திட்டங்களைத் தகர்த் தெறிந்து துன்புறும் தமிழ் மாந்தர்க்கென தன்னைத் தயாரிப் படுத்திப் பல இன்னல்களுக்கிடையே ''திருவள்ளுவர்'' நெறி யினை மனத்திற் கொண்டு; தானும் வாழ்ந்து, தமைச் சார்ந்த தமிழ் மறவர்களும் துன்பத்தை மறந்து இன்பம் எய்திட பல ஆக்க வினைகளை; இந்து மதத்தினின்றும் பிரித்து தனித்தமிழ்ச் சமயங்களாய்ப் படைத்துச் சிதைந்து போன ஆதிகாலச் சிறப் பினை, இழந்த பேற்றினை எப்பாடு பட்டும் பெற்றுவிட வேண்டு மெனப் பாடுபட்டவர் நமது பல்கலைப் புலவர் தமிழ்க் கா. சு. அவர்கள்.

திருக்குறள் கருத்துகளை நம் தமிழ்க் கா. சு. அவர்கள் பல்லாற்றானும் வலியுறுத்திப் போற்றுகின்றார். நிலம், வானம், தீ, வளி, நீர் ஆக புறத்திற்கு வரும் இன்பம் ஐந்தினை யும், மாந்தனுக்கு சுவையொளி ஊறு ஓசை நாற்றமென்ற ஐந்தினையும் எடுத்தியம்பி, இவைகளின் வகையறிந்து நடப் பவன் அனைத்து இன்பங்களையும் துய்த்தவனாவான் என்பதை யும் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழன் அடிமை விலங்கை உடைத்தெறியும் நாள் எந்நாளோ அந்த நாளே தமிழனுக்குப் பொன்னாளாகும் என்பதை நாம் உணர்வோமாக! இதுவே, தமிழ்க் கா. சு. வின் எண்ணம் என்பதையும் கருத்திற் கொள்வோமாக! ●●



# கா.சுப்பிரமணிய பிள்ளை

தமிழ்த்தென்றல் திரு.வி.க.

**சுப்பிரமணிய பிள்ளை**

கா. சுப்பிரமணியம் கல்விக்கடல்; ஆங்கிலத்திலும் எம். ஏ, தமிழிலும் எம். ஏ. சட்டத்தில் எம். எல். அவருக்கு எம். எல். பிள்ளையென்று ஒரு பெயரும் வழக்கில் இருக்கிறது.

பழந்தமிழ் நூல்களில் உள்ளுறைகளை நோக்குதற்கென்று கா. சுப்பிரமணிய பிள்ளைக்கு ஒரு தனிக்கண் அமைந்துள்ளது போலும். அவரிடத்திலிருந்து பல திறத் தமிழ்ப் புதுமைகள் பிறக்கும். அவற்றைப் பழைமையென்றே அவர் சொல்வார். அஃதெனக்கு வியப்பாகவே தோன்றும்.

கா. சுப்பிரமணிய பிள்ளை எம். எல். பரீட்சைக்குப் படித்து வந்த வேளையில் இராயப்பேட்டை 'குகானந்த நிலை'யத்திலே 'நூலாராய்ச்சி' என்ற பொருள் பற்றி ஒரு போது பேசினார். தலைமை தாங்கியவர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். நூலாராய்ச்சி தலைவரை மயக்கியது. ஐயர், என்னைக் காணும் போதெல் லாம் சுப்பிரமணிய பிள்ளையைப் பற்றி விசாரிப்பர்; 'பரீட்சை யில் தேறினரா?' என்று கேட்பர்; ஜில்லா முன்சீப்புகளைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டி ருக்கிறது. சுப்பிரமணியம் இளமையிலேயே முன்சீப் ஆனால் பின்னே அவர் ஹைகோர்ட் வரை இவர்தற்கு வாய்ப்பு உண் டாகும்' என்பர். பின்னே ஐயர் தாம் சொல்லியவாறே நடந் தார். சுப்பிரமணியம் இணங்க மனங் கொண்டாரில்லை. காரணம் ஜஸ்டிஸ் கட்சிப் பித்தே என்ற அளவில் கூறுவது போதும். ''என்ன! எம். எல். பிள்ளை வலிய வந்த சீதேவியை உதைத்துத் தள்ளுகிறாரே; இளமை தவறு செய்கிறது'' என்று நான் நினைத்தேன்,

சென்னைச் சட்டக் கல்லூரி, சுப்பிரமணிய பிள்ளையைச் சில ஆண்டு போதகாசிரியராகப் பெற்றது. அப்பதவியும் நிலைக்க வில்லை. சர். தியாகராய செட்டியார் இறவாதிருப்பாரேல் சுப்பிரமணியத்தின் நீதி வாழ்வு படிப்படியே உயர்ந்திருக்கும்.

ஓரிடத்துக்கு ஜில்லா ஜட்ஜ் தேவை என்று தெரிந்த ஈ. வே. இராசாமி நாயக்கரும், யானும் சுப்பிரமணிய பிள்ளை யின் பொருட்டு முயன்றோம். அது போழ்து சட்ட அங்கத்தவ ராயிருந்த கிருஷ்ணன் நாயரிடம் நாயக்கர் பேசினார்; யான் பனகலிடம் பேசினேன். இருவரும் இணங்கினர். கைக்கெட்டி யது வாய்க் கெட்டாமற் போயிற்று. அமிர்தம் திரண்டது. குடம் உடைக்கப்பட்டது யாரால்? 'ஜஸ்டிஸ்' கட்சியின் ஒரு பெருந் தூணால்.

'சுப்பிரமணியப் பிள்ளையின் வாழ்க்கைத் தமிழ்த்தொண்டுக் கென்று அர்ப்பணமாக வேண்டுமென்பது ஆண்டவன் திரு வுள்ளம். அதனால் வேறு வேலைக்குத் தடைகள் நேர்கின்றன, என்று சிலர் சொல்வர். அச் சொல் எனக்கு நஞ்சு போல் தோன்றும். சுப்பிரமணிய பிள்ளையின் திறத்துக்கும் பண்புக்கும் உரித்தாய மன்றத்தில் அவர் அமர்ந்திருந்தால் அவர் வாயிலாகத் தமிழ்த் தொண்டு இடரின்றி நேரிய முறையில் பெருமிதமாக நடந்திருக்குமென்பது எனது கருத்து.

எம். எல். பிள்ளையின் வாழ்க்கை நீதியுலகுக்குப் பயன்படா தொழிந்தமை அவ்வுலகின் துர் அதிர்ஷ்டமென்றே சொல்வேன். சட்ட ஞானியைத் தமிழ் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. பேராசிரியர் உடல்நலங் குன்றி யுள்ளது. அவர் 'எந்நிலையில் நின்றாலும் எவ்வேடங் கொண் டாலும் மன்னிய சீர் சங்கரன் றாளை' மறவாத செல்வத்தைப் பெற்றுள்ளது ஒருவித ஆறுதலளிக்கிறது. அச் சங்கரன் தமிழ்த் தொண்டரைக் காப்பானாக!

★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★

**நிலைத்து நிற்பது!**

'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்'

உலகத்தில் தனக்கு இணையில்லாமல் ஓங்கிய புகழைத்தவிர அழியாது நிலைப்பது வேறொன்றுமில்லை, —கா. சு.




சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் ''ஆனந்தக் கூத்து'' என்ற தலைப்பில் நடராச தத்துவம் குறித்து நான் பேசினேன். அப்பொழுது கா. சுப்பிரமணிய பிள்ளை என்ற தமிழறிஞர் நெல்லையில் சில தமிழ் நூல்கள் எழுதிக் கொண்டிருந்ததுடன், பல பேரவைகளில் சொற்பொழிவாற்றியும், தலைமை தாங்கியும் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் புரிந்து வந்தார். இவரது பேரும், புகழும் தமிழ் நாடெங்கும் பரவியிருந்தன. இவரும் என் சொற்பொழிவைக் கேட்க வந்திருந்தார்.

கா. சுப்பிரமணிய பிள்ளையை அந்நாளில் திருநெல்வேலி வாசிகளாகிய நாங்கள் கா.சு. பிள்ளை என்று குறிப்பிடுவதுடன், ''பூசைப்பிள்ளையின் புதல்வர் பூசைப்பிள்ளை'' என்றும் கூறுவதுண்டு. பள்ளிப் பிள்ளையாக இருந்த காலத்திலும் இவர் தம் தந்தையைப் பின்பற்றிச் சிவபூசையில் தம் நேரத்தில் பெரும் பகுதியைக் கழித்து வந்தார்.

இந்த இரண்டு பெயர்களையும் சிலர் ஏளனம் செய்வதுபோல் உபயோகித்த போதிலும், இவர் கொஞ்சமும் உள்ளம் நாணாது கோணாது இளநகையரும்பி இப் பெயர்களையும் சிறந்த பட்டப் பெயர்களை ஏற்றுக் கொண்டது போல் குழந்தையுள்ளத்துடன் ஏற்றுக் கொண்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இவரை ''எம்.எல். பிள்ளை'' என்றும் கூறுவதுண்டு. எம். ஏ. பட்டத்தை தமிழிலும், ஆங்கிலத்திலும் பெற்றவர். சட்டப் பேரறிஞர் எனப் பொருள்படும் 'எம்.எல்' பட்டமும் பெற்றிருந்தார். இவரது நினைவாற்றல் அதிசயமானது.

தலையணை மேல் குப்புறப்படுத்துக் கொண்டு பெருஞ் சுமைப் பாடங்களையெல்லாம் எளிதாக மூளைக்கு ஏற்றிவிடுவார் என்றும், வகுப்பு நேரங்களில் கூர்ந்து கவனித்துக் கேட்ட பாடக் குறிப்புகளையெல்லாம் வீடு திரும்பும் வழியிலேயே ''அசை போடுவது போல்'' சிந்தித்துச் சிந்தித்து தமதாக்கிக் கொள்வார் என்றும், இவரது வாழ்க்கை வரலாற்றின் ஆசிரியர் திரு. இ. மு.

சுப்பிரமணிய பிள்ளை கூறியுள்ளார். இவருக்குப் படிப்பும் ஒரு வகைப் பூசைதான். இறை வழிபாட்டின் ஒரு பகுதிதான்.

சைவ சமயப் பற்று இவருக்குத் தந்தை வழிச் சொத்து. இந்த உண்மையை இவர் தமது **ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளுக்கும், திராவிடக் கொள்கைகளுக்கும்** இணங்க உருவாக்கி வளர்த்து வந்தார். எனினும், அருமையான பாடல்களை தேவாரத்தில்இருந்தும் திருவாசகத்தில் இருந்தும் தேர்ந்தெடுத்து ''அருச்சனை பாட்டேயாகும்'' என்ற சுந்தரமூர்த்திகளின் கொள்கைக்கு இணங்கப் பாடிப் பாடி நெடும் பொழுது நெஞ் சுருகிப் பரவசமாயிருப்பார்.

''இத்தகைய புகழாளர் நமது சொற்பொழிவு கேட்கவும் வந்து விட்டாரே!'' என்ற பெருமை ஒருபுறம்; எடுத்துக் கொண்ட பொருளில் ஈடுபட்டு நடராச தத்துவத்தின் சிறப்புப் பொருளை விளக்குகிறோமே என்ற என் பெருமிதம் ஒருபுறம். அண்டமெல்லாம் பம்பரம் போல் ஆட்டி வைக்கும் தெய்வ சக்தியைக் குறிப்பிட்டு, ''நம் வாழ்க்கை பொருளற்ற பேயாட்டம் அன்று; இராக தாளங்களுக்கு இசைய நடைபெறும் தனிப்பெருங் கூத்து!'' என்று நான் கூறிய போது கா. சுப்பிரமணிய பிள்ளை யின் கண்கள் என்னை ஊடுருவிப் பார்த்தன.

மேலும் மேலும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டே போனேன். ஒரு சமயம் பிள்ளை கண்ணீரும் கம்பலையுமாகக் காணப்பட்டார். சொற்பொழிவு முற்றுப் பெற்றதும் தம் ஆசனத்தில் இருந்து எழுந்து மேடைக்கு வந்து என்னைப்பாராட் டத் தொடங்கினார்.

''நடராசப் பெருமானின் திருமன்றம் காணப் பெற்றோம்; இன்று மாலை இம்மன்றத்திலே சொற்பொழிவாளரின் தமிழ் விளைத்த அற்புதம் இது!'' என்று பிள்ளை கூறி அவையின் சார்பாக நன்றி தெரிவித்தார். என் பேச்சும் ஒருவகையில் சிவ பூசை தான், நடராசப் பெருமானின் உண்மையான வழிபாடு இது என்றும் பாராட்டினார் சுப்பிரமணிய பிள்ளை.

கா.சு. பிள்ளைக்கும் எனக்கும் கருத்து வேற்றுமைகள் பல உண்டு. இவரது கொள்கைகளில் சில என்னைப் போன்றவர் களைத் திடுக்கிடச் செய்ததும் உண்டு. உதாரணமாக, ''திரு நான்மறை விளக்கம்'' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை களைக் குறிப்பிடலாம்.

**வடமொழியிலுள்ள நான்கு வேதங்களையும் ''நான்மறை'' என்று தமிழ்ச் சொற்றொடர் குறிப்பிடவில்லை** என்ற தம் கருத்தை இவர் அக்கட்டுரையில் வலியுறுத்தியிருந்தார். ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலே, தமிழிலே, நான்மறைகள் இருந்து மறைந்து போய் விட்டதாகவும் கூறியிருந்தார்.

இப் புதிய சித்தாந்தத்தைக் கண்டு, கேட்டுப் பிரமித்துப் போயி ருந்த நானும், இவருடன் நடராசத் தத்துவத்தில் கருத்தொரு மித்து நிற்க நேர்ந்தது குறித்து மிக்க மகிழ்வெய்தினேன்.

பிள்ளையின் கருத்துகளும் கொள்கைகளும் என்னைச் சில சமயங்கள் பயமுறுத்திய போதிலும், **நேர்மையும், எளிமையும் பொருந்திய இவரது குணாதிசயம்** என்னைப்பெரிதும் கவர்ந்தது. இவரது எளிமை நீதிபதி சதாசிவ ஐயர், தேவதாசு பிள்ளை, பால் அப்பாசாமி முதலான அறிஞர்களையும் வசீகரித்திருந்தது.

இவர் எம்.எல். தேர்வில் வெற்றி பெற்ற பின் வழக்குரைஞ ராகப் பணிபுரியாது, சட்டக் கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்ப்பதே நலமெனத் துணிந்தார். அன்று உயர் நீதி மன்றத் தில் நீதிபதியாக இருந்த சேஷகிரி ஐயரை நேரில் போய்ப் பார்க்க விரும்பினார். சேஷகிரி ஐயரும், பெரிய சிந்தனைகளுடன் எளிய வாழ்வு நடத்துவதே மேலானது எனக் கருதியிருந்தவர்.

ஒரு நாள் காலையில் சுப்பிரமணிய பிள்ளை மயிலாப்பூரில் இருந்து எழும்பூரில் குடியிருந்த சேஷகிரி ஐயரின் மாளிகைக்கு நடந்து சென்றார். காலையில் எழுந்து நீராடி சிவபூசையை முடித்துக் கொண்டு புறப்பட்ட பிள்ளை, அப்படியே அதிகாலை யில் நீராடிப் பூசனை புரிந்த பின் சாய்வு நாற்காலியில் அமர்ந்தி ருந்த நீதிபதி ஐயரைக் கண்ணுற்றார். அவர் மீது சட்டை இல்லை. ஒரு சிறு துண்டு மட்டும் இருந்தது.

அந்த நிலையில் அவரை நீதிபதி என்று அறியாதவராய்ப் பிள்ளை, ''நீதிபதி சேஷகிரி ஐயரவர்கள் இருக்கிறார்களா?'' என்று அவரிடம் வினவினார். ''ஆம்; அவர் இருக்கிறார்; அவரைப் பார்க்க விரும்பும் நீர் யாரோ?'' என்று மெல்லக் கேட்டார் அவர். இவர் மறுமொழி கூறிப் பின்னரே அவரைத் தெரிந்து கொண்டார்.

ஐயர் பிள்ளையை ஏற இறங்கப் பார்த்தார். ''இளைஞரே உயர்ந்த எம்.எல். பட்டம் பெற்றிருந்தும் நீர் எளிய உடையுடன் வந்திருக்கிறீர். இப்படி வெள்ளையர் ஒருவரிடம் போயிருந்தால் அவர் நிச்சயமாக உம்மை மதித்திருக்க மாட்டார்'' என்றார் சேஷகிரி ஐயர்.

கோலத்தின் எளிமையும் சீலத்தின் உயர்வையும் கண்டு இவர் விரும்பிய வேலையில் இவரை நியமிப்பதாக உடன் பட்டார். பிள்ளையின் பணிவும், எளிமையும் சேஷகிரி ஐயரின் உள்ளத்தை உருக்கிவிட்டன.

இவர் சட்டக் கல்லூரியில் இருந்து விலகிய பின்புதான் நான் திருநெல்வேலியில் நடராசரைப் பற்றிய சொற்பொழிவுக்காகப் பாராட்டப் பெற்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராக இவர் பணிபுரிந்த போதும், அப்பால் திருநெல்வேலி நகராட்சிக் கழக உறுப்பினராகத் தொண்டாற்றிய போதும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் தர்மகர்த்தராகப்பதவி வகித்த போதும் நான் அடிக்கடி சந்திப்பது உண்டு. அச்சமயங் களில் எல்லாம் இவர் தம் கருத்து வேற்றுமைகளை என்னுடன் உரையாடும் போது வற்புறுத்துவது இல்லை. பொதுவான விஷயங்கள் குறித்தே பேசிக் கொண்டிருப்பார்.

கடைசிக் காலத்தில் எத்தனையோ துன்பங்களுக்கு இடையி லும் பக்தி சிறிதும் குன்றாது இவர் தொடர்ந்து தமிழ்ப்பணிகள் புரிந்து வந்ததையும் கண்டிருக்கிறேன். பல இன்னல்களுக்கும் இவருக்கு ஒரு மருந்தாக உதவியது சிவநெறித் தமிழ்ப் பணி.

நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும் இவர் புரிந்த தமிழ்ப் பணிகள் பல. தமிழிலக்கிய வரலாறு என்ற நூல் ஒன்று இவரால் 1927-இல் இறுதிப் பகுதியில் தொடங்கி அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுற்றது. இதன் திருத்திய பதிப்பு சுமார் பத்தாண்டுக்கு முன் இரண்டு பகுதிகளாக வெளி வந்தது.

1928 முதல் 1958 வரையுள்ள காலப்பகுதியில் இவரை நான் பல தடவை சந்தித்திருக்கிறேன். **இச் சந்திப்புகள் என்னைப் பல விஷயங்கள் குறித்துச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன.** இவர் ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதியிருக்கிறார். மொழிப் பெயர்வுகளும் செய்திருக்கிறார். பல பொருள்களைப் பற்றித் தம் மனப் போக்கிற்கிசைய ஆராய்ந்து கட்டுரைகளும் எழுதி யுள்ளார். வறுமை நிலையில் இவரைக் ''காசில்லாக் காசு'' என்று பரிகசித்தவர்களும் இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டியிருக்கிறார்கள். ●●

**சொல்லும் சொல்!**

''பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்''

மயக்கம் இல்லாத குற்றமற்ற அறிவினையுடையவர் மறந்தும் பொருள் இல்லாத சொற்களைச் சொல்லமாட்டார்.

—கா.சு.

# இலக்கிய வரலாற்றின் வழிகாட்டி



**பேராசிரியர். ச. மெய்யப்பன்**

கா. சுப்பிரமணியப் பிள்ளை பேரறிவும் பேராற்றலும் பெற்ற பெருமகனார். இவர்கள் வாழ்வினைத் தமிழ்க் கொடையினை நான்கு பெருந்தலைப்புகளில் ஆராயலாம்.

1. நெல்லைப் புலவர்களின் தமிழ்க்கொடையில் கா.சு. பிள்ளையின் பங்களிப்பு.

2. வழக்கறிஞர் வளர்த்த தமிழில் கா. சு. பிள்ளை பெறும் இடம்.

3. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வரிசையில் கா. சு. பிள்ளையின் அரிய சாதனைகள்.

4. இலக்கிய வரலாற்று ஆசிரியர்களில் தலைமையும் தாய்மையும் உடைய தனிச் சிறப்பு.

இந்நிலையில் கடந்த பத்தாண்டுகளில் நூற்றாண்டு விழா எடுத்துச் சிறப்பிக்கப்பெற்ற சோமசுந்தர பாரதியார், திரு.வி.க. வ.உ.சி. பண்டிதமணி, வ.வே.சு. அய்யர் முதலியவர்களின் வரிசையில்வைத்துப் போற்றத்தக்கவர், தமிழ்க்கா. சு. பிள்ளை.

அறிஞர்களைப் போற்றாத நாடு வளராது. அறிஞர்களைப் போற்றும் வகையில் நம்மை நாம் வளர்த்துக் கொள்கிறோம். அறிஞர்களுக்கு விழா எடுப்பதன் வழி அவர்களது கொடைகளைக் கொள்கைகளை ஆராய்கிறோம். பரப்புகிறோம். காப்பதற்கு வழி வகுக்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தின் அறிவு விளக்கமாக விளங்குகிற அவர்கள் வாழ்வையும் அவர்கள் வழங்குகிற செய்திகளையும் பேணிக் காத்து எதிர்காலத்திற்கு வழங்குவது காலக் கடமையாகும். இது காலத்தின் அவசியமும் கட்டாயமும் கூட. அறிஞர்களை மதித்துப் போற்றுவதன் வழி நாமும் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுகிறோம்.

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டம் தமிழ் வளர்க்கும் பண்ணையாகும். நல்ல தமிழ் வளரும் கழனியாகும். செந்தமிழ் வளர்க்கும் செம்மல்கள் செழிக்கும் சீமை. திக்கெலாம் புகழ்

பரப்பும் திருநெல்வேலி சீமை: உயர்தமிழ் வளர்த்த உத்தமர்கள் ஒருவரா இருவரா? வளரும் தமிழுக்கு வகை வகையாய் வழி வகுத்தோர் பலர் வாழ்ந்த வாழும் நிலம் நெல்லை மாவட்டம். தமிழ் மரபு காப்பதிலும் செந்தமிழ் நலம் தேர்வதிலும் நற்றமிழ் நலம் பரப்புவதிலும் அம்மாவட்டத்திற்கு உவமை சொல்ல இயலாது,

பொதிகை மலைச்சாரல் அன்றும் இன்றும் தமிழ்ச் சாரல் தவழ்வது. பாரதியார், வ.உ.சி., வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், ரா.பி.சேதுப் பிள்ளை, ரசிகமணி சிதம்பரநாத முதலியார், நீதிபதி மகராசன், கலை ஆய்வாளர் பாஸ்கரத் தொண்டைமான், பால்நாடார், பி.ஸ்ரீ ஆச்சாரியார், புதுமைப் பித்தன், மீ.ப. சோமசுந்தரம், தொ. மு. ரெகுநாதன் என அறிஞர் அணி நீள்கிறது. தொடர்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறிவாற்றலால், புலமை நலத்தால் படைப்புத்திறனால், ஆய்வுநெறியால், செந்தமிழுக்குச்செழுமை சேர்த்தவர்கள். துறைதோறும் தமிழுக்கு வளம் சேர்த்த கொடைஞர்கள், அவர்கள் ஆற்றிய பணிகள் அளவிட இயலாதன. தனி நூலாகும் தகுதி பெற்றவை. பாடல் சான்ற சிறப்புப்பெற்ற பெருமக்களுள் கா. சு. பிள்ளை அவர்கள் தலைமையுடையவர்.

புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் தவத்திரு. விபுலாநந்தர் முதல் தமிழ்த்திரு. வ. சுப. மாணிக்கனார் வரை பேராசிரியர்களாகத் தலைமை யேற்றுச் சிறப்பித்தவர்கள் பலர். இப்புகழ் மிக்க பேராசிரியர்களுக்கு மத்தியில் மலையெனத் திகழ்ந்தவர் பேராசிரியர். கா. சு. பிள்ளை இங்கு பணியாற்றிய பேராசிரியர்களும் அவர்களால் உருவாக்கப்பெற்ற மொழிப்போர் வீரர்களும் குன்றிலிட்ட அண்ணாமலைத் தீபங்கள் என ஒளிவீசுகின்றனர். இவர்களுள் பேராசிரியர் பெருந்தகை கா. சு.பிள்ளையின் ஒளிநீண்ட நெடிய தூரத்திற்குப் பாய்ந்து பரவும் ஆற்றலுடையது.

தமிழ்க்'கா.சு.' அறிவாற்றலும் எழுத்தாற்றலும் மிக்க அறிஞர்; தருக்க நெறியிலும் சட்ட நெறியிலும் வல்லவர். தேர்ந்த ஞானமும் தெளிந்த கல்வியும் வாய்க்கப்பெற்றவர்.

வழக்கறிஞர்கள் தம் அறிவு நலத்தால் தமிழ் ஆய்வில் புதிய போக்கினை ஏற்படுத்தினர். ஆங்கிலத்தில் சட்டம் பயின்ற அறிஞர்கள் சட்ட நுணுக்க அறிவைப் பயன்படுத்தித் தமிழாய்வை வளர்த்தனர்.

கா. சுப்பிரமணிய பிள்ளை, ரா. பி. சேது பிள்ளை, வையாபுரி பிள்ளை, வ. உ. சிதம்பரம் பிள்ளை, டி. கே. சிதம்பர நாத முதலியார், கு. மா. பாலசுப்ரமணியம், மகாராசன், குமர குருபர பிள்ளை, கோ. சுப்பிரமணிய பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பால்நாடார், டி. கே. சுப்பிரமணிய முதலியார், சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் முதலிய வழக்கறிஞர்கள் தமிழ்த்திறனாய்வில் தருக்க நெறியை, விவாதஅணுகு முறையை, தீர்வு காணும் ஆய்வை வழக்கில் கொணர்ந்தனர்.

பொதுவாக வழக்கறிஞர்கள் எதனைப் பற்றியும் பூர்வாங்க மாக விசாரித்தல், எடுத்துரைத்தல் விவாதித்தல், விளக்குதல், நிறைகுறை காணல், நிறுவுதல், முடிவு காணல், வெற்றிதேடல் என்ற நிலையில் இந்த இயல்புகளில் பல்துறை நலங்களை ஆராய்வர். அவர்தம் பட்டறிவும் பகுத்தறிவும் பல்துறை அறிவும் தமிழ்த் திறனாய்வுக்குப் புது ஒளி சேர்க்கின்றது. நுழைபுலமிக்க வழககறிஞர்கள் எடுத்துக்கொண்ட இலக்கியச் சிக்கல்களை வழக்காடல் நெறியில் விவாதித்துப் புதிய பல உண்மைகளைக் கண்டு நிறுவியுள்ளனர். அவர்தம் சுவையான விவாதப் போக்கு தருக்க நெறிசான்ற அணுகுமுறை, அவர்தம் ஆய்வுகளுக்குச் சுவை சேர்க்கின்றன. அறிவுககூர்மையும் நுண்ணாய்வும தமிழின் பல்வகை நுட்பங்களை வெளிக்கொணர்ந்துள்ளன. குறையோ, நிறையோ எடுத்துக் கூறுவதற்கு நிறைய சான்றுகளை அடுக்கிக் கூறுவர்.

தமிழ் வளர்த்த வழக்கறிஞர்களுள் முடிமணி போலத் திகழ்ந்தார் தமிழ்க் கா. சு. பிள்ளை தங்கப்பதக்கம் பெற்ற தகைசால வழக்கறிஞர். சட்டப்படிபபில் முதுநிலை (M.L.) பெற்ற மூதறிஞர். தாகூர் சட்ட விரிவுரையாளர். இவர்தம் தொண்டினால் தமிழ் ஆய்வு வலிமை பெற்றது. தமிழுக்கு வளம் சேர்த்தன. அவருக்குப் புகழ் சேர்த்தன. துறைதோறும் பிள்ளையவர்கள் படைத்த பெருநூல்கள் அவர்தம் பல்துறை அறிவுக்குக் கட்டியம் கூறுகின்றன. வழக்கறிஞர்களின் புலமை நலம் தமிழுக்கு வகைமைப்பாட்டு நெறியை அளித்ததற்குப் பல சான்றுகள் உள.

கா. சு. பிள்ளைக்குப் பெருமை சேர்ப்பது அவர் இயற்றிய 500 பக்க அளவு கொண்ட இரண்டு தொகுதியுடைய இலக்கிய வரலாறே. காடு திருத்தி நாடாக்கியது போல, இலக்கிய வரலாற்று நிலம் திருத்தியவர். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதற்கேற்ப கா. சு. பிள்ளை இட்டதே, இலக்கிய வரலாற்றுத் துறையில் சட்டமாகியது. கடந்த 50 ஆண்டுகளில் வெளிவந்த முப்பதுக்கு மேற்பட்ட இலக்கிய வரலாற்று நூல்களுக்கு இவர் படைப்பே அடிப்படையாகும். பின் எழுந்த கால ஆராய்ச்சிக்கு இதுவே மூல ஆராய்ச்சி. இலக்கிய வரலாற்றிற்குச் செவ்விய வடிவம் தந்த பெருமை இவரையே சாரும். பின்வந்த இலக்கிய வரலாறுகள் இவர் கூறியதைச் சுருக்கியும் பெருக்கியும் குறைத்தும் விரித்தும் பன்னூலாய்ப் பெருகியுள்ளன. இலக்கிய வரலாறு செய்தி திரட்டல், தொகுத்தல், பகுத்தல், பகுத்து விளக்குதல், மதிப்பீடு செய்தல் காலங்களை நிறுவுதல், தனிச் சிறப்புகளை விதந்தோதுதல் இன்ன வகையில் சிறந்தது என இனங்காட்டல் முதலிய தலைமைப் பண்புகளைக் கொண்டு தமிழ்க் 'கா. சு.'வின் இலக்கிய வரலாறு இலங்குகிறது.

முப்பதுகளிலேயே ஒரு கட்டமைப்புடைய இலக்கிய வரலாற்றினை இவர் படைத்தது இவர்தம் பேரறிவுக்கு எடுத்துக்காட்டு. தொடக்க காலத்திலேயே இலக்கிய வரலாற்

றிற்கு ஒரு திருந்திய வடிவம் அமைத்து விட்டார். அந்த உயிர் ஊற்றே இன்றும் புதுப்புது வரலாறாய் உருவெடுக்கின்றது.

இலக்கிய வரலாற்றைப் பகுத்த திறமும் தொகுத்த முறையும் மிகச் சிறந்த தொகுப்பியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தமிழர் நெஞ்சப்பாங்கு சமணர் நூல் வளர்ச்சி, சைவக் காப்பியம், சிவஞான முனிவர் காலம், ஆங்கிலச் சார்பு காலம், இக்காலம் என்ற தலைப்புகளில் இவர்கள் தலைப்பிட்ட முறையும் பொருள தொகுத்த முறையும் விளக்கிய முறையும் புதுமைக்குப் புதுமையாய் விளங்குகின்றது. இவரது வலிமை மிக்க ஆய்வை அடையாளங் காட்டுகின்றன.

எதிர்காலத்தில் பல பெருநூல்களாய் விரிவதற்குரிய வித்துகள் இக்கட்டுரைகளில் புதைந்து கிடக்கின்றன. இவர்தம் ஆய்வு முடிவுகள் பெருவடிவம் கொண்டு, தனி நூல்களாய் விரிந்துள்ளன. இலக்கிய வரலாற்றுத் துறைக்கு இவர் முன்னோடி; இலக்கிய வரலாறு எழுதுவோருக்கு இவர் வழிகாட்டி! ●●

### வளமுடையது

ஆங்கில அறிஞர்கள் தமிழின் பெருமையை உணர்ந்திருக்கும் அளவு தமிழ் மக்கள்கூடத் தெரிந்திருப்பதாகத் தோன்றவில்லை. டாக்டர் வின்சிலோ என்பவர் தமிழுக்குப் பெரிய அகராதி வகுத்தவர். அவர் கூறுவதாவது: ‘தமிழ் ஒரு கீழான மொழியன்று. ஆங்கிலத்தின் அடிப்படையான பேச்சிற்கு எழுத்து ஏற்படு முன்னரே தமிழானது உயர்ந்த நயமுடைய மொழியாய் விளங்கிற்று. செய்யுள் நடையில் தமிழானது கிரேக்க மொழியைப் பார்க்கிலும் மென்மையும் திட்பமும் உடையது. செய்யுள் வழக்கிலும் உரைநடையிலும் கடல் கொண்ட பகுதியையும் சேர்த்து நோக்கின் தமிழானது இலத்தீன் மொழியினும் வளம் உடையது.

ஓரசைச் சொற்களால் ஆகிய சீன மொழியைச் சிலர் பண்டை முதுமொழி என்பர். சீன மொழியின் சில பகுதிகள் தமிழோடு தொடர்புற்றிருத்தலாலும் தமிழ்மொழியின் மூலங்களும் பெரும்பாலும் ஓரசைகளாகவே இருத்தலாலும் மக்களின் மூல இடத்திற்கு அருகில் இன்றும் வழங்குவதாலும் உலகிலுள்ள பல மொழிகளோடு ஒருபுடை ஒற்றுமை உடைமையினாலும் **ஆதிமொழியின் முதற்பிள்ளை தமிழே** என்று எண்ண இடம் உண்டு.

# கா.சு.வின் உலக நன்மையே ஒருவன் வாழ்வு



ய. மணிகண்டன்

தண்டமிழ் மொழிக்குத் தனிப்புகழ் சேர்க்கத் தகுபணி ஆற்றிய தமிழரிமாவை நாமெல்லாம் அன்பொழுகும் அருஞ் சொல்லால் ''தமிழ்க் கா. சு'' என அழைத்து மகிழ்கின்றோம். 'பல்கலைப் புலவரெ'ன்னும் சொல்லடை அவருடைய அருந் திறனையெல்லாம் அடையாளம் காட்டும் ஆணிப்பொன் அணிகலனாகும்.

அந்த அறிவரிமா வாழ்ந்து சிறந்த காலம் சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகள். அந்தக் கால நீளத்தில் அவர் ஆற்றிய புலமைப் பணிகள் அறுதியிட்டுக் கூறமுடியாத ஆயுள் படைத்தவை. அவர் எழுதிய நூல்கள் ஆழமும் அடர்த்தியும் மிக்கவை. தனித்தன்மை வாய்ந்தவை.

அன்னார் எழுதிய, அழகுத் தமிழ் நூல்களில் ஒன்றான 'உலக நன்மையே ஒருவன் வாழ்வு' என்னும் ஒப்பற்ற நூலைப் பற்றிய சில குறிப்பு விருந்தை இம்மலரைப் படிப்போரின் பார்வைக்கு இங்கே பரிமாறுகிறேன்.

**உலக நன்மையே ஒருவன் வாழ்வு :**

தொன்றுதொட்டு 'உலகம்' என்னும் உயர்ந்த—பரந்த நோக்கக் கொடியை உயர்த்திப் பிடித்து வருபவர் தமிழர். இன்றைக்கு, உலகத்தின் அவசரப் போக்கையும்—ஆக்க வகையிலில்லா நடை முறைகளையும் காணும் அறிவுடையவர் அனைவரும் ஒருகணம் அச்சப்படுகின்றனர். அடுத்து உலகம் உய்ய என்ன செய்ய வேண்டுமென்று உள்ளிப் பார்க்கின்றனர்.

இந்தச் சூழலில் 'உலக நன்மையே ஒருவன் வாழ்வு' என்னும் இந்த நூலின் தலைப்பை ஊன்றிப் பார்த்தால் தெளிவும் பொலிவும் பிறக்கும் என்பது உறுதியன்றோ?

**சீர்வாய்ந்த—சிறிய நூல் :**

*1948*—இல் உமாதேவன் 'கம்பெனி' வெளியிட்டுள்ள இந்த நூல் 52 பக்கங்களைக் கொண்ட சீர்வாய்ந்த—சிறிய நூல்.

தொல்காப்பியத்தில் அதிகாரத்தின் உட்பகுப்பு 9 இயல் களாய் ஆக்கப்பட்டிருக்கும் அருமையைப் போலவே இந்நூலும் 9 சிறுதலைப்புகளை உட்கொண்டுள்ளது.

தமிழ்க் 'கா. சு' அவர்கள் தெள்ளிய—ஒள்ளிய சின்னஞ் சிறு சொற்களை வன்னத் தமிழில் உட்தலைப்புகளாக உட்கார்த்தி வைத்திருக்கும் அழகு உன்னி மகிழத்தக்கது.

**ஒன்பது உட்தலைப்புகள் :**

இதோ அந்த ஒன்பது உட் தலைப்புகள் :

1. அன்பு வாழ்க்கை 2. உலக வாழ்க்கையின் இயல்பு 3. தெய்விக வாழ்க்கையின் இயல்பு. 4. ஒற்றுமை வாழ்க்கை 5. வெற்றி வாழ்க்கை 6. வளம் மிக்க வாழ்க்கை. 7. சுக வாழ்க்கை 8. ஞான வாழ்க்கை 9. விளையாடல் வாழ்க்கை.

**வாழ்க்கை மேம்பாட்டுக்கான வழிகள்**

நூலின் தலைப்பிலும் உட்தலைப்புகளிலும் 'வாழ்க்கை', 'வாழ்க்கை', என்று வலியுறுத்தும் பாங்கு வெளிப்படுகின்றது அல்லவா?

ஆம். இந்த நூல்—வாழ்க்கையைப் பற்றியே முழுவதும் பேசுகிறது. தனிமனித—சமுதாய அதாவது உலக வாழ்க்கை மேன்மையடையத் தக்க வழிமுறைகளை எடுத்து மொழி கின்றது. இந்நூலின் வழியாக உலகமக்களின் மேன்மைக்கான தம் எண்ணங்களையும் தமக்கு மூத்த தமிழ்ப்புலவர்களின் மொழிகளையும் முன் வைக்கின்றார் ''தமிழ்க் கா. சு.''

மனித வாழ்க்கை உயர்ந்த நிலையடையவேண்டும் என்னும் தமிழ்க் 'கா. சு.'வின் நல்ல உள்ளத்தையும் மனித வாழ்க்கையின் மேம்பாட்டுக்கான நற்கருத்துகளையும் இந்நூலின் வாயிலாக நாம் காண்கிறோம்.

**நூலின் தொடக்கம் :**

**''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''**

''ஒருவன் உயர்நல வாழ்க்கையை எய்த வேண்டுமாயின், தன்னலம் போலப் பிறர் நலத்தைக் கருதுதல் வேண்டும். தன்னலத்தினும் மிகுதியாகப் பிறர் நலத்தினைக் கருதுதல் பெரிதும் போற்றப்படும் உயர்தன்மையாகும். நன்மைக்கு நன்மையும், தீமைக்குத் தீமையுஞ் செய்தல் சாதாரண மக்களி யல்பு. நன்மைக்குத் தீமைசெய்தல் பேய்த் தன்மை. தீமை செய்வார்க்கும் நன்மை செய்தல் கடவுள் தன்மை.''

—இப்படித் தொடங்குகின்றது இந்த நூலின் முதற்பகுதி. தொடக்கமே சுடரொளி வீசுகின்றதல்லவா?

**மிளிர்கின்ற மேற்கோள்கள் :**

தமிழ்க் 'கா. சு' அவர்கள் முன்னோர் சொல் பொருளைப் பொன்போல் போற்றி—மனித வாழ்க்கையின் உயர்வுக்கான திருமூலர், திருவள்ளுவர், மணிவாசகர், தாயுமானவர், திருஞானசம்பந்தர், சேக்கிழார், பட்டினத்தார் போன்ற பெரியோர்களின் பாடல் அடிகளையும் கருத்துகளையும், நாலடியார், மணிமேகலை போன்ற நூலின் கருத்துகளையும், வழி வழியாகச் சொல்லப்பட்டு வரும் முதுமொழி, பழமொழி போன்றவற்றையும் நூல்நெடுகக் கையாண்டு அன்புமயமான வாழ்க்கையை மனிதர்கள் வாழ்வதற்கான அடித்தளத்தை இட்டுள்ளார்.

**நூல் நுவலும் உயர்கருத்துகள் :**

*(தமிழ்க் ''கா. சு''வின் சொற்றொடர்களாலேயே.)*

☐ நம் வாழ்க்கையில் நம் அறிவு தெளிவாய் இருக்கும்போது பிறர்க்கு அன்பு செய்தலின் சிறப்பு நமக்கு இனிது விளங்கும். அப்போது அக்கொள்கையை உறுதியாகப் பற்றி அதை நமது நெஞ்சத்தில் எப்போதும் சிறப்பாக நிலை பெறும்படி செய்து கொண்டால் நாம் யாவரும் பாராட்டும் அன்பு வாழ்க்கைக் குரியராவோம். அவ்வாறு செய்யா விட்டால், சிறந்த கொள்கை நம்மனத்தில் நிலைபெறாமல், தன்னல ஆசைக் காற்றில் இங்கு மங்குந் திரிந்து அடிபட்டு நாம் இடர்ப்படுவோம். தன்னல உணர்ச்சி குறையக் குறைய, நமது உயிரை மற்றவர்களுக்காகக் கொடுத்து உதவக் கூடிய பெருந்தன்மை நமக்கு நாளடைவில் கைவரும். அதுவே வாழ்க்கைப் பெரும்பயன்.

(அன்பு வாழ்க்கை)

☐ நமக்கு வருந்துயரங்களுட்பல, நாம் நமது கடமையை ஒழுங்காகச் செய்யாமையாலே வருவனவாகும்.

☐ அன்பு நெறியிற் செல்லுவதற்கு மிகுந்த கல்வியாவது மிகுந்த திறமையாவது வேண்டுவதில்லை; திருவருள் நாட்ட மொன்றே போதுமானது, கடவுளையும் நேசிக்கவேண்டும்; மனிதனையும் நேசிக்க வேண்டும்.

☐ வாழ்க்கை என்பது நம் அனுபவங்களின் தொகுதி யாகும். ஒவ்வோர் அனுபவமும் ஒவ்வொரு நன்மையைக் கற்பித்து விட்டுப் போய்விடும். அந்நன்மையை நாம் உணர்ந்து பயன் கொள்ளுவோமானால், படிப்படியாக மேல் நிலைக்குத் தகுதியுடையவர்களாவோம்.

☐ நமது நினைவே நமது செயலுக்குக் காரணம். செயல் பயனுக்குக் காரணம். ஆதலால், நம்முடைய நினைவுகளை உயர்ந்த வழியிற் செலுத்த வேண்டும்.

(உலகவாழ்க்கையின் இயல்பு)

□ சிலர், குற்றம் புரிந்தவர், கூடா ஒழுக்கத்தார் முதலிய வரை நேசிக்க முடியாதென்பர். நேசித்தல் என்பது கழுத்தைக் கட்டி உறவு கொண்டாடுவது அன்று. கெட்டவர்களைத் திருத்த வேண்டுமென்னும் நல்லெண்ணம், இரக்கம், பொறுமை, குற்றங்களை மன்னிக்குந்தன்மை என்பவைகளே அன்பெனப் படுமென்பதை அவர்கள் அறியார்கள். குற்றஞ் செய்யும் தன் குழந்தையைத் திருத்துவதற்கு ஆசைப்படுந் தாய் போல, கெட்டவர்களைத் திருத்த விருப்பமுறுதலே அன்புச் செயலாகும்.

(தெய்விக வாழ்க்கையின் இயல்பு)

□ துன்பந் தோன்றுவதற்குக் காரணம் யாதெனில், உலகப் பொருள்களில் பற்றுடைமையே.

(ஒற்றுமை வாழ்க்கை)

□ நல்லெண்ணங்களையே எண்ணிக் கொண்டிருந்தால் அச்சமும் தன்னலமுமற்ற உண்மை அன்பு உள்ளத்தில் உதிக்கும்.

(விளையாடல் வாழ்க்கை)

**ஒளிவீசும் உவமைகள் :**

'உலக நன்மையே ஒருவன் வாழ்வு'—நூலின் ஒளிவீசும் உவமைகள் சில :—

''சுகமென்பது உள்ளீடாக நம்மிடத்திலிருப்பதே. அழகிய ஒரு பதுமை, செதுக்கப்படாத போது கல்லினுட் கிடத்தல் போல இயற்கைச் சட்டப்படி அமைந்த உடம்பில் அடங்கியுள்ள சுகநிலை, அதனை மூடியுள்ள புறக்குப்பைகளாலும் அழுக்கினாலும் புலனாகாமலிருக்கிறது. சுகத்தை மூடிக் கொண்டிருக்கும் அழுக்குகளை ஒழித்து விட்டால், சுகமென்பது செவ்விதில் விளங்கும்.''

(சுக வாழ்க்கை—பக். 34)

''பந்தடி மேடையில் வீசிய பந்து திரும்பித் துள்ளி வருதல் போல, மனிதன் எதை நினைக்கிறானோ, சொல்லுகிறானோ, செய்கிறானோ, அஃது அவனுக்கே திரும்பிவரும். எல்லோரும் நன்கு வாழவேண்டுமென்று நினைத்தால், அந்நினைவே ஒருவனுக்கு நல்ல வாழ்வைக் கொடுக்கும்.''

(விளையாடல் வாழ்க்கை—பக். 45)

**பழமொழி—காரணம் :**

''கடவுள் ஒருவர் இருக்கிறார். நாம் உண்மையாக உலகத்திற்கு உழைத்தால், அவர் தக்க பலன் அளிப்பார். மக்களெல்லாம் ஒரே குடும்பம்,'' என்று எண்ணுகின்ற விரிந்த நோக்கமேற்படுமாயின், கடவுள் நம்மைத் திண்ணமாகக் கைவிட மாட்டார் என்ற கருத்துப் பற்றியே, ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்,'' என்னும் பழமொழி ஏற்பட்டது போலும்!

(ஞான வாழ்க்கை—பக் : 39)

—எனப் பழமொழி விளக்கத்தைப் பகரும் பாங்கு எண்ணத் தக்கது.

**உடல்—உணவுச் சிந்தனைகள் :**

உலக நன்மையைக் கருதும் தமிழ்க் ''கா. சு.''வின் இந்த நூல் உடல்—உணவுச் சிந்தனைகளை அழகுபட அடுக்குகின்றது:

இதோ :—

''உடம்பிற்குத் தக்கபடி உணவுகளும் வேறுபடும். இருக்கையிலே நெடு நேரமிருந்து வேலை செய்யக் கூடியவர்கள், வயலில் உழைக்கும் வேலையாட்களின் உணவை எளிதாகச் செரிக்கச் செய்ய முடியாது. உடலின் அமைப்புக்கு ஏற்றவாறு உணவின் அமைப்பும் இருத்தல் வேண்டும். ஆனால், சிலர் உணவைப் பற்றி அளவுக்கு மிஞ்சிய கவலை எடுத்து, நோய் வாய்ப்படுகின்றனர். எந்த இடத்திற்குப் போனாலும் ஒரே வகையான உணவை விரும்புகின்றவர்களுக்கு யாத்திரைகளில் உணவு மாற்றம், தண்ணீர் மாற்றம் முதலியவற்றால் பெரிய இடைஞ்சல் ஏற்படும்.

இயற்கையாயுள்ள வித்துகள், கனிகள், பால் முதலியவை உயிர்ச்சத்து மிகுதியாக உடையவை என்பர். எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய உயிர்ச்சத்து உணவுகளை உண்ணப் பழகிக் கொண்டால், யாத்திரை ஒரு பெரிய இடைஞ்சலாகத் தோன்றாது.

இயற்கை உணவுக்கு மாறான செயற்கை உணவு மிகுதிப்படுவதற்குக் காரணம், மக்களுடைய பேராசையும், போக விருப்பமும், செல்வர்களின் சோம்பலும், சுக விருப்பமும் என்னலாம்.''

**உடல்—உயிர் நூற் செய்திகள் :**

தமிழ்க் ''கா. சு'' அவர்களின் இந்நூல் வழங்கும் உடல்—உயிர் நூற் செய்திகள் பற்றி அறிந்து கொள்ளலாம் அல்லவா?

''மனம் எப்போதும் நன்மையையே நினைத்தல்வேண்டும். தீய நினைவுகளினாலேதான் பல்வகை நோய்களும் ஏற்படுகின்றன. சதா கண்டனஞ் செய்து கொண்டிருப்பதால் வாத நோய் வருகிறதென்றும், பிறர் குற்றம் பொறாதவர்களுக்கு அதாவது கண்ணோட்ட மில்லாதவர்களுக்குக் கண்நோய் உண்டாகிறதென்றும் பெரிய உடல் உயிர் நூல் அறிஞர் கூறுகின்றனர்.''

(விளையாடல் வாழ்க்கை—பக் : 48)

**தத்துவநூற் கருத்துகள் :**

''தீமைக்குக் காரணம் அறியாமை என்று தத்துவ நூலார் எல்லாரும் உரைக்கின்றனர். முற்றறிவுடைய கடவுளிடத்தில் அறியாமைக்கு இடம் ஏது?''

—என்னும் பகுதியும்

''மனிதனுடைய எண்ணங்களே அவனுக்கு உண்டாகும் சுகத்திற்கும் நோய்க்கும் அடிப்படையான காரணமென்று தத்துவ நூலார் கூறுகின்றனர்''

—என்னும் பகுதியும்

தமிழ்க் ''கா. சு.''வின் தத்துவநூற் தேர்ச்சியைக் காட்டுவனவதாகும்.

**உளவியற் கருத்துகள்**

''நோயாளியின் அடையாளங்களைப் பற்றிச் சதா நினைப்பது நோய் அச்சத்தை உண்டாக்கும். அதனாலும் சுகக்கேடு மிகுதியாக ஏற்படும். நன்றாய் இருப்பவனொருவனைப் பார்த்து, ''நீ வாடியிருக்கிறாய்; உன் உடம்பில் ஏதோ நோய் இருக்கிறது,'' என்று சொன்னால், அவன் நோயச்சமுற்று நோயுள்ளவன் ஆய்விடுதல் கூடும். இலேசாகக் குணப்பட்டு வரும் நோயுடைய ஒருவனைப் பார்த்து ''உன் நோய் அநேகமாகக் குணப்பட்டுப் போய்விட்டது. நீ விரைவில் சுகமடைவாய். நீ சுகப்பட்டு விட்டாய்'' என்று அடிக்கடிக் கூறினால், அவன் ஊக்கமும் நம்பிக்கையும் உடையவனாய், விரைவில் சுகவானாவான். ஆதலால் நோயச்ச மென்பதைக் கூடிய மட்டும் அகற்றுதல் வேண்டும்''

(சுகவாழ்க்கை—பக் : 35.)

என்னும் பகுதி உளவியற் கருத்துகளை இயம்பிநிற்கின்றது.

**பரிசுச் சீட்டுக்கு மாற்றான பழஞ்சொல் :**

தமிழ்ப் பேரறிஞர் ''கா. சுப்பிரமணியனார்'' அவர்கள் இந்த நூலில் பரிசுச் சீட்டு என்பதை ''ஊதியச்சீட்டு'' என்னும் அழகியசொல்லால் குறிப்பிடும் தன்மை கூர்ந்து நோக்கத்தக்கது.

**பல்துறை அறிவும் பளிச்சிடும் நூல் :**

''தெளிவான நடையில் அமைந்த இத்தீந்தமிழ் நூல் மனித வாழ்க்கையின் மலர்ச்சிக்கான கருத்துகளை உட்கொண்டது. பெரிதும் தனித்தமிழ் நடையில் இயல்வது. தமிழ்ப் புலவர்களின்—பாடல்களின், புராண எடுத்துக் காட்டுகளின், உடல்—உளவியல், தத்துவ நூல் கருத்துகளின் துணைகொண்டு அன்புமயமான வாழ்க்கை பற்றி அருமையான முறையில் எடுத்து மொழியும் இந்த நூல் படிப்பவர் நெஞ்சில் பாரின் மேன்மைக்கான விதைகளைப் பதிக்கின்றது,'' என்பதைத் தமிழ்க் ''கா. சு''வின் நூற்றாண்டு விழாப் பொழுதில் நினைவு கூர்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

# கட்டுரை மலர்



# தமிழின் சிறப்பு!

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

தமிழ் நாடு மிகத் தொன்மையான நாடு. தமிழ் மக்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடிமக்கள். தமிழ் மொழி உலகிற் பிறந்த மக்கள் பேசத் தொடங்கிய முதல் மொழி. இம்மொழி தோன்றிய காலத்தைப் பழம் புவிவாணர்களாலுங்கூட அறிந்து கூற முடியாது எனக் கூறியவர் பாரதியார்.

''தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு—
சூழ்கலைவாணர்களும்
இவள் என்று பிறந்தவள்? என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!''

என்பது அவரது வாக்கு. அத்தகைய தொன்மையான மொழி தமிழ் மொழி.

தமிழ் மொழிக்குப் பல சிறப்புகள் உள்ளன. அவை : தொன்மைச் சிறப்பு, பெயர்ச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, எளிமைச்சிறப்பு, தனிமைச் சிறப்பு, சுழிச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, கவிதைச் சிறப்பு, கலைச் சிறப்பு, இசைச் சிறப்பு, நாடகச் சிறப்பு, மருத்துவச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு, ஒலிச் சிறப்பு எனப் பதினாறு.

இவற்றை உலகில் தோன்றியுள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட எந்த மொழியிலும் காண இயலாது.

இவற்றுள் இன்று விளக்கப்படுவது ஒலிச் சிறப்பு ஒன்றே.

1. தமிழ் மொழியின் ஒலியே ஒரு தனி ஒலி. அது மிக இனிய ஒலி.

2. அதன் உயிர் எழுத்துகள் அனைத்தும் உதடுகளாலேயே ஒலிக்கக் கூடியவை. பல்லுக்கும், நாக்குக்கும், தொண்டைக்கும் வேலையே இராது.

3. இரண்டு உதடுகளையும் திறக்கும் பொழுதே 'அ' ஒலி உண்டாகிறது. இரண்டு உதடுகளையும் சுருக்கும் பொழுதே

'உ' ஒலி உண்டாகிறது. அவற்றை அப்படியே உயர்த்தும் பொழுதே 'ஓ' ஒலி உண்டாகிறது. கீழ் உதட்டைக் கீழே இறக்கும் பொழுது 'எ' ஒலி உண்டாகிறது. இரண்டு உதடுகளையும் இளிக்கும் பொழுது 'இ' ஒலி உண்டாகிறது. இவற்றைத் தவிர வேறு வகையாக உதடுகளை அசைக்க முடியாது. ஆகவே, இது தலை சிறந்த உயிர் ஒலி எனப்பெறும். இவற்றையே ஆங்கிலேயர் A, E, I, O, U, என்றனர். இது தமிழ் மொழிக்கே இயல்புடைய உயிரெழுத்து ஒலிச் சிறப்பாகும். 'ஆ', 'ஈ', 'ஊ', 'ஏ', 'ஓ' என்பன இவற்றின் நீண்ட ஒலிகளே. இவை முறையே குறில் நெடில் எனப்பெறும். இப்பத்து எழுத்துகளுக்குள்ளாகவே தமிழின் உயிர் ஒலிகள் அனைத்தும் அடங்கி விட்டன. 'அய்', 'அவ்', 'அக்' என்ற மூன்றும் கூட்டு எழுத்துகளும், கூட்டு ஒலியுமாகும்.

4. இந்த உயிரோடு சேர்ந்து ஒலிக்கக் கூடிய தமிழ் ஒலிக்குரிய உடம்பு எழுத்துகள் 18 மட்டுமே. இதனாலேயே. இவ்வெழுத்துகளை ''மெய்'' எனக் கூறுவர். இவற்றுள்ளும் வலிந்து ஒலிக்கக் கூடியவை 6—''க், ச், ட், த், ப், ற்,'' மெலிந்து ஒலிக்கக் கூடியவை 6—''ங், ஞ், ந், ம், ண், ன்,'' இரண்டிற்கும் இடையே ஒலிக்கக் கூடியவை 6—''ய், ர், ல், வ், ழ், ள்.'' இவற்றை வலிந்தும், மெலிந்தும், இடையிலும் ஒலிக்க வேண்டும் என 3 வகையாகப் பிரித்து, அவற்றை மூன்று இனமாக்கி, அவற்றிற்கு வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பெயரிட்டிருப்பது ஒரு வியப்பு. அதைவிட வியப்பு அதிலுள்ள எந்த இனமும் ஏற்றத்தாழ்வினை அடையாமல் ஒவ்வொரு இனமும் ஆறு எழுத்துகளையும், ஒலியையும் பெற்றிருப்பது.

5. உயிர் ஒலிகள் அனைத்தும் உதடுகளால் மட்டும் ஒலிக்கக் கூடியவை என்பது கண்டோம். இந்த ''மெய்'' ஒலிகள் அனைத்தும் உதடு, பல், நாக்கு, மூக்கு, தொண்டையால் மட்டுமே ஒலிக்கக் கூடியவை. இவற்றுள் எந்த ஒலியை ஒலிக்கவும் தொண்டைக்குக் கீழ் வேலையே இல்லை. சில மொழி ஒலிகளை அடிவயிற்றிலிருந்து ஓசைகளைக் கிளப்பி ஹ, ஹா, க்ஷ, க்ஷா என ஒலித்தாக வேண்டும். இத் தொல்லை தமிழ் ஒலிக்கு இல்லை.

6. ஒவ்வொரு மெய்யின் மீதும் ஒவ்வொரு உயிர் ஏற, உயிர் மெய் எழுத்தும், ஒலியும் தோன்றும். அவை; ''க்+உ=கு'', ''ப்+இ=பி'', ''ச்+எ=செ''என்பன. இவ்வாறு 18 மெய்களிலும் 12 உயிர்கள் ஏறி 216 எழுத்துகளாக, ஒலிகளாக அமைந்திருக்கின்றன. இது தமிழ் மொழிக்குள்ள சிறப்பு. இவ்வெழுத்துகளை உயிர்மெய் எழுத்துகள் என்பர். ஆங்கிலத்தில் இத்தகைய உயிர்மெய் எழுத்துகள் தனியாக இல்லாமையால் அவ்விரண்டையுமே அவர்கள் தனித்தனியே சேர்த்து ஒலித்து வருகிறார்கள் 'மி' என எழுத ''எம்.இ.'' என இரண்டு எழுத்தையும், 'கு' என எழுத ''கே.யூ'' என இரண்டு எழுத்தையும் பயன்படுத்தி வருவதைக் காணலாம்.

7. 'ழ' என்ற எழுத்தும், ஒலியும் உலகின் எந்த மொழியிலும் இல்லை. 'ழ' ஒலி தமிழின் தனிச்சிறப்பான ஒலி. இதனாலேயே தமிழ் அறிஞர்கள் இதனைச் சிறப்பு 'ழ' கரம் எனக்கூறுவதுண்டு. மொழியின் பெயராகிய ''தமிழ்'' என்ற சொல்லிலும், ''பேசு'' என்கிற ''மொழி'' என்ற சொல்லிலும் இந்த 'ழ' ஒலி ஒலித்துக் கொண்டிருப்பது வியப்பிற்குரியதாகும்.

8. வல்லோசையுடைய எழுத்துகள் ஆறில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் மூன்று. அவை, க, த, ப என்பன. இம் மூன்றுமே மொழிக்கு முன்னே வரும்பொழுது வல்லொலியும் இடையில் வரும்பொழுது மெல்லொலியும் அமைந்து வரும். இவ்வுண்மையை ''காகம்'', ''தாதன்'', ''பாபம்'' என்ற சொற்களைக் கொண்டு அறியலாம். இது தமிழ் ஒலிக்கு இயல்பாகவே அமைந்துள்ள ஒரு தனிச் சிறப்பாகும்.

9. இவை தவிர 'ங்', 'ஞ்' என்ற இரு எழுத்துகள் தமிழில் இருந்து 'க'வுக்கும், 'ச'வுக்கும் ஒரு புதிய ஒலியை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. கங்கணம், பங்கயம், சங்கு, வங்கி என்பதிலுள்ள 'க'வின் ஒலியைக் காணுங்கள். அங்வாறே 'பஞ்சு', 'செஞ்சி', 'கஞ்சி', 'வஞ்சி' என்பதில் உள்ள 'ச'வின் ஒலியைக் கண்டு மகிழுங்கள். இவை ஆங்கில எழுத்து **G**–ன், **J**–ன் ஒலிகள்.

10. தமிழ் எழுத்துகளை மட்டும் புரிந்து கொண்டால் எவ்வளவு பெரிய நூல்களையும் படித்து விடலாம். காரணம் அதிலுள்ள எந்த எழுத்துக்கும் இரண்டுமாறுபட்ட ஒலிகளில்லை. அவ்வாறு ஆங்கில எழுத்துகளை மட்டும் புரிந்து கொண்டு ஆங்கில நூல் எதையும் படித்து விட முடியாது. அதிலுள்ள '**C**' எழுத்துக்கு 'ஸ்' ஒலியும், 'க்' ஒலியும் வரும். இவ்வுண்மையை ''பேலஸ்'', ''அக்கவுண்ட்'' என்பவற்றில் நன்கறியலாம். அவ்வாறே '**G**' எழுத்துக்கு 'ஜெ' ஒலியும், 'கெ' ஒலியும் வரும். இதை ''கெம்'' என்பதாலும், ''ஜெம்''என்பதாலும் அறியலாம் சில ஆங்கிலச் சொற்களுக்கு எழுத்து இருக்கும்; ஒலி இருக்காது. ''டால்க்'' என எழுதி 'டாக்' எனவும், ''வால்க்'' என எழுதி ''வாக்'' எனவும் ஒலித்தாக வேண்டும். '**T**' எழுத்துக்குச் சில விடத்தில் 'ட்' ஒலியும், சில இடத்தில் 'ஷ' ஒலியும் வரும். இதனை ''மோடிவ்'', ''மோஷன்'', ''ஸ்டேட்'', ''ஸ்டேஷன்'' என்பவற்றால் நன்கறியலாம். தமிழ் ஒலியில் இத்தொல்லையே இல்லை.

11. தமிழில் ஒலி இலக்கணம் ஒன்று உண்டு. அது எந்த எழுத்தை எவ்வளவு காலம் ஒலிக்க வேண்டும் என்பது. ''அ, இ, உ, எ, ஒ'' என்ற குறில் எழுத்துகளை ஒலிக்கும் அளவு ஒரு மாத்திரை. ''ஆ, ஈ, ஊ, ஏ, ஓ'' என்ற நெடில் எழுத்துகளை ஒலிக்க வேண்டிய கால அளவு இரண்டு மாத்திரை. ''க், ப், ம், ச், ட்'' போன்ற மெய்யெழுத்துகளை ஒலிக்கும் கால அளவு அரை

மாத்திரை: மாத்திரை என்பது நொடிப் பொழுது; அது நடு விரலையும் பெருவிரலையும் சேர்த்து நொடிக்கும் காலம்.

இந்த நொடிப் பொழுதையும் தொல்காப்பியர் கால், அரை, முக்கால், ஒன்று என வகுத்துக் கணக்கிட்டுக் காட்டியிருப்பது வியப்பைத் தருவதாகும். நொடிக்க வேண்டும் என எண்ணுவது கால் மாத்திரை, இரு விரல்களையும் தூக்குவது அரை மாத்திரை சேர்த்து முறுக்குவது முக்கால் மாத்திரை, நொடிப்பது முழு மாத்திரை என்றாகும். இதற்குரிய இலக்கண நூற்பா ''எண்ணல் கால், எடுத்தல் அரை, முறுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்று'' என்பதே. தமிழ் மொழிக்கு இது போன்ற ஒலி இலக்கணம் அமைந்து மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாயின.

இது காறுங் கூறியவற்றால் தமிழ் எழுத்தின் ஒலியையும், தமிழ் ஒலியின் தனிச் சிறப்பையும் ஒருவாறு நன்கறியலாம்.

அறிவு

'சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.'

மனத்தை அது செல்லக் கருதிய இடத்திற்கு எல்லாஞ் செல்லவிடாது அதனைத் தீமையினின்று நீக்கி நன்மையின்பால் செலுத்துவதே அறிவாகும்.

—'கா.சு.'

சீர்திருத்தம்

இந்நாட்டிலுள்ள சமய நிலையங்களின் இயல்பையும் வரலாற்றினையும் அறிந்து அந்நிலையங்களைத் தற்கால முறைக்கு இயையச் சீர்திருத்தஞ் செய்ய முயலவேண்டும்.

—'கா.சு'

காத்திடுக!

''யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

காக்க வேண்டிய பிற எல்லாவற்றையுங் காவார் ஆயினும், மக்கள் தமது நாவினைக் காக்கக் கடவர்; அதனைக் காவார் ஆயின் சொற்குற்றத்தின் கண்பட்டுத் துன்புறுவர்.

—'கா.சு.'



# மூக்கரி பழக்கம்

## – ஒரு சமூகப் பார்வை

முனைவர். க.ப.அறவாணன்

**உறுப்புகளை வெட்டுதல் :**

உறுப்புகளை வெட்டிவிடுதல் அல்லது வெட்டிக் கொள்ளுதல் பழக்கமாகப் பழைய இன மக்கள் பலரிடம் இருந்து வந்துள்ளது. தலையையே வெட்டிப் பலி இடுவது, நாக்கை வெட்டுவது, காதுகளைவெட்டுவது, மூக்கை வெட்டுவது, முலை, கால், கை இவற்றை வெட்டுவது, ஆகியன முற்கால இடைக்காலப் பழக்கங்களாக இருந்து வந்துள்ளன. முலையைப் பறிக்கும் பழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பதைச் செல்வாக்குள்ள சிலப்பதிகாரம் எடுத்து மொழிகிறது. பழங் கிரேக்கத்திலும் இப்பழக்கம் இருந்தது என்பதைக் கிரேக்கவரலாறு காட்டுகிறது. தாய்த் தெய்வமாக அமைந்த அப்ரோதித் (**Aphrotith**) என்ற கிரேக்க பெண் தெய்வத்திற்குக் காலோசு (**Gallus**) என்பவரின் மகள் நகில்கிளை வெட்டிப் படைத்தாக வரலாறு காட்டுகிறது. இத்தகு பழக்கம் இரண்டு அடிப்படையில் அன்று நிலவி வந்திருக்கிறது.

1. தாமே வெட்டிக் கொள்ளுதல்

2. தண்டனையாகப் பிறர் வெட்டிவிடுதல்

தமிழ்நாட்டில் மூக்கை அறுக்கும் முறை இருந்துள்ளது. அப் பழக்கம் தமிழர்களுக்கு உரிய பழக்கம்தானா என்று சமூக மானுடவியல், வரலாற்றியல் அடிப்படையில் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

ஒரு பழக்கத்தைக் குறிப்பிட்ட மக்கள் கைக் கொண்டிருந்தனரா என்று ஆராயப் பின் வரும் வழிமுறைகளைக் கைக் கொள்ளுதல் வேண்டும்.

1. குறிப்பிட்ட மக்களின் எழுத்துச் சான்றுகள், அவற்றின் காலம்

2. பின்பற்றுவோர் கற்ற மக்களா என்று ஆராய்தல் வேண்டும். கற்றோர், அயல் மொழி, பண்பாட்டு,

நாகரீகங்களுக்கு எளிதில் ஆட்படுவோராக இருப்பர். எனவே எளிதாக அயல் பழக்கத்தை மேற்கொண்டு விடுவர்.

3. நாட்டுப்புற மக்கள் அன்றாடம் பின்பற்றும் பழக்கமா என ஆராய்தல்.

4. வணிகர், போர் மறவர்கள் பின்பற்றும் பழக்கங்களா என்று காணுதல் வேண்டும். வணிகர், தம் தொழில் நிமித்தமாக அடிக்கடி அயல்நாடு சென்று வரும் பழக்கத்தினர். எனவே, புதிய பழக்கங்களை எளிதாக இறக்குமதி செய்துவிடுவர்.

5. மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் இலக்கியங் காட்டும் சான்றுகளைச் சரிபார்க்காமல், பெயர்ப்பு அல்லது தழுவல் இலக்கியங்கள் அப்போது வழங்கும் மக்களின் பழக்கமாக எடுத்துக் கொள்ளுதலில் மிக எச்சரிக்கையாக இருத்தல்.

6. குறிப்பிட்ட பழக்கம், எந்தெந்த இனமக்களிடம் நடைமுறையில் உள்ளது என்பதை ஆராய்தல் – அதனைச் சார்ந்து மக்கள் இனங்களிடையே உள்ள தொடர்பைக் கால வாரியாக ஆராய்தல் – அதன்பின் பழக்கப் பெயர்ச்சி, (**Migration of a habit**) பற்றி ஆராய்தல்.

## மூக்கு அறுப்புப் போர் :

## தோற்றவர் மூக்கு அறுபடுதல்

கி. பி. **1659** இல் மைசூரை ஆண்ட கந்தீரவனுக்கும் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனுக்கும் போர் மூண்டது. மதுரையை வெற்றி கொண்ட மைசூர் மறவர்கள் கைப்பற்றிய வீரர்களுடைய மூக்குகளை எல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டி வெற்றிச் சின்னமாகச் சீரங்கப் பட்டினம் கொண்டு சென்றார்கள், திருமலை நாயக்க மன்னரின் இளைய தம்பி குமார மூர்த்தி மைசூரின் மேல் படையெடுத்தான். மைசூரை வெற்றி கொண்டதும் மைசூர் மன்னன் கந்தீரவரைச் சிறைப்படுத்தி அவன் மூக்கை வெட்டி வெற்றிச் சின்னமாக மதுரைக்கு விடுத்தான். குமீராசு (**Grose**) என்ற ஐரோப்பியப் பயணி மைசூரில் மூக்கு வெட்டும் பழக்கம் இருந்தது என்பதைத் தம் பயண ஏடுகளில் குறிப்பிடுகிறார். கத்தோலிக்க துறவி அருள்திரு. அந்தோனி பிரீன்சு, **1656** செப் **20** – இல் ரோமிலுள்ள போப்பாண்டவருக்கு எழுதிய மடலில் இதனைக் குறிப்பிடுகிறார். மூக்கை எளிதே வெட்டுவதற்கு வாய்ப்பாக பிறைநிலா போன்ற இரும்புக் கத்தி ஒன்றை எப்போதும் வீரர்கள் ஏந்திச் செல்வார்களாம். இசுலாமியர்களுக்கு எதிராகக் குதிரை வீரர்கள் மைசூரைக் கடந்து செல்லும் போதும், மைசூர் இசுலாமிய

வீரர்கள் முகலாய எதிரிகளான குதிரை வீரர்களின் மூக்கைக் வெட்டி விடுவராம். இதனை இத்தாலியப் பயணியும் மருத்துவருமான மனுச்சி (Manucci) கி. பி. 1653—1708, தம் குறிப்பில் குறிப்பிடுகிறார். கன்னட மொழியில் உள்ள அப்ராதி மாவர சரித்திரமும், சிக்கதேவராயன வம்சாவளியும் இப்பழக்கத்தைக் குறிப்பிடுகின்றன. பீசப்பூர் தளபதி இரணதுல்லாக்கான் சீரங்கப்பட்டணத்தை விட்டு வெளியேற்றப்படும் போது அவனைச் சேர்ந்த போர் வீரர்களின் மூக்குகள் நீக்கப்பட்டன. பலருக்கு மூக்கோடு சேர்ந்து மேலுதடும், வேகமாக வெட்டும் போது விடைபெற்றது. மைசூர் மன்னர்களிடம் மூக்கு வெட்டும் போக்கு கி. பி. 1767 இல் நிலவி வந்திருக்கிறது என்பதை வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. வீரர்கள் கொண்டு வரும் மூக்குகளின் எண்ணிக்கைக்குத் தக மைசூர் மன்னன் கைதர் அலி பரிசுகள் அளிப்பானாம். மூக்கை இழக்கும் போர் முறைக்கு ஆங்கிலேய வீரர்களும் பலியானார்கள். சீரங்கப் பட்டினத்தில் 1783 இல் நடந்த ஆங்கிலேயருக்கு எதிரான கலவரத்தில் ஆங்கில வீரர்களின் மூக்குகள் வெட்டப்பட்டன.

போர் வீரர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் கூட மூக்கு அறுத்தலுக்குப் பலியானார்கள். 1756 இல் தேவராசன், நஞ்சராசன் என்ற இரண்டு மைசூர் அரச உடன் பிறந்தாரிடையே பகைமை மூண்டது. பழி வாங்கும் உணர்வு கொண்ட நஞ்சராசனும் அவன் படைவீரர்களும் தம் கண் முன் வந்த பொது மக்களின் மூக்குகளையெல்லாம் வெட்டிவிட்டனர்.

மூக்கு வெட்டும் பழக்கம் ஒரு போர் முறையாகவும், மைசூர் வட்டாரப் பழக்கமாகவும் இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் இருந்து வந்தது என்பதை மேற்கண்ட நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

### கற்பிழந்த பெண்கள் மூக்கறுபடுதல் :

மூக்கை இழக்கும் கொடுமைக்குப் பெண்கள் தொடர்ந்து பலியாகி வந்திருக்கிறார்கள். கற்புத் தவறும் பெண்களுக்கு அளிக்கப் பெறும் தண்டனையாக இப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. சூத்திரனோ, சுவாபாக சாதியைச் சேர்ந்த ஆடவனோ மேற்குலத்துப் பெண்ணோடு தகாத உறவு கொண்டால், சூத்திரர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும், கற்பிழந்த மேற்குலத்துப் பெண்ணின் காதுகளையும் மூக்கையும் வெட்டிவிட வேண்டும் என்றும் அர்த்த சாஸ்திரம் வரையறுக்கிறது.

பௌத்த மதத்தாரிடமும் இப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது. சுள்ள பதும சாதகக் கதை ஒன்றும் பிழை இழைத்த பெண்ணின் மூக்கையும், காதுகளையும் வெட்டிவிட்ட குறிப்பைக்

குறிப்பிடுகிறது. கி. பி. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த் கோசர் தாம் எழுதிய தம்மபத அர்த்த கதாவில் ஒரு நிகழ்ச்சியை யும் குறிப்பிடுகிறார். வீட்டில் வேலை செய்து வந்த வேலைக் காரப் பெண்ணுடன் கணவன் தவறாக உறவு கொண்டுவிடு கிறான். இதை அறிந்த மனைவி துணுக்குறுகிறாள். வேலைக்காரி யின் மூக்கையும் காதையும் அவளே வெட்டித் தண்டனை வழங்குகிறாள். கி. பி. 11ம் நூற்றாண்டில் சோமதேவன் (1028—1063) என்ற எழுத்தாளர் எழுதும் பொழுது ''தேவ தாசன் என்ற கணவன் தன் மனைவி கற்புத் தவறினாள் என் பதை அறிந்து மனைவியின் மூக்கை வெட்டி, பின்னர் மன்னனுக் குத் தெரிவித்துவிட்டான்'' என்று குறிப்பிடுகிறார். நரவாகன வட்டக் கதைகளில் கற்பிழந்த பெண்ணின் முக்கு வெட்டப்பட்டு, வீட்டைவிட்டு வெளியேற்றப்படவேண்டும் என்ற குறிப்பு காணப் படுகிறது. சில இடங்களில் மூக்கு வெட்டப்படுவதோடு அல்லா மல் பல்லால் நன்குக் கடித்து எறியப்பட வேண்டும் என்ற குறிப் யும் உள்ளது.

காசுமீர் பகுதியில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு அளவில் கற்புத் தவறிய பெண்களின் மூக்கு வெட்டப்படும் 'பழக்கம் இருந்தது. அப்பழக்கம் நாச வம்சம் என்று அழைக்கப் பட்டது. (*)

## இசுலாமியர் வரவால் பெருகிய பழக்கம் :

இந்தியாவைப் பொறுத்தவரை இசுலாமியர்கள் ஆட்சிக் காலத்தில் இப்பழக்கம் மிகுதியாக மேலோங்கி இருந்தது என்பதைச் சான்றுகள் தெரிவிக்கின்றன. பாபர் கி. பி. 1519 இல் தன் வரலாற்றில் பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

''இந்தியாவின் மேல் படையெடுத்தபோது சில முசுலீம் வீரர்கள் உள்ளூர் மக்களிடம் தகாத முறையில் நடந்தனர் என்று கேள்வியுற்றனர். அத்தகு வீரர்களை அழைத்து வரச் செய்தார். சிலருக்கு மரணதண்டனை வழங்கினார். சிலருடைய மூக்குகளை வெட்டினார். கடமை தவறும் வீரர்களின் மூக்குகளை வெட்டி விடுவதும் பாபரின் பழக்கமாக இருந்தது.

காசுமீர் இஸ்லாமிய மன்னரின் ஆட்சிக்காலத்தில் இருந்த போது இப்பழக்கம் அம்மன்னர்களிடம் இருந்தது, சான்றாக கில்ஜி, துருக்கிய முகலாயர்கள் தென்னிந்திய முகலாய மன்னர்கள் ஆகியோரிடம் இப்பழக்கம் பரவலாக இருந்தது என்பதைப் பல சான்றுகள் காட்டுகின்றன.

சீக்கியர்களிடமும் இப்பழக்கம் இருந்தது என்பதை ரஞ்சித் சிங் ஆட்சிக் காலம் தெளிவுபடுத்துகிறது.

சென்னைப் பட்டணத்திற்குத் தெற்கே கந்திராம் என்பவன் ஆண்டுவந்ததாகவும் அவன் ஆட்சி எல்லையில் மூக்குகளை

புலியாகப் பெறும் பழைய கோயில் ஒன்று இருந்ததாகவும் ஒரு முசுலீம் எழுத்தாளர் குறிப்பிடுகிறார். இக்கோயில் இன்று எவ்வாறுள்ளது என்பது தெரியவில்லை. கைதர் அலி மூக்கில்லாத வீரர்களைக் கொண்ட தனிப்படை மறவர் அணியையே கொண்டிருந்தான். மிகச் சிறந்த இந்திய இயல் அறிஞரான ஜி. ஏ. கிரியேர்சன் கி. பி. 1921லும் மூக்கு அரியும் பழக்கம் இந்தியரிடம் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மூக்கு வெட்டப் பட்ட நிலையில் இரத்தம் சொட்டச் சொட்ட கற்பிழந்த ஒரு பெண் மருத்துவரிடம் ஓடி வந்ததாகவும் ஐரோப்பிய மருத்துவர் துண்டு பட்ட மூக்கைப் பக்கத்தில் வைத்துவிட்டு மூக்கு வெட்டப் பட்ட இடத்தில் தைப்பதற்காக முன்னேற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். அதனைப் பார்த்துக்கொண்டிருந்த காகம் ஒன்று துண்டு மூக்கைக் கௌவிக்கொண்டு ஓடிவிட்டதாம். அந்தப் பெண் வாழ்நாள் முழுவதும் மூக்கின்றியே வாழ நேரிட்டதாம்.

## இந்தியாவிற்கு வெளியே :

இந்தியாவிற்கு வெளியே இந்தப் பழக்கம் துருக்கியரிடம் இருந்தது என்பதை வரலாறு தெரிவிக்கிறது. கிப்பன் (**Gibban**) அந்தக்காலத்தில் தாம்பூலம் நிறைய மூக்குகளுடன் வரவேற்பது மன்னர் பலராலும் விரும்பப்பட்டது எனக் கிப்பன் (**Gibban**) குறிப்பிடுகிறார். கி.பி. **21**இல் உரோமாபுரியில் வாழ்ந்த ஸ்ராபோ (**Strabo**) எகிப்திலும் மூக்கு அரியும் பழக்கம் இருந்ததைக் குறிப்பிடுகிறார். அபிசீனியர்கள் எகிப்து மீது படை எடுத்தபோது எகிப்து வீரர்கள் அபிசீனிய வீரர்களின் மூக்குகளை வெட்டிவிட்டனராம். இதனால், எகிப்திலும் இப்பழக்கம் இருந்தது என்று தெரிய வருகிறது.

## இராமாயணத்தில் மூக்கை அரிதல்;

இந்தியாவில் மூக்கை வெட்டும் பழக்கம் மிகத் தொன்மைக் காலத்திலேயே இருந்தது என்பதற்குப் பெருஞ்சான்று இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது. இராமனின் தம்பி இலட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கையும், முலைகளையும் வெட்டிவிட்ட நிகழ்ச்சி வருணிக்கப்படுகிறது. இலங்கையில் வாழ்ந்த சூர்ப்பனகையின் தமையர்க்கு இந்நிகழ்ச்சி மிகக் கொடியதாகப்பட்டது. எனவேதான் அவன் இராமன் மேல் பெருஞ்சீற்றம் கொண்டான்.

## தமிழர் பழக்கமா?

தமிழ்நாட்டு வரலாற்றில் முசுலீம் மன்னன் ஆட்சிக்கு முன்பு மூக்கை வெட்டும் பழக்கம் காணபபடவில்லை. இலங்கை மன்னன் சூர்ப்பனகையின் உறுப்புக் குறையைக் கேள்வியுற்று இராவணன் சீற்றம் கொள்ளுவதிலிருந்து அவன் கேள்விப்படாத பழக்கமாக இஃது இருந்திருக்கிறது என்று தெரிய வருகிறது. தமிழர் தம் சமுதாயப் பழக்கங்களை ஆராயும்பொழுது இராமாயணம் போன்ற மொழி பெயர்ப்பு இலக்கியங்களைச் சான்று நூற்

களாகக் கொள்ளுவதில் மிக எச்சரிக்கை தேவை என்று தோன்றுகிறது. வட இந்தியாவில் தண்டனை கொடுக்கும் பழக்கமாக இருந்த மூக்கு அரி முறை முசுலீம் மன்னர்கள் காலத்தில் போர் முறையாக மாறி, பின்பு அவர்கள் தென்னிந்தியா வந்தபோது தென்னிந்தியாவிலும் இப்பழக்கம் பரவிற்று எனலாம்.

## மூக்கை வெட்டும் பழக்கத்திற்கு மூலகாரணம் :

1. உடலையும் உடல் உறுப்புகளையும் கடவுளே படைத்து அளித்தான் என்ற நம்பிக்கை மேலோங்கி இருந்த காலத்தில் மக்கள் கடவுளுக்கு அன்பளிப்பாகத் தம் உறுப்புகளையே நல்கினர். தலையையே கொடுக்கும் நவ கண்டம் பழக்கம் முன்பு எங்கும் இருந்தது.

2. மூக்கு அழகான முக உறுப்பாக அமைந்துள்ளது. அதனால் மூக்கைக் குமிழம் பூவிற்கு இணையாக உவமைகாட்டிப் போற்றினர். எனவே பிறரை ஈர்க்கும் மூக்கைப் பெண்களுக்கு வெட்டி விடுவது குறிப்பாகக் கற்பிழக்கும் பெண்களுக்கு உரிய தண்டனையாக இருந்து வந்தது.

---

* பழங்குடி மக்களிடம் கற்பு கெட்ட ஆணும், பெண்ணும் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். காணிக்காரர் என்ற கேரளப் பழங்குடியினர், தவறு செய்த ஆணைத் தலை கீழாக மரத்தில் கட்டித் தொங்க விடுவர். கீழே வைக்கோல் பரப்பி, நெருப்பு மூட்டி, மிளகாய்ப் பழங்களைத் தூவி விடுவர்.

பெண்ணாக இருந்தால் 15 முதல் 101 வரை புளிய மிலாரினால் சாட்டையடி உண்டு. இதே பழக்கம் மலைப்புலையர், பளியர், ஊராளி, கொரகா, செம்படவர் ஆகிய பழங்குடி மக்களிடமும் இருந்தது.

---


துணை நூல்கள் :

1. க. ப. அறவாணன்.
தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்,
ஐந்திணைப் பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை—600 005, 1987

2. *L.A. Krishna Iyer, L. K. Balaratnam*
**Anthropology in India,**
**Bharatiya Vidya Bhavan, Bombay 7. 1961**

3. *Dr. Saletore*
**Strange Indian Customs Hind Pocket Books.**
**G.T Road Shahdara, Delhi** 110032, 1979


---

குறிப்பு : புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை நடத்தும் அறிவரங்கத்தில் 7.10.87 அன்று படிக்கப்பட்ட கட்டுரை.



# சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் இயற்கையியம்

## டாக்டர். கா. செல்லப்பன்

‘வேதம் புதுமை செய்’ இது தேசியக்கவி பாரதியின் புதிய வேதம்; ‘புதியதோர் உலகம் செய்வோம்’, இது புரட்சிக் கவி பாரதிதாசனின் சங்க நாதம். இருபதாம் நூற்றாண்டின் உலகப் பெருங் கவிஞர்கள் அனைவரும்—ஏட்சு, எலியட் போன்றோர்—புதிய உலகத்தை, இன்றைய வாழ்வை, மரபோடு, தொன்மத்தோடு இணைத்தே படைத்திருக்கிறார்கள். பாவேந்தர் பாரதிதாசன் போன்ற மிகச்சிலரே பழமையை, தொன்மத்தை முழுக்க முழுக்க மறுத்துப் புதிய உலகத்தைப் படைக்க முயன்றுள்ளார்கள். பாரதி சக்திக் கவிஞன்; பாரதிதாசனும், ‘‘எங்கெங்கு காணினும் சக்தியடா’’ என்று பாடித்தான் தன் கவிதை வாழ்வைத் துவக்கியுள்ளார். பாரதியின் சக்தியியம் மனிதம் தழுவிய இறையியமாக மலர்கிறது; ஆனால் பாரதிதாசனில் அது மனிதம் சார்ந்த இயற்கையியமாக வளர்கிறது. இந்த இயற்கையியம் (**naturalism**) வெறும் இயற்கை வருணனையோ, வழிபாடோ அன்று; ஓர் அகன்ற வாழ்வுத் தத்துவம். இயற்கை வாழ்வுக்கும் மனித வாழ்வுக்கும் இடையே இழைந்திருக்கும் ஒருமையுறவினை உணர்த்தும் நெறி. இது வெறும் தத்துவம் (**Philosophy**) மட்டுமன்று; ஒரு வகையான நெறியுமாகும் (**method**). எனவே பாரதிதாசனின் பாடல்களின் கட்டுக்கோப்பிலும், நடையிலும் எதார்த்தப் பார்வையும் தொன்ம மறுப்பும் தெளிவாக இருக்கின்றன. இது ஒரு முழுமையான வாழ்வு ஏற்புத் தத்துவத்தின் வெளிப்பாடு.

பாரதிதாசனின் இயற்கையியத் தத்துவமும், உத்தியும் **சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்** முழுமையாகத் தெரிகின்றன. பாரதிதாசனின் முதல் முழக்கமான ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்ற பாடலே சக்திக் கூத்தை கவிதை நடனமாகக் காட்டும்போது, இயற்கையின் ஆற்றலையும் அழகையும் மனிதத்தோடு இணைத்தே பேசுகிறது. ‘‘தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத் தாயின் கைப்பந்தென ஓடுமடா’’ என்றும்

‘‘........................................—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையமுழுதும் துண்டு செய்வேன்—என

*நீள இடையின்றி நீ நினைத்தால் அம்மை*
*நேர்படுவாள் உன்றன் தோளினிலே!*

என்றும் கூறும்போது உலக ஆற்றலை மனித உள்ள ஆற்றலுடன் இணைத்துப் பாடுகிறார்.

**சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே**, ஒரு புராணீயம் சாதாரண மனிதனுக்குப் பின் புலமாகத் தள்ளப்படுகிறது. கதைத் தலைவனைப் புராணீயக் கதை பின்னோக்கியிழுத்துச் செல்ல, வஞ்சியின் 'காதல் உண்மை' முன்னோக்கி, வாழ்வு நோக்கி ஈர்க்கிறது இங்கே இயற்கையோடு இணைந்த காதல்தான் நிசம், கனிமுத்தம் நிசம் என்று காட்டப்படுவது மட்டுமன்றி, இந்த பர்வதத்தோடு இணைக்கப்பட்ட பழங்கதை பொய் என்றும் நிறுவப்படுகிறது. இயற்கைச் சூழல் காதலை, வாழ்வை, வளம்படுத்தப் பயன்படுத் தப்படுகிறது. சஞ்சீவி பர்வதம் மாயவித்தைகளின் களமாகயிருந்தது போல், காதல் வாழ்வுக்கு அடித் தளமாக காட்டப்படும் போது, அது போர்த்தியிருந்த புராணீயப் போர்வை தூக்கி எறியப்பட்டு, அதன் இயற்கையெழிலும் வாழ்வறமும் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. இதை மனித இயல் ஆய்வாளர்கள் 'தொன்ம மறுப்பு' (**demythologisation**) எனக் கூறுவர். இது வன்றி, பழமையையும், புதிய நிகழ்வையும் ஒன்றோடு ஒன்றாக பொருத்திக் (**Juxtaposition**) காட்டும்போது, அசாதாரணமும் சாதாரணமும் இருவகைப் பார்வைகளாகக் காட்டப்படுவதோடு, அவற்றின் முரண்பாடு நகைச்சுவை தருவதாகவும் உள்ளது. அது மட்டுமன்றி, அனைத்தும் தலைவனின் உணர்வு (**consciousness**) வழியாகவே நமக்குக் காட்டப்படுகின்றன. அவை உண்மை போல, தலைவனுக்குப் போல், நமக்கும் தோற்றம் தருகின்றன. பிறகு, வாழ்வுதான் உண்மை என அவன் வழி உணர வைக்கும் முறையில் எதார்த்தம் சான்ற கலை நயம் தெரிகிறது.

**சஞ்சீவி பர்வதத்தின் 'சாரலின்** முதற் பொருள் இயற்கைச் சூழல்; அதன் உரிப் பொருள் இயற்கையோடு இயைந்த காதலும் வீரமும். எடுத்த எடுப்பில் ஐம்புலனுக்கும் இன்பமளிக்கும் இயற்கையைப் பேசியவுடன்,

''வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு;
காட்டு மறவர்களும் காதல் மணம் செய்வதுண்டு''

என்று தனது உரிப்பொருளைச் சூழல் வழியாகவே உணர்த்துகிறார். அடுத்து கவிதையின் கதையோட்டத்தில் (**plot**) முதல் நிலை ஆண்-பெண் மோதல். இதிலே பெண்மை அறிவு வேட்கை வாழ்வு வேட்கையின் உருவகமாகவும், ஆண்மையின் வீரத்தை உந்தும் உயிராற்றலாகவும் காட்டப்பட்டுள்ளது. அடுத்த நிலையில் மூலிகையின் ஓரினத்தால் குப்பனும் வஞ்சியும் மற்ற நாட்டவர் பேசுவதை உணர்வது காட்டப்பட்டுள்ளது. இங்கு அதீதக் கற்பனையிருப்பினும், இதன் அடிப்படைத் தத்துவமான மனித மாண்பை அறிவால் உணர முடியும் என்பதை உணர்த்

தவே இது பயன்படுத்தப்படுகிறது. இங்கே பிரெஞ்சுக்காரர்கள் இத்தாலியனுக்கு சகோதரத்துவத்தை வலியுறுத்துவது முதலில் கூறப்படுவது நாம் ஆழ்ந்து நோக்க வேண்டிய ஒன்று. பாரதிதாசனின் வாழ்வியல் தத்துவத் தளம் சங்க இலக்கியம். எனினும் பாரதிதாசனை மேலைநாட்டு, குறிப்பாக பிரெஞ்சு இயற்கையியமும், மனிதயியமும் மிகுதியாக பாதித்திருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

கீத்சின் 'செண்ட் ஏக்னசின் மாலை' என்ற பாடலைப் போல் **சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்** துவக்க வரிகளைச் சிறிய மாற்றத்துடன் திருப்பிச் சொல்லி முடிகிறது. இந்த மாற்றத்துடன் கூடிய திருப்பிச் சொல்லல் **(Repetition with variation)** கவிதைக்கு ஒரு சுழல் வடிவத்தை (**cyclic structure**) தருவதுடன் கதைக் கட்டுக்கோப்பின் ஒருமை சார்ந்த வளர்ச்சியை (**development with consistency**)யும் காட்டுகிறது. அனைத்துக்கும் மேலாக, இந்த அமைப்பு இயற்கையைத் தளமாகக் கொண்ட மனிதக் காதலை மையமாக்கிக் காட்டுகிறது.

''பூக்கள் மணங்கமழும்; பூக்கள் தோறும் சென்று
தேனீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்
அன்பு மிகுந்தே அழகிருக்கும் நாயகரே!
இன்பமும் நாமும் இனி!''

என்ற இறுதி வரிகள், இயற்கையின்பத்தின் இணைவாக, முத்தாய்ப்பாக, அர்த்தமாக காதலின்பத்தைக் காட்டுகின்றன.

இங்கே பகைமைக்கிடையே காதல் துளிர்ப்பதையும், கணப்பொழுதின் காதல்தான் வாழ்வின் நிரந்தரமாய் நிலைக்கும் என்பதையும் கீத்சு காட்டுகிறார். எனவேதான் துவக்கத்திலும் இயற்கையின் குளிரும் கொடுமையும் காட்டப்பட்டுள்ளது. ஆனால் பாரதிதாசனில் இயற்கை மனிதத்தோடு இணைந்து காதலுக்குக் காவல் புரிவதைக் காண்கிறோம். இருப்பினும் கீத்சிலும் கொடிய சூழலும் ஒரு வகையில் காதலுக்கு உரம் ஊட்டுவதாகத்தான் பேசப்படுகிறது. பாரதிதாசனிலே கனவுக் கதை கலைந்து, காதல் உண்மை வெளிப்படுகிறது.

''காதல் நிசம். இக்கனிமுத்தம் மிக்க உண்மை!
மாதுதோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்
நம்புங்கள் மெய்யாய் நடக்கும் விஷயங்களிவை
சம்பவித்த உண்மை அசம்பாவத்தால் தாக்குறுமோ?''

என்று வஞ்சி கூறும்போது, கதைகள்தாய் மாயை, காதல் உண்மை என்று காட்டுகிறாள். இந்தமாயை—உண்மை முரண்பாடு கதையின் கட்டுக்கோப்பிலும் தெரிகிலது. கீத்சில் கதாநாயகனின் கனவு உண்மையாகும்போது, காதலர்கள் இணையும்போது, குளிர்காற்று காதலர்களை அச்சுறுத்துகிறது; நிலவு வேண்டுமென்றே தன் முகத்தை மறைத்துக்கொள்கிறது.

இந்த இயற்கையியம் பாரதிதாசன் பாடல்களின் அடிப் படைத் தத்துவமும் உத்தியுமாகும் ;

> **Society is the accomplished Union of man with nature the Veritable resurrection of nature, the realized naturalism of man and the realised Huma nism of nature.***
>
> சமுதாயம் என்பது மனிதன் இயற்கையுடன் கொண்ட ஒன்றிப்பின் வெற்றி; இயற்கையின் உண்மை யான உயிர்மீட்சி; மனிதனின் இயற்கை நெறியின் முகிழ்ப்பு; இயற்கையில் மனிதத்துவத்தின் மலர்ச்சி.

என்பது கார்ல் மார்க்சின் கருத்து. பாரதிதாசனில் இயற்கை யியம் அறிவு சார்ந்த மனித நேயத்துக்கு வழிகாட்டுகிறது. அவரது **அழகின் சிரிப்பில்**, இயற்கை, மனித வாழ்வுக்கு மூலப் பொருளாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த இயற்கை வாழ்வின் உருவகம்—தமிழ். எனவேதான் தமிழை இயற்கை வாழ்வின் முதலாகவும் முடிவாகவும் அது காட்டுகிறது. இந்தத் தத்துவத் தின் வெளிப்பாடுதான் அவரது வலுவான பேச்சுமொழியின்- வன்மையைப் பெற்ற நடையும், எதையும் பருப்பொருள் நிலையில் பார்த்த பார்வையும். காதலைக்கூட பாரதிதாசன் இலட்சிய ரீதியாகப் பார்க்காமல், ஜீவனுள்ள உணர்வாகக் காட்டுகிறார். ''முத்தம் கொடுத்து முழு நேரமும் தொலைத் தாய்'' என்பது போன்ற சாதாரணக் கூற்றுகள் காதலை இலட் சிய வானத்திலிருந்து மண்ணுக்கு இழுத்து வருகின்றன. பாரதி யிலே சாதாரணம் பரிபூரணத்தின் நிழலாக நிறைவு பெற்றால், பாரதிதாசனில் அது தன் சராசரித்தனத்தையே பரிபூரணமாக ஏற்று நிறைவுபெறுகிறது.

பாரதிதாசனின் **சஞ்சீவி பர்வதத்தின் சாரல்**, சாதாரணக் காதலை—ஆனால் அறிவு பூர்வமான, உணர்வு பூர்வமான காதலை-புராணீய சூழலிலிருந்து பிரித்து, இயற்கைச் சூழலோடு இணைத்து இயற்கையாகப் பாடுகின்ற இயற்கையியக் கவிதை என்பதில் ஐயமில்லை. சஞ்சீவி பர்வதத்தைச் சூழ்ந்த புராணீயப் போர்வை களையப்பட்டு, அது இயற்கையாக உணரப்படுகிறது; மனிதமும், மூடநம்பிக்கைப் போர்வையினைக் களைந்து, அறிவையும் அன்பையும் தன்இயற்கையாக உணர்கிறது. சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இந்த புதிய மனித இயற்கையின், இயற்கை வாழ்வின் படிமம் (**Symbol or objective correlative**) இந்தக் கவிதை, புதிய மனிதத்தின் அழகு வார்ப்பு.

---

***Karl Marx, ''Economic and Philosophical Concepts'' in Erick Fromm, Marx's Concept of Man, (New York : 1961), tran. T. R. Bottmore, pp. 135.**



# இலக்கிய வரலாற்று விழுவெள்ளி

பேராசிரியர். மது. ச. விமலானந்தம்

இலக்கியமும் வரலாறும் இணைபிரியா இரட்டைக் குழந்தைகள் (**History and Litarature are twins inseparaple**). இலக்கியத்தை வரலாற்று முறையில் அறிவதும், வரலாற்றை இலக்கிய வளமையுடன் வரைவதும் வற்றா இன்பம் பயக்கும். இனிய இலக்கிய வளர்ச்சியைக் காலமுறையில் காண்பதும் கணிப்பதும் இலக்கிய வரலாறு. மாந்தராகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் உயிரினும் இனிய தாய்மொழியின் வரலாற்றினை முறையாக அறிய வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்.

தாய்த் தமிழின் தோற்றம் வளர்ச்சி மலர்ச்சிகளை அன்று தொட்டு இன்று வரை அறிந்திருக்க வேண்டும்; நம் அனைவரின் தலையாய முதற் கடமையுமாகும். தாயைப் பேணாதான் தறுதலை; தாய்மொழியைப் போற்றாதான் அறுதலை. பாவேந்தர்,

> ''தாயைப் பழித்தவனைத் தாய்தடுத்தால் விட்டுவிடு
> தமிழைப் பழித்தவனை தாய்தடுத்தாலும் விடாதே!''

எனத் தாயினும் சிறந்ததாகத் தாய் மொழியை—தமிழன்னையைக் கொடுமுடியில் கொண்டுபோய் வைக்கிறார். அந்த மூச்சனைய அன்னை தமிழின் அரிய வரலாறு அறிய வேண்டுவது தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரின் உயிர்—உயர் கடமையாகும்.

இதற்கோர் கால்கோள் செய்த பெருமையர் கா.சு. பிள்ளை அவர்கள். தம் காலம் வரை தமிழ் இலக்கிய வரலாற்றினை ஏற்ற பெற்றி முறையாக விளக்கிடும் நூல் இன்மையால், தாமே அம் முதன் முயற்சியை மேற் கொண்டார். 'தமிழ் நூல் வரலாற்றினை முற்றிலும் ஒருவாறு தொகுத்துரைப்பதாமாக லின், தமிழிலக்கிய வரலாறு என்பட்டது, எனத் தம் நூற் பெயருக்கு விளக்கமும் தந்தார். கால முறைப்படி, கட்டுக் கோப்புடன், வாய்ப்பு வசதிகள் குறைவாக இருந்த அந்தக் காலத்திலேயே (1930 சனவரி) 550 பக்கங்களில் வாகாக வடித்தெடுத்துத் தம் சொந்த வெளியீடாக (நெல்லை) மணிவாசகர் மன்ற வாயிலாக வெளியிட்டார்.

**அமைப்பும் அடக்கமும்** : தோற்றுவாய், முச்சங்கங்களின் காலம் அகத்தியர் தொல்காப்பியர், மூவேந்தர் கொடிவழி, கி.பி. **20**ஆம் நூற்றாண்டுகள் என **6** பெரும்பிரிவுகளில் பகுத்துள்ளார்.

இதன்கண், தமிழ் மக்கள் வரலாற்றுச் சுருக்கம், தலைச் சங்க அகத்தியம், இடைச் சங்கத் தொல்காப்பியம், கடைச் சங்கப் புலவர் பரணர், கபிலர், நக்கீரர், மூவர் காலப் புலவர்கள், மூவேந்தர் வரலாறு, அன்னார் காலப் புலவர்கள், கடைச் சங்கம் 3 ஆம் நூற்றாண்டில் முடிவது, கி.பி 3—4 ஆம் நூற்றாண்டுக்கு இடைபட்ட மணிவாசகர் சார்ந்த காலம், 6 ஆம் நூற்றாண்டு வரையான சமணக்காலம் கீழ்க்கணக்கு பெருங்கதை, 7—8 நூற்றாண்டில் சைவ தேவார காலம், 8 பிற்காலம்—9 நூற்றாண்டில் வைணவ ஆழ்வார் காலம், 10 சமணக் கிளர்ச்சி சிந்தாமணி, 10—12 பெருங்காப்பிய காலம், 13 சமண இயக்க வீழ்ச்சி, 13—16 வைணவ மணிப் பிரவாள காலம் அருணகிரி வில்லி, 16—18 சைவ ஆதீன காலம், 17—18 இசுலாமிய கிறித்துவ காலம், 18 உரை நடை நூற்காலம் தொடங்கல்; 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலச் சார்பு, 20ஆம் நூற்றாண்டில் புதிய வரலாற்றின் தொடக்கம் என வகுத்துள்ளார். (இந்நூலினை ஆசிரிய நூற் பதிப்பகம் பின்னர் இரு பகுதிகளாக வெளியிட்டது)

இவ் வரலாற்று நூலின் சில வைர வரிகள் வருமாறு :

**இலக்கிய வரலாறு** : 'ஒரு மொழியின் இலக்கிய வரலாறு அம்மொழியிலுள்ள செவ்விய நூல்களின் தோற்றத்தையும் தன்மையையுங் காலமுறைக்கேற்ப வகுத்துச் சுட்டி, அம்மொழி பேசும் மக்களது கருத்துக்கள் இலக்கியங்களுள் எம்முறையில் அமைந்துள்ளனவென்றும், அவர்கள் மனவாழ்க்கையின் வரலாற்றினை அவர்கள் இலக்கியங்கள் எவ்வாறு விளக்கிக் காட்டுகின்றனவென்றும் தெரிவித்து, இலக்கியமென்பது மக்கள் வாழ்க்கைப் படம் என்று தெளிவுற அறிவுறுத்துங் கருவி நூலாகும்' (முன்னுரை பக் 1)

**திருக்குறள்** : 'கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவிற்கும் இடையில் திருவள்ளுவர் நூல் தோன்றியிருத்தல் கூடும். அது கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கட்கு முற்பட்டதென்பது தெளிவு' (பக் 288). 'பண்டைத் தமிழரது கடவுட் கொள்கையை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்நூலே தக்க கருவியாம்' (பக் 292)

**பெரியபுராணம்** : விருத்தப் பெருங் காப்பியங்களில் சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டிலும், பெரிய புராணம் 11 ஆம் நூற்றாண்டு இறுதியிலும், கந்த புராணம் 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், கம்பராமாயணம் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இயற்றப்பட்டனவாகும். விருத்தப்பாவிலமைந்த காவியங்களுள் இந்நான்குமே தலைசிறந்தனவாம்.

சிந்தாமணி, கந்தபுராணம் என்னும் இரண்டும் ஒத்த சொல் நடையுடையன; இவ்விரண்டும் ஆண் அழகுடையன வென்னலாம். கம்பராமாயணம் பெண்நடையுடையது. இருவகை நயமும் உடையது பெரியபுராணம். மென்மையிலும் இனிமையிலும் இணையற்ற மொழிகளால் தொகுக்கப்பட்ட பாமாலைச் செறிவாகப் பெரிய புராணம் இலங்குகிறது. அதனினும் இனிய சொன்னடையிலமைந்த பெருங்காப்பியம் வேறு யாதும் இல்லை,

அறவினையும் அன்பினையும் வளர்ந்தோங்கச் செய்வதில் பெரிய புராணம் ஒப்புயர்வற்றது.

**இலக்கியம்** : 'இலக்கியமென்பது மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்விய சொற்களால் விளக்குங் கருவியாம். இலங்கு இயம் என அச்சொற்றொடரைப் பிரித்துச் சொல்லாலும் பொருளாலும் செம்மை பொற்றொளிரு நூலெனப் பொருள் கொள்ளின், மேற் செப்பிய கருத்து வலியுறுதல் காண்க. (பக்112)

**அறவாழ்வு** : 'அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கினையும் எய்துதற்குரிய நெறி நிற்றலே அறவாழ்க்கை எனப் பட்டது' (பக் 114)

**தமிழ்ச் சங்கம்** : தமிழ் நாட்டிலே முச்சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் தழைத்தோங்கின என்பதை நம்பாதிருப்பதற்கு இடமில்லை. அவற்றை நிறுவி நடத்திய அரசரையும் புலவரையும் பற்றிக் கூறப்படுஞ் செய்திகளில் ஒரு சிறிது பொருத்தமின்மை காணப்படுதல் ஒன்றே பற்றி அவைகள் உண்மையில் நிலவியிருந்ததில்லை யென்று கூறுதல் அடாது. (பக் 24)

இப்படி **முதன் முதல்** தமிழில் தமிழ் இலக்கிய வரலாறு படைத்துக் காலத்தால் மாணப் பெரிய தொண்டாற்றியதோடு, இலக்கிய வரலாற்றின் கூறுகளாகப் பல சமய இலக்கியப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறும் அன்னவர் தம் நூல்களின் ஆராய்ச்சியும் படைத்தளித்துள்ளார். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், ஆண்டாள், சேக்கிழார், குமரகுருபரர், தாயுமானார், பட்டினத்தார், மெய்கண்டார் எனப் பதின்மரின் வரலாறுகளைப் பாங்குடன் வரைந்துள்ளார். தனி வரலாறுகள் (**biographies**) பலவற்றின் தொகுதியே இலக்கிய வரலாறு என்ற வகையில், இவற்றின் சீர்மை சிந்திக்கத் தக்கது.

இப்படி இருவகையில் இலக்கிய வரலாற்றினுக்கு ஊற்றம் தந்து ஏற்றமுற்றவர் தமிழ் கா.சு. அவர்கள். இவரை அடியொற்றி, இதுவரை 60 இலக்கிய வரலாற்று நூல்கள் அரும்பியுள்ளன. இந்த வண்ணக் கோலங்களுக்கெல்லாம் புள்ளி இட்டு, பாட்டை போட்டுத் தந்த பெருமகனார் நம் எம்.எல். பிள்ளை அவர்களே!

இவரது நூற்றாண்டு இவ்வாண்டு! இற்றைக்கு 57 ஆண்டுகளின் முன்பே தமிழர்க்குத் தங்கள் இலக்கிய வளர்ச்சி வாழ்வினை வகைப்படுத்தித் தந்தவர். முழு வரலாற்றையும் தமிழ் முன்னவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் படைத்து இரு வகையிலும் சாதனை புரிந்த சால்புடைச் செம்மல். தனி வரலாறும் தமிழ் வரலாறும் படைத்துத் தாமும் ஓர் வரலாறாய்– வரலாற்று நாயகராகச் சிறந்து இலக்கிய வரலாற்றில் வைரமென ஒளி வீசி வருகின்றார். இவ்வண்ணம் வண்டமிழ் இலக்கிய வரலாற்று வானில் ஓர் விடிவெள்ளியாய் விளங்கும் தமிழ் கா.சு. அவர்களைத் தமிழ் நெஞ்சமெல்லாம் நினைந்து நினைந்து வனைந்து வனைந்து வாழ்த்தி வணங்கும், வழுத்தி ஏத்தும் என்பது ஒருதலை. வாழ்க கா.சு. வெல்க அவர்தம் இலக்கிய வரலாறு!!

O



# பாரதியின் போற்றலும் தூற்றலும்

முனைவர். இரா. மோகன்

**தோற்றுவாய்**

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைபபொழுதும் சோராது இருத்தல்' என்னும் நெறியைத் தாரக மந்திரமாகக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதர் பாரதியார். அவர்தம் காலச் சமுதாயத்தில் உலவிய பலவகையான மனிதர்களையும் கவிதைகளில் படம் பிடித்துக் காட்டினார்; அதே வேலையில் சமுதாயத்தில் எப்படிப்பட்ட சீரிய மனிதர்கள் இருக்கவேண்டும் என்பது பற்றியும் அவர் எண்ணிப் பார்த்தார். இக் கட்டுரை பாரதி தூற்றும் மனிதர் யாவர், போற்றும் மனிதர் யார் எனக் காட்ட முற்படுகின்றது.

**'வேடிக்கை மனிதர்'**

காலம் முழுவதும் வயிற்று உணவுக்காக ஓடியாடித் திரிதல்; பல சின்னஞ் சிறு கதைகளைப் பேசிப் பொழுதை வீணே கழித்தல்; சிறு துன்பம் வந்தாலும் மனம் வாடித் துன்புறுதல்; பிறர் மனத்தைத் புண்படுத்தும் வகையில் பல செயல்களைச் செய்தல்; நரை திரை மூப்பு எய்தல்; ஒருநாள் கூற்றுவனுக்கு இரையாகி மாய்தல் என வாழ்நாளை வீணாளாக்கி வாழ்ந்து, முடிவில் மாண்டு மறைந்து மண்ணாய்ப் போகும் மனிதர்களைப் பாரதியார் 'வேடிக்கை மனிதர்' எனச் சாடி உரைக்கின்றார்.

'தேடிச் சோறு நிதம் தின்று—பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனம்
வாடித் துன்பம்மிக உழன்று—பிறர்
வாடப் பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப் பருவம் எய்தி—கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?'

என அவர் சக்தியிடம் கேட்கின்றார்.

கவிஞர் தம் 'ஸ்வசரிதை'யில் 'உண்டு உறங்கி இடர்செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சிகள்' என இவ் வேடிக்கை மனிதரைப் பற்றிக் கூறுவதும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

### 'பித்த மனிதர்'

'செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேர்ந்திடலாம்' என்று எண்ணி எப்போதும்—எதற்கும்—சாத்திரம் பேசித் திரியும் சழக்கர்களைப் பாரதியார் 'பித்த மனிதர்' எனச் சுட்டுகின்றார்; அன்னோர் உரைக்கும் சாத்திரத்தைப் 'பேயுரை' என்று கடுமையாகச் சாடுகின்றார் கவிஞர்.

'செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணி யிருப்பார்
பித்தமனிதர் அவர் சொலும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கு ஊதேடா சங்கம்'

எனத் தம் 'வேதாந்தப் பாடல்' ஒன்றில் முழங்குகின்றார் அவர்.

பெண், பொன், மண் என்னும் மூன்று ஆசைகளையும் துறந்து, புலன்களை வெற்றி கொண்டு, தூய அறிவு நிலையில் களிந்திருப்போரைக் கவிஞர், 'தூயவர்' என்றும், 'ஆரியர்' என்றும், 'சித்தர்' என்றும் போற்றிக் கூறுகின்றார்.

### 'நிலை கெட்ட மனிதர்'

பாரத மக்களின் தற்கால நிலைமையை எண்ணிப் பார்க்கும் பாரதியார், 'நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்று வருந்திப் பாடுகின்றார். 'அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர், அஞ்சாத பொருளில்லை அவனியிலே!' என்றும் 'எப்போதும் கைகட்டுவார்—இவர் யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்' என்றும், 'கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு கோடி யென்றால் அது பெரிதாமோ?' என்றும், 'கஞ்சி குடிப் பதற்கிலார்—அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்' 'என்றும், 'கண்ணிலாக் குழந்தைகள்போல் —பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்' என்றும் இந்தப் புண்ணிய நாட்டினிலே பொறியற்ற விலங்குகள்போல் வாழும் மக்களின் இழிநிலையைப் பலவாறு படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர். வலிமையற்ற—ஒளியிழந்த—பாரதத்தைப் 'போபோபோ' எனச் சபிக்கும் கவிஞர், உறுதிகொண்ட—ஒளிபடைத்த இளைய பாரதத்தை 'வா வா வா' என வரவேற்கின்றார்.

**'விந்தை மனிதர்'**

சுதந்திரத்தை 'வீர சுதந்திரம்' என்றும், 'இன்ப சுதந்திரம்' என்றும், 'ஆனந்த சுதந்திரம்' என்றும் சிறப்பித்துப் பாடியது போல், பெண்மையையும் 'புதுமைப் பெண்' என்றும், 'செம்மை மாதர்' என்றும், 'வீரப் பெண்கள்' என்றும், 'உதய கன்னி' என்றும், 'இளைய நங்கை' என்றும் போற்றிப் பாடியவர் பாரதியார். 'பெண்மை வாழ்க' என்றும், 'பெண்மை வெல்க' என்றும் முழங்கிய கவிஞர், 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை' என்றும், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம்' என்றும் எண்ணியிருக்கும் மனிதரைச் சுட்டும்போது 'விந்தை மனிதர்' எனக் கூறுகிறார்.

' வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் '

என்பது 'பெண்கள் விடுதலைக் கும்மி'யில் வரும் கவிஞர் கூற்று.

**'தலைப்படு மனிதன்'**

'வேடிக்கை மனிதர்', 'பித்த மனிதர்', 'நிலைகெட்ட மனிதர்', 'வாய்ச்சொல் வீரர்', 'ஊமைச் சனங்கள்', 'வீரமிலா நாய்கள்' எனச் சமுதாயத்தில் மக்கட் பண்பின்றித் திரியும் மாக்களை அடையாளம் காட்டிய கவியரசர், காந்தியடிகளைப் பற்றிப் பாடும்போது, 'புவிமிசை இன்று மனிதர்க்கெல்லாம் தலைப்படு மனிதன், தர்மமே உருவாம் மோகன தாச கர்ம சந்திர காந்தி' எனச் சிறப்பித்துக் கூறுகின்றார். சமுதாயம் இத்தகைய தலைப்படு மனிதர்களைக் கொண்டதாக விளங்க வேண்டும் என்பது பாரதியின் கருத்து; கனவு. அவர், மனிதன் நல்லதோர் வீணையைப்போல் சுடர் மிகும் அறிவுடன் விளங்க வேண்டும் என விழைந்தார்; 'அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின் மீது தனியரசாணை, பொழுதெலாம் பரம்பொருளினது பேரருளின் நெறியிலே நாட்டம், கருமயோகத்தில் நிலைத்திடல்' ஆகிய பண்புகளையே 'தலைப்படு மனித'னுக்கு உரிய நல்லிலக்கண மாகக் கருதினார். பாட்டுக்கொரு புலவர் பாரதி போற்றிய உயர்பண்புகளைப் பெற்று, நல்லதோர் வீணையாக நலமுறப் பூமியில் வாழ்வோமாக!



# பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டும், சேந்தனாரின் திருப்பல்லாண்டும்

முனைவர் எழில் முதல்வன்

## 1—(அ)

ஒருவர் மற்றவரை வாழ்த்தும் போது 'பல்லாண்டு வாழ்க' என வாழ்த்தும் மரபு இன்றும் உண்டு. பல்லாண்டு வாழ்க என்னும் வாழ்த்தினைப் **பல்லாண்டு** என முதற்குறிப்புப் பெய ராக வழங்குவதுண்டு; அது காரிய ஆகுபெயராக வாழ்த்தாக அமையும் பதிகத்தைக் குறிப்பதாயிற்று. தமிழில் 'திருப் பல்லாண்டு' என்னும் பெயரில் இரு நூல்கள் உள்ளன. ஒன்று பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு; இது நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இடம் பெறுவது. மற்றொன்று; சேந்தனாரின் திருப்பல்லாண்டு; இது சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திரு முறை நூல்களுள் ஒன்றாகத் திகழ்வது. பெரியாழ்வார் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும் எட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதி என்று இரு கருத்துகள் உண்டு. சேத்தனாரின் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமும் என்பர். எது எவ்வாராயினும் பெரியாழ்வார் சேந்தனார்க்குக் காலத்தால் சற்றே முற்பட்டவர் என்பது வெளிப்படை. இவ்விரு திருப் பல்லாண்டு நூல்களும் ஏறத்தாழ அறுபது எழுபது ஆண்டுகள் முன்பின்னாகத் தோன்றி இருக்கலாம். இவ்விரு படைப்புகளை யும் மருங்கு வைத்து ஒருங்கு நோக்கி அவற்றிடையே காணப்படும் ஒப்புப் பண்புகளைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்க மாகும்.

பிறரை வாழ்த்துவதில் ஒரு மகிழ்ச்சி இருக்கிறது; நம் வாழ்த்தினால் — நாம் வாழ்கிறோம் என்பதே உண்மை. ''வாழ்த்துவதும் வானோர்கள் தாம் வாழ்வான்'' என்னும் மணி வாசக வரிகள் இங்கு நினைவுகூறத் தக்கவை. இறைவனை மனம், மொழி, மெய்களால் வாழ்த்தும்போது—அவன் நினைப் பவர் மனத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுகிறான்; இமைப் பொழுதும் துதிப்பார் நெஞ்சிலிருந்து நீங்காதான் ஆகிறான்.

திருநாவுக்கரசு காலத்திலேயே நம் நாட்டுத் திருக்கோயில் களில் இறைவனை வாழ்த்திப் பல்லாண்டு பாடும் மரபு இருந்த தாகத் தெரிகிறது. ''பல்லாண்டிசை கூறும் பத்தர்கள் சித்தத் துள் புக்குத் தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே!'' என்று அவர் பாடுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

## 11—(அ)

இத்திருப்பல்லாண்டுகள் தோன்றுவதற்கான பின்னணியை முதற்கண் காண்பாம்; சீவல்லப தேவன் என்னும் பாண்டிய

மன்னன் பரம்பொருள் இன்னதென்று அறுதியிட்டுக் கூறு வோர்க்குப் பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாகப் பறையறைந்து தெரிவித்தான். அக்கிழியைத் தன் அவைக் களத்தின் நடுவே தொங்கவிட்டான். வேத நூற் புலமை கொண்ட வித்தகர்கள் தாம் தாம் கண்ட அளவில் தம் புலமைத் திறத்தால் பர தத்து வத்தை நிலைநாட்டி பொற்கிழி பெற்றுப்போக அவாவினர். திருவல்லிபுத்தூர் அருளாளனாகிய திருமால், விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வாரின் கனவில் எழுந்தருளி, ''பாண்டியன் அவையை அடைந்து பரமபத நாதனாகிய நாராயணனே பரம் பொருள் என்பதை நிலைநாட்டிப் பொற்கிழியை அறுத்து வருக'' எனப் பணித்தார்.

சேந்தனாரின் பதிகம் எத்தகு சூழலில் எழுந்தது என்பதற் கும் ஒரு வரலாறு உண்டு. தில்லையம்பதியில் செந்தனார் வாழ்ந்து வந்த காலத்தில் திருக்கோவிலில் மார்கழித் திருவிழா வந்தது. ஆடல்வல்லான் எழுந்தருளி உலா வந்த திருத்தேர் ஓரிடத்தில் ஓடாது தடைப்பட்டு நின்றது; மணலில் புதைந்து சிக்குண்டது. மிகப்பலர் ஒன்று கூடி இழுத்தும் அதனை அசைக்க முடியவில்லை. அது கண்ட சேந்தனார் மெய் அரும்பி விதிர் விதிர்த்து, அம்பலமாணரை வேண்டித் தொழுது பல்லாண்டுப் பதிகத்தைப் பாடி முடித்தார். ஓடாத தேர் ஓடிற்று; திருவீதி உலா வந்து நிலை சேர்ந்தது. சேந்தனாரின் பக்தித் திறத்தை உலகுக்குணர்த்த நடராசப் பெருமான் நிகழ்த்தியருளிய விளை யாட்டாகவே மக்கள் கருதி மகிழ்ந்தனர்.

வைணவரும் சைவரும் தத்தம் பரம்பொருளாக முறையே ஏற்றிப் போற்றும் நாராணனையும் சிவபெருமானையும் அழ கொழுகும் செழுந்தமிழால் பாடிப் பரவும் இவ்விரு தெய்வப் பனுவல்களும் தமிழர்க்குக் கிட்டிய செல்வங்கள் என்பதில் ஐய மில்லை. இவற்றுக்கிடையே காணும் பொதுமைத் தன்மை களைக் கண்டறியவது அறிவிற்கும் உணர்விற்கும் இன்பம் தரும் என்பது ஒருதலை.

இறைவனைத் தனியே அனுபவப்பதினும் கூட்டமாக இருந்து அனுபவப்பதிலேயே மகிழ்ச்சி உண்டு. சுவைக்குரிய கனியைத் தனித்திருந்து உண்பதினும் பலரோடு பகிர்ந்து உண்ணுவதில் விளையும் இன்பம் பெரிதன்றோ? அடியவர் குழாத்தில் தூய அன்புடைய உண்மையோரும் உளர்; பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கம் போலியோரும் உளர். பெரியாழ்வாரும் சேந்தனாரும் பொய்யொழுக்கம் பூண்ட அடியாரை விலக்குவதில் கருத்தாக இருக்கின்றனர். ''மிண்டு மனத்தவர் போமின்கள்!'' என்று சேந்தனார் நெஞ்சம் கல்லாக உடைய நீர்மையோரை அப்பால் அகலுமாறு கூறுகிறார். பெரியாழ்வாரோ அத்தகை யோரை ''கூழாட்பட்டு நிற்போர்'' என்று சற்றுக் கடிந்தே பேசுகிறார். ''கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுத லொட்டோம்'' என்று எச்சரிக்கிறார்.

வைணவர்கள் பிராட்டியைப் புருஷாகாரமாகக் கொண்டே பெருமாளைப் பற்ற வேண்டும் என்பர். எனவே பெரியாழ்வார் ''வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'' என்று பிராட்டியை முதற்கண் வாழ்த்துகிறார். சேந்தனாரோ தேவியைத் தனியே பிரித்துப் பேசாமல் சக்தியும் சிவனுங் ஒன்றேயெனக் கொண்டு ''அன்னநடை மடவாள் உமை கோன்'' என்று செறித்துக் கூறி உவகையடைகிறார்.

சேந்தனார் செம்மேனி அம்மானின் திருவருட் செயல்களாகச் சிலவற்றை எடுத்துக் கூறுகிறார். வியாக்கிர மாத முனிவரின் மழவாகிய உபமன்யு தம் தாய்மாமனாகிய வசிட்டரின் ஆசிரமத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்தார்; பின்பு தந்தையின் ஆசிரமம் வந்தபோது அதே பாலை வேண்டி அழுதார். தந்தை தம் மகவை நோக்கி ''நீ சிவபெருமானை எண்ணி வேண்டிக் கொள்க'' என்றார். அவரும் அவ்வாறே செய்ய குழந்தையின் கள்ளமில்லாப் பக்தியை உணர்த்த இறைவன் பாற்கடலை அழைத்து, அவரை உண்ணுமாறு செய்தார். இதுபோல் சிவபெருமானின் வேறு சில அருட் செயல்களும் உண்டு. தம் சிவ பூசைக்கு இடையூறு விளைத்த தந்தையின் தாள்களைத் தடிந்த விசாரசர்மரை ஆட்கொண்டருளி சிவபெருமான் அவர்க்குச் சண்டீசப் பதம் தந்தார்.

தத்தம் வழிபடு கடவுளரிடத்தில் இவர்கள் வைத்திருக்கும் அசைக்கலாக நம்பிக்கை நினைந்து மகிழ்தற்குரியது. பெரியாழ்வாரின் திருமால் தம்மையும் பிற உயிர்களையும் ''வெள்ளுயிராக்க வல்லவன்'' என்றும், அவன் ''பல்வகையாலும் பவித்திரன்'' என்றும் போற்றுகிறார். சேந்தனாரோ சிவபெருமானை ''அண்டம்கடந்த பொருள், அளவில்லதோர்ஆனந்தப் பொருள், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்'' என்றும், ''பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கன்'' என்றும் ''எம் மனற்தகத்தே பாலும் அமுதமும் ஒத்து நின்றான்'' என்றும், அவன் ''ஆருயிர் மேல் பந்தம் பிரியப் பரிபவான்'' என்றும் ''பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த ழித்தன்'' என்றும் பாடிப் பரவுகிறார். மேலும், ''சிவலோக நாயகன் திருவடிக்கீழ் ஆரும் பெறாத அறிவு பெற்றேன்'' என்றும் இறுமாந்து பேசுகிறார். இவர் சுட்டும் அறிவுபதியைக் கண்டு வரும் சிவஞானமே என்பது வெளிப்படை.

திருமால் உலகுயிர்களை வெள்ளுயிராக்குகிறான் என்பதும் சிவபெருமான் உயிர்களைப் பந்தித்து நிற்கும் பாசம் களைகிறான் என்பதும் இங்கு ஆழமாகச் சிந்திக்கத்தற்குரியன. பக்தியின் பயன் பாச நீக்கமே என்பதை இருவரும் உறுதியாகப் பேசுகின்றனர்.

*111*

சைவமும் வைணவமும் நம் தமிழ்நாட்டில் பழம்பெரும் சமயங்கள். வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் அவற்றுள் விளங்குவது ஒரே பரம்பெருள்தான் என்பது வெள்ளிடைமலை. பார்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை யார் எப்பெயர் கொண்டு போற்றினால் என்ன? போற்றுவது ஒன்றே இன்பம் எனலாம். கூடும் அன்பிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டாத விறலினாரே உண்மைத் தொண்டர் ஆவர். இரு திருப்பல்லாண்டுகளும் இறைவனைக் காண நமக்குக் கிடைத்த இரு பெரும் விழிகள். அவற்றை நாள் தோறும் ஓதி ஓதி இறையின்பத்தில் மூழ்குவோமாக!



# மெல்லத் தமிழ்

முனைவர் ச. சாம்பசிவனார்

**முன்னுரை :**

''திராவிட மொழியினங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த திருந்திய மொழி தமிழேயாம், அது, சொல்வளமிகுந்தது'' என்பது கால்டுவெல் துரை மகனாரின் கருத்து. இத்தகைய தமிழ்மொழியின் இன்றைய நிலை குறித்து ஒரு சிறிது ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**தமிழின் கோலம் :**

''பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்'' இலங்குவது நம் தமிழ்மொழி' ''கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த'' மொழி— இப் பைந்தமிழ்மொழி. ''கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ'' என்று சொல்லுமளவுக்குத் தமிழ்ச் சுவையில் மூழ்கித் திளைத்த காலமும் ஒன்றிருந்தது. சங்க காலத்தே, ஏறுபோற் பீடுநடைபோட்ட எந்தமிழ், இடைக் காலத்தே தளர்ச்சியுற்றுப் பின்னர்ச் சைவ நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் புத்துயிர் பெற்றது. அடுத்து வேற்றவர் வருகையாலும், பிற சூழல்களாலும் நாடு அடிமையுண்டது; அதனால் மொழியும் அந்நிலையுற்றது. இந்நிலையிற்கூட, ஆங்காங்கே தமிழ்ப்புலவர் பலர், கலம்பகம், தூது, உலா முதலாய சிற்றிலக்கியங்களையும் பிறவற்றையும் பாடித் தமிழன்னை கொஞ்சமாவது மூச்சு விடட்டும் என்றெண்ணிச் செயலாற்றினர். தமிழ் இலக்கிய உலகில் ''சோழர்களின் காலம் பொற்காலம்'' என்று போற்றுமளவுக்கு இடைக்காலச் சோழர் காலத்தில், தெய்வச் சேக்கிழாரும் மாக்கவி கம்பரும் அழியாப் பெருங் காப்பியங்களைத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தனர்.

**ஊறுபோக்க வந்த பாரதி :**

ஆங்கிலேயர் ஆட்சியின்போது தோன்றிய புலவருள் தாயுமானவர், வள்ளல் இராமலிங்கர் ஆகியோரைக் குறிப்பிடல் சாலும். இவர்கள் பாடிய பத்திப் பாக்களால், சமய உணர்வோடு தமிழுணர்வும் தமிழர்க்கு உண்டாயது எனலாம். :'கருணையிலா

ஆட்சி கடுகி ஒழிக'' என்று வள்ளலாரே வாய்திறந்து, அடிமையின் கொடுமையைச் சுட்டிக்காட்டினார். அடுத்துத் தோன்றிய மாக்கவி பாரதியாரோ, நாட்டு விடுதலைக்காக மட்டுமின்றி நந்தமிழின் வாழ்வுக்காகவும் வீரமுழக்கமிட்டார். தாய்மொழி வாழத் தன் நாடு உரிமை பெறவேண்டும் என்று எண்ணினார் இவர். ''நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—அது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்'' என்றார். ஆம். **''இது நம் நாடு; இது நமக்கே சொந்தம்''** என்று சொல்வதற்குப் பாரதியார் தேவைப்பட்டார். அத்துணை இழிநிலையில் நம்மவர் இருந்தனர். நாடு விடுதலை பெற்றுவிட்டாற் போதுமா? மொழியும் விடுதலை பெற்றாக வேண்டும் என்று துணிந்து உரைத்தவர் பாரதியார். ''செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே'' என்று தமிழின் இனிமையைத் தமிழ் மக்கட்கு எடுத்துச் சொல்லவேண்டியதாயிற்று. ''எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே'' என்று வாழ்த்தவேண்டிய நிலை வந்துவிட்டது. ''விதியே விதியே தமிழச் சாதியை என்செயக் கருதியிருக்கின் றாயடா?'' என்று தமிழ்ச் சாதியின் அவலநிலை குறித்து எடுத்துரைத்தார். ஆங்கில மோகத்தால் கட்டுண்டு கிடக்கும் தமிழர்களை விடுவிக்க விழைந்தார்.

> ''.........பாரதத்து
> **ஆங்கிலம்பயில் பள்ளியுட் போகுநர்**......
> நலமோர் எட்டுணையும் கண்டிலேன் இதை
> நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்''

என், ஆங்கிலக் கல்விமட்டும் பயன் தராது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'' என்று கூறவந்தவர், ''அந்த மேன்மைக்கலைகள் தமிழில் இல்லை''என்று குறைவாகச் சொல்லவும் கூடும் என்றும் மொழிந்தார். இம்மட்டோடு நின்றாரிலர்.

> ''சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
> சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை.
> **மெல்லத் தமிழ்இனிச் சாகும்**—அந்த
> மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்''

என்றும் பாடுகின்றார். இதனைக் கேட்டதும் ''பாரதியாரா இவ்வாறு கூறினார்?'' என்று அவர் மீது சினங்கொள்ளத் துடிக்கும். இங்ஙனம் தம்மீது வசைபாடுவரோ என்று எண்ணித்தான் போலும், ''கூறத் தகாதவன் கூறினன்'', ''என்று அந்தப்பேதை உரைத்தான்'' என்றும் பாடிவிட்டார்.

**தமிழ்த் தொண்டு :**

வழிவழிவந்த தமிழ்ப் புலவர்கள் ஒருபுறமிருக்க, ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாகச் சிலரை

இவண் சுட்டலாம்: பரிதிமாற் கலைஞர், கா. சுப்பிரமணிய பிள்ளை, நாவலர் பாரதியார், மறைமலையடிகள், தமிழவேள் உமாமகேசுவரனார், செம்மல் சிதம்பரனார் ஆகியோராவர். தமிழில் பெரும்புலமை பெற்றவர்களுள் பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு.வி.க. முதலியோரைக் குறிப்பிடலாம். (இன்னும் பலருண்டு.) சங்கங்கள் அமைத்துத் தமிழுக்குப் தொண்டாற்றியோருள் வள்ளல் பாண்டித்துரைத் தேவரையும், தமிழவேள் உமாமகேசுவரனாரையும் குறிப்பிடலாம். நூல்களைப் பதிப்பித்துத் தமிழை வளர்த்தோருள் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் ஆகியோரைக் குறிப்பிடலாம். நல்ல தமிழ் இதழ்கள் வாயிலாகத் தமிழைப் பரப்பிய பெருமை, 'செந்தமிழ்' 'தமிழ்ப் பொழில்', 'செந்தமிழ்ச் செல்வி' இவற்றைக் குறிப்பிடலாம். இனிய எளிய கவிதை வாயிலாகத் தமிழ்மக்கட்கு உணர்ச்சி ஊட்டியவர்களில் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம். கிறித்தவ மதத்தைப் பரப்பவந்த பாதிரிமார்களும், தமிழைப் படித்து, அதன் பெருமையை உணர்ந்து, உலகுக்கும் உணர்த்தினர். அவருள் குறிப்பிடத்தக்கோர், போப் ஐயர், தெ நோபிலி, கால்டுவெல், பர்தலோமியா, ரேனியர், வீரமா முனிவர் ஆவர்.

**மொழிப் போர் :**

''நாடு விடுதலை பெற்றால், அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மொழியே ஆட்சி மொழி'' எனும் கொள்கையை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தினார். அதன்படியே, மாநில அரசுகள் ஏற்பட்டன. காங்கிரசுக் கட்சி, தமிழகத்தின் ஆட்சி பொறுப்பேற்றதும் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்கியது. தொடக்கத்தில் இதனை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தனர் தமிழ்ப் புலவர்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் நாவலர் பாரதியார், மறைமலையடிகள், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர். ஒருமுறை நாவலர் பாரதியார், தாம் பிறந்த எட்டயபுரத்தில், இந்தியை எதிர்த்துப் பொது மேடையில் வீர முழக்கம் ஆற்றியபோது, அவ்வூர் மக்களே அவரைக் கல்லால் எறிந்து தாக்கினர். இதுபற்றி சட்டமன்றில், ஏ.டி. பன்னீர்ச் செல்வம், கேள்விகேட்டதுமுண்டு. தொடக்கத்தில் தமிழ்ப் புலவர்களின் எதிர்ப்பாக இருந்த இது, பின்னர்த் தந்தை பெரியாரின் தலைமையில் அரசியல் எதிர்ப்பாக மாறியது. மொழிப் போர் நெருப்பாக மூண்டது. அதனால் கட்டாய இந்தி கைவிடப்பட்டது. மீண்டும் ''பள்ளிகளில் இந்தி'' எனும் நிலை வந்தபோது, தமிழர் அனைவரும் ஒருமுகமாகக் கிளம்பினர் ''உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு'' என்று தமிழ் மாணவர் பலர் சூளுரை கொண்டு களத்தில் குதித்தனர். ''தமிழ் வாழ்க'' என்று கூறித் தம்மையே நெருப்பிட்டு மாண்டு மடிந்த வீர இளைஞரும் உண்டு. துப்பாக்கி முனைக்கும் அஞ்சாது போராடிய மாணவர் எண்ணற்றவராவர். இம் மொழிப் போரின் விளைவாக நாட்டாட்சியில் பெரும் மாற்றமுண்டாயது. பேரறிஞர்

அண்ணா, தமிழக ஆட்சிப் பொறுப்பேற்றார்: அரியணை அமர்ந்த உடனேயே, சென்னை மாகாணம் என்பதைத் ''தமிழ் நாடு'' என்று சட்டமன்றத்தில் தீர்மானங்கொண்டுவந்து நிறை வேற்றினார். இது, மாபெரும் **அமைதிப் புரட்சி**. ''எங்கும் தமிழ்-எல்லாம் தமிழ்'' என்ற நிலை விரைவில் வரும் என்று சூளுரைத்தார்.

**தமிழ் அழிந்து விடுமா?**

''உற்ற **தேகத்தை** உயிர் மறந்தாலும்' என்றுவரும் இராம லிங்கர் பாடலில், **'தேகம்'** என்ற வடசொல் உள்ளதே என்று எண்ணித்தான். ''தனித்தமிழ் இயக்கத்''தைத் தொடங்கி னார் மறைமலையடிகள் என்று வரலாறு கூறும். ஆனால், இன்றோ எத்தனை 'பாடி'கள் **(body)** தமிழில் நுழைந்துவிட்டன இவற்றாலெல்லாம் தமிழ் அழிந்து விடுமா? என்று சிலர் கேட்க லாம். முதலாவதாகத் தமிழ்ச் சொற்கள், காலப்போக்கில் அழிந்துபடும். அங்ஙனம் அழிந்தபிறகு அப்போதுள்ளோர், ''இதற்குத் தமிழில் சொல்லே இல்லை'' என்று பழித்துரைப்பர். வடமொழி அளவிறந்து கலந்ததனாலேயே தெலுங்கு என்றும், மலையாளம் என்றும், கன்னடம் என்றும், துளு என்றும் பிரிந்தன என்பர் அறிஞர். அவ்வாறே அளவிறந்த ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதியும் பேசியும் வந்தால், காலப்போக்கில், **''தமிழ்–ஆங்கிலம்'' கலந்த கலப்புமொழி ஒன்று உருவாகும்**; தமிழின் எல்லை சுருங்கும். இந்நுட்பத்தை அன்றே உணர்ந்த மனோன் மணீயம் சுந்தரம்பிள்ளை, தம் தமிழ்த்தாய் வாழ்த்தில் சுட்டிக் காட்டலானார். இதை உணர்ந்துதான் மாக்கவி பாரதியார், **''மெல்லத் தமிழ் இனிச் சாகும்''** என்று கூறியதனோடமையாது ''மேற்குமொழிகள் புவிமிசை ஓங்கும்'' என்றும் கூறினார் போலும்! ஆம்! **தமிழ், இன்று நமக்குத் தெரியாமலேயே, மெல்ல மெல்லச் செத்துக் கொண்டிருக்கின்றது.**

**முடிவுரை :**

தமிழகத்தைப் பொறுத்தவரை, இன்று பல்கலைக் கழகங்கள் பெருகியுள்ளன. தமிழுக்கென்று ''தமிழ்ப் பல்கலைக் கழகம்'' ஒன்றும் உள்ளது. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் தமிழுக் கெனத் தனித்தனித் துறைகள். பிற மாநிலங்களிலும், தமிழைக் கற்பிக்கத் தமிழ்த் துறைகள் உள்ளன. அரசு அலுவலகங்களில் தமிழிலேயே 'கோப்பு'கள் வரையப்படுகின்றன. ஆண்டுதோறும் ஆங்காங்கே தமிழ் விழாக்கள், பட்டி மன்றங்கள், தொடர் சொற் பொழிவுகள் நிகழ்கின்றன. கவிஞர் கண்ணதாசனைப் பின் பற்றித் திரைப் படங்களிலும் நல்ல தமிழிசைப் பாடல்களைக் கேட்க முடிகின்றது. வெளிநாட்டிலிருந்து பலர், தமிழகப் பல்கலைக் கழகங்களில் தமிழை ஆராய்ந்து வருகின்றனர். உலகத் தமிழ் மாநாடும் கூட்டப்படுகின்றது. **தமிழகப் பள்ளிக ளிலும் கல்லூரிப், பல்கலைக்கழகங்களிலும் அனைத்துப் பாடங் களும் தமிழில்தான் என்ற நிலை வராதவரை, இத்துணை முயற்சி களும் வீணாகிப் போய்விடும்.**

இங்ஙனம் செய்யாமற்போனால், அமரகவி பாரதியார் கூறிய ''மெல்லத் தமிழ் இனிச் சாகும்'' என்பது பொய்யாமொழியாகப் போனாலும் போகும். □□




**அறம்—புதிய சிந்தனை :**

''**அறம்**'' என்ற சொல் திருக்குறள் எழுவதற்கு முன்னரும், பின்னரும்கூடத் தமிழ் நாட்டில் பல நோக்கில் சில பல பொருள் களை உணர்த்தப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்ற இலக்கண மரபு மாறாமல் அறு+அம் என்ற கூட்டுச் சொற்களில், தீயவைகளை அறுத்து அமைந்தவை எனச் சுட்டப்பட்ட பொருளில் ''**அறம்**'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அறம்—அறன் என்பன நல்லனவற்றின் தொகுதியைச் சுட்டும் ஒரு சொல் ஆயிற்று; வினைகட்கு வித்தானது.

திருக்குறள் எழுந்த பின் **அறம்** என்ற சொல் புத்துயிர் ஊட்டப் பெற்ற முழுச் சொல் ஆனது. அதனாற்றான் திருக்குறளையே **அறம்** என அழைக்கலாயினர் புலவர் பெரு மக்கள். **தெய்வப்புலவர் திருவள்ளுவர் செய்த நூற்பெருமை களில் ஒன்று ''அறம்'' என்ற சொல்லைத் தமிழ் மொழிக்குத் தனிப் பொருளாக ஆக்கித் தந்ததாகும்.**

**அறத்தின் இலக்கணம் :**

அறம் என்ற சொல்லுக்கு விளக்கம் காணப் புகுந்த திருவள்ளுவர்,

| | |
|---|---|
| அறம் ஆழி | (8) |
| அறமே ஆக்கம் | (32) |
| அறமே வினை | (33) |
| அறம் செய்க | (36) |
| அறம் இன்பம் | (39) |
| அறம் செயற்பாலது | (40) |
| அறமே இல்வாழ்க்கை | (49) |
| அறம் என்பின் சார்பு | (76) |
| அறமே இன்சொல் | (93) |

அறமே ஒழுக்கம் (148)
அறமே ஆக்கம் (163)
அறம் அறிவது (179)
அறமே அருள் (249)
அறமே நெஞ்சம் (288)
அறமே கொல்லாமை (321)
அறம் அவாவுக்கு அஞ்சல் (366)
அறமே நாணம் (1018)

இவ்வாறெல்லாம் விளக்கம் கண்ட திருவள்ளுவப் பெருமான் மேலும் விளக்கம் காணற் பொருட்டும், சிக்கல் இல்லாத் தெளிவு பெறும் முகத்தானும்,

*அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம் (35)*

என்ற குறள்வழி அல்லன குறித்தும்,

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்*
*ஆகுல நீர பிற (34)*

என்ற குறள்வழி நல்லன குறித்தும் முழுமைத் தெளிவும் வழங்கித் தம் முடிவான கருத்தை விளக்குகிறார்.

**அறம் வேறு—தருமம் வேறு :**

நாம் ஒருவாறு அறம் என்ற சொல்லுக்குச் சரியான விளக்கத்தை அடைந்திருக்கின்றோம். ஈகை, புகழ் என்ற கடமைகளோ, தவம், நிலையாமை, துறவு, மெய்யுணர்வு முதலான உணர்வுகளோ அறத்திற்கு நேர் விளக்கங்களாகத் திருக்குறள் வழி நம்மால் பெற முடியவில்லை என்பதை இன்றைய நடைமுறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் நம் உளமெல்லாம் சிலிர்த்துச் சில்லிடுகிறது. இந்தப் பேருண்மையை ஏன் மறந்தோம் என்ற நினைவு, நம் கடந்த கால அறிவுச் சிக்கல்களைக் குறிப்பிட்டு நாண்முறச் செய்கிறது.

அயல் வழக்கில் ''**தருமம்**'' என்ற சொல் 32 வகைகள் எனப் பலவாறு விரித்துக் கூறப் பெற்றாலும் **ஈதல்** என்பதையே வைதீக முறைகளும் வைதீகக் கதைகளும் (கர்ணன், வீடணன் கதைகள்) பெரிது படுத்துகின்றன. திருக்குறளோ—ஈகையோ, அதன் வழிப் புகழோ அறத்தின் விளக்கமாய்க் காணாது கடமைகளாக்க முற்படுதல் வியப்புக்குரிய ஒன்று. வினைகளுள் ஒன்றாகிய ஈகையை அறத்திற்கு நேர் பொருளாக்கினால் விளைவு மாறும் என்பதுணர்ந்து தவிர்த்தார் போலும்! ஈகையைக் கைக்கொண்டு அகத்தே கொடும்புவியிலும் கொடியராய் வாழ்வோரின் பிடியுள் அகப்படாது அறத்தை மேம்படுத்தித் தனிச்சிறப்பு நிலைக்குக் கொண்டு செல்கிறார்.

**அறம் — ஒரு கலைச்சொல் :**

ஆங்கில மொழி வழக்கில் உள்ள **Duty, Charity, Moral Rectitude, Virtue, Moral Excellence, Uprightness, Good Conduct, Good Behaviour, Morality, Justice, Righteousness** எனும் பல சொற்களை எல்லாம் கூட்டு விளக்கமாகக் கொடுத்தாலும் **அறம்** என்ற திருக்குறள் சொல்லின் விளக்கங்களாக அமைவதில்லை.

இலத்தீன், சமற்கிருதம், ஈபுரு, கிரேக்கம், அரபி, உருசியம் முதலான பிற எந்த மொழிகளிலும் **அறம்** என்ற சொல்லிற்குத் திருக்குறள் கூறும் விளக்கங்களைக் காண்டல் அரிது, தமிழ் மொழியிலும் பிறிதொரு சொல்லால் அறத்தை விளக்கல் அரிதெனும் நிலையைத் தெய்வப்புலவர் உருவாக்கியுள்ளார்.

ஏன் இந்நிலை என்ற ஆய்வில் நாம் அறிவது ஒன்றே. உலகின் மற்றைய மீமிசை மாந்தர்களும், சிந்தனையாளர்களும் மக்கள் வாழ்க்கையைத் தனித்தும், சேர்த்தும் கடவுளை நோக்கி ஈர்த்துச் சென்று சமுதாயத்தை அமைக்க எண்ணினர். ஆனால் நம் தெய்வப் புலவரோ மக்கள் வாழ்க்கையைத் தனித்தும் சேர்த்தும் அறத்தை நோக்கி ஈர்த்துச் சென்று புதியதோர் சமுதாயத்தை அமைக்க எண்ணினார்.

அதனாற்றான் **அறம்** என்ற சொல் பெயர்ச் சொல்லாய் (தொழிற்பெயர்), உரிச்சொல்லாய் ஆனது, ஒருமை பன்மையிலும் அடங்கியது. பால் வேறுபாடும் இல்லாமல் நின்றது.

ஆதலின் **அறம்** என்ற சொல்லை எம்மொழியில் குறித்தாலும் **அறம் என்ற ஒலியாற் குறிப்பதே சாலப் பொருந்தும்.** ஆங்கிலத்தில் குறிப்பிட **Aram** என்று குறித்து ஒலித்தல் வேண்டும். பிறமொழிகளிலும் இவ்வாறு அமைதலே அமைவு ஆகும். இத்தகு பெருஞ்சிறப்பு வாய்ந்த சொல் நாம் பெற்றிருக்கின்ற சிறந்த கலைச் சொல் ஆகும். இதற்கு நேராகப் பிற மொழிச் சொற்கள் இதுகாறும் பிறந்ததில்லை. இது தமிழுக்கும், திருவள்ளுவருக்கும் திருக்குறள் வழியில் வந்த தனிச்சிறப்பு.

**அறம்**—மொழி பெயர்த்தல் இயலாது.

**அறம்**—ஒலி பெயர்த்து மட்டுமே எழுதலாம்.

(திருக்குறளின்பால் அளவு கடந்த பற்றும், தோய்வும் நிறைந்த, திருக்குறளுக்கு உரை கண்ட தமிழ்க்கடல் 'கா. சு.' அவர்களுக்கு, நூற்றாண்டு விழா எடுக்கும் போற்றுதலுக்குரிய திரு. மீ. சு. இளமுருகுபொற்செல்வி அவர்களையும் பாராட்டி மகிழ்கிறோம். விழா மலருக்கு தமிழ்க் 'கா.சு.' அவர்கள் நினைவாக இக்கட்டுரையைப் படைக்கின்றோம்.) ✦



# நீத்த பெருமக்கள்

## அறநெறியண்ணல் கி.பழனியப்பனார்

நீத்தார் பெருமை திருக்குறள் பாயிரத்தில் மூன்றாம் அதிகாரம். பல்கலைப் புலவர் தமிழ்க் ''கா.சு.'' அவர்கள் கீழ்க் கண்டவாறு அதற்கு விளக்கம் எழுதியுள்ளார்கள்: 'உலகப் பற்றினை நீக்கிக்கடவுள் திருவருள் பெற்ற பெரியாரே உள்ளதை உணர்த்த வல்லவர்களாதலாலும், கடவுளையும், அவரது திரு வருட் சக்தியையுந்தொழுதபின், அவருடைய அடியார்களுக்கு வணக்கங்கூறுதல் முறையாதலாலும், நீத்தார் பெருமை மூன்றா வது அதிகாரமாக வைக்கப்பட்டதென்க!'

இக்கருத்து எத்துணை பொருத்தமானது என்பதை விரித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இவ்வதிகாரத்திலுள்ள சில குறட்பாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாயன்மாரை எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறுகின்றார்.

1. ''ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு''

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நிலைக்கு ஏற்றநெறியுண்டு; ஈடுபடும் தொழிலுக்கும் தனித்தனி நெறியுண்டு; அதனையே உயிரினும் ஓம்பிய ஒழுக்கமாகக் கொண்டு வாழ்வதே வாழ் வாங்கும் வாழ்வாகும். தம் ஒழுக்கத்தை விட்டுத் துறவு மேற் கொள்பவரினும் ஒழுக்கத்தில் நின்று துறவு மனப்பான்மையுடன் பற்றற்று வாழ்வதே சிறந்தது. தவமுடையார் தம் பசியைத் தாங்கும் வல்லமை உடையவர்கள். தம் பசியையும் பிறர் பசியை யும் மாற்றும் திறமையுடையோர் அத்தவமுடையோர்க்கும் மேலானவர்கள் ஆவர்.

இளையான்குடி மாறநாயனார் ஒரு பெரும் நிலக்கிழார். ஏரின் மல்கு வளத்தினால் வரும் எல்லை இல்லதோர் செல்வம் பெற்றவர். அவர் தோன்றிய வேளாளர் குடிக்குரிய நெறியில் தவறாத ஒழுக்கமுடையவர். சிவனடியார்களிடம் அன்பு பூண்ட வர். எக்குலத்தைச் சேர்ந்த யாவராயினும் 'ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர்' ஆயின் அவர்களைப் பணிந்து வர

வேற்று அமுது செய்விப்பதைத் தம் நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர்.

செல்வநிலையில் மேற்கொண்ட இந்நெறியில், அவர் வறுமையுற்ற காலத்திலும் எதிர்பாராத நேரங்களிலும் தவறாது நின்றமையும், அவர் வாழ்க்கைத் துணைவியார் அதற்குத் துணை நின்றதையும், இறைவன் தம் திருவிளையாட்டால் உலகறியச் செய்ததைப் பெரியபுராணம் விரிவாக விளக்குகின்றது. இவ்வாறு தமக்குரிய ஒழுக்கத்தில் நின்று நீத்தமைக்கு இளையான்குடி மாறனார் வரலாறு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. நாயனாரின் திறத்தைக் கூறுகின்றார் சேக்கிழார்.

''இன்னவாறு வளஞ்சுருங்கவும் எம்பிரான் இளையான்குடி
மன்னன் மாறன் மனஞ் சுருங்குதல் இன்றி உள்ளனமாறியும்,
தன்மை மாறி இறுக்க, உள்ள கடன்கள் தக்கன
கொண்டு,பின்
முன்னை மாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையர்
ஆயினர்''

2. ''உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.''

அறிவினால் ஐம்புலன்களை அடக்கவல்லவன் வீடு பேறு பெறுவதற்கு உரியவன் ஆவன்.

பொய்கடிந்து அறவாழ்வு வாழ்ந்தவர் திருநீலகண்டர். அவர் மனைவியார் 'அருந்ததிக் கற்பின்' மிக்கார். இளமையின் காரணமாக ஒழுக்கநெறி தவறினார் நாயனார். அதை அறிந்து மனைவி கடிந்தாள். விலகி நிற்க இறைவன் சாட்சியாகக் கணவனுக்கு ஆணையிட்டார். இருவரும் தங்கள் இளமைப்பருவம் கழிந்து மூப்பு எய்தியும் அவ் ஆணைதவறாது இல்லறம் நடத்தி வந்தனர்.

'' இளமையின் மிக்குளார்கள் இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆனைபோற்றி ஆண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார்''

இவ்வாறு இருவரும் வேறு வைகி அன்புறு புணர்ச்சி அன்மை அயலறியாது வாழ்ந்த திறத்தை உலகறியச் செய்து, இறுதியில் அவர்களுக்கு இறைவன் அருள்புரிந்த செய்தியைப் பெரிய புராணம் விரிவாக விளக்கும்.

அவர்களுக்கு முத்தி கொடுக்க எழுந்தருளிய இறைவன் அவர்களை 'ஐம்புலனை வென்ற மிக்கீர்!' என்று புகழ்வதைச் சேக்கிழார் வாயிலாகக் காண்போம்.

"மன்றுளே திருக்கூத்து ஆடி அடியவர்மனைகள் தோறும்
சென்று அவர் நிலைமை காட்டுந் தேவர்கள் தேவர்தாமும்
"**வென்ற ஐம் புலனார் மிக்கீர்!** விருப்புடன் இருக்க நம்பால்
**என்றும் இவ்இளமை நீங்கா**" என்று எழுந்து அருளினாரே"

3. "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி."

ஐம்புலன்களை வென்றோர் ஆற்றலைக்கூறும் இக்குறளும் திருநீலகண்டருக்கே பொருந்துவதாகும்.

4. சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்(ற) ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

ஐம்பூதத்தின் மூலங்களையும், அவற்றின் ஆதிக்காரணத்தையும் அறிந்தோர்க்கே உலகத்தின் மெய்யியல்பு விளங்கும் என்பது இதன்பொருள்.

சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்ற தன் மாத்திரைகள் ஐந்தின் கூறுபாட்டை ஆராயப் புகுவோர் சித்தாந்தத் தத்துவங்கள் முப்பத்தாறையும் அறிந்து தெளிவர்.

சிவதத்துவம் ஐந்து, வித்யாதத்துவம் ஏழு, தன்மாத்திரை உள்ளிட்ட ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு ஆகிய முப்பத்தாறு தத்துவங்களையும், அவற்றுள் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்புகளையும், ஐயமறத் தெளிதலே உலகத்தின் இயல்பை அறிதலாகும். இவ்வாறு அறிந்தோர் மெய்யுணர்வினையும் அதன் பயனையும் பெற்றவர் ஆவர். அவ்வாறு பயனைப்பெற்றோர் பொய்யடிமையில்லாத புலவர்களே என்று சேக்கிழார் கூறுகின்றார்.

"செய்யுள் நிகழ் சொல்தெளிவும், செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே" எனத்துணிந்து
விளங்கியொளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை இல்லாத புலவர் எனப் புகழ்மிக்கார்"

இத்தகைய புலவோரே நாத மறைதந்து அளித்தாரை நடைநூல் பாவில் நவின்றேத்தும் "நாயன்மார்களாகும்."

5. அந்தணர் என்போர் அறவோர்மற்(று) எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

எல்லா உயிர்களிடத்தும் செவ்விய அருளுடன் இருப்பவர்களே அந்தணரென மதிக்கத்தக்கவராவர்.

மூலன் என்போன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது திடீரென இறந்துவிட்டான். அவன் பேணி மேய்த்த பசுக்கள் அவன் உடலைச் சுற்றி நின்று கதறின.

'' மற்றவன்தன் உடம்பினை அக் கோக்குலங்கள்
வந்தணைத்து சுற்றும்; மிகக் கதறுவன, சுழல்வன
மோப்பன வாக இருந்தன''

அச்சமயம் விண்வெளியில் சென்று கொண்டிருந்த சித்தர் ஒருவர் அக்காட்சியைக் கண்டார். இறக்கம் கொண்டு இறங்கி வந்தார். அச்சித்தர் இரக்கம் கொண்டது மூலன் என்ற மனிதன் இறந்தது கண்டல்ல, மிருகங்களாகிய பசுக்கள் கதறுவன கண்டே யாகும்.

ஆவுற்ற துயரை நீக்க மனங்கொண்டார். இறங்கி வந்து தன்யோக ஆற்றலால் மாண்டு கிடந்த மூலன் உடலில் புகுந்து அதனை உயிர்ப்பித்தார்; திருமூலரானார்.

'' பாய்த்தியபின் திருமூலராய் எழலும் பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கி மோந்து அணைந்து கனைப்பொடு நயந்து
வாய்த்து எழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளிப் பின்
நீத்த துயரினவாகி நிரைந்து போய் மேய்ந்தன''

இவ்வாறு பசுக்களின் துயர்கண்டு அதனை நீக்க அருள் கொண்ட திருமூலனாரே அந்தணர் என்று போற்றுவதற்கு உரிய வராவர்.

இவ்வாறே எஞ்சிய பாடல்களுக்கும் காணலாம் எனில் விரிவஞ்சி விடுத்தோம். இவ்வாறு திருத்தொண்டர்கள் தங்கள் அருட்பாடல்களினாலும் வாழ்ந்துகாட்டிய அறமற நெறிகளினாலும் நிறையுடைய மாந்தர்களாக மக்களுக்கு மறை வழிகாட்டினர். ஆகவே திருத்தொண்டர்களே நீத்த பெருமக்கள் எனக் கொண்டு போற்றுவோமாக. அவர்கள் நிறைமொழியே மறை மொழியாகக் கொள்வோமாக.

இவ்வழிநின்ற தமிழ்க் 'கா.சு.' அவர்கள் புகழ் வளர்க.

**கல்லாமை**

'' உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்''

கல்லாதவர்கள் உலகத்திலே இருக்கின்றார் என்ற அளவே கூறப்படுதற்கு உரியர்; மற்றப்படி அவர்கள் ஒன்றுக்கும் பயன் படாத களர் நிலம் போன்றவரே.

—**தமிழ்க் 'கா.சு.'**



# சொல்லும் முறையே வெல்லும்

தமிழ்ச்செல்வர் கோ. முத்துப்பிள்ளை

சொன்னயமும் பொருணயமும் பொதுள நூல்களை யாத்து வழங்கியுள்ளார்கள் நம் முன்னோர்கள். நன்னயமுணர்ந்து, அறநெறி சிறிதும் வழுவாது, தம் கால்வழியினர் சிறப்புற்று வாழ வேண்டுமென்பதிலே அவர்கள் கண்ணுங்கருத்துமாக விளங்கினர். பன்னயம் தோன்ற அவர்கள் விட்டுச் சென்ற புதையல்களின் எண்ணிக்கையை யாரேனும் தெரிந்து சொல்ல இயலுமா?

அறநெறிச்சாரம் என்னும் அரிய நூலை இயற்றிய முனைப்பாடியார் என்னும் முதுபெரும் புலவர் ''இனியவை கூறல்'' என்னும் அறநெறியை இனிமையான ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறார்.

> ''இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாகி
> வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
> அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய்''

என்று ஆணை பிறப்பித்து, அரிய பொருள் ஒன்றை எளிய, இனிய சொற்களிலே விளக்கிக் காட்டுகின்றார். நிலவுடைமை வேண்டும் என்று நித்தம் அலைந்து திரிவோர், முதற்கண் ''இன்சொல்'' எனும் விளை நிலத்தையே தேடிப் பெறுதல் வேண்டும். இந்த அரிய விளைநிலத்தில் ''ஈதல்'' என்னும் வித்தினைத் தூவுதல் வேண்டும். இன்சொல் விளையும் நிலமாகையால், அந் நிலத்திலிருந்து ''வன்சொல்'' என்னும் களையை வேரோடு களைதல் வேண்டும். அங்கே ''வாய்மை'' என்னும் எருவைக் கொட்டி, ''அன்பு'' என்னும் நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். வழுவின்றி அனைத்தையும் செய்த பின்னர், அறக் கதிர்கள் விளைந்து, அவை மாலை நேர மஞ்சள் வெயிலில் மகிழ்ச்சியாக அசைந்தாடுவதைக் கண்டு உன் உள்ளத்தில் கிளர்ச்சி கொள்வாயாக என்று களிப்பூட்டுகிறார் முனைப்பாடியார்.

இன்சொல் விளையும் நிலத்தை நாம் நேரில் காண்பதைப் போன்ற உணர்ச்சியில் திளைத்து நிற்கின்றோம்.

''இனியவை கூறல்'' என்னும் இந்த நல்ல பண்பை எல்லாரும் எளிதில் பின்பற்ற முடியுமா என்னும் வினா எழத்தான் செய்யும்! ''முடியும்'' என்னும் விடையைத் திட்பமாகத் தருகிறார் திருமூலர். இறைவனுக்குப் பச்சிலை தூவுதல், நல்ல பசுவிற்குப் புல்லுணவு ஊட்டுதல், உண்ணும்போது காகத்திற்கு ஒரு கைப் பிடி சோறு வைத்தல் ஆகிய இவையெல்லாம் எவ்வாறு இயலக் கூடியனவோ அவ்வாறே பிறரிடம் இன்னுரை பேசுவதும் எல் லார்க்கும் இயலக்கூடியதேயாகும் என்கிறார் அவர்.

இனிய சொற்களை விடுத்து, இன்னாச் சொற்களைக் கழறு தல் பெரும் பேதைமையாகும் என்று பேசுகின்றார் வள்ளுவர். ஔவையார் அருந்திய நெல்லிக்கனி போன்ற இன்சுவைக் கனிகளை ஏந்தி நிற்கின்றது எழில் மரம் ஒன்று. ஊர் நடுவே பழுத்த பயன் மரமாகும் அது. அதன் கனிகளை அருந்த ஆர்வங் கொள்ளாத ஒருவன், காஞ்சிரங்காய்போன்ற நச்சுக் காய்களைத் தேடியலைகின்றான். இவனது செயலை,

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''

என்று எடுத்துக்காட்டுகிறார் வள்ளுவர். கண்டனம் தெரிவிக்கக் கருதிய வள்ளுவர், அதனைக் கற்கண்டாக மாற்றிவிடுகிறார். இனியவை கூறலுக்கு இந்தப் பாடலே ஒரு சிறந்த சான்றாக அமைந்து விடுகிறது.

இன்சொல் இன்சொல்லிற்கே கட்டியம் கூறும், வன் சொல்லோ வன்சொல்லையே வரவழைக்கும். சில நேரங்களில், வன்சொற்கள் வன்செயல்களுக்குக்கூட வரவேற்பு கூறிவிடும். பிறர் கூறும் இனிய சொற்கள் தனக்கு இன்பம் விளைவிப்பதை உணரும் ஒருவன், அவற்றிற்கு மாறாகக் கடுஞ் சொற்களைப் பிறரிடம் வழங்குவது என்ன காரணம் பற்றியோ என்று வினவு கிறார் வள்ளுவர். பிறரெல்லாம் அறநெறியைப் போற்றவேண்டு மென்று விரும்புகின்ற ஒருவன், தான் மட்டும் புறநெறியைப் பற்றிச் செல்வது ஏனோ என்று எள்ளி நகையாடுகின்றார் அவர்.

இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வு கிடையாதா என்று கேட்கத் தோன்றும். கட்டாயம் உண்டு. அவரவர் கடமையை அவரவர் உணர்ந்து ஆற்றிவந்தால், வன்சொல்லைக் களைந்தெறிய வாய்ப்பு என்றும் உண்டு. இன்சொற்களுக்கு ஏற்ற சூழ்நிலை இயல்பாக அமைந்துவிடும்.

# குலோத்துங்கன் குறையும் நிறையும்



பேராசிரியர். அ. இராமசாமி

முதலாம் குலோத்துங்கன் அரியணை ஏறியது சோழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும் என்றும்; அவன் தேவையற்ற போர்களை நீக்கிவிட்டு, குடிமக்களின் தேவைகளைக் கவனித்தான் என்றும்; அவனுடைய ஆட்சியிலும், அதற்குப் பின்னரும், சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு சோழப் பேரரசில் அமைதி நிலவ வழிவகுத்தான் என்றும் வரலாற்றுப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். இது ஒரு தவறான மதிப்பீடு ஆகும்.

முதலாம் குலோத்துங்கன் சோழ அரியணை ஏறியது, சோழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும் என்பது உண்மை தான். ஆனால் எப்படிப்பட்ட திருப்புமுனை? சோழப் பேரரசுக் குப் பெருமைகளை மேலும் சேர்த்த வகையில் திருப்புமுனை? அல்லது சோழப் பேரரசை எல்லை சுருங்கிய அரசாக ஆக்கி அதைச் சிதைத்த வகையில் திருப்புமுனையா?

தேவையற்ற போர்களை குலோத்துங்கன் தவிர்த்துவிட் டான் என்பது அவனுடைய பெருமைகளில் ஒன்றாக, அவனுடைய இராசதந்திரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறப் படுகிறது. தேவையற்ற போர் என்பது எது? ஒரு பேரரசை உருவாக்குவதற்கும், உருவாக்கப்பட்ட பேரரசை உருக்குலை யாமல் பாதுகாப்பதற்கும் போர்கள் தேவையில்லையா?

சோழப் பேரரசிலிருந்து முதலில் ஈழமும், பின் கங்கபாடியும், வேங்கியும் பிரிந்து போனதைக் குலோத்துங்கன் தடுத்திருக்க வேண்டாமா? புதிதாக நாடுகளை வென்று பேரரசின் எல்லையை விரிவுபடுத்தாவிட்டாலும் இருப்பதையாவது ஒழுங்காக வைத்தி ருந்தானா? எதிரிகள் பேரரசை வெட்டிச் சிதைத்தபோது, அவன் கைகளை கட்டிக்கொண்டு பேசாமல் இருந்தானே......அதற்கு என்ன காரணம்?

சிங்கள விசயபாகு அறைகூவல் விட்டான்; சாளுக்கிய விக்கிரமாதித்தன் கேலி செய்தான். ஆனாலும் குலோத்துங் கனுக்குக் கோபம் வரவில்லை. அவன் போருக்குப் புறப்பட வில்லை...அதற்கு என்ன காரணம்?

பாண்டிநாடு, சேர நாடு, கலிங்க நாடு ஆகியவற்றின் சிற்றரசர்கள் கிளர்ச்சி செய்தபோது, சோழர்படை அங்கு சென்று வெற்றிகரமாக கிளர்ச்சியை அடக்கிவிட்டுத் திரும்பியது. அந்த சோழர் படை ஈழ நாட்டிற்கும், துங்கபத்திரை கரைக்கும் செல்லவில்லை; சிறிய போர்களை ஆவேசத்துடன் சந்திக்கச் சென்ற சோழர்படை, நங்கிலிப் போருக்குப் பின்பு, பெரிய போர்களைச் சந்திக்கச் செல்லவில்லையே......அதற்கு என்ன காரணம்?

இந்த கேள்விகளுக்கு எல்லாம் விடை ஒன்றுதான்: குலோத்துங்கனின் சுயநலம் தான் அதற்குக் காரணம். தான் ஏறிய சோழ அரியணையை தக்க வைத்துக் கொள்வதிலேயே அவன் கவனமாக இருந்தான் என்பதுதான் அதற்குக் காரணம். படைத் தலைவர்களின் உதவியுடன் சோழ அரியணையை அபகரித்துக் கொண்ட குலோத்துங்கன் பின்னர் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப வளைந்து கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டான். அதனால் படைத் தலைவர்களின் செல்வாக்கு வளரத் தொடங்கிவிட்டது. மேலும் அவர்கள் தங்களுக்குள் அரசியல் ஒப்பந்தம் செய்து கொள்ளும் அளவிற்குக்கூட வளர்ந்து விட்டனர். எனவே குலோத்துங்கன் ஈழநாட்டிற்கும், துங்க பத்திரை கரைக்கும் படை அனுப்ப விரும்பியிருந்தாலும், படைத் தலைவர்கள் மீது முந்தைய சோழப் பேரரசர்களைப் போன்று அவனுக்கு முழுக்கட்டுப்பாடு இல்லாத நிலையில் அவர்களைப் படையெடுத்துச் செல்லுமாறு ஆணையிட முடியாமற் போயிருக் கலாம்; அல்லது சோழநாட்டில் இருந்த நிலைமை அவனே படை யெடுப்புக்குத் தலைமை தாங்கிச் செல்லவிடாமல் தடுத்திருக்க லாம்.

எனவே பேரரசு சிதைந்து போனாலும் பரவாயில்லை; பேரரசின் அரியணையில் தான் நிலையாக அமர்ந்து கொண்டால் போதும் என்பதிலேயே அவன் கவனம் செலுத்தியதால்தான் பெரிய போர்களை தவிர்த்துவிட்டான். அதன் மூலம் பெருமை மிக்க தமிழ்ப் பேரரசின் சிதைவை அவன் தொடங்கி வைத்து விட்டான். அந்த சிதைவும் அவன் அரியணை ஏறியது முதலே தொடங்கி விட்டது.

குலோத்துங்கன் காலத்திலும் அவனுக்குப் பின்பும், சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு சோழப் பேரரசு பெரும்போர் எதையும் சந்திக்கவில்லை. அதனால் சோழ நாட்டில் அமைதி நிலவியது என்பதும் உண்மைதான். ஆனால் அந்த அமைதி பேரரசின் செயலற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்; அதைப் பயன்படுத்திக் கொண்டு படைத் தலைவர்களும், சிற்றரசர்களும் தங்களை வலுப்படுத்திக் கொண்டு மைய அரசை வலுவிழக்கச் செய்ய வழிவகுத்ததாகும்.

மேலும் அந்த அமைதி சோழரின் வீரத்தைச் செல்லரித்துக் கொல்லவந்த ஒன்றாகும்; அந்த அமைதி, வீரத்தை விலை பேசி

விட்டு, மந்திரத்தை நம்பி மனதைத் தேற்றிக் கொள்ளவேண்டிய நிலைக்கு சோழரை சுயபுத்தி இழக்கச் செய்த ஒன்றாகும்; அந்த அமைதி, சிங்களவன் செந்தமிழ் நாட்டிற்குள் படையெடுத்து வரும் அளவிற்கு தமிழரின் வீரத்தை தாழ்த்திவிட்ட ஒன்றாகும்; எனவே அந்த அமைதியின் ஊடே பேரரசின் அடித்தளம் ஆட்டம் போடத் தொடங்கி விட்டது என்பதே உண்மையாகும்.

முதலாம் குலோத்துங்கன் மொழிகள் பலகற்றவன்; முத்தமிழுக்கு ஏற்றம் தந்தவன்; இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவன்; இசை நூல் ஒன்று எழுதியவன்; கலைகளைப் போற்றியவன்; கவிஞர்களை ஆதரித்தவன்; சைவத்தைப் போற்றியவன்; வைணவத்தை ஏற்றியவன்; சமயங்கள் பிறவற்றையும் ஆதரித்தவன்; சிறந்த வீரன்; தலை சிறந்த தளபதி; நேசமிக்க நண்பன்; பாசமிக்கத் தந்தை; அன்புமிக்க கணவன்; மாண்புமிக்க மன்னன். ஆனாலும் அவன் அரசியல் விவேகமற்றவன்; அதனால் சோழப் பேரரசின் சிதைவுக்குக் காரணமானவன்.

முதலாம் குலோத்துங்கனுக்கு பட்டப்பெயர்கள் பல உண்டு; அவற்றில் ஒன்று திரிபுவன சக்கரவர்த்திகள் என்பதாகும். தமிழ் நாட்டில் திரிபுவன சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தை முதலில் சூட்டிக் கொண்டவனும் அவன்தான். இருக்கிற புவனத்தையே காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதவன், திரிபுவன சக்கரவர்த்திகள் என்று பட்டம் சூட்டிக் கொண்டது நல்ல கேலிக்கூத்தாகும்!

முதலாம் குலோத்துங்கனை முக்கால் பங்கு சோழன் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் தந்தை வழியே மரபுவழி என்ற நியதிப்படி குலோத்துங்கன் சாளுக்கியனே ஆவான். அதை எப்படிக் கூட்டினாலும், குறைத்தாலும் அவன் சாளுக்கியன்தான்; சோழன் அல்லன். அவன் சாளுக்கியனானாலும், சோழனாக வேடம் போட்டவன்; அந்த வேடத்தையும் வெற்றிகரமாக போட்டு முடித்தவன். அந்த வகையில் அவனை சாளுக்கிய சோழன் என்று குறிப்பிடுவது பொருத்தம் தான். அவன் சோழனாக இல்லாத காரணத்தால்தான், சோழப் பேரரசின் சிதைவைத் தடுப்பதில் ஆர்வம் காட்டாமல் இருந்தானா என்பது தெரியவில்லை. எப்படியாயினும் சோழப் பேரரசை நிருவாகம் செய்வதில் விசயலாயன் வாரிசுகளுக்கு இருந்த ஆற்றலை குலோத்துங்கனிடமும், அவனுடைய வாரிசுகளிடமும் காண முடியவில்லை என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது சரியாகும்.

மொத்தத்தில் குலோத்துங்கன் ஆட்சியில் சோழர்குலம் ஓங்கவும் இல்லை; புதிதாகப் புகழ் வாங்கவும் இல்லை; உண்மையில் முந்தைய பெருமைகள் கூட சரிவர காப்பாற்றப்படவில்லை.

---



# தேம்பாவணியின் இயற்கை வருணனை

**முனைவர். ச. சாமிமுத்து.**

இயற்கையின்றிக் கற்பனைக்குக் கவினில்லை; கற்பனை இன்றிக் கவிதைக்கு நீண்டகால வாழ்வு இல்லை.

இயற்கையின் அழகையெல்லாம் கவிதைக் குழந்தையின் பாதங்களாக்கி, மாந்தர்தம் நெஞ்ச உணர்ச்சிகளென்னும் திருவீதிகளிலே உலாவர விடுகின்ற பொழுதுதான் ஆர்வ நெஞ்சங்கள் அக்கவிதைக் குழந்தையை அள்ளியெடுத்து அரவணைத்துக்கொள்ளுகின்றன; பட்டு மேனியிலே முத்தமிட்டுப் பசிமறந்து வாழ்கின்றன.

இயற்கையன்னையின் திருக்கோலத்தைத் தேம்பாவணிக் காப்பியப் பாக்களிலே வீரமாமுனிவர் வடித்துத் தந்திருக்கும் வகையினை—வளத்தினைக் கண்டின்புறுவது இலக்கிய கலை வல்லார்க்கு வாய்த்த நற்பேறாகும்.

பெத்லேகம் அருகில் இருந்த மலைக்குகையில், மார்கழி மாதம் இருபத்தைந்தாம் நாள் நடுச்சாம வேளையில் கன்னிமரியின் திருவயிற்றிலிருந்து பிறந்த இறைமகன் இயேசுவை, நாற்பது நாட்கள் கழிந்தபிறகு பிதாவாகிய இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்க வேணடுமென்னும் பெரும் வேட்கையால் உந்தப்பெற்ற மாதவமுனிவராகிய சூசையப்பரும் தேவ அன்னையாகிய மரியம்மையும் செருசலேம் நோக்கிப் புறப்பட்டார்கள். அனிச்ச மலர்போல் மெல்லிய பாதங்களையுடைய கன்னித்தாயும் மாதவராகிய சூசைமாமுனியும் மேகத்தின் வடிவாகிய தேவமகனை ஏந்திக்கொண்டு வழிநடந்தார்கள் என்கின்றார் வீரமாமுனிவர்.

திருக்குடும்பத்தினர் மூவரும் சென்ற வழியெங்கும் பன்னிற வண்டுகள் யாழோசைபோல் இசையெழுப்ப அவ்வோசைக்கேற்ப மயில்கள் ஆடியது ஒரு கூத்துப்போல் தோன்றியது. கருங்குயில்கள் கானம் இசைக்கும் தீங்குரல் கேட்டது. மலர்ந்த மலர்களெல்லாம் தேனைச் சொட்டிக்கொண்டேயிருந்தன. அகன்ற கரையையுடைய நீர்த்தடாகங்களில் தேன்துளிகள் வீழ்ந்து நிறைந்த வண்ணம் இருந்தன. அவைகளில் மலர்கள் இனிய மணத்தைப் பரப்பிக்கொண்டேயிருந்தன.

மேலும், அழகிய மணப்புகை சூழ்ந்த ஆடைபோல கருந் தளிர்களோடு மலர்ந்த மலர்களை உடைய மரங்கள் அம்பு களைச் செலுத்துகின்ற வில் வளைவதைப்போல் அம்மூவரின் அடிகளையும் வளைந்து தாழ்ந்து தொழுதன. தடாகங்கள் தங்களின் தாமரைக் கரங்களால் தண்ணிய தாட்களைத் தாங் கொண்ணா மகிழ்ச்சியால் இணங்கி வணங்கின. மடப்பக் குணமார்ந்த மாதர்கள் அழகுறத் தாங்கள் அணிந்த ஆபரணங் களைத் தாங்கமாட்டாமல் அவர்களின் அரிய சிற்றிடை துவளுவது போல் கொத்துக் கொத்தாகக் கூடி மலர்ந்த மலர் களைத் தாங்கமாட்டாத அழகிய பூங்கொடிகள் மகிழ்வாக ஊஞ்சலாடுவதைப்போல் துவண்டு அசைந்து, பழுத்த கனி களைத் தாங்கமாட்டாமல் வளைந்த மரக்கிளைகளின்மேல் விழுந்து சாய்ந்தன.

இவ்வாறு இயற்கை எழில்மிக்க இடங்களைக் கடந்து சென்று அம்மூவரும் செருசலேம் நகரை அடைந்தார்கள். அடுத்தநாள், தேவன்முன் தங்கள் திருக்குழந்தையைக் காணிக் கையாக வைத்து அவ்விருவரும் வணங்கினார்கள். அப்பொழுது சமயத்தலைவர் சிமியோன் பேரன்புகொண்டு குழந்தை இயேசுவைப் பணிந்து மகிழ்ந்தார். பிறகு, தமது தெளிந்த காட்சியால் இறைமகனாகிய இயேசு படவிருக்கும் பாடுகளைக் குறிப்பால் உணர்த்த மரியம்மையும் சூசையப்பரும் துன்பக் கடலில் மூழ்கித் துடித்தனர்.

எட்டு நாள்வரைக்கும் அவ்வெழில்நகரில் தங்கி இறைவனை நாளும் தொழ அவர்களோ நனிவிரும்பினர். ஆயினும் ஐந்தாம் நாள் இரவு தேவதூதன் சூசையப்பரின் தூக்கத்தில் தோன்றி, ஏரோது அரசன் தேவகுமாரனைக் "கொல்லத் திட்டமிட்டிருந்த செய்தியை, "வேல்வேந்தன் இளவல் கோறல் உள்ளினன்', என்றான். அதனால் தேனைப் பொழியும் யூதேயா நாட்டை விட்டகன்று எகிப்து நாட்டிற்குச் செல்லவேண்டும் என்பது கடவுளின் கட்டளையென்றுங் கூறினான்.

திருக்குமாரனோ நிழலின்கண் வளர்ந்து அலர்ந்து அழகுடன் விளங்கும் மலரைப்போல் இளமை மிக்கவர். தேவதாயோ நிறைந்த பூக்களைச் சுமந்துகொண்டு இருக்கின்ற பூங்கொடியை யொத்த மென்மைத் தன்மை வாய்ந்தவர்கள். எகிப்து நாட்டின் தூரமோ எண்ணுதற்கு அரியது. இவற்றையெல்லாம் மனக்கண் முன் கொண்டு வந்து சூசையப்பர் வருந்தியதை,

> "புலி நிழல்பட்டு ஏங்கியமான் போல
> ஏங்கிப் புலம்பினன்"

என்கின்றார் தேம்பாவணி யாசிரியர்.

இச்செய்தியினை வளனார் மரியன்னைக்கு உணர்த்த, அவர் களும் தீயில்பட்ட பூங்கொடிபோல் வாடினார்கள். வேறு வழியில்லாமையால், இரவில் நடுயாம நேரத்தில் ஊரே உறக்கத் தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் அவ்விருவரும் தேவத்திருக்

குழந்தையைத் தூக்கிக்கொண்டு கண்ணீர் சிந்திய வண்ணம் செருசலேம் நகர் வீதிகளைக் கடந்து நடந்தனர். புலம்பிக் கொண்டேபுறநகர் கடந்தனர். அப்பொழுது விண்ணிலேமின்னிய மீன் கூட்டங்கள் அப்பாலகனைப் பார்க்கும் ஆசையால் நிறைய பூத்தன. அவ்வாறு பூத்த அவ்விண்மீன்கள் வானத்தின் கண்கள் போல் விளங்கின.

நெருப்பு மழையாகப் பெய்த பொழுது மேகங்களும் விண் மீன்களும் வெந்தனவாம்! சூரியனும் சுட்டெரிக்கப்பட்டானாம்! மனமும் மகிழ்விழந்த கண்களும் வெந்துபோயினவாம்.

இடிகள்பட்டு இறந்தோர் சிலர். மலைகளினின்றும் தாண்டி விழுந்து மாண்டோர் சிலர். தகர்ந்த மாளிகைகளில் சிக்கித் தவித்தோர் சிலர். மீதி யிருந்தோர் பரந்து நிறைந்த நெருப்பு வெள்ளத்தில் எரிந்து போயினராம். அவ்வாறு ஒரு காலத்தில் எரிந்த நகரங்கள்தாம் அங்குத் தோன்றிய வெண்சாம்பல் மேடென்று அத்தேவதூதன் விளம்பினான்.

ஒருதாய் தன் குழந்தையைக் கொலைசெய்யக் கொடுக்க மறுத்தாள். அன்பின் மிகுதியால் அவள் பிள்ளையை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அதைக் கண்ட ஒரு கொடிய வீரன் தாயையும் குழந்தையையும் சேர்த்துக் குத்தினான். அவ்வாறு குத்த, ஊடுருவிப் பாய்ந்த ஒரு வாள் வழியே ஈருயிர்கள் மாய்ந்தன. அதை ''முகை எழிலோடு ஓர்கொடி படுவபோல் அவர் வீழ்வரே'' என்று புலவர் பாடுகின்றார். மலராத ஓர் அழகிய பூங்கொடி வெட்டுண்டு வீழ்ந்தாற்போல் அப்பிள்ளையோடு அத்தாய் வீழ்ந்தாளாம்.

எங்கும் அழுகைக் குரல் எழுந்தது. கருணையுள்ள தாய்மார்களின் கண்களிலிருந்து வழிந்தது கண்ணீர்! குமுதவாய் திறந்த குறுநகை புரிந்த குழந்தைகளின் மலருடம்புகளிலிருந்து வழிந்தது செந்நீர்.

வீரமாமுனிவரின் இயற்கை ஈடுபாடு அவர்தம் பைந்தமிழ்ப் பாக்களிலே பாங்குறத் தோன்றுகின்றது, விலங்குகளையும், பறவைகளையும், மரம் செடி கொடிகளையும் மலைகளையும் ஆறுகளையும் கடல்களையும் நல்லோர்தம் வாழ்க்கைக்கு உற்ற நண்பர்களாக காட்டும் இக்காப்பியப் புலவரின் கவித்திறம் இலக்கியச் சுவைஞர்க்கு வியப்பூட்டுகின்றது.

# நான் கண்ட நடுகற்கள்



பண்டுவர். இரா. கலைக்கோவன்

நாட்டுக்காகவோ, ஊருக்காகவோ, குடும்பத்துக்காகவோ அல்லது தனியாருக்காகவோ, ஏதேனும் ஒருவகையில், வீரத்தை வெளிப்படுத்தித் தம் இன்னுயிரைத் தியாகம் செய்யும் வீரப் பெருமக்களின் நினைவு போற்றி எடுக்கப்பட்ட வழிபாட்டுச் சின்னங்களே நடுகற்கள். நடுகல் எடுக்கும் பழக்கம் நம் நாட்டில் மிகப் பழங்காலம் தொட்டே இருந்து வந்தது என்பதற்குத் தொல்காப்பியம் ஒரு முழுமையான சான்றாகும். காட்சி, கால் கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்துதல் என்று அறுவகையான நிலைகளைக் கடந்து நடுகல் எடுக்கும் மரபு நிலவியதைத் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார். பின்னால் வந்த புறப்பொருள் வெண்பா மாலை இந்த நிலைகளை மிக அழகுபட விவரிக்கிறது.

வீரன் ஒருவனுக்கு நடுகல் எடுக்க விரும்பும் ஊராருடன், மறவரும், பாணரும், கூத்தரும் மற்றும் பலரும் நல்ல கல்லைத் தேடிச் செல்வர். கல்லைத் தேர்ந்ததும் மாலையும், மலரும், மதுவுமிட்டு அக்கல்லைக் கொள்வர். அப்போது மணியும் பறையும் ஒலிக்கும். கொண்ட கல்லை வண்டியிலேற்றிக் கொணர்ந்து அதை நீரில் அமிழ்த்திக் குளிரவைத்து நீராட்டுவர். வெம்மை தணிந்த கல் குளிர்ந்த நிலையில், அதில் வீரனின் பெயரும் வடிவும் எழுதி, அதற்கு மீட்டும் மலரும், மதுவும், செம்மறியாட்டுப் பலியும் தந்து மயிற்பீலி சூட்டி, படலை சாற்றிப் பல்லியம் இயம்ப நடுவர். இப்படி நடப்பட்ட கல்லுக்குக் கோயில் எடுப்பதைப் பெரும்படை என்பர். நட்டவரும் பிறரும் அக்கல்லைப் போற்றி வாழ்த்துவர்.

இந்நடுகற் பழக்கம் சங்க காலத்தில் பரவலாகக் காணப்பட்டமைக்குப் புறநானூற்றுப் பாடல்கள் பல சான்றுகளாய் நிற்கின்றன. பின்னால் வந்த பல்லவர்கள், அவர்களைத் தொடர்ந்த சோழர்கள், அதன் பின் ஆண்ட பாண்டியர்கள், இடையில் நின்ற பாணர்கள், வேளிர்கள் ஆகிய இவர்கள் காலங்களிலும் வீரக்கல் எடுக்கும் பழக்கம் பெரும் சிறப்போடு பின்பற்றப்பட்டது. இம்மரபு வழிகளுக்குரிய மன்னர்கள் கால நடுகற்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் கிடைத்துள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் துணை இயக்குநர் திரு. நடனகாசிநாதன் அவர்கள் வீரக்கற்களைப் பற்றிய தன்னுடைய நூலொன்றில், தமிழகமெங்கும் வீரக்கற்கள் கிடைத்த போதிலும், தஞ்சை மாவட்டத்தில் ஒன்றுகூடக் கிடைத்திலது என்றும், திருச்சி மாவட்டத்தில் கரூரில் மட்டும் இரண்டே நடுகற்கள் கிடைத்துள்ளன என்றும் குறிப் பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் டாக்டர் மா. இராசமாணிக்க னார் வரலாற்றுப் பேரவையினர் ஐந்து நடுகற்களைத் திருச்சி மாநகரின் அண்மைப் பகுதிகளில் இருந்து கண்டறிந்து வெளிப் படுத்தியுள்ளனர். இவையனைத்துமே ஏறத்தாழ கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டின ஆகலாம். இவற்றுள் முதல் நடுகல் கிடைத்த இடம் அழுந்தூர்.

திருச்சி மேலூர் சாலையில் மணிகண்டத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது அழுந்தூர். இங்கிருந்து வலப்பக்கம் பிரியும் மண் சாலையில் மூன்று கிலோ மீட்டர் உள்ளே போனால், அடர்ந்த இரு பெரும் மரங்களின் நிழலில், ஓர் அழகுக் கோயில் அனாதையாய் நிற்பதைப் பார்க்கலாம். இதுதான் அருள்மிகு வரகுணீசுவரம். இக் கோயிலைக் கண்டு பிடித்து வரலாற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த நிலையில் தான், பக்கத்துப் பகுதிகளை ஆராயும் முனைப்பு தோன்றியது. இக்கோயிலில் இருந்து அரைக்கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிடாரித் தோப்பு, தென்னை மரங்கள் சூழ்ந்த ஒரு தனித்த பகுதி. இங்கு உடைந்த நிலையில் எழுவர் நங்கையர் சிற்பங்கள் சில காணப்படுகின்றன. இந்தத் தோப்பில்தான், சிதிலமான நிலையில், பொரிந்து போயிருந்த நடுகல்லொன்றினை இப்பேர வையினர் கண்டுபிடித்தனர். இச்சிற்பம் தமிழகத்தில் பண்டு நிலவி வந்த நவகண்டம் கொடுக்கும் பழக்கத்தின் அடிப்படையில் உருவானதாகும். அவிப்பலி என்ற சொற்றொடரால் இப்பழக் கத்தின் வேரைத் தொல்காப்பியம் அடையாளம் காட்டுகிறது.

கொற்றவையிடம் எதையேனும் வேண்டிக் கொண்டு, அவ் வேண்டுதல் நிறைவேறினால், தன் தலையைத் தானே அரிந்து தேவிக்குப் பலியிடுவதாகச் சூளுரைத்துக் கேட்டது நிறைவேறிய நிலையில், வேண்டுதலின் வண்ணம், தலையைத் தத்தம் செய்யும் வீரப்பெரும் பண்பு அன்றைய தமிழரிடம் அதிகமாய் இருந்தது. இந்த வீர வழக்கத்தையே நவகண்டம் கொடுப்பது என்று கல் வெட்டுகள் உணர்த்துகின்றன. இத்தகு நவகண்டச் சிற்பமே அழுந்தூர் பிடாரித் தோப்பில் கிடைத்த முதல் வீரக்கல்லாகும்.

இச்சிற்பத்தில் இளைஞர் ஒருவர் குத்துக் காலிட்டு, அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். வலக்கால் மடித்தபடியிருக்க, இடக்காலைக் குத்துக் காலாக வைத்து உட்கார்ந்திருக்கும் இவரின் இடக்கை, தலை முடியைப் பிடித்திருந்த நிலையில் விரைப்பாக உள்ளது. வலக்கை, கத்தியால் கழுத்தை அறுக்கும் மெய்ப்பாட்டில் காட்டப்பட்டுள்ளது. சிற்பம் அதிகமாகப்

பொறிந்துள்ளதால், மேற்கொண்டு நுண்ணிய விவரங்களைப் பெற இயலவில்லை. இச்சிற்பத்தின் அடியில் பாதியழிந்து போன கல்வெட்டொன்று அரைகுறையாகக் காணப்படுகிறது. இக்கல் வெட்டு வரியால் இந்த வீர இளைஞனின் பெயர் குள்ளையன் என்பது தெரிய வருகிறது.

இரண்டாவது வீரக்கல்லும் நவகண்டச் சிற்பந்தான். இது திருச்சி குமார வயலூர் சாலையில், உய்ய கொண்டான் திருமலை திருக்கோயிலுக்கு அருகில் வயலோரத்துச் சாலையில், முக்கால் வாசிக்கு மேல் மண்ணில் புதைந்து, வெறும் தலைப்பகுதி மட்டும் தெரிந்த நிலையில் காணப்பட்டது. இப்படியொரு சிற்பம் இங்குப் புதையுண்டிருப்பது பற்றித் தகவல் தந்தவர் சோமரசம் பேட்டை மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. தமிழகன். இவரது செய்தியும், கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களின் கடுமையான உழைப்பும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையி னரின் மேற்பார்வையில் ஓர் அற்புதமான நடுக்கல்லை அருங் காட்சியகத்திற்கு வழங்கின.

130 சென்டி மீட்டர் உயரமும் 45 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட இந்த நடுகல் ஒரு வீரனின் நின்ற கோலத்தைக் காட்டு கிறது. நாற்பது சென்டி மீட்டர் உயரமுள்ள தளத்தின் மீது வீரனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இடக்கை தலை முடியை உறுதியாய்ப் பற்றியிருக்க, வலக்கை வாளொன்றால் கழுத்தையறுப்பது போல் காட்டப்பட்டுள்ளது. கழுத்து பாதி அறுபட்ட நிலையில், வாள் இடப்புறமாகக் கழுத்தைத் துளைத் துக் கொண்டு போகிறது. முகம் நீண்ட உருண்டை வடிவில் உள்ளது. செவிகள் அரிக்கப்பட்டுள்ளன.

வாகுவளையம், சரப்பளி, வீரக்கழல் போன்ற அணிகலன் களுடன் இடுப்பில் அரையாடையும், அதிலொரு கூர்மையான வாளும் கொண்டுள்ள இவ்வீரனின் இரு பாதங்களுமே வலப்புறம் திரும்பியுள்ளன. இந்த நவகண்டச் சிற்பத்தை ஊரார் 'சாவாங்கல்லு' என்று அழைக்கிறார்கள். ஊரில் யாரும் இறந்துபட்டால், அவர்களது உடலை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது, இந்தச் சாவாங்கல்லுக்கு அருகே கொணர்ந்து, இதை வழிபட்டுச் சில காசுகளை இங்கே காணிக்கையாகப் போட்டு விட்டுச் செல்வது மரபாம். இந் நடு கல் ஓர் இடுகாட்டுத் தெய்வமாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ள நிலை வியப்பையே தருகிறது.

மூன்றாவது வீரக்கல், திருச்சி லால்குடி சாலையில், வாளாடி மேல்நிலைப் பள்ளிக்கருகில் சாலையோரத்திலுள்ள மரத்தடியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டது. இது இங்குப் புதையுண்டிருக் கும் செய்தியையும் திரு. தமிழகனே தெரிவித்தார். லால்குடி ஆணையரின் மேற்பார்வையில், கி.ஆ.பெ. விசுவநாதம் மேல் நிலைப்பள்ளியைச் சேர்ந்த நாட்டுநலப் பணிதிட்ட மாணவர்கள் அவர்தம் ஆசிரியர் திரு. இரா. இராசேந்திரன் ஆகியோர்,




<—உய்யக் கொண்டான் திருமலை அருகே அகழ்ந்தெடுக்கப்பட்ட ''நவகண்டச் சிற்பம்''



அழுந்தூர் அருகே அகழ்ந்தெடுக்கப்பட்ட நவகண்டச் சிற்பம். —>



<—திருவானைக்கா கோபுர வாயிலருகே காணப்படும் நவகண்டச் சிற்பம்.



உய்யக்கொண்டான் திருமலை அருகே அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு கல் நவகண்டச் சிற்பம்.



வாளாடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடுகல்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைப்பதிவு அலுவலர் திரு. அ. அப்துல்மசீது, உதவியாளர் திரு. ச. நடராசன் ஆகியோர் ஒத்துழைப்புடன் இவ்வரிய சிற்பத்தை வெளியில் கொணர்ந்தனர்.

ஏறத்தாழக் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக மதிப்பிடத்தக்க இச்சிற்பம் வெகுகாலம் மண்ணுக்குள் புதைந் திருந்தமையால் மிகவும் பொரிந்த நிலையில் காணப்படுகிறது. அறுபது சென்டிமீட்டர் உயரமும், இருபது சென்டி மீட்டர் அகலமும், ஏறத்தாழ இரண்டு டன் எடையுமுள்ள இச்சிற்பத்தில் இரண்டு மனித உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. ஓர் உருவம் பெரிய அளவினதாய் நின்ற கோலத்தில் உள்ளது. இடக்கால் நேராக ஊன்றியிருக்க, வலக்கால் முன்னால் நீட்டப்பட்டு, முழங் காலருகே இலேசாக மடிந்த தோற்றத்தில் உள்ளது. வலக்கை தலைக்கருகே உயர்ந்து குறுவாளொன்றை எறியும் அமைப்பில் இருக்க, இடக்கை முழுவதுமாய் நீட்டப்பட்டுள்ளது. இவ்வுரு வத்தின் பக்கத்தில் இருக்கும் மனித வடிவம் சிறிய அளவினதாய் நின்ற கோலத்தில் காணப்படுகிறது.

குறுவாளை எறியும் தோற்றத்தில் காணப்படும் இவ்வீர வடிவம் போரொன்றில் தன்னுயிரைத் தியாகம் செய்த பெரு மகனாய் இருக்க வேண்டும். இந்தச் சிற்பமும் வாளாடிப் பெரு மக்களுக்குச் சாவாங்கல்லாகப் பயன்பட்டு வந்ததை அறிய நேர்ந்தபோது, வீரக்கற்கள் சுடுகாட்டுத் தெய்வங்களாகப் போற்றப்பட்டு வந்த பழக்கம் பல ஊர்களில் ஆழமாய் வேரூன்றியிருப்பதை உணர முடிந்தது.

இம் மூன்று வீரக்கற்களையும் புதையுண்டிருந்த இடங்களி லிருந்து அகழ்ந்தெடுத்து அருங்காட்சியகத்திற்குச் சேர்க்கும் பணிக்கு உற்றுழி உதவிய பெருந்தகை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்த திருமிகு. வ. விசுவநாதன் அவர்கள்தான். திருச்சியின் வரலாற்றுக்கு மேலும் சில புகழ்மிக்க வரிகளைச் சேர்க்க அன்னாரது அன்பும் அரவணைப்பும் பெரிதும் உதவின.

திருவானைக்காவல் திருக்கோயிலின் முதற்கோபுர வாயிலின் இடப் புறத்தே, கேட்பாரற்ற நிலையில் ஓர் அழகிய சிற்பம் அனாதையாய் நிற்கிறது. இதுதான் டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றுப் பேரவை, வரலாற்று உலகிற்கு வெளிப்படுத்திய நான்காவது வீரக்கல். இப்பேரவையினர் இது வரை கண்டுபிடித்த வீரக் கற்களிலேயே அழகும், தெளிவும் சிறந்த செதுக்குத் திறனும் நிறைந்ததாய்க் காணப்படும் இச் சிற்பம், வீரனொருவன் நின்ற நிலையில் நவகண்டம் கொடுப்பது போல் அவைந்துள்ளது. 1.5 மீட்டர் உயரமும், அரை மீட்டர் அகலமும் உள்ள இந்த ஆண் வடிவத்தின் முகத்தில் வீரமும் கோபமும் கொந்தளிக்கின்றன. தலையில் சடாமகுடம். கழுத் திலும் கைகளிலும் பல்வேறு அணிகலன்கள். இடுப்பில் மடித்துக் கட்டிய ஆடை, அது நழுவாதிருக்க ஒரு கச்சு. இந்த இடுப்புக் கச்சில் ஒரு குறுவாள் செருகப்பட்டுள்ளது. இடக்கை தலை

முடியை இழுத்துப் பிடித்திருக்கும் நிலையில், வலக்கையில் இருக்கும் கத்தி கழுத்தை ஊடுருவியுள்ளது. இக்கத்தியின் மறுமுனை கழுத்து அறுபட்ட நிலையில், உடலின் இடப்புறம் நீண்டுள்ளமை மிக இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் திருவாசி மாற்றுரை வரதீசுவரர் திருக் கோயிலில் ஒரு வீரக்கல் பார்த்தறியப்பட்டது. மையக் கோயிலை சுற்றியுள்ள உட்சுற்றின், தென்புறத் திருநடை மாளிகையின் தென்கிழக்குக் கோடியில், எழுவர் அன்னையர் சிற்பங்களை யடுத்து இச் சிற்பம் காணப்படுகிறது· இதை 'மாமுண்டி' என்ற பெயரால் ஊரார் வணங்குகிறார்கள். ஆண் வடிவம் ஒன்று வலக்காலைக் குத்துக் காலாய் வைத்து இடக்காலை முழங்கால் அளவில் மடித்து மண்டியிட்டு அமர்ந்த நிலையில் காட்சியளிக் கிறது. இவ்வடிவத்தின் இடக்கை உயர்ந்து, தலைமுடியை இழுத்துப் பிடித்த நிலையில் இருக்க, வலக்கை, வாளொன்றால் கழுத்தை அறுத்த நிலையில் உள்ளது. கழுத்தை அறுத்துக் கொண்டு கத்தி இடப்புறம் நீண்டுள்ளது. எடுப்பான நாசியும், சினமும் வீரமும் நிறைந்திலங்கும் முகத்தோற்றமும், அடர்ந்த மீசையும் இவ்வடிவத்தின் எழிலுக்கு எழில் சேர்க்கின்றன. இடது தோளிலிருந்து சவுக்கு போன்ற ஒரு பொருள் தொங்குகிறது. கைகளில் கங்கணம், தோள்களில் வாகு வளையம், இடுப்பில் தொங்கலோடு கூடிய அரையாடை என்று அழகுபடக் காட்சி தரும் இச்சிற்பம் மக்களின் வழிபாட்டில் உள்ளது. இதன் சிற்பச் செறிவு கொண்டு பார்க்கும்போது, இதையும் ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு நடுகல்லாகவே கொள்ளத் தோன்றுகிறது.

இந்த ஐந்து நடுகற்களும் திருச்சிக்கு மிக அண்மையிலுள்ள இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. இவை ஐந்துமே ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்தவை. இவற்றுள் நான்கு, நவகண்டச் சிற்பங்கள், ஒன்றுபோர் வீரனின் நடுகல். இவ்வைந்து வீரக்கற்களின் கண்டுபிடிப்பால், தமிழ்கத் தின் பிறபகுதிகள் போலவே, திருச்சியிலும் அதன் சுற்றுப் புறங் களிலும் கூட நடுகல் வழிபாடு செழிப்பாக இருந்ததையும், குறிப் பாகக் கொற்றவை வணக்கமும், தன்னைத்தானே சூள் முடித்துப் பலி கொடுத்துக் கொள்ளும் நவ கண்டப் பழக்கமும், மிக அதிக அளவில், ஆழமான ஈடுபாட்டுடன் பின்பற்றப்பட்டு வந்ததையும் அறிய முடிகிறது. திருச்சியின் நான்கு திசைகளில் இருந்தும் இந்த நவகண்டச் சிற்பங்கள் கிடைத்துள்ளதால், ஆய்வுகள் மேலும் முனைப்பானால், இதுபோல் பல இனியும் கிடைக்கலாம் என்பதும், தமிழகத்தின் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களில், திருச்சியும் அதன் சுற்றுப் புறங்களும், பிற மாவட்டங்களுக்கு இணையான பங்கு வகித்ததை அதன் வழி மெய்ப்பிக்கலாம் என்பதும் உறுதியாகும்.



# புலவர்க்கு அறிவுரை

முனைவர் ந. சுப்பு ரெட்டியார்

தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்தையும் நீதிநூல் காலத்தையும் அடுத்துத் தெளிவாகக் காணப்படுவது பக்தி இலக்கிய காலம் ஆகும். கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சைவசமய பெரியவர்களான நாயன்மார்களும் வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடிப் பக்தி இலக்கியக் கருவூலத்தை நிரப்பியவர்கள். இறைவனைப் பற்றிய பாடல்கள் பெருகிவரும் காலத்தில் கல்வி நிரம்பிய புலவர்கள் வறுமையால் வாடிச் செல்வர்களை நாடிச் சென்றனர். அவர்களின் புகழைப்பாடி, அவர்கள் நல்கின சிறு பொருளைப் பெற்று மகிழ்ந்தனர். தங்களின் அருமையான கவிதை பாடும் திறனை இப்படிச் செல்வரின் பொருளுக்காக விற்று வந்தது நம்மாழ்வார் என்று புகழோங்கிய சடகோபரின் உள்ளத்தற்கு வெறுப்பைத் தந்தது. இங்ஙனமே சைவப் பெரியாராகிய தம்பிரான் சோழர் என்று புகழோங்கி நின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகட்கும் வெறுப்பு ஏற்பட்டது. இருவருமே இத்தகைய புலவர்கட்குத் தத்தம் பதிகங்களின் அறிவுரை கூறுகின்றனர்.

புலவர்களின் இந்த இழிநிலைமையை நினைந்து அவர்களைத் திருத்திப் பணி கொள்ள நினைக்கிறார் ஆழ்வார்.

'பால் குடிக்கக் கால் பிடிப்பாரைப் போலே பகவத் விஷயத்தைக் கேட்பதற்குக் கால் பிடிக்கின்றார்' என்பது நம் பிள்ளை ஈடு. நான் சொல்வதைக் கேட்டபின் அப்படியே அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுதல் வேண்டா; கடைப் பிடிக்கலாம் அல்லது கடைப்பிடியாதொழியலாம்; என் சொற்களுக்குக் காது கொடுத்தால் போதும். கடலோசைக்குக் காது கொடுக்கின்ற நீங்கள் அப்படியே என் சொற்களுக்கும் காது கொடுக்கலாகாதோ?' என்ற கருத்துகள் 'கேண்மினோ' என்பதால் பெறப்படுகின்றது என்பதை நாம நுணுகி அறிதல் வேண்டும். அடுத்து ஆழ்வார் பேசுவது;

என்நாவில் இன்கவி யான்தரு
வர்க்கும் கொடுக்கிலேன்
'தென்னா தெனா' என்று வண்டுமுரல்
திருவேங் கடத்து
என்ஆனை என்அப்பன் எம்பெரு
மானுள வாகவே(1)

இதமுரைக்க இழிந்த் ஆழ்வார் அவர்கட்கு ருசி பிறக்கைக்காக தம்முடை மதத்தை முந்துற முன்னம் அருளிசெய்கின்றார். அடுத்த அடிகளில் அவர்கள் செய்ய வேண்டியதை அருளிச்செய்யாமல் தம்முடைய நிலையைப் பேசுவது அவர்கள் சீறுவார்களோ என்ற அச்சத்தால் போலும். வழிதவறிப் போகின்றவர்கள் சரியான வழியிலே போவான் ஒருவனைக் கண்டால் தாமும் அங்ஙனமே போக வேண்டுமென்று ஆசைப்படுவார்களல்லவா? அதற்காகத்தான் தம் நிலையை எடுத்துக்காட்டுகின்றார் என்று கொள்ளலாம்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர்ப் பாடுமின் புலவர்காள் (1)

என்று பேசுவார், 'தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும் சார்ந்து நின்றாலும் பொருள்தர மனம் வராத செல்வரைப் பாடாமல் சிவனுடைய ஊரைப்பாடுங்கள்(புகலூர்) கோயிலைப் பாடுங்கள்' என்கின்றார்.

ஆழ்வார் தம் கவிதையில் திருக்குறுங்குடி எம்பெருமானைக் குறித்துக் கவி பாடவேண்டும் என்கிறார்.

இவ்வாறு சமயப் பெரியார்களின் அறிவுரையைச் செவிமடுத்த பிறகு அவற்றைச் சிந்தித்தும் தம் அநுபவத்தையொட்டியும் பிற்காலக் கவிஞர் ஒருவர்,

கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்;
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானை புலியேறு என்றேன்;
மல்லாரும் புயம்என்றேன்; சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாத சொல்தனுக்கு இல்லை என்றான்;
யானும்என் குற்றத்தால் ஏகின் றேனே!

என்று கூறுவார். ஆகையால் இக்காலக் கவிஞர்களில் பெரும்பாலோர் செல்வர்களையும் அரசியல்வாதிகளையும் அமைச்சர் பெருமக்களையும் 'வாய் கொண்டு' (வாய்க்கு வந்தபடி) பாடி வருவதையும் அவர்கள் பற்றிப் பிள்ளைத் தமிழ் போன்ற பிரபந்தங்களைப் பாடி மகிழ்வதையும் காண்கின்றோம். நெய்க் குடத்தை எறும்புகள் சுற்றித் திரிவதுபோல இப் பெருமக்களைச் சுற்றித் திரியும் இவர்கட்கு இறைவன்தான் அறிவு கொளுத்த வேண்டும். இவ்வுலகில் இவர்களைத் தடுத்து நிறுத்துவார் ஒருவரும் இலர். கா.சு. பிள்ளையும் புகழுடன் வாழ்ந்தார். காசுக்காகப் பாடாத பெருமகனார் அவர். அவர் நமக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக நின்று நம்மை வாழ்த்துபவராக அமைந்து திகழட்டும். ○○

# அகாலி என்னும் ஓர் அறம்



ஃ மேஜர் ஃ தி.சா. ராஜூ ஃ

''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை.''

(துறவறவியல்)

மனித குலம் தோன்றியதிலிருந்து இன்று வரை இந்த மண்ணில் பல வாழ் முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சில அவை தோன்றிய நாடுகளிலேயே மறைந்து விட்டன. மற்றும் சில அதைப் பின்பற்றும் மக்களாலேயே அழிக்கப்பட்டன, வன் முறையாலும்—நன் முறையாலும்.

எத்தகைய வாழ்க்கை நெறியும் அதைத் துவக்கியவரின் சீரான நடத்தை, சொல் தூய்மை, அன்பு, அவர் விளக்கிய பாங்கு ஆகியவற்றின் காரணமாகவே தீவிரமாகப் பரவியிருக்கின்றன. தொடங்கியவரின் நோக்கம் சிறப்பாக இருந்திடினும் நாளடைவில் அதில் பற்பல களிம்புகள் சேர்ந்து அந்த வாழ் முறையே சீரழிந்து போனதையும் நாம் கண்டதுண்டு.

இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் பற்பல சமயங்கள் தோனறின, பரவின, நின்றன, அழிந்தன. உலகின் பல பகுதிகளிலிருந்தும் கோட்பாடுகள் வந்தன. மக்களைத் தன் வயப் படுத்தின. இந்தச் சமய நெறிகள் அனைத்திற்கும் நம் தாய் மொழியில் இலக்கியங்கள் உள்ளன. நீலகேசி, மணிமேகலை, சீறாப் புராணம், தேம்பாவணி. இரட்சணிய யாத்திரிகம், ஆகியவை சில எடுத்துக்காட்டுக்கள். அந்த நல் மரபை நிலை நாட்டும் வகையில் இந்த அகாலி தருமத்திற்கும் இலக்கியத் தளம் அமைத்தவர் மகா கவி பாரதி.

தரை மார்க்கமாக வந்த எல்லா வகை ஆக்கிரமிப்புக்களையும் ஏற்று அவற்றின் வீச்சினால் ஏற்றமும், மாற்றமும் பெற்றது பாஞ்சால நாடு. அந்த மண்ணில் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர் நானக் என்ற புனிதமான மனிதர். அவருடைய காலத்தில் பாஞ்சாலத்தில் சமுதாயநிலை சீர் கெட்டிருந்தது. முன்னாளில் நிலவிய வாழ் முறை தனது அடிப்படை நல்லியல்புகளை இழந்து வெறும் சடங்குகளின் ஆளுமையில் சிக்கியிருந்தது. மேற்றிசையிலிருந்து முதலில் கொள்ளையடிக்கவும் பின்னாளில் மண்ணாசையாலும், உந்தப்பட்டு வந்த ஓரின மக்கள்

தங்கள் கொள்கைகளை ஓரளவு கடுமையாகவே பரப்பினர். சில திறங்கெட்ட மக்கள் அதை அச்சத்தின் விளைவினால் பின்பற்றினர். மற்றும் பலர் அந்த முறையிலுள்ள நன்னெறிகளை உணர்ந்து ஏற்றுக் கொண்டனர்.

அந்தக் கால கட்டத்தில் மேற்றிசைச் சமயத்தின் ஒரே தெய்வக் கொள்கையையும் அதன் உருவற்ற வழிபாட்டுத்தன்மையையும் ஏற்றுக் கொண்டு பிறந்த மண்ணில் நிலவிய பிற உயிர் அன்புத் தத்துவத்தைத் தொண்டுணர்ச்சியுடன் பிணைத்து ஒரு புதிய நெறியை உருவாக்கினார் நானக்.

வணிக இனத்தில் பிறந்தவர். தொழில் முறையில் நேர்மையை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியதோடு நில்லாமல் அதைக் கடைப் பிடித்துக் காட்டியவர். சாதாரணக் குடிமகனைப் போல திருமணம் செய்து கொண்டு குழந்தைகளுடன் வாழ்ந்தவர். நாளடைவில் தாம் மேற்கொள்ள வேண்டிய பணி தனித் தன்மையுடையது. அதைப் பரப்ப வேண்டியது காலத்தின் தேவை என்று தெளிந்து குடும்ப வாழ்க்கையைத் துறந்தவர். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களின் நல்லியல்பு, பண்பு ஆகியவற்றை நேரிடையாக அறிந்து கொள்ளும் பொருட்டு அவர் நெடும் பயணத்தை மேற்கொண்டார். மேற்கே பாரசீகம், கிழக்கில் அஸ்ஸாம், வடக்கில் திப்பேத், தெற்கே கர்நாடகம் வரை அவர் நடந்தே சென்று பிறந்த மண்ணுக்குத் திரும்பினார்.

தமது அக, புற அனுபவங்களைக் கவிதைகளாக வடித்தார். பாஞ்சால மண்வளம், இயற்கை எழில், மக்களின் எண்ண உறுதி, செயல் திறன், இறை அனுபவம் ஆகியவைகள் அவருடைய பாடல்களுக்குப் பொருளாக விளங்கின.

பெரு நிலை என்று ஒன்றுண்டு. அதைத் தொடுவதற்கு தேவையானவை அனுட்டானங்கள் அன்று. அதைத் தவிர்க்க வேண்டும். மேலான வாழ்வு என்பது தனது கடமைகளைச் செய்வது, பகிர்ந்துண்பது இரண்டு மட்டுமே. (கர்த்து கரோ, வண்டு ஷக்கோ.) மேற்றிசையிலிருந்து வந்த இஸ்லாமிய சமயத்தை அவர் எதிர்க்கவில்லை. சநாதன தருமத்தின் அடிப்படைக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டார். அவர் எதிர்த்து நின்றது அனுட்டானங்களை மட்டுமே. அவை சமுதாயத்தில் படிந்த பாசி, காளான் என்று அவர் நம்பினார். அவர் சிறப்பாகப் போற்றிய அறங்கள் பசித்தவர்களுக்குச் சோறிடுவது, உடலால் உழைப்பது ஆகியவை மட்டுமே.

புனிதர் நானக்கின் வழியை அதே முறையில் அடுத்தடுத்த தலைமுறையில் நான்கு பேர் பின் பற்றினர். அவர்களில் ஐந்தாவது குருவான அர்ச்சுன தேவரின் தொண்டு மிகச் சிறந்ததாகும். இந்தப் பெருந் தொண்டர் தமக்கு வழி காட்டிய நால்வரின் பேருரைகளைத் தொகுத்தார். தொழு நோயுற்றவர்களுக்கு மருந்தளித்தார். புகலிடம் தந்தார். பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகளைச் சாடினார். இந்து, இஸ்லாமிய சமயங்

களிலுள்ள நற்கொள்கைகளை இணைத்து ஒரு தனித்தன்மை யுள்ள மார்க்கமாக இதைச் செயல்பட வைக்க வேண்டுமென்று விழைந்தார்.

அமிர்தசரசில் அவர் நிறுவியதுதான் அந்த ஆலயம். பின்னாளில் இது பொற்கோயிலாயிற்று. இதற்கு அடிக்கல் நாட்டியவரே மியா(ன்) மீர் என்ற இஸ்லாமியர். அந்த ஆலயத்தில் உருவம் ஏதும் அமைக்கப்படவில்லை, தமக்கு முந்தைய வழிகாட்டிகள் இயற்றிய பாடல் தொகுதி. மட்டுமே பீடத்தில் ஏற்றி வைக்கப்பட்டது. ஆலயத்தை அடுத்து ஓர் அறச்சாலை. அங்கு வருகை தருபவர்கள் அனைவருக்கும் உணவு அளிக்கப் பெறும்.

சில நிகழ்ச்சிகள் வரலாற்றை எப்படித் திசை திருப்பி விடுகின்றன என்பதற்கு இவருடைய வாழ்க்கை தகுந்த எடுத்துக் காட்டு. அப்போது அக்பரின் மகன் ஜகாங்கீர் நாட்டை ஆண்டு வந்தான். அப்போது அவருடைய புதல்வன் இளவரசன் குர்ரம் தன் தந்தையை எதிர்த்துக் கலகம் செய்தான். தனியாகப் படைப் பிரிவொன்றை அமைத்துக் கொண்டு தந்தையின் ஆட்சியை எதிர்த்தான். அத்தகைய ஒரு மோதலின்போது அந்த இளவரசன் அர்ச்சுன தேவரிடம் தன் படை வீரர்களுக்கு ஓரிரவுக்கு மட்டும் உண்டியும், உறையுளும் வேண்டினான். அர்ச்சுனர் நிறுவிய ஆலயத்துள் எவரிடமும் வேறுபாடு பாராட்டுவது கிடையாது.' இளவரசன் வேண்டுகோள் ஏற்கப்பட்டது. குர்ரமும் அவனது படை வீரர்களும் அங்கு தங்கி உணவருந்தி தொடர்ந்து தங்கள் செயல் முறைகளை மேற்கொண்டனர். இந்த இளவரசனே பின்னாளில் ஷாஜகான் என்றபெயரில் அரசுக் கட்டில் ஏறியவன்.

இந்தச் செய்தி லஹோரியிலிருந்த ஜகாங்கீருக்குத் தவறான முறையில் திரித்துக் கூறப்பட்டது. மன்னரின் ஆட்சிக்கு எதிராக, கலகம் செய்யும் இளவரசனுக்கு உடந்தையாக அர்ச்சுன தேவர் செயல்பட்டார் என்பது குற்றச்சாட்டு. அதன் விளைவாக இவர் கடும் உடல் கொடுமைகளுக்கு ஆளாகி, உயிர் இழந்தார்.

இந்த நல்லறத்தைச் சார்ந்த மக்கள் இதைப் பொறாதெழுந்தனர். ஆட்சியில் இருந்தவர்களை எதிர்த்தனர்—அவர்களுடைய கொடுஞ்செயலுக்காக. ஆனால் அதுவே சமயப் பகையாக மாறி விட்டது. இஸ்லாமியர்கள் சீக்கியர்களைப் பகைத்தனர். அதன் காரணமாக இந்துக்கள் இவர்களை நேசித்தனர்.

இரண்டு நல்லறங்களைப் பிணைக்க வந்த பாலம் இந்த நிகழ்ச்சியினால் தகர்ந்தது. இதன் விளைவு சமுதாயப் பகைமையையும், கொள்கை மாற்றத்தையும் ஏற்படுத்திற்று. இந்துக்கள் சீக்கியர்களை ஆதரித்தனர். சீக்கியர்களோ காலத்தின் தேவையை ஒட்டி அவர்களுடைய படைக்கரமாயினர்.

அர்ச்சுன தேவரின் மறைவுக்குப் பின் ஐந்து பெருமக்கள் இந்தச் சமயத்தை வழி நடத்தினர். அவர்களில் பத்தாவது

குருவான கோவிந்தர் தமது சமயத்தினருக்குப்புதிய உருவத்தைக் கொடுத்தார்.

குரு கோவிந்தர் சிறந்த போர் வீரர். அற்புதமான கவி. அவர் மொகலாய மன்னனுக்கு வரைந்த கடிதங்கள் இலக்கியத் தரம் மிக்கவை. இறை வழிபாட்டில் தீவிரமான ஈடுபாடுடைய வர். கொடை வள்ளல். இசை ஞானமுடையவர். மககள் தொண்டில் ஈர்ப்புடையவர். தமது நான்கு புதல்வர்களையும் சமய நெறியின் மேம்பாட்டிற்காகக் காவு கொடுத்தவர்.

இவரே காலசா என்ற புதிய அமைப்பை உருவாக்கியவர். மற்றவர்களிடமிருந்து தமது சீடர்கள் மாறுபட்ட தோற்றத்தில் இருக்க வேண்டுமென்பதற்காகச் சிகையும், பாகையும், மழிக்காத முகமும் அதைப் பேணுவதற்காக சீப்பு, புலனடக்கத்தின் பொருட்டு இறுகிய கச்சை, இரும்புக்கை வளையம், தற்காப்புக் காகவும், பிறரைத் துயரிலிருந்து மீட்கவும் குறு வாள். இதற்கே அவர் கிர்பான்—இரக்கம் காட்டும் கருவி என்று பெயர் வைத்தார்.

தமது தொண்டர்களுக்கு இந்த அடையாளங்களை அளித்து அவர்களைக்—காலசா—என்று அழைத்தார். காலசா என்றால் தூய்மையானது என்றே பொருள். அவர்களுடைய ஆலயங் களுக்கு குருத்வாரா-என்ற பெயர் எற்பட்டது. குருவின் மணி வாசகங்களுக்கு அது வாயில்.

இதற்குள் எவரும் செல்லலாம். குருமார்களின் வாசகங்கள் அடங்கிய நூல் மட்டுமே அங்கு தெய்வ நிலைக்கு ஏற்றி வைக்கப் பட்டிருக்கும். எல்லோருக்கும் ஒரே தரமுள்ள உணவு வழங்கப் படும். இயன்றவர்கள் ஆலயத்தினுள் எத்தகைய தொண்டும் செய்யலாம். ஆண், பெண், சமய, பிறப்பு வேறுபாடுகள் அங்கு இல.

சீக்கிய ஆலயங்களில் தொண்டு புரிபவர்கள் பெரும்பாலும் மேல் தட்டு வாசிகளாக இருப்பார்கள். அவர்கள் தரையைத் துடைத்துத் தூய்மை பெறச் செய்வார்கள். உணவு வட்டித்த ஏனங்களைக் கழுவுவார்கள். வருகை புரிபவர்களின் காலணி களைத் துடைத்து மெருகேற்றுவார்கள். தொண்டு, எளிமை, பரிவு, இன்சொல், இசை ஆகியவை ஆலயத்தினுள் நிறைந் திருக்கும். எல்லாக்காலத்திற்கும் இன்றியமையாத அறங்களைப் போற்றுபவர்கள் என்ற காரணத்தினால் இவர்கள் அனைவரும் —அகாலி—காலத்தை வென்றவர்—என்று அழைக்கப்பட்டனர். இந்த அகாலிகள் கொள்கைப் பிடிப்புள்ளவர்கள். தன்மானம் மிக்கவர்கள். எவரிடமும் கையேந்துவது கிடையாது. குருத்வாராக்களின் வெளியே பிச்சைக்காரர்களைக் காண இயலாது. தமது கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகத் துணிவான செயல்களைப் புரியும் உறுதியும் உடையவர்கள். அதன் பொருட்டு, உயிரையும் பணயம் வைக்கும் உளத்திட்பம் உடையவர்கள். தீரமும் எளிமையும் மிக்க ஓர் அறப்பாதையை வகுத்த பக்தக் குருமார்களுக்கும் மனித குலமே கடமைப் பட்டிருக்கிறது.

★★



# தித்திக்கும் திருவுரு

## புலவர் வி. சிவக்கொழுந்து

சிலகாலமாகத் தமிழ் நாட்டுச் சிவபுரம் என்ற ஊர் திருக்கோயில் கூத்தப்பிரான் திருவுருவச் சிலை பற்றிய செய்தி அடிக்கடி செய்தித் தாள்களில் வந்ததைப் பார்த்தோம். அத் திருவுருவக் செப்புத் திருமேனி பல ஆண்டுகட்குமுன் சிவபுரம் திருக்கோயிலிலிருந்து அப்புறப்படுத்தப் பெற்றுக் களவாக அமெரிக்கா சென்று எப்படியோ கண்டுபிடிக்கப் பெற்றுத் திரும்பவும் நம் நாட்டுக்குக் கொண்டு வரும் முயற்சியே அச்செய்தி.

நடராசர் என்னும் கூத்தப்பிரான் திருவுருவச் சிலைகள் இவ்வாறு அயல் நாட்டுக்குக் களவு போகும் நிகழ்ச்சி புதுமையானது அன்று. நெடுங்காலமாகவே நிகழ்ந்து வருகிறது. யான் சிறுவயதினனாயிருந்த காலத்து, திருமுதுகுன்றத்துக்குப் பக்கமாக உள்ள ஓர் சிற்றூரில் கோயில் அர்ச்சகர் அக்கோயில் கூத்தப்பிரான் சிலையைக் கரவாகக் கடத்தி விற்றுவிட்டதாக எனது உறவினர் ஒருவர் கூறிய செய்தி எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது.

காலஞ்சென்ற கோவை சி. இராமச்சந்திரன் செட்டியார் இந்து அறநிலையத் துறையில் துணை ஆணையராயிருந்து அத் துறையில் பல அரிய பணிகளைச் செய்தவர். அவர் பல நூல்களை எழுதி வெளியிட்டார். அவற்றுள் சில திருக்கோயில் தொடர்பானவை. ''கோயிற் பூனைகள்'' என்ற நூலில் அவர் இந்தச் சிலை கடத்தும் கீழ்த்தரத்தை ஒரு கதையாக எழுதியிருக்கிறார்.

அக்காலச் சென்னை மாநிலக் காங்கிரஸ் அமைச்சரவையில் நலத்துறை அமைச்சராக விளங்கியவர் திருச்சி டி. எஸ். இராசன் என்பவர். ''நினைவலைகள்'' என்ற அவர்தம் நூலில் ''கடல் கடந்த சிலை'' என்ற ஒரு பகுதி காணப்படுகிறது. அதில் தாம் இங்கிலாந்துக்குக் கப்பலில் சென்றபோது இடையில் ஏடன் துறைமுகத்தில் சில மணி நேரம் தங்கியதாகவும் கப்பற் பயணிகளில் ஒருவரான யூதர் தம் பெட்டியைத் திறந்தபோது அதில் ஓர் அழகான நடராசர் சிலையைப் பார்த்ததாகவும் அந்த யூதர்

தென்னிந்தியாவில் அந்தச் சிலையைப் பெற்றனர் என்றும், இப்படிக் கலைப் பொருட்களையும் அரிய பொருட்களையும் கிடைக்குமிடத்தில் வாங்கிக் கிடைக்காத இடத்தில் நல்ல விலைக்கு விற்பதே தம் தொழில் என்று கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கூத்தப்பிரான் சிலை இப்படிக் கோயில்களில் களவு போவது மட்டுமன்றி நிலத்தில் அகழ்ந்து கண்டெடுக்கப் பெற்ற பல கூத்தப்பிரான் சிலைகள் நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் அருங்காட்சியகங்களில் இன்றும் காணப் பெறுகின்றன.

இலண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள சிவதாண்டவ மூர்த்தி சிலையை அணு விஞ்ஞானியான ஐன்ஸ்பீன் பார்த்த போது அணுப் பரிசோதனையில் அதன் அசைவிற்கும் தாண்டவ மூர்த்தியின் அசைவிற்கும் உள்ள ஒற்றுமை கூறி வியந்ததாக ஒரு செய்தி உண்டு.

பத்து ஆண்டுகளுக்குமுன் மதுரை வாவட்டம் வீரபாண்டி என்ற ஊரில் முல்லையாற்றங்கரையில் உள்ள கண்ணீகரமுடையார் சிவன்கோயில் முன் மண்டபத்துக்கு வாணம் தோண்டும் போது ஐம்பொன் சிலைகள் சில அகழ்ந்தெடுக்கப் பெற்றன. அவற்றுள் ஒன்று அழகிய வேலைப் பாடமைந்த நடராசன் சிலையாகும். சிலைகள் நிலத்தடியில் இருந்த அமைப்பை நோக்க அவை பிற மதத்தவர் படையெடுப்பின்போது பாதுகாப்புக்காக என்றே புதைக்கப் பெற்றவையாகத் தோன்றின.

தமிழ்நாடு முழுவதும் இன்னும் எத்தனை சிலைகள் இவ்வாறு புதையுண்டு கிடக்கின்றனவோ? யாரறிவார்?

இவ்வாறு நம்நாட்டுக் கூத்தப்பிரான் சிலைகளுக்கு அயல் நாட்டு மக்களிடையில் உண்டாகும் கவர்ச்சிதான் என்ன? ஏன் அதிகமான விலை கொடுத்துக் கரவாக வரும் இவற்றை வாங்கு கிறார்கள்? சிந்திக்க வேண்டிய செய்திதான்.

இந்திய நாட்டில் வழங்கும் சமயங்கள் பல என்பதும், அவற்றுள் வழிபாட்டு முறைகளிலும் தத்துவங்களிலும் வேறு பாடுகள் உண்டு என்பதும் யாவரும் அறிவோம்.

தமிழ்நாட்டில் மட்டும் நெடுங்காலமாக ஒரு வகைச் சமய தத்துவம் விளங்கி வந்திருக்கிறது. அந்த மெய்ப்பொருள் நால்வர்களென வழங்கும் சைவ சமய ஆசிரியர்கள் அருள் வாக்கில் இலைமறை காய்போல நின்று, பின் மெய்கண்டார் முதலான சமய நெறியாளர்களின் அருள் வாக்குகளில் விரிந்து மணம் வீசத் தொடங்கின. தமிழ்ச் சான்றோர் இச் சமயக் கொள்கைகளை முடிந்த முடிபாகப் போற்றி வந்துள்ளனர். இறை, உயிர், தளை என்னும் பதி பசு பாசம் என்னும் உண்மைகளின் விரிவாகத் திருக்கோயில்களும் அங்கு எழுந்தருளப் பெற்றிருக்கும் திருவுருவங்களும் விளங்கலாயின. இந்தக் கோயில்களும்

மூர்த்திகளுமே சமயச் சான்றோர்களின் அருள்வாக்குகள் தோன்றும் இடமாகவும் திகழலாயின. தமிழ் நாட்டுக்கு இந்தத் தெய்வ நிலையங்களை பெருமை சேர்க்கும் வைப்பிடங்க ளென்றே கூறலாம். கடவுள் பற்றைத் தூண்டி வளர்க்கும் அருள் நிலையங்களாக மட்டுமன்றி நாளடைவில் அவை சமுதாயத்தின் மைய ஆதார நிலைகளாகவும் மாறி விளங்கலாயின.

நாட்டியம் என்பது ஒரு கலை. அந்தக் கலைக்கு ஒரு நிலைக் களமாக இந்தக் கூத்தன் திருவுருவை மேலோட்டமாகக் காண்ப தோடு இத்திருவுருவின் அமைப்பிலுள்ள ஏனைய மெய்ப்பொருள் களையும் அறிவது நலமாகும். தமிழ்நாட்டுச் சமய நெறியாக சைவம், மற்றச் சமயங்கள் இறைவனுக்குக் கூறும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுடன் மேலும் இரு தொழில்களைச் சேர்த்து ஐந்தொழில்களை உயிர்கள் பொருட்டு இயற்றுகிறதாகக் கூறுகிறது. இது ஒரு தனிச் சிறப்பு. அவை மறைத்தல், அருளல் என்னும் தொழில்களாம். அழிவில்லாத உயிர்களுக்கு இறைவன் உடலங்களைப் படைத்து, நிறுத்தி, அழித்துப் பின்னர் அவ்வுயிர்கள் செம்மையுறும் பொருட்டாகப் பல பிறவிகளிலும் அவற்றை அழுத்தி பக்குவமுற்ற ஆன்மாக்க ளுக்குத் தன் திருவருள் இன்பத்தை வழங்கி மீண்டும் பிறவாத நிலையில் வைக்கின்றான் என்பது சைவநெறி முடிபாகும்.

இந்த ஐந்தொழிலையும் உணர்த்தும் முறையில் ஆடவல்லான் அருந்திருவுரு அமைந்திருக்கிறது.

நடனத் திருக்கோலத்தில் மேல் நோக்கிய வலத் திருக் கையின் உடுக்கை என்னும் இசைக் கருவி உடம்புகளைப் படைக் கும் உண்மையையும், அனலேந்திய இடத்திருக்கை அழிக்கும் தொழிலையும், அமைதிகாட்டும் வலத்திருக்கை உடல்களைக் காக்கும் செய்கையையும் உணர்த்த, ஊன்றியிருக்கும் வலத் திருக்கால் பிறவிகளில் உயிர்களை அழுத்தும் பாங்கையும் தூக்கிய இடக்கால் உயிர்கட்குப் பேரின்பம் வழங்குவதையும் புலப்படுத்து கின்றன. அத்தூக்கிய திருவடியே உயிர்கள் அடையும் முடிந்த நிலை என்பதற்காக மற்றொரு இடக்கை அதனைச் சுட்டும் முறையில் அத்திருவடியைக் காட்டிக் கொண்டிருப்பது சிறப்பான தோர் அமைப்பு.

இங்ஙனமாகத் தமிழகத்துச் சிவன் கோயில்களின் கூத்தப் பெருமான் திருவுரு பல பேருண்மைகளையும் நேர்முகமாகச் சொல்லாமற் சொல்லும் அமைப்பைக் கொண்டே தமிழர் சமய நெறியின் மாண்பை உணரலாம்.

ஐந்தொழிலைக் காட்டும் இறைவன் திருவுரு ஆடல் வல்லா னாக இருப்பதன் காரணம் என்ன? அந்த உண்மையையும் அறியும்போது, அறிவியல் முறையில் இந்த அமைப்பைக் கண்ட நம் முன்னோர்களின் பெருமை வியப்பூட்டுவதாயிருக்கிறது.

சர்க்கஸ் என்னும் களிக்கூடத்தில் ஒரு பெண் மரப்பந்துகள் இரண்டைத் தன் கைகளில் வைத்து அவற்றை மேலே வீசி

இரண்டு கைகளாலும் மாறிப் பிடிக்கிறாள். பின் மூன்று, நான்கு எனப் பல பந்துகளை இரண்டு கைகளைக் கொண்டே மேலே வீசிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். பந்துகளின் எண்ணிக்கை கூடக்கூட அவள் கைகளும் உடம்பும் அசையும் நிலையும் கூடு கிறது. கை கால்கள் அசைவு கூடுவதுடன் களிக்கூடத்தில் அவள் நடையும் மிகுதிப்படுகிறது. பந்தின் வீச்சும் மேலே மேலே போகிறது. இந்தக் காட்சியை நினைவில் வைத்துக் கொள் வோம்.

இறைவன் படைப்பில் உள்ள எண்ணில்லாத அண்டங்கள் வான வெளியில் இடையறாது சுழன்றுகொண்டே இருக்கின்றன. அணுவும் அண்டங்களும் ஒரே கதியில் சுழல இவற்றை எல்லாம் சுழலவிடும் இறைவன் மட்டும் சுழலாமல் இருக்க முடியுமா? முடியாதன்றோ? அச்சுழற்சியே ஆடவல்லானின் சுழன்றாடும் திருக்கூத்து என்பர் ஆன்றோர்.

---

# இசை மன்னர் போற்றிய இலக்கிய மேதை

**சிந்தாதரிப்பேட்டை கனகசபாபதி**

இசைக்கலை முடிமன்னர் எனப் புகழ் பெற்றவர் அமரர் காஞ்சிபுரம் நாயனா பிள்ளை என்னும் சுப்ரமணிய பிள்ளை. இவரைப் பற்றி அறியாதார் தென்னாட்டில் இருக்க முடியாது. பல கலைமேதைகள்தான் இவருடன் நெருங்கிப் பழகமுடியும்.

தெலுங்கைத் தாய் மொழியாய்க் கொண்டவர் திரு நாயனா பிள்ளை. அந்த மொழியிலும் சிறந்தவரான இவர் இசையுலகிற்குப் பெரிதும் சேவை செய்யும் பொருட்டு தியாக ராஜ கீர்த்தனைகளைத் தெலுங்கில் சுத்தமாகப் பாடி வந்தார்.

திருநெல்வேலி, தேவாரம்புகழ் திரு. சுந்தரமூர்த்தி ஓதுவார் மிகவும் நெருங்கிய நண்பர், திரு. நாயனாபிள்ளைக்கு. அமரர், இலக்கிய மேதை எம். எல். பிள்ளை என்று புகழப்பட்ட—அமரர் கா.சு. பிள்ளை அவர்களிடம் அறிமுகப்படுத்தினார் திரு. சுந்தர மூர்த்தி ஓதுவாமூர்த்தி அவர்கள்.

திரு. கா.சு. பிள்ளை அறிமுகமான பின்னர்தான், திரு. நாயனா பிள்ளை தமிழை விரும்பிப் படித்து தூய தமிழ்ப் பேச் சாளரானார். பல மேடைப் பேச்சுகளும் திரு. நாயனாபிள்ளை செய்துள்ளார். ஆகவே கா. சு. பிள்ளையின் தொடர்பால் தான் காஞ்சிபுரம் நாயனா பிள்ளை இசையுலகில் மட்டும் அல்லாது இலக்கியத்திலும் சிறந்து விளங்கினார்.

நாயனா பிள்ளையும் கா. சு. பிள்ளையும் சிறந்த நண்பர் கள் ஆயினர். கற்றாரைக் கற்றாரே காமுறுவரன்றோ! அதனால் சென்னையில் நாயனாபிள்ளை அவர்கள் கா. சு. பிள்ளை அவர்களை சந்திப்பதை அடியேன் நேரில் காணும் பேறு பெற்றேன். □



# தமிழ்க் கா.சு.வின் இதழ்ப்பணி

ராணி இதழாசிரியர்
சிந்தனைச்செல்வர் அ.மா.சாமி.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழுக்குப் பணியாற்றிய அறிஞர்களில் குறிப்பிடத் தக்கவர் ''தமிழ்க் கா.சு.'' என்று கூறப்படும், கா. சுப்பிரமணியம்.

அதற்கு முன் தமிழ்ப்பணி ஆற்றிய புலவர்களுக்கும், அதன் பின் தமிழ்த்தொண்டு செய்த அறிஞர்களுக்கும் வேறுபாடு உண்டு. அறிஞர் ''சோமலெ'' அதனைக் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டுவார்:

> ''50 ஆண்டுகட்குமுன், பெரும்புலவர்களிடம் பாடங் கேட்ட சிலர் மட்டுமே தமிழ்ப்பணியில் தலை சிறந்து விளங்கினர். பின்னர் பிறமொழி அறிவோடு சட்டப் புலமையும் நிரம்பிய டி.கே. சிதம்பரநாத முதலியார், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, கா. சுப்பிரமணியம் பிள்ளை, இரா.பி. சேதுப்பிள்ளை, எஸ். சோமசுந்தர பாரதியார், சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். எஸ், மகாராசன் போன்ற 30 பேர் தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெறலாயினர். வழக்கறிஞர்களான இவர்கள் தமிழ்த் துறையில் புகுந்தமையால், வாதத் திறமையுடன் (1) பழைய நூல்களுக்கு ஆய்வுரை எழுதும் பாங்கும் (2) பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் முதலியன நிகழ்த்தும் பழக்கமும் பரவின''
>
> —**செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலர்.**

''சோமலெ'' குறிப்பிடும் முப்பது அறிஞர்களில் முதலில் வைத்து எண்ணத் தக்கவர், கா.சு. இவர் தமிழறிஞர் மட்டுமல்ல; சட்ட வல்லுநர் மட்டுமல்ல; பல்கலைச் செல்வராக, பல துறை அறிஞராக விளங்கினார். வழக்கமாகப் புலவர்கள் செய்யும் உரை எழுதுதல், பதிப்பித்தல் ஆகிய பணிகளுடன், தமிழுக்குப் புதியவளமும் நலமும் சேர்த்தவர், கா.சு. அவர் இதழாளராகவும் திகழ்ந்தது, இந்தப் புதிய பணிக்கு உறுதுணையாக இருந்தது.

## எம். எல். பிள்ளை

இன்று ''பல்கலைச் செல்வர் தமிழ்க் கா.சு.'' என்று நாம் அழைக்கும் அறிஞர், அவரது காலத்தில் ''எம்.எல். பிள்ளை'' என்று அழைக்கப்பட்டார். தமிழிலும், ஆங்கிலத்திலும் எம்.ஏ. பட்டம் பெற்ற அவர், பிறகு சட்டம் பயின்று, ''எம்.எல்.'' பட்டம் பெற்றார். ''எம்.ஏ.எம்.எல்.'' பட்டம் பெற்ற முதல் தமிழர், கா.சு.தான். அதன் காரணமாக ''எம்.எல்.பிள்ளை'' என்று அவர் சிறப்பாக அழைக்கப்பட்டார்.

''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' என்ற பட்டமும் அவருக்கு உண்டு. 1920 இல் கல்கத்தாப் பல்கலைக்கழகம் இந்தப் பட்டத்தை வழங்க இந்திய வழக்கறிஞர் இடையே ஒரு போட்டி நடத்தியது. அப்போட்டியில் கா.சு. வெற்றி பெற்று, ரூ. 10 ஆயிரம் பரிசும், ''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' என்ற பட்டமும் பெற்றார். இச்சிறப்புப் பெற்ற முதல் தமிழரும் கா.சு.தான்.

தமிழ் இலக்கிய வரலாற்றை முறையாக ஆராய்ந்து முதல் முதல் எழுதியவரும் கா.சு.தான். 1930–இல் இந்த வரலாறு வெளி வந்தது. அதில் நாட்டுக் கவிஞர் பாரதியாரும் இடம் பெற்று இருக்கிறார். ''கவிஞர்'' என்றே பாரதியாரை ஏற்றுக் கொள்ளாத காலம், அது!

தாயுமானவர், பட்டினத்தார், சிவஞான முனிவர், நால்வர், ஆண்டாள், குமரகுருபரர் ஆகியோர் வரலாற்றை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் எழுதிவெளியிட்டார். ''தமிழர் சமயம்'', ''உலகப் பெருமக்கள்'', ''சைவ சித்தாந்த உண்மை வரலாறு'', ''பழந்தமிழர் நாகரீகம்'' என்ற நூல்களையும் எழுதியிருக்கிறார். திருக்குறளுக்குத் தெளிவுரை ஒன்றும் கண்டார், கா. சு.

## மணிமாலை

''மணிமாலை'' என்ற திங்கள் இதழ் ஒன்றையும் கா.சு. நடத்தினார்.

''செயற்கைச் சொல் நயத்தைப் பொருட்படுத்தாது இயற்கைப் பொருள் நலங் கருதப் பண்டைச் சங்க நூல்களுக்குச் செல்லும் ஆர்வமும், பொய் தொலைந்த கதைகளைத் தொலைத்து மெய்யுரை கருதி வரலாற்று ஆராய்ச்சியினை மேற் கொள்ளும் ஊக்கமும், விழுமிய விரிந்த பண்டைத்தமிழ் நாகரீக முறைக்கேற்பத் தமிழர் குடி வாழ்க்கையைச் செம்மை செய்யும் நோக்கமும், எம்மொழிப் பொருளையும் தனித் தமிழிலே வெளிப் படுத்திப் பயன் துய்க்க வேண்டுமென்ற உறுதியும் இருபதாம் நூற் றாண்டின் சிறப்புகள் என அறிஞர் கா.சு. பிள்ளை அறுதியிட்டு உரைத்தார்'' என்பார்கள். (''செந்தமிழ்ச் செல்வி'' பொன்

விழா மலர்.) இந்த சிறப்புகளை வெளிப்படுத்த தனது இதழை, கா.சு. பயன்படுத்திக் கொண்டார்.

''புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே'' என்றார், பாரதியார். தனது ஆங்கில அறிவினால் அந்தப்புதிய கலைகளை அறிந்து, அதைத் தமிழ் வழியே தமிழர்களுக்குத்தந்த வர், கா.சு. இதற்கு அவரது ''மணிமாலை'' இதழ் இனிய துணையாக இருந்து பயன்பட்டது.

சட்டம், மருத்துவம், அன்றாடச் செய்திகள் அனைத்தும் இந்த இதழில் வெளிவந்தன. அத்தனையும் கா.சு.வே. எழுதினார். ''தமிழால் முடியும்'' என்பதை அன்றே அவர் உறுதிப்படுத்தினார்.

**பல்சுவை இதழ்**

விஞ்ஞானம், சட்டம், மருத்துவம் என்று ஒரு பல்சுவை இதழாக ''மணி மாலை'' வெளிவந்தது. அதன் பெயரே ''மாலை!'' அல்லவா! அருமணிகள் கோத்த பெருமாலையாக அது விளங்கியது.

''நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை'' என்ற நூலில் (கழக வெளியீடு) ''மணி மாலை'' இதழ் இடம்பெற்று இருக்கிறது. 1935 ஆம் ஆண்டில் வெளிவந்த ''மணி மாலை'' பற்றி அந்நூலில் உள்ள குறிப்புகள் :

> ''ஆசிரியர் : கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ.,எம்.எல். திருநெல்வேலி மணிவாசகர் மன்றத்திற்காக டி.ஆர். சுப்பையாபிள்ளையால் தென்காசி மீனாட்சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
>
> அளவு: $18\frac{1}{2} \times 12$ செ. மீ. பக்கங்கள் 127. ஆண்டுக் கையொப்பம் ரூபா ஐந்து. ஆயுட் கையொப்பம் ரூபா நூறு. பாதுகாப்பாளர் தொகை ரூபா ஆயிரம். தனியிதழ் விலை அணா எட்டு.
>
> இவ்விதழ் பொதுமறை விளக்கம், பத்திரிகை யாராய்ச்சி, இலக்கியமாலை, இந்தியச் சட்டக் கோவை, உலகியல் மாலை, ஆங்கிலம் முதலிய ஏழு பிரிவுகளாக வெளியாகிறது. பத்திரிகையாராய்ச்சியில் பலபத்திரிகைகளின் வெளிசெய்திச் சுருக்கமும் வெளியாகியுள்ளது.''

''மணி மாலை'' வெறும் தமிழ்இலக்கிய இதழாக இல்லாமல் பல துறைச் செய்திகளையும் வாசகர்களுக்கு வழங்கியதை இதிலி

ருந்து நாம் அறிகிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கு, தமிழருக்கு எது தேவை என்பதை கா.சு. தெளிவாக உணர்ந்து இருந்தார் என்பதையே இது காட்டுகிறது.

## செந்தமிழ்ச் செல்வி

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடும் ''செந்தமிழ்ச் செல்வி'' என்ற இதழின் ஆசிரியர் குழுத் தலைவராகவும் கா.சு. பணியாற்றினார்.

''செந்தமிழ்ச் செல்வி''யின் பொன்விழா மலரில், ''இதழாசிரியர் கூட்டத்தலைவர்கள்'' என்ற தலைப்பில் வெளியிடப் பட்டுள்ள அறுவர் படங்களில் கா.சு.வின் படம் முதலீடம்பெற்று இருக்கிறது.

கா.சு. ''செந்தமிழ்ச் செல்வி''யில் தொடர்ந்து எழுதி வந்தார். அதன் முதல் இதழிலேயே ''திருநான்மறை விளக்கம்'' என்ற கட்டுரையை கா.சு. எழுதியிருந்தார். அது முதல் தனது இறுதிக் காலம் வரை ''செல்வி''க்குக் கா.சு. துணையாக இருந்தார். இதன் காரணமாக அவரது வாழ்க்கைவரலாறு ''செல்வி'' யில் வெளியிடப்பட்டது. ''திசையெல்லாம் வசையிலாப் புகழ் நிறுவிய திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றிய கா.சு. பிள்ளை'' என்கிறது, ''செல்வி'' பொன் விழா மலர்.

இவ்விதம் இதழ்கள் வாயிலாகவும் அருந்தமிழ்ப்பணி ஆற்றியவர், கா.சு. அவருக்கு இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம். ஆனால், நூற்றாண்டு விழா போதாது; ஆண்டுக்கு நூறு முறையாவது தமிழ் கா.சு.வை நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டவர்கள், தமிழர்கள். தமிழுக்கும், தமிழருக்கும் அவர் அவ்வளவு தொண்டு செய்து இருக்கிறார். ●●

---

## குணமும் குற்றமும் நாடி....!

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்கக் கொளல்.''

குணங் குற்றங்களுள் ஒருவனுடைய குணங்களையும் ஆராய்ந்து அவன் குற்றங்களையும் ஆராய்ந்து அவ்விரு பகுதியுள்ளும் மிக்கவற்றைத் தெரிந்து, அவற்றை உடையனாக அவனைக் கருதல் வேண்டும்.

—**தமிழ்க் 'கா.சு'**

# சோ... விசய்

திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம்



நாட்டு நலன் கருதி விடுதலைப் போராட்ட வேள்வியில் இறங்கிச் சிறைப்பட்டபோது ''**வெட்டிப்பயல்**'' என்றனர்; போராட்டத்துக்கு விடுதலை என்ற பயன் கிடைத்தவுடனோ அவர்களே ''**வீரப்பயல்**'' என்று பாராட்டினர்.

வாலிபர் சங்கம் என்ற பெயரில் இளைஞர்களை ஒன்று படுத்தி விருந்து விளையாட்டு என இனிப்பான செயல்களில் ஈடுபடுத்தி அப்படியே சமுதாய சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபடுத்தியபோது ''**பிழைக்கத் தெரியாத பயல்; அவனுடன் சேராதே**'' என்றனர். பகுத்தறிவுத் தலைவர்கள் அதைப் பாராட்டியபோதோ ''**ஆகா, புரட்சி வீரனல்லவா**'' என்று புகழ்ந்தனர்.

இயற்கை இரண்டு விழிகளையும் இருட்டாக்கி உட்கார வைத்தவுடனோ ''ஆட்டம் ஒய்ந்து விட்டது. இனி இவன் கதி இவ்வளவுதான்'' என்றனர்; பேசினால் உதவி கேட்பானோ என்று அஞ்சிப் பேசமேலே ஒதுங்கினர். மன அமைதிக்காக மனைவியைத் திருக்குறள் படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து, ''ஒரு கூகை படிக்கிறது. ஒரு கூகை கேட்கிறது'' என்றனர். தெருவில் தட்டுத் தடுமாறிச் செல்லும் போதோ ''அதோ, எம்.ஏ பட்டம் போகிறது'' என்றனர்.

இத்தனைத் தடைகளையும் மீறி எதிர் நீச்சலிட்டுத் திருக்குறள் பயின்று எண்கவனகராய் (அட்டாவதானியாய்) மலர்ந்து கல்லூரியில் பயிற்றுவித்துக் கொண்டிருந்த பல எம்.ஏ. பட்டதாரிகளைத் தம் அறிவால் ஈர்த்தபோது மறுபடியும் முன்னர் இகழ்ந்த அதே வாய் கொண்டு புகழ்மாலை சூட்டிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்.

துன்பத்தையே இன்பமாக ஏற்றுக் கொள்வது எதிரிகளைச் சரணடையச் செய்யும் வழி என்கிறார் வள்ளுவப் பெருந்தகை,

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. (630)

இந்தப் பொய்யாமொழியின்படி துன்பத்தையே இன்பமாக ஏற்றுத் தன் பிறப்பை முழுப்பயனுடையதாக்கிக் காட்டிய பெருமைக்குரியவர் எம் தந்தையும் தமிழகத்தின் பதின்கவனகரும் (தசாவதானி) ஆகிய திருக்குறள் பெ. இராமையனார் அவர்கள்.

அவரது சிந்தனை ஓட்டத்தைத் திருக்குறள் எந்த அளவிற்குப் பாதித்திருந்தது என்பதற்கு ஒரு சிறு நிகழ்ச்சியைக் கூறலாம்.

ஒருநாள் காலை ஊர்ப்புறத்தேயுள்ள நந்தவனத்தில் தந்தையார் வேட்டியைத் துவைத்துக் கொண்டிருந்தார். அதே வேளையில் பக்கத்தில் இருந்த குளக்கரையில் சலவைத் தொழிலாளி ஒருவரும் தன் பணியைச் செய்து கொண்டிருந்தார். தொழிலாளி களைப்புத் தெரியாமல் இருக்கச் சோ...சொக்... என்று ஒலியெழுப்பியபடி துணியைக் கல்லில் அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தார். அதாவது துணியை மேலே ஓங்கும்போது சோ...என்று நீட்டியும் கல்லில் அடிக்கும்போது சொக்... என்று சுருக்கியும் துவைத்துக் கொண்டிருந்தார்.

தந்தையாரும் சிறிது நேரம் அந்தத் தொழிலாளியின் சோ... சொக்...தாளத்திற்கேற்பவே தானும் துணியை அடித்துத் துவைத்து விட்டுத் தனக்குள் சற்று உரக்கவே சிரித்துக் கொண்டார். அருகிலிருந்த நான், ''என்னய்யா நீங்களாகவே சிரித்துக் கொள்கிறீர்கள்'' என்று கேட்டேன் அவர் சொன்னார்.

''நம் திருவள்ளுவர் எத்துணை உலகியல் உணர்வுடன் ஒவ்வொரு குறளையும் அமைத்துள்ளார் பார். நாம் துணி துவைப்பது அழுக்குப் போக வேண்டும் என்பதற்காக. ஓங்கிய வேகத்திலேயே 'தொப்' என அடித்தால் அழுக்குப் போகுமோ போகாதோ துணி கிழிந்து தன் ஆயுளைக் குறைத்துக்கொள்ளும். அதற்காக சோ...என்று நீளமாய் ஓங்கி சொக்...என்று முன்னே இழுத்து மெல்ல அடித்தால் துணி சுருங்கல் சுருங்கலாய்க் கல்லில் விழுந்து அந்த உராய்வில் தன் அழுக்கு நீங்கித் தூய்மையாகும். துணி வெளுப்பவர் அந்த பட்டறிவால்தான் அதற்கென ஓர் ஒலிக்குறிப்பே வைத்துக் கொண்டார்.

அதுபோல் மனம் மாசுபட்ட மாந்தருக்குத் தண்டனை தருவதன் நோக்கம் அவர்கள் மாசு நீங்குவதற்கே தவிர அவர்களைத் துன்புறுத்தித் தீர்த்துக் கட்டுவதற்கல்ல. குற்றங்கட்குத் தண்டனை எப்படி வழங்க வேண்டும் என்று கூறவந்த திருவள்ளுவர் இந்தத் துணிவெளுப்புக் கோட்பாட்டை அப்படியே மனவெளுப்புக் கோட்பாடாகிக் கூறியுள்ளதை நினைத்தே சிரிப்பு வருகிறது.''

—இப்படிச் சொல்லிவிட்டு அவர் கூறியது,

கடிதோச்சி மெல்லஎறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டுபவர். (562)

என்ற குறள். இதுபோல் ஒவ்வொரு குறட்பாவையும் தன்னு டைய சிறிய சிறிய பட்டறிவு உண்மைகளுடன் இழைத்துப் பார்ப்பது அவரது வழக்கம்.

1973ல் நிகழ்ந்த தமிழ்க் கா. சு. நினைவு இலக்கிய விழா வில் பதின்கவனக நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தபோது வெண்பா இயற்றித்தர யாராவது ஓர் ஈற்றடி கொடுங்கள் என்று அவையோரை வேண்டினார்.

வந்ததோ ஒன்றல்ல. இரண்டு ஈற்றடிகள். கவிஞர் திரு. அரங்க சீனுவாசன் அவர்கள் அளித்த ஈற்றடி, ''**காசுதரா மற்படித்தார் காசு.**''

'நிறையப் பணம் கொடுத்து நேரில் இருந்து
முறையாகக் கேட்டும் முழுதும்--மறதியே
பேசுகின்ற மன்பதைக்குப் பேராற்றல் தானுணர்த்த
காசுதரா மற்படித்தார் காசு.'

இது தந்தையார் பாடி முடித்த வெண்பா.

1979இல் நிகழ்ந்த தமிழ்க் கா. சு. நினைவு இலக்கிய விழா வில் தந்தையாருக்குப் ''பல்கலை சிந்தனைச் செம்மல்'' என்ற பட்டயம் வழங்கிக் குழித்தலை பாராட்டி மகிழ்ந்தது.

விழிகளை இழந்தபின் திருக்குறளை விழிகளாய்ப் பொருத்தி வெற்றியுடன் வாழ்ந்து காட்டிய எம் தந்தை திருக்குறள் பெ. இராமையனாரின் வீர வரலாறு விழிகளை வைத்துக் கொண்டு வெம்பித் தவிக்கும் தன்னம்பிக்கையற்ற மாந்தரைத் தட்டி எழுப்பும் வீரச் சொடுக்கு என்றால்,

அவருக்கும் அவர் போன்ற பலருக்கும் தோள் கொடுத்துத் துணை நிற்கும் குழித்தலைச் சான்றோர்களின் தளர்வில்லாத் தமிழ்ப்பணி, பொருளைப் பயனின்றிப் பதுக்கி வைத்துக் காவல் காக்கும் நிறை மூடர்களின் அறியாமையைத் தட்டிக் கேட்கும் விழிப்புணர்வுச் சொடுக்காகும்.

வளர்க குழித்தலையின் தமிழ்ப்பணி.

# சித்த மருத்துவம்



புதுச்சேரி. பண்டுவர். பி. மாசிலாமணி

தமிழ் இலக்கிய வழக்கில் பதினெண் சித்தர்கள் இருந்ததாகச் சொல்வதுண்டு. அதிலே அகத்தியர் தலைவராக இருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சித்தர்கள் வாழ்ந்த காலங்கள் வெவ்வேறாகக் காணப்படுகின்றன. இச்சித்தர்கள் கூட்டம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே வாழ்ந்ததாகத் தெரிகிறது. இவர்களெல்லாம் உடலை நீண்ட நாள் வைத்துக்கொள்வதற்கும் உடலுக்கு நோய் வராமல் இருப்பதற்கும் நரை, திரை, மூப்பு, சாக்காடு இவைகளை நீக்குவதற்கும் வழி கண்டனர். அவ்வழியில் வாழ்ந்தவர்கள் சித்தர்களே.

நமது உடலில் மண் ஒன்றேகால் பங்கும், நீர் ஒன்றரைப் பங்கும், நெருப்பு ஒரு பங்கும், காற்று முக்கால் பங்கும், ஆகாயம் அரை பங்கும் ஆக மொத்தம் 5 பங்குகள் உண்டு. அதைத்தான் பஞ்சபூதங்கள் என்பர். இவைகள்தான் நம் உடலை வளர்க்கிறது என்றும் கூறுவர். இப்பூதங்கள் சீராக உடலில் இருக்கும் வரையில் எந்தப்பிணியும் உடலை அணுகாது. அப்படி மாறுபடுமேயானால் உடல் அழிந்து விடும். மாறாமல் ஒருவன் காத்துக் கொள்ள முடியுமேயானால் என்றுமே இளமையாக இருக்க முடியும். இதுதான் சித்தர்கள் கண்ட உண்மையாகும். இதை வாழ்க்கையில் செய்து காண்பித்தவர்கள் சித்தர்கள் ஆவர்.

யோகம், இயற்கை தரும் இன் மருந்துகள் இவைகள் மூலம் நலமாக வாழ்வதற்கு நமக்கு வழியைக் காட்டியவர்கள் சித்தர்களே. ஆனால் உயிர் அழிந்த பிறகு கூட உடலை வாடாமல் வைத்துக் கொள்வதற்கு வழியைக் கண்டனர். மேலும் நீர்மேல் நடக்கவும் நெருப்பின் மேல் உட்காரவும், காற்றில் உலவவும், கூடு விட்டுக் கூடு பாய்தல் இவைகளைச் செய்தனர். இவை யாவும் சித்தர்களால் செய்ய முடிந்தது.

இன்றைய சித்த மருத்துவ முறைகள் மூலிகைகளையும், வேர்களையும் அடிப்படையாகக் கொண்டது. இம் மூலிகைகளின் தன்மைகளையும் அதனுடைய குணங்களையும் நன்கு அறிந்து சொல்லலாயினர். அது மட்டுமல்ல. தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக ஆக்கும் திறமையைக் கண்டனர்;

அவர்கள் மருத்துவக் கலையை பொருள் சேர்க்கப் பயன்படுத்தவில்லை. மேலும் சித்தர்கள் உள்ளத்திலே மெய்ஞ்ஞானம் விஞ்ஞானம் இரண்டையுமே தேடும் திறமையும் ஆர்வமும் அவர்களுக்கு இருந்தன. ஆகவே கல்லையும் செம்பையும் தெய்வமாக்கி வழிபட்டனர். உலோகங்களிலிருந்தும், மூலிகைகளிலிருந்தும் உயிர் காக்கும் மருந்துகளைச் செய்தனர்.

மேலும், மனித உடலில் நரம்புகளையும் தசைகளையும், குருதியையும் அறிந்து கண்டனர். உடலில் 4448 நாடி நரம்புகள் ஒன்றோடொன்று வேறுபட்டால் உடலுக்கு நோய் வரக்கூடும் என்று கண்டனர். நாடிகளின் ஓட்டத்தைக் கொண்டு உடல் நிலையை வகைப்படுத்தினர். இந்நாடிகளில் மிக முக்கியமானது மூன்றாகும். வாதம் ஒரு பங்கும், பித்தம் அரைப்பங்கும், சிலேத்துமம் கால் பங்கும் நாடிகள் நடக்குமானால் நோய் வராமல் இருக்கும். அப்படி இந்நாடிகள் விகற்பம் ஏற்பட்டால் நோய் வர ஏதுவாகிறது.

இதைத்தான் வள்ளுவர்,

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்று கூறுகிறார்.

மூலிகைச் செடிகள் இலை, பூ, காய், கனி, தண்டு, வேர், இலைகள் யாவையும் மருந்தாகப் பயன்படுத்தினர். ஆனால் சித்தர்கள் வாழ்ந்த காலத்தில் பல அரிய மூலிகைகள் இருந்தன. அந்த மூலிகைகள் யாவும் இப்பொழுது கிடைக்கவில்லை. கருந்துளசி, கரு ஊமத்தை, கரும் பசலைகளும், நொச்சிகளும், வாழைகளும், குன்று மணிகளும் மணத்தக்காளிகளும், நெல்லி இலைகளேயாகும். ஆனால் கருமையுடைய மூலிகைகள் யாவும் மிக மிக உயர்ந்த குணத்தை உடையது. இவை இப்பொழுது கிடைக்கவில்லை. கல் தாமரை என்ற மூலிகை இரும்பைத் தங்கம் ஆக்கும் குணமுடையது. மேலும் இம்மூலிகையை நசுக்கி கீழேபோட்டுக் காலில் மிதித்து ஆகாயத்தைப் பார்த்தால் பகலில் நட்சத்திரம் தெரியும். கூர்மையான பார்வையும் உண்டு பண்ணும். இதன் சூரணத்தை 40 நாள்கள் உட்கொண்டால் உடல் இளமையோடு இருக்குமென்று போகர் கற்பம் 300—இல் கூறுகிறார். ஜோதிப்புல்—இப்புல்லினால் உலோகங்களைப் பொடியாக்கி பாலில் கலந்து பருகினால் யானை பலம் வரும் என்று கருவூரார் வாத காவியத்திலே சொல்லப்படுகிறது. மேலும் சஞ்சீவி மூலிகை என்ற ஒரு செடி உள்ளது. இதை பேய்ச் சுரைக்காய் கூண்டில் போட்டு யாவையும் உலர்ந்த பிறகு இடித்துத் தூள் செய்து இப்பொடியை இறந்தவர்களின் நாசியில் ஊத உயிர் திரும்பி வந்துவிடும் என்றும், இந்த இலையிலிருந்த சாற்றைப் பிழிந்து காயங்களில் தடவ விரைவில் ஆறும் என்றும்

போகர் ஏழாயிரத்திலே சொல்லப்படுகிறது. இதைத்தான் இராமாயணத்தில் இராமரும் இலட்சுமணரும் அடிபட்டு விழுந்தவுடன் அனுமன் சஞ்சீவி மலையில், அதில் விளைந்திருக்கும் மூலிகைகளைக் கொண்டு இருவரின் உயிரையும் காப்பாற்றினான் என்று சொல்லப்படுகிறது.

விலங்கினங்கள், பறவைகள் இவற்றின் எலும்பு, நகம், தோல், கொழுப்பு, இரத்தம், கொம்பு, குளம்பு, பல் இவற்றிலிருந்து பல மருந்து முறைகளைக் கண்டனர். மேலும் சூடு, குளிர்ச்சி, கொதி நிலை, ஆவி நிலை இவைகளின் அளவை நுட்பமாக கணித •சூத்திரங்களைக் கொண்டு அமைத்தார்கள். மேலும் எடை வகையில் குண்டுமணி, நெல், பச்சைப்பயிர், உளுந்து இவைகளைப் பயன்படுத்தினர். மேலும் யோகாசனத்தின் மூலம், நீரிழிவு, காசம், இரத்த அமுக்கம், இருதய நோய், உடல் உறுப்பின் கோளாறுகள், முதுகுவலி, கண் பார்வை பலவற்றையும் மேலே சொன்ன யோகாசனத்தின் முறைப்படி நீக்கவும் கண்டனர்.

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''

இப்பாடலைத் திருமூலர் கூறியுள்ளார். மருத்துவக் கலையுடன் கணிதம், வானசாஸ்திரம், உயிரியல், ஜோதிடக்கலை, பலவற்றையும் பயன்படுத்தினர். இதன் மூலமாக சித்தர்கள் மெய்ஞானம் விஞ்ஞானம் இரண்டும் ஒன்றுபடுவதை அவர்களால் சாதிக்க முடிந்தது. இத்தகைய தனிச் சிறப்பு இந்து மதத்திற்குக் கிடைத்த பெரும் கருவூலமாகும்.

இப்புனிதமான மண்ணில்தான் புலவர்களும் ஆன்மீக நெறியுடையவர்களும் மருத்துவர்களும் இசையாளர்களும் தோன்றினார்கள், அதிலே,

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு''

இக்குறளுக்கு ஏற்பப் புலவர் ''கா. சு'' அவர்கள் பிறந்து தன் வாழ்நாளை மக்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் பல செயல்களைச் செய்து உள்ளார்.

அவர் புகழ் வளர்க! நூற்றாண்டு விழா சிறந்தோங்குக!



# மண்-மரம்-மனிதன்

வைகை வனக்கல்லூரி அ. அரவரசன்

உலகத்தில், மனித வாழ்வு சீரோடு நடைபெற மண்ணும் மரமும் பலவகைகளில் உதவுகின்றது.

ஓர் அடுக்கு மண் உலகத்தில் தோன்றுதற்குப் பல நூறு ஆண்டுகள் தேவைப்படுகின்றது. ஆனால் ஒரே நொடியில் பல நூறு அடி ஆழமுள்ள பள்ளம் – நிலச்சரிவு மண் அரிமாணம் ஏற்பட்டு விடுகிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் சுழற்சியில் ஏற்பட்ட மண் தொகுதிகளில் அங்கு தோன்றிய பல்வகைப்பட்ட தாவரத் தொகுதிகள்தான் அவற்றை அரிமாணத்திலிருந்தும் — அழிவிலிருந்தும் பாதுகாத்து வருகின்றன என்பது மறைக்கமுடியாத உண்மையாகும்.

நிலவிடும் வெப்பநிலைகளின் மாற்றத்தால் காலச் சூழலின் தாக்குதல்களால் பல்வேறு வகையான மண் தொகுதிகள் ஏற்பட்டதும்—அந்த மண்ணின் தன்மைக்கேற்ப தாவரங்கள் தோன்றியதும்—அதன் தொடர்ச்சியாக உயிரினங்கள் அப்பகுதியில் தோன்றியதும் காலத்தின் கட்டாயமாகும்.

பொதுவாக மண்ணின் கூறுகளுக்கேற்ப வகைப்படுத்தி அவ்வகை நிலங்களை நமது முன்னோர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரித்துள்ளதையும்—மண்ணின் தன்மை அங்கு நிலவுகின்ற தட்பவெப்ப நிலை, மழைப் பொழிவு - அப்பகுதி அமைந்திருக்கும் முகப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றுள்ள தாவரங்களின்-உயிரினங்களின் அமைப்பு இவற்றைப் பொறுத்து, தற்காலத்தில் காடுகளை "**மனிதனால் வளர்க்க முடியாத தாவரங்களையும் மனிதனால் பழக்கமுடியாத உயிரினங்களையும் கொண்ட அகண்ட நிலப்பரப்புதான் காடு**" என்று குறிப்பிட்டுள்ளதையும் நாம் நோக்குகிறபோது தாவரங்களின் முக்கியத்துவத்தையும் வனவாழ் உயிரினங்களின் முக்கியத்துவத்தையும் உணர முடிகின்றது.

பழந்தமிழ் முன்னோர், பருத்து உயர்ந்தமரங்கள் நெருங்கிய காடுகளை **வல்லை** என்றும்,

சிறுமரங்கள் அடர்ந்த காடுகளை 'இறும்பு' அல்லது **'குறும்பு'** என்றும்

சிறு தூறுகள் பம்பிய காடுகளை **'அரில்'** அல்லது **"அறல்'** என்றும்,

மிக முதிர்ந்த முற்றிப் போன மரங்கள் நிரம்பிய காடுகளை **'முதை'** என்றும்,

மரங்கள் கரிந்து போன காடுகளை **'சுரம்'** அல்லது **'பொதி'** என்றும்,

அரசனது காவலில் பாதுகாப்பாக விளங்கும் காடுகளை 'கணையம்' அல்லது **'அரண்'** என்றும் பாகுபடுத்தியுள்ளார்கள் என்று தனித்தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகள் குறிப்பிட்டுள்ளதையும், திருக்குறள் கூட,

'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய(து) அரண்''

எனக் குறிப்பிடுவதையும் ஈண்டு நோக்குதல் சாலச்சிறந்ததாகும்.

மேலும் மேலே சொன்ன காடுகளின் வகைகள் தற்போது நடைமுறையில் இல்லை என்றாலும் காடுகளை ''பசுமைமாறாக் காடுகள் – பகுதி பசுமை மாறாக் காடுகள் – வெப்ப மண்டல இலையுதிர் காடுகள் – வெப்ப மண்டல ஈர இலையுதிர் காடுகள்- வறண்ட முட்புதர்க் காடுகள் - கர்நாடகக் குடைமுள் காடுகள்- ஊசியிலைக் காடுகள்'' என்று காடுகளை வகைப்படுத்தியுள்ளதையும் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள காடுகளை ''காப்புக் காடுகள்'' என்று வழங்கப்படுவதையும் காணலாம்.

பெரும்பாலும் பசுமை மாறாக்காடுகளில் உள்ள மரங்கள் தரத்திலும் தன்மையிலும் சிறந்ததாகும். உயர்ந்த மரவகைகளான சந்தனமரம், செம்மரம், தேக்கு, தோதகத்தி, வேங்கை, நாங்கு, கோங்கு போன்ற மரங்கள் வளர்கின்றன.

பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளினால் தண்ணீர் தூய்மை இழந்துவிட்டால் அதைத் தாவரங்களின் வேர்கள் தூய்மைப்படுத்துவதாக அண்மைக் கால ஆய்வுகள் நிருபித்துள்ளன;

45 மனிதர்களுக்கு ஓராண்டுக்குத் தேவையான 10 டன் உயிர்காற்றை ஒரு ஹெக்டேர் பரப்பிலுள்ள மரங்கள் உற்பத்தி செய்கின்றன என்பதும், ஒரிசா மாநிலத்தில் 'கந்தமாதன்' மலைப்பகுதியில் ''தைலிகந்தா'' எனும் ஒரு மூலிகை குறுமரமாக வளர்வதாகவும், அந்த மரம் ஐந்து விதமான நிறங்களில் பூக்

களைப் பூப்பதாகவும், இந்தக் குறுமரத்தின் இலையின் சாற்றில் ஒரு குண்டூசி 24 மணி நேரத்தில் கரைந்து விடுவதாகவும் அண்மைக்கால தாவரவியல் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

மரங்களின் கொடைத் தன்மையை அல்லது அதன் ஈகத் தன்மையை அளவிட இயலாது.

வண்டிக்குடங்கள் — ஆரக்கால்கள், உழவுக்கருவிகள், கைப் பிடிகள் போன்றவை செய்ய வாகை, கருவேல், நாவல், மாமரம், வேம்பு, புளியமரம் போன்ற மரங்களையும், காகிதம் செய் வதற்கு யூகலிப்டஸ் டெரிடு கார்னிஸ், மூங்கில், குடைவேலன் போன்ற மரங்களையும் ரப்பர் தயாரிக்க ரப்பர் மரம், வியூலே மரம் போன்றவற்றையும், செயற்கைப் பட்டுநூல் (ரேயான்) தயாரிக்க யூகலிப்டஸ் குலோபுலஸ், அக்கேசியா டியால்பேட்டா, அக்கேசியா டெக்கரன்ஸ், அக்கேசியா மெலனாக்சைலான் போன்ற மரங்களையும் உரூபா தாள்கள் தயாரிக்க உதவும் பைனஸ் பேட்டுலா, பைனஸ் யூகார்பா, பைனஸ் பிக்னாந்தா போன்ற வகைகளையும் இப்படிப்பட்ட மரங்களை வளர்ப்பதில் தன்னிகரற்ற ஓர் அதிகாரியாக விளங்கியவர்களில் ''ஹரூகோஉட்'' எனும் பிரெஞ்சு அதிகாரியை அதுவும் இந்தியா வில் தமிழகத்தில் பணிபுரிந்தவரின் சிறப்பினை இந்த நேரத்தில் குறிப்பிடுவது நனிசிறந்ததாகும்.

பெரும் நீர் மின் திட்டங்கள், நீர்த்தேக்கங்கள், அணைக் கட்டுகள் கட்டி அளப்பரிய தாவரத் தொகுதியையும் அதனைச் சார்ந்த உயிரினங்களையும் அழித்து வருகிறோம். தாவரங்களை யாவது நம்மால் வளர்க்க முடியும். ஆனால் வன உயிரினங்களை வளர்க்க முடியுமா?

ஒரு காலத்தில் தமிழகத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் ''அசுனம்'' எனும் பறவை–உலக விலங்குகளில் மிக வேகமாக ஓடக்கூடிய வேட்டைச் சிறுத்தை மான் வகையில் கதுத்தூரி மான் முதலியன முற்றிலுமாக அழிந்து போனது வேதனைக் குரிய செய்தியாகும்.

வன உயிரினங்களில் குரங்கு வகைகள் ஒரு கணிசமான இடத்தைப் பெறுகின்றது. அதாவது சிங்கவால் குரங்கு, போனெட் குரங்கு (சாதாரண குரங்கு) காமன் லங்கூர், நீலகிரி லங்கூர், ரிசஸ் குரங்கு, கோல்டன் லங்கூர் முதலியன உள்ளன. இதில் சிங்கவால் குரங்கு முதலிடம் பெற்றவையாகும்.

மயில் பறவையினங்களில் மிக அழகானதும், புராணச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும், மருத்துவக் குணமும் கொண்ட பறவையாகும், அதனால் தான் மயிலை இந்தியாவின் தேசியப் பறவையாக மைய அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் மன்னர்கள் மயிலாசனத்தில் அமர்வதையும் மயிற்பீலி கொண்டு

சாமரம் வீசுவதை விரும்பியதையும் வரலாறு வாயிலாகக் காண முடிகிறது.

' எட்டுத் திப்பிலி ஈரைந்து சீரகம்
சுட்டுத் தேனில் குழைத்துண்ண
விக்கலும் கெடும்! கெடாவிடில்
பொத்தகத்தைச் சுட்டுப் போடு''

எனும் பழம்பாடல் குறிப்பிடுவதிலிருந்து மயில் தோகையின் மதிப்பை உணரலாம். பொத்தகம் என்பது மயில்தோகையைக் குறிப்பிடும்.

மேலே சொல்லப்பட்ட சில பறவையினங்கள்—சில விலங்கினங்கள்—மர வகைகள் மனித வாழ்வுக்குப் பயன்படுகின்றன. பறவை வலசை போகும் போது புதிய நாடுகள் அல்லது கரை தெரியாது வழி தவறிய கடற்பயணிகள் (படகுக்காரர்கள்) கரை சேரவோ அல்லது புதிய இடங்களைக் கண்டுபிடிக்கவோ உதவுகின்றது.

ஆர்டிக்டெர்ன் எனும் பறவை 35,000 கி.மீ தூரத்தை கடந்து லவசை வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிட்டா பறவை இமயமலையிலிருந்து இலங்கை வரை சென்று திரும்புவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மனிதனின் மேம்பட்ட வாழ்வுக்கும்—வளமைக்கும் மண்ணும் மரமும் பயன்பட்டு வருவதைப்போல் மண்ணைச் சார்ந்து மரமும் மரத்தை தன்மையால் மண்ணும் வாழ்வு பெறுவது கண்கூடு. எனவே சுற்றுப்புறச் சூழல் மாசு படுவதைத் தடுத்து—மழைப் பொழிவினை அதிகப்படுத்த—பசுமைப்புரட்சி காண மண்ணையும் மரத்தையும் அதைச் சார்ந்த பிற உயிரினங்களையும் நாம் உயிரினும் மேலாக எண்ணிப் பாதுகாக்க வேண்டும்.

நமது எண்ணம் செயல் எதிலும் மரம் வளர்ப்பதை வன உயிரினங்களைப் பேணுவதை முதன்மையாகச் செயல்படுத்திட வேண்டும். வனத்துறை எடுக்கும் மரம் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குவோம்.

எல்லா இடங்களிலும் மரம் வளர்ப்பதை மக்களிடையே எடுத்துச் சொல்வோம். மரம் வளர்ப்பதை தின்சரி கடமையாகச் செய்வோம். இதையே சமூகப்பணியாகச் செயல்படுத்துவோம்.

''இயற்கைத்தாய் நமக்களித்த வனத்தினைநம்
இன்னுயிராய் என்றென்றும் பாது காத்து
செயற்கரிய செயல்களினால் தாயகத்தின்
சிறப்புதனை வெகுவாகப் பெருக்கி வாழ்வோம்!''



# தனித்தமிழ் ஓர் ஆய்வு

புலவர் ப. எழில்வாணன்

உயர்தனிச் செம்மொழியாய், வரம்பிலா இலக்கிய வளமுடையதாய், வழுவிலா இலக்கண நெறியுடையதாய். இயல் இசை நாடகம் என்னும் முப்பாகுபாடுகளைக் கொண்டதாய் விளங்கும் உலகின் முதன் மொழியாகிய தமிழ், மேற்குறிப்பிட்ட சிறப்புகளைப் போல இன்னும் பற்பல தனிச் சிறப்புகளைக் கொண்டிலங்குவதால் அது ''தமிழ்'' எனப் பொருத்தமான பெயர் பெற்றது எனலாம்.

''தமிழை ஈடிணையில்லாத் தனிமொழியெனல் உண்மை நவிற்சியேயன்றி உயர்வு நவிற்சியன்று. தமிழ் என்னும் பெயரும் அதன் தனிச்சிறப்புப் பற்றியதே. தமி=தனி, 'ழ்' ஈறு'' என மொழி ஞாயிறு பாவாணரும் கூறுகின்றார்.

எனவே, 'தமிழ்' என்றாலே தனித்த தன்மையுடைய மொழி என்னும் பொருளிருக்க, மீண்டும் 'தனி' என்னும் சொல்லைச் சேர்த்துத் தனித்தமிழ் என வழங்கலாமா? அவ்வாறு வழங்குவது சரியானதா? என்பன பற்றிய வினாக்களுக்கு விடையிறுப்பதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

**மொழி :**

முதற்கழகத்தின் காலம் கி.மு. 10,000 என்றும், இடைக் கழகத்தின் காலம் கி.மு. 5000 என்றும், கடைக்கழகத்தின் காலம் கி.மு. 2000 என்றும் அறிஞர் கூறுவர்.

முதற் கழக (முதற் சங்க)க் காலத்தில் தமிழ் ஒரே மொழியாயிருந்த காரணத்தினால் எவ்வகைச் சிறப்புப் பெயருமின்றி ''மொழி'' என்னும் பொதுப் பெயராலேயே வழங்கி வந்தது. இச்செய்தியைப் பாவாணரின் 'தமிழர் வரலாற்'றால் அறியலாம்.

**தூய்மைக்குறைவு :**

ஆரியர்கள் கி.மு. 1500 இல் இந்தியாவிற்கு வந்தபின்பே தமிழர்களின் விழிப்பின்மையாலும், ஒற்றுமையின்மையாலும்,

தமிழ்த் தூய்மையைப் பேணும் ஆர்வமின்மையாலும் தமிழ் தன் தனிப்பெரும் சிறப்புகளை இழக்கத் தொடங்கிற்று. ஆரியர்களின் வடசொற்கள் தமிழுடன் கலக்கத் தொடங்கின. தமிழின் தூய்மை படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று.

**செந்தமிழ்—கொடுந்தமிழ் :**

தொல்காப்பியர் காலமாகிய கி.மு. 7 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்ச்சொல் — வடசொல் என்னும் பாகுபாடு தோன்றிவிட்டது. தமிழர்கள் எழுத்துகளையும், சொற்களையும், சொற்றொடர்களையும். சிதைத்துவழங்கத் தொடங்கினர். இது கண்ட அக்கால நூலாசிரியர்கள், ''தமிழ் எழுத்துகளையும், சொற்களையும், சொற்றொடர்களையும், ஒலியும் பொருளும் சிதைக்காதும் திரிக்காதும் இலக்கண நெறியில் பேசுவது செம்மை. செம்மை தவறியது கொடுமை. செம்மையான தமிழ் செந்தமிழ். கொடுமையான தமிழ் கொடுந்தமிழ். தமிழை என்றும் செந்தமிழாகவே வழங்க வேண்டும்'' என நிலையான வரம்பிட்டனர். எனவே தொல்காப்பியர் காலத்தே **செந்தமிழ்** என்னும் சொல் வழங்கலாயிற்று. இதனை,

''**செந்தமிழ்** இயற்கை சிவணிய நிலத்தொடு'' எனத் தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் உரைத்த சிறப்புப் பாயிரத்தின் மூலமாகவும்,

'' அவற்றுள்,
இயற்சொற் றாமே
**செந்தமிழ்** நிலத்து வழக்கொடு சிவணி'' (தொல் : சொல்: எச் : 2)

''**செந்தமிழ்** சேர்ந்த பன்னிரு நிலத்தும்'' (தொல் : சொல் : எச் :4)

ஆகிய தொல்காப்பிய நூற்பாக்களின் மூலமாகவும் அறியலாம்.

**பிற்காலத் தமிழ்**

கழகம் (சங்கம்) மருவிய காலமாகிய கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **களப்பிரர்** படையெடுப்பால் தமிழர் ஆட்சி தகர்ந்தது. தமிழ்மொழியின் தூய்மை குலைந்தது.

**பல்லவர்** காலத்தில் தமிழ்,' வடசொற்கள் மிகுதியாகக் கலந்த வழிபாட்டு மொழியாகி ஆரியக் கலப்பினின்று மீள முடியாமல் போயிற்று.

அவ்வாறே **சோழர்** காலத்தில் இதிகாசங்கள், புராணங்கள் தோன்றித் தமிழைக் கலப்பட மொழியாக்கியதால் தமிழ் மேலும் தன் தூய்மையை இழந்து மெலியலாயிற்று.

அதன்பின் **நாயக்கர்** காலத்தில் சிற்றிலக்கியங்கள் பெருவாரி யாகப் படையெடுத்துத் தமிழ்நூல் வளத்தைப் பெருக்கினும், தமிழ் மொழி நலத்தைச் சீர்குலைத்தன. அளவிறந்த வடசொற் கள் தமிழில் கலந்தன.

அடுத்து **ஆங்கிலேயர்** காலத்தில் வடசொற்களேயன்றி பல மொழிச் சொற்களும் தமிழ்க் கடலுள் நீந்தியாடின. அதனால் தூய தமிழில் பேசுவது இயலாது என்னும் நிலை ஏற்பட்டது.

**தனித்தமிழ் :**

இக்காலத்தில் எம்மொழி பேசுபவராயினும் அம்மொழியுடன் ஓரிரு தமிழ் சொற்களைக் கலந்து பேசினாலே போதும். அவரைத் தமிழ் பேசுபவராகக் கூறிவிடுவர். இருபத்தைந்து விழுக்காடு தமிழ்ச்சொற்களைப் பிறமொழிகளுடன் ஒருவர் கலந்து பேசினால் போதும். அவரைச் சரளமாகத் தமிழ் பேசு பவர் என்பர்.

பத்து விழுக்காடு பிறமொழிச் சொற்களை நீக்க முடியாமல் கலந்து தமிழ் பேசுபவர்களைச் ''செந்தமிழ் வாணர்கள்'' என அழைத்துச் சிறப்புச் செய்வதையும் நாம் காணலாம்.

எனவே இந்நிலையில், 'தமிழ்' என்பதோ 'செந்தமிழ்' என்பதோ தூய்மையான தமிழைக் குறிப்பதாக இல்லை. ஆதலால் எள்ளளவும் பிறமொழிக் கலப்பின்றிப் பேசும் தமிழை அல்லது எழுதும் தமிழைக் குறிப்பதற்கு ஓர் அடைமொழி கொடுக்க வேண்டிய சூழல் இயல்பாகவே ஏற்பட்டது. அதுதான் ''தனித்தமிழ்'' என்பதாகும்.

தனித்தமிழ் என்பது ஒரு சொல் கூடப் பிறமொழிச் சொல் கலவாது, முழுதும் தமிழ்ச்சொற்களாகவே பேசுதல் அல்லது எழுதுதல் ஆகும். பிறமொழிச் சொற்களை மட்டுமின்றிப் பிற மொழி எழுத்துகளையும் கலவாது இருத்தலும் ஆகும். அவ்வாறு பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்படின், உரிய தமிழ்ச்சொல்லை உருவாக்கிப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக '**Bus**' என்பதை 'பஸ்' எனக் குறிப்பிடாது, ''பேருந்து'' எனக் குறிப்பிடல். இது போல எடுத்துக்காட்டுகள் பற்பல கூறலாம்.

**இறுதிநிலை :**

''மொழி'' என்னும் நிலையிலிருந்து 'தமிழ்' என மாறிப் பின் 'செந்தமிழ்—கொடுந்தமிழ்' எனவாகி, அதன்பின் 'கலப்புத் தமிழ், மணிப்பிரவாள நடைத்தமிழ்' போன்ற நிலைகளை அடைந்து இன்று 'தனித்தமிழ்' என்னும் பெயரையும் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. இதுவே இறுதி நிலையாக இருக்கு மாறு காத்தல் நம் கடமை.

ஆதலால் 'தனித்தமிழ்' எனக் கூறுதல் பொருந்தாது என உரைப்பதுவும், தனித்தமிழ் என்றால் கலப்புத்தமிழ் ஒன்று உண்டோ எனக் கேட்பதுவும், தமிழ் என்றாலே தூய்மையான தமிழ்தான்; பின் ஏன் தனித்தமிழ்? என வினவுவதும், தனித் தமிழ் என்றால் தமிழர்களிடையே தனிப்படுத்தப்பட்டார் பேசும் தமிழோ என நகையாடுவதும் பொருளற்றவையாம்.

இனி, 'தனித்தமிழ் இயக்கம்' பற்றியும் இக்கட்டுரையில் சுருங்கக் காண்பது தேவையான ஒன்றாம்.

**தனித்தமிழ் இயக்கம் :**

கால்டுவெல் பெருமகனார், சூரிய நாராயண சாத்திரியார், பாம்பன் குமர குருதாச அடிகள், மறைமலை அடிகள் முதலானோர் தனித்தமிழ் இயக்கத்தைக் கண்டனர். தனித் தமிழுக்கு வித்திட்டனர்.

மறைமலை அடிகளே வியக்கும் வண்ணம் தமிழ்ச்சொற் களுக்குச் சொல்மூலம், வேர்மூலம் காட்டித் தனித்தமிழ் இயக்கம் கண்டு, பல துறையிலும் மிகுதியான நூல்கள் **தனித்தமிழில்** வெளிவர வழிகாட்டி **மொழி ஞாயிறாக விளங்கிய தேவநேயப் பாவாணர்** தொண்டாற்றியது, தமிழைச் சூழ்ந்த இருள் அழிய ஒளியூட்டியதாகும்.

**பாவேந்தரும்,** ''**தனித்தமிழில்** இந்நாட்டுத் தக்க புதுக் காப்பியம் நன்னூல் இயற்ற'' வேண்டுமெனக் கூறியது இதனை வலியுறுத்தியதாகும்.

பாவாணரின் மாணவரும், தனித்தமிழ் அரிமா எனப் போற்றப் படுபவருமாகிய **பாவலரேறு பெருஞ்சித்திரனாரும்** பற்பல பாவியங்கள், செய்யுள் உரைநடை நூல்கள் எழுதியும் தனித்தமிழால் எதுவும் இயலும் என்பதை நிலைநாட்டித் தொண்டாற்றி வருவது தனித்தமிழ் இயக்கத்துக்கு உயிரூட்டி வலுவூட்டுவதாகும்.

இத்தனித்தமிழ் இயக்கத்தை அனைவரும் போற்றிவரின் 'தனித்தமிழ்' என்னும் நிலைமாறி 'தமிழ்' என்றே அழைக்கும் நிலை உருவாகும். செம்மை, தனிமை போன்ற அடைமொழி களும் தேவையற்றனவாய் நீங்கி எங்கும் 'தமிழ்' என்ற மூன்றெ ழுத்தே முழங்கும் என்பது உறுதி! அந்நிலை வரும்வரை மேற் குறிப்பிட்ட அறிஞர்கள் வழங்கியவாறு 'தனித்தமிழ்' என்றே வழங்கி, நாம் தமிழின் தூய்மையைக் காப்போம்!

வாழ்க தமிழ்! வளர்க தனித்தமிழ் இயக்கம்!



# இன்பத்துப்பாலில்

## பாவலர் கன்னல்

மனிதனின் உணர்வுகள் இயற்கையிலேயே 'போலச் செய்தல், என்னும் உணர்வைப் பெற்றுள்ளன. இப்போலச் செய்தல் உணர்வே இலக்கியத் தோற்றத்தின் கருப்பையாகும். ''இலக்கியம் வாழ்வையும் கலைகளையும் பார்த்து அவைபோலத் திரும்பவும் படைக்க முயல்வதால் தோன்றும் நுண்கலையாகும்'' இப்போலத் தோன்றுதல் மொழிப்படுத்தப்படும்போது 'உவமை' எனப் பெயர் பெற்றது. பழந்தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் உவமம் என எழுதி வந்தனர். அவ்வுவமத்தை,

> ''வினைபயன் மெய்உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்''

என ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார் வரம்பிட்டுக் கூறியுள்ளார். ''ஒரு பொருளையும் அதற்கு உவமையாகக் கவிஞர் காணும் ஒன்றையும் நாம் நன்கு அறிந்து மகிழுமாறு அமைக்கும் அணிவகை உவமம் எனலாம்.''

உரைநடையாகிய உடலுக்கு உணர்ச்சியாகிய உயிரூட்ட உவமை மிகச் சிறந்த கருவி. கற்பனை என்பது எண்ணத்தின் தெளிவு அல்லது நினைவின் சிறகு. இக்கற்பனையை வளப்படுத்தவும்—நலப்படுத்தவும் செய்வது உணர்ச்சியூட்டக் கூடிய உவமையாகும். உரைநடை சிறக்கவும் உவமையைப் பயன்படுத்துகின்றனர். கற்பனையின் தாய் உவமை எனலாம். இவ்வுவமை புகழ்ந்தோ இகழ்ந்தோ பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை நன்கு உணரலாம். உயர்த்தியோ தாழ்த்தியோதான் உவமையை பயன்படுத்த இயலும் என்பது தொல்காப்பியர் கண்ட உண்மை' அதை, ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'' எனவும், 'கிழக்கிடும் பொருளோடைந்து மாகும்'' எனவும் குறிப்பிடுவர்.

இவ்விருநிலைகளிலும் உவமைகளை வான்புகழ் வள்ளுவர் வழங்கியுள்ளார். காமத்துப் பாலில், சிந்தனைக்குரிய இரு உவமைகளைச் சேர்த்துள்ளார். இழித்துக் கூறும் இவ்வுவமைகளை இன்பத்துப் பாலில் வழங்கி அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் அறிவின்மையைப் போக்க இலக்காகப் பயன்படுத்தியுள்ளார்.

''தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு''

என்பர்.

''தாமும் தாமும் விரும்பும் இன்பம் போலே இருக்குமோ
வைகுண்டத்தில் இன்பம் என்றவாறு''

எனப் பரிதியார் உரை எழுதியுள்ளார். ''தாமரைக் கண்ணான் என்பது தாமரை யிடத்தான் என்றது. மாயவன் உரையும் வைகுந்த உலகம் என்றும் ஆம்'' என்பர் காலிங்கர். இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு என்ற வினாவை தமிழ்ச் சமூகத்தின் முன்னர் விடுத்து இழிந்த உவமையாக்கி வைகுந்த இன்பத்தை தமிழகத்தின் வழக்குக்குக் கொண்டுவரும் வன்கன்னரை இனம் காட்டுகின்றார். இவ்வுவமை மூலம் வள்ளுவர், இல்லாத வைகுந்த இன்பத்தை இன்றும் பேரின்பம் எனப் பீற்றித் திரிகின்ற மதவெறியர்கட்கு தெளிவுபடுத்த வேண்டி அன்றே விளக்கம் தந்துள்ளார்.

புணர்ச்சியின் மகிழ்தலில் புகுத்திய இவ்வுவமை அறிவுலகத்திற்குப் புதியதாகத் தோன்றிய கதிரவனை ஒக்கும். தாமரைக் கண்ணான் உலகை இழித்துக் கூறிய இவ்வுவமையைப் போலவே 'ஊடலுவகை' என்ற இறுதி அதிகாரத்திலும் பிறிதோர் உவமையை எடுத்துக் காட்டுகின்றார்.

''புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து''—*1323*.

''நிலமும் நீரும்போல் ஒன்றுபட்ட காதலர் வாழ்க்கையில் ஊடுவது தனி இன்பமாக இருக்கின்றது. தேவருலகம் அத்தகைய இன்பம் தருமோ? என்கிறாள்'' தலைவி. ஆய்வுக்குரிய வினாவை விடுத்து அறியாமையைப் போக்குவது சொல்லுதல் வல்லார் செயலாகும். வள்ளுவர், புத்தேள் நாடுண்டோ? என்ற

வினாக்குறியை விடுத்து—வியப்புக் குறியை வீழ்த்தி விடுகிறார். 'எண்ணித் துணிக' எனக் கூறிய வள்ளுவர் இங்கே, புத்தேள் நாட்டை இழிந்த உவமையாக்கி, ஊர்ப்பானை உருட்டுவோரை உலகுக்கு அடையாளம் காட்டுகின்றார்.

இவ்விரு இழிந்த உவமைகளின் மூலம், அவ்வின்பத்தை, அவ்வுலகவின்பத்தை இழித்துக் கூறியுள்ளார். இவ்வில்பொருள் உவமைகள் இரண்டும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் இயற்கை இன்பமே இன்பம் என்பதை ஐயமின்றித் தெளிவுபடுத்தியுள்ளதை நன்குணரலாம். அவர்கள் கூறும் அவ்வுலக இன்பம் விளக்கம் தரவும், விடை கூறவும் இயலாத போலி இன்பம் என்பதை இன்பத்துப்பாலில் இவ்விரு இல்பொருள் உவமைகள் மூலம், வள்ளுவர், ஆய்ந்து—தெளிந்து—தேர்ந்து கூறியுள்ளார்.

தெளியாதாரும், தெளிவு பெற புத்தேள் நாடுண்டோ? எனவும், இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு எனவும் இரு கேள்விக்குறிகளைக் கூறி, அவரே இல்லை என்ற ஆய்வியல் உண்மையை எடுத்துக்காட்டுகின்றார். வள்ளுவர், சிற்றின்பம் என இழித்தும், பழித்தும் கூறும் பெண் இன்பத்தையும், பேரின்பம் என மதத் தலைவர்களும்—சமயக் குரவர்களும் கூறும் வைகுந்தத்தையும், புத்தேள் நாட்டையும் (இந்திர லோகத்தையும், தேவலோகத்தையும்) இழிந்த உவமை மூலம் ஒப்பிட்டு—உவமையாக்குதல் போலக் கூறி இழித்துரைக்கின்றார்.

இவை வைகுந்தத்தையும், சொர்க்கத்தையும் பேரின்பம் எனப் பேசுவோரைப் போலி மாந்தர்கள் எனப் புலப்படுத்துகின்றன அல்லவா?

---

## தமிழுணர்வின் தொண்டு!

உளமுருக்கி ஊனுருக்கும் தமிழ்வளர்த்த
உயர்திறத்துப் பேரறிஞர் கா. சு. தம்மின்
வளம்மருவும் புகழ்பரப்ப ஆண்டு தோறும்
வளர்விருப்பால் குழித்தலையில் அறிஞர் கூடும்
களம்அமைத்துத் தமிழ்வளரத் தொண்டு செய்து
கனல்கின்ற தமிழுணர்வின் தொண்டு செய்து
இளமுருகு பொற்செல்வி இணையே! உங்கள்
இணையற்ற தமிழ்ப்பணிக்கோர் உவமை
காணேன்!

—கவிஞர் சி. இறையரசன்

# நன்னியூர் நாவரசன் கவிதைகள்



புலவர் அருணா பொன்னுசாமி

## பிறப்பும் சிறப்பும்

பொன்திணிந்த புனல் பெருகும் பொன்னியாறு எனப் பெயரிய கங்கையிற் தூயதாய் காவிரியாற்றின் தென்கரையில் புகழூர் சருக்கரை ஆலைக்கும் வாங்கலுக்கும் இடையே இயற்கையன்னை எழிலோடு வீற்றிருக்கும் சிற்றூர்தான் நன்னியூர். அத் தாய்க் கிராமத்தின் அருகிலுள்ள நன்னியூர் புதூரில், மணியக்காரர் பழனியப்பர் மலையம்மை ஆகியோரின் ஒரே செல்வனாகப் பிறந்தவர்தான் முத்துசாமி என்ற இடுகுறிப் பெயருக்குரிய நாவரசன் அவர்கள்.

பொன்னியாற்றங்கரையிலே பிறந்து வளர்ந்த இவரைப் பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்த கவிஞர் எனப் பறைசாற்றியதும் பொன்னியிதழே ஆகும். பாரதிதாசன் பரம்பரை, பொன்னி இதழ் அறிமுகம் செய்துவைத்த நாற்பத்தேழு கவிஞர்களுடன் முடிந்துவிடவில்லை, அது ஆயிரக்கணக்கான கவிஞர்களுடன் வளர்ந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அப்படி 1947இல் புதுக்கோட்டையிலேயிருந்து வெளிவந்த பொன்னி இதழ், நன்னியூர் நாவரசன் அவர்களை நற்றமிழ் உலகிற்குக் கவிஞனெனக் கண்டெடுத்துக் கொடுத்தது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கு அறிமுகமாகி, அவராலேயே நாவரசன் என்றழைக்கப்பட்டு அதனாலேயே அப்பெயர் பெற்ற வித்தகக் கவிஞர்தான் இந்த நன்னியூர் நாவரசன் அவர்கள். உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் உற்ற நண்பர்.

'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்'

என்று சொல்லைப் பயன்படுத்தும் முறையைக் குறிப்பிடும் வள்ளுவர் தம் குறள், பேச்சுத் தமிழிற்கு மட்டுமின்றி, கவிதைக்கும் பொருந்தும். பிறரைக் கவரத்தக்க எழுச்சியான நடையை இயல்பாகக் கைவரப்பெற்ற கவிஞர் நன்னியூர் நாவரசன் அவர்கள், யாப்பு பயின்று சீர்தளை தெரிந்ததால்

கவிஞர் ஆனவர் அல்லர். கவிதைகள் தம் உள்ளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிக் காட்டாறென ஓடிவர அதன் காரணியமாக இலக்கணம் பயின்று கவிதையை மரபு வழியில் பாடும் திறன் பெற்றவர். நாவரசன் கவிதைகள் நறுந்தேன் ஒழுகும் பலாச் சுளைகள்.

ஓரிரு சுளைகளைச் சுவைப்போம்!

'முத்தாக மணியாக எங்கட் கெல்லாம்
மூச்சாக இருக்கின்ற 'ழ'கரத் தாயே!
சத்தான கருப்பொருளே! பொதிகைப் பூவே!
சாகாத மாமருந்தே! அறிவின் ஊற்றே!'

என்று மொழியைச் சிறப்பித்துப் பாடுவார்.

'செங்கதிர்ச் செல்வன் வானத்
தெருவிலே செல்லக் கண்டு,
மங்கையாம் பூமிப் பெண்ணாள்
மனதிலே ஆசை வெள்ளம்;
பொங்கஅவ் வுணர்ச்சி யாலே,
பூரித்து விம்மி நிற்கும்
கொங்கைநீ என்று சொல்வேன்
கோபமா மலையே என்மேல்'

என்று மலையைப்பற்றிப் பாடும் கவிஞர் தம் கற்பனையால் மலையையே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார். 'பாட்டில் உள்ள சொற்கள் ஒரு பொருளை விளக்கவில்லை அந்தப் பொருளையே நம் மனத்தில் படைத்துவிடுகின்றன' என்று ஆபர்கிராம்பி கூறுவதை இக்கவிதை கொண்டு நாவரசன் அரண் செய்கிறார்.

## உவமைக் கவிஞரோடு ஒப்பீடு :

உவமைக் கவிஞர் சுரதாவின் கவிதைகளில் புதிய நேர்த்தியான உவமைகளைக் காணலாம். கற்பனைச் செய்திகளை மட்டுமே பாடுபொருளின் கருவாகக் கொள்ளாமல் வரலாற்றுக் குறிப்புகளையும் அங்கங்கே வழங்கிச் செல்லும் இயல்பு கவிஞர்களுக்கு உண்டு என்பதை அளந்தறிய உவமைக் கவிஞர் சுரதா,

ஒரு சரியான முத்திரைப்படியாகும். பேரறிஞர் அண்ணாவைப் பாட வந்த சுரதா,

‘ முற்றிய மலையும் குன்றும்
மொய்த்த நன்னாக நாட்டான்
வெற்றிலைக் கொண்டு வந்தான் — நீரே
வெற்றியைக் கொண்டு வந்தீர்’

என்று கூறும் கவிதையில் நாகப்பட்டினத்தை ஆண்ட நாகன் என்பவன்தான் வெளிநாட்டிலிருந்து வெற்றிலையைத் தமிழகத்திற்கு முதல் முதல் கொண்டு வந்தான் என்ற வரலாற்றுக் குறிப்பை அழகாக அளிக்கின்றார். இதேபோல நன்னியூர் நாவரசன் அவர்கள்,

‘கொடுத்துப் பழகிய குமணன் கரங்களைப்
பிடித்துக் கொண்டே பெருந்தலைச் சாத்தன்
‘ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்’
என்று கதறிய இசைபடு மொழிகள்
இல்லை யென்றே சொல்லிப் பழகிய
கருமிகள் நெஞ்சில் கவிந்த பேரிடி!’

என்று குமணனைப் பாடிய பெருந்தலைச் சாத்தனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பை வழங்கிச் செல்லும் பகுதிகள் ஒப்பிட்டு மகிழ்வதற்கேற்றதாகும்.

## பாடுபொருள்கள் :

நாவரசன் அவர்கள் இயற்கையையும், அகத்துறையையும், நூல்கள் பற்றியும், தாசி வளர்த்த தமிழ் குறித்தும், இல்லறத்தைப்பற்றியும், இறந்தும் இருப்பவர்களைப் பற்றிய கையறு நிலையுமாகப் பல்துறைகளைப் பற்றிப் பாடியுள்ளார்.

## மதிப்பீடு :

மரபுக் கவிதைகளை யாத்திட வல்லமை படைத்த இக் கவிஞர், புதுக் கவிதைகளையும் வடித்துள்ளார். இதைத் தவிர்த்திருக்கலாம்.

அகத்துறையைப் பாடும்போது பாவேந்தர் பரம்பரையில் வந்த இந்தத் தரமான கவிஞர் சற்று கீழே இறங்கிவந்து பாடியிருக்கத் தேவையில்லை. ஒத்த அன்புள்ளம் கொண்ட ஒருவனும் ஒருத்தியும் தாமே உணர்ந்து தெரிந்துகொள்ளக் கூடிய அகத்துறைச் செய்திகளை இவ்வளவு பச்சையாகத் தரவேண்டியதில்லை என்பது என் எண்ணம்.



# பண்புடைமை தந்த பரிசு

குறள் பி. அப்துல் கரீம்

அன்பும் நல்ல குடிப்பிறந்தவராக இருத்தலும் ஆகிய இரண்டு இன்றியமையாத இலக்கணங்களும் பண்புடைமையைப் பெறும் வழிகளாகும். அவற்றைப் பெறுவது எப்படி என்பது தான் ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகும். உலகத்தில் பெரும் பகுதியினர் இந்நாளில் பண்புடையவர்களாக இல்லை என்பது ஒருமித்த கருத்தாகும். நல்லவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைகிறது என்பதும் நாடறிந்த பேருண்மையாகும். பண்பாளரை தன்மை உள்ளவர் என்று குறிப்பிடுவார்கள். தன்னைப்போல் பிறரை எண்ணுபவர், எண்ணிப் பிறருக்கு உரிய மதிப்பைத் தருபவர் என்பது அதன் பொருளாகும்.

ஒருவர் மற்றவருக்கு வணக்கம் செலுத்தும்போது மற்றவர் திரும்ப வணக்கம் செலுத்துவது நம் மரபாகும். ஆனால் பலர் திரும்ப வணக்கம் செலுத்துவதில்லை என்பதும் நடைமுறை உண்மை ஆகும். இராமனும், குகனும் கானகத்தில் சந்திக்கிறார்கள். முதலில் தான் சந்தித்த இராமனை நம் நாட்டு மரபுப்படி வணங்குகிறான். அரச குமாரனாகிய இராமனும் வேடுவனாகிய குகனுக்குத் திரும்ப வணக்கம் செலுத்துகிறான். இந்த அரும்பெரும் நிகழ்ச்சியைக் கம்ப இராமாயண ஆசிரியர் கம்ப நாட்டு ஆழ்வார் குகப்படலத்தில் ''வந்தெதிரே தொழுதானை வணங்கினான், மலரிருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் அவன் அடி வீழ்ந்தான்!'' என அருமையாகச் சித்தரித்துக் காட்டுகிறார். கூர்மையான அறிவு உடையவரும் பண்பு இல்லாதவராக இருந்தால் அவர் மரத்திற்கு ஒப்பாவார் என்ற அறிவுரையை, ''அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பிலாதார்'' என்ற குறட்பா வாயிலாக வள்ளுவப் பெருந்தகை நமக்கு வழங்குகிறார்.

ஒருவர் பண்புடையவராகத் தன் சுற்றத்தார், நண்பர்கள், பொது மக்கள் ஆகியோரிடம் பழகி வந்தால் அவரிடம்

எல்லோரும் அன்புடனும் மரியாதையுடனும், நேசத்துடனும், பாசத்துடனும் மதித்து நடப்பார்கள். அத்துடன் அவருக்குத் தொண்டு மனப்பான்மையும், தர்ம சிந்தனையும் இருந்து விட்டால் அவருக்கு நிகர் அவரே ஆவார். வருகின்ற விருந் தினரை நல்லமுறையில் வரவேற்று, விசாரித்து, உண்மை பேசி, விருந்தளித்து, அவர் உண்ட உணவின் மிகுதியைத் தான் புசித்து வாழ்கின்ற ஒரு உண்மைக் குடிமகன் தன்னுடைய நிலத்தில் விதையே போட வேண்டியதில்லை. அவருடைய நிலம் தானாகவே விளையும் என்ற ஆழ்ந்த கருத்தினைத் தன் பொன் மொழி மூலம் வள்ளுவனார் பகர்கிறார். அந்தக் குறளாவது ''வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். விதை போட வேண்டியதில்லை, என்றதன் உட்பொருள் விருந்தினரை உபசரிக்கின்ற உயர்ந்த குணமுடைய உத்தமரின் நிலத்தில் நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு அத்தனை விருந்தினரும் அவர் நிலத்தில் வித்திட்டு, அறுவடை செய்து அவருடைய இல்லத்தில் சேர்ப்பர் என்பதாகும். இந்தச் சீரிய கருத்தினை விளக்கும் பழமொழிதான், ''ஊர்ப்பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்'' என்பதாகும்.

பண்புடைமை என்னும் அணிகலம், சாதி, மதம், சொந்தம், பந்தம், தேயம், நாடு ஆகிய எல்லாவற்றையும் கடந்த நிலை யாகும். பண்பினால் ஆள்பவர் எல்லோருடைய அன்பையும், பெருமதிப்பையும், நேசத்தையும், எவ்விடத்தும், எப்போதும் பெற்று இன்புறுவார் என்பது திண்ணம்.

பண்புடைமை என்னும் சீரிய, உன்னத, உயரிய, ஒப்பற்ற அணிகலனை ஒருவர் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு அடக்கத்துடன், பொறுமையைக் கடைப்பிடித்து, பொறாமை என்னும் தீயை அகற்றி, அன்புடன் எல்லோர் இடத்தும் பழகி, தொண்டுள்ளத்தோடு இயற்றளவு ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து, உழைப்பினால் உயரவேண்டும் என்ற உள்ளத்தோடு, விடா முயற்சியை மேற்கொண்டு, யாரும் எள்ளி நகையாடாதபடி வாழவேண்டும் என்ற மன உறுதியோடு வள்ளுவர் பெருந்தகை கூறியபடி, 'வையத்து வாழ்வாங்கு' உலகத்தார் அனைவரும் வாழவேண்டும் எனக் கூறி கா.சு. அவர்களின் நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறேன். ★




பெரியவர் சிறுவை மோகனசுந்தரம் மறைந்துவிட்டார், அவரது எழுபத்தோர் ஆண்டுகள் (18-11-1916) முதல் 18-7-1987) ஓடி ஒளிந்துவிட்டன. இல்லை; ஒளிர்ந்து ஒளியாய் விட்டன. பிறந்தவர் இறப்பது உறுதி. ஆனால் பிறந்தவருள் சிறந்தவர் மறையும்போது அனைவரும் துன்புறுகிறோம். சிறந்தவர் எவ்வளவு முதியவராயினும்—எவ்வளவு நோயுறினும் —அவருடைய மெல்லிய குரல் வழி வரும் நல்ல கருத்துகள் அனைவர் வாழ்க்கைக்கும் பயன். அதனால் அவர் மறைவும் துன்பம்.

சிறுவையாரின் பெருமைகளுள் தலையாயது அவருடைய **கைம்மாறு** கருதாத் தமிழ்—தமிழர் பணி—ஓயா உழைப்பு. சிறுவையார் தமிழ் ஆர்வலர்; **தனித்தமிழ்** ஆர்வலர். அதனால் மோகனசுந்தரம் . என்ற தம் பெயரை நச்சினார்க்கினியன் என்றும் வழங்கினார்.

சிறுவையாரின் தமிழார்வம் பழைய நீதிக்கட்சியிடம் பெற்றது. **ஓரளவு** தன்மதிப்பு—திராவிட இயக்கங்களிட மிருந்தும் பெற்றது. எனக்குத் தெரிந்து மருத்துவர் தருமாம்பாள்—திரு. வி. க. இருவரும் சிறுவையாரின் மனங் கவர்ந்த பெரியோர்: கா. நமச்சிவாயரை நேரில் அறியா ராயினும்(?) அவரைப் பெரிதும் போற்றினார். காரணம் அவர் (1) 'தமிழ்த் திருநாள்' தோற்றுவித்தார்; தமிழ்த்திருநாள் தமிழர் திருநாள் ஆகியது சிலம்புச்செல்வரால்தான். (2) தமிழ்ப் புலவர்கட்கு ஆங்கிலம் படித்தவர் உலகில் பெருமதிப்பு ஏற்படுத் தினார்—உடையால், உரையால், செல்வத்தால், செல்வாக்கால், படிப்பால், பண்பால். (3) தமிழ்மட்டுமே கற்றவர் புலவரா தற்கு (முன்னம் 'வித்துவான்') பாடத்திட்டம்/தேர்வு வகுத்துக் கொடுத்தார். (4) ஆங்கிலக் கல்வியின் தொடக்க நாளில் தமிழ்க் குழந்தைகட்குப் பொருத்தமான பாட நூல்களை எழுதிக் கொடுத்தார். (5) சிறு குழந்தைகட்குரிய பாட நூல்களையும் பெரியவர்கட்குரிய நன்னூல், திருவாசகம் போன்ற நூல்களை யும் சிறந்த முறையில் அச்சிட்டார்.

மேற்குறித்த காரணங்களால் ஆண்டுதோறும் பொங்கல் திருநாளில் கா. நமச்சிவாயர் படத்தையும் அவர் பாடிய பாடல் ஒன்றையும் தமிழன்பர்கட்கு விலையின்றி அனுப்பிவைத்தார். அவர் பெயரால் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் ஆய்வுச் சொற்பொழிவுகட்கு ஏற்பாடு செய்தார்.

பல்லாண்டுகட்கு முன்பே (பார்க்க : திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்) நக்கீரர் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து, அறிஞர்களைக் கொண்டு ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்து மாறு செய்தார். பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் போன்ற பெரியவர்களையும், என் போன்ற எளியவர்களையும் இப்பணியில் ஈடுபடுத்தி, ஈடுபட்டவர்கட்குப் புகழ் தேடினார்; ஈடுபாட்டுடன் வந்து கேட்டவர்கட்குத் தமிழார்வமும் தமிழாற்ற லும் தழைக்கச் செய்தார்; பட்டங்கள் பெற்றுப் பதவிகள் பெறவும் வலிந்து உழைத்து உதவினார்.

சிறுவை மோகனசுந்தரனார் சென்னையில் செய்த பெரிய தொண்டு திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி என்ற ஒன்றைத் தொடங்கி மாலை நேரங்களில் தமிழ்ப் புலவர் வகுப்புகளையும் முதுகலைத் தமிழ் வகுப்புகளையும் நடத்தியமையே ஆகும். கடந்த பல்லாண்டுகளில் அவரால் உருவான தமிழ்ப் புலவர்கள், முதுகலைத் தமிழ் பட்டத்தினர் நூற்றுக்கு மேற்பட்டவர். அவர்களுள் சிலர் பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றும் வாய்ப் பினைப் பெற்றுள்ளனர்; ஆராய்ச்சி முனைவர்களாகவும் ஆகியுள்ளனர். ஆம். திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் படித்தும் படிப்பித்தும்! திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரித் தொடர்பால் நிகழ்ந்த சிறந்த திருமணங்களும் உண்டு!

நக்கீரர் கழகம் கண்டதாலும், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி அமைத்ததாலும் தமிழ்—தமிழர் வரலாற்றில் கட்சி அரசியல் கடந்த—சாதிமத வேறுபாடு கடந்த—மிகப் பெருந் தமிழ்த்தொண்டராக அவர் புகழ்பெற்றுள்ளார். காலந்தொறும் இத்தகைய கைம்மாறு கருதாத தமிழ்த் தொண்டர்கள் தோன்றுவதாலேயே தமிழ் வளம்பெற்று வருகிறது! இல்லை யேல் ஒதியமரம்போல் சாய்ந்துவிடும்!

சிறுவை மோகனசுந்தரனாரின் சீரிய பண்புகளுள் மிகச் சிறந்தது அவருடைய சீறாப் பண்பு. ஆம். சினம் வந்தபோதும் சீறாப் பண்பு. காரணம் அவருடைய எளிய வாழ்க்கையும்

பகை வளர்க்காமல் பாடுபட்டாலே தமிழ்ப் பணி வளரும் என்ற இயற்கை உணர்வுமே ஆகும்.

ஆம். சிறுவை மோகனசுந்தரம் தம் எளிமையை—பட்டங்கள் பெறா நிலைமையை—பணவாய்ப்பு இல்லா வாழ்க்கையைத் தடைகளாகக் கருதாமல் தமிழ்ப் பணிகட்குரிய படிகளாக—படைகளாய்ப் பயன்படுத்திக் கொண்டார். இதுவே ஒரு பெரிய அமைப்பாளருக்கு (**Organiser**) இருக்கவேண்டிய இமயப் பண்பு!

சிறுவையாரின் தமிழ்ப் பற்று (மொழிப்பற்றும் இலக்கியப் பற்றும்) அரசியல் கட்சி வேறுபாடுகளாலும், கூறுபாடுகளாலும் அலைக்கழிக்கப் படாதது. இதனால் வேறு சிலரைப்போல அவரும் சில உலகியல் நலங்களை இழந்தவர். எனினும் அதை அவர் பொருட்படுத்தவில்லை. காரணம் தன்னினும் அவர் தமிழையே பெரிதாக மதித்தார். காங்கிரசு இயக்கத்தைச் சார்ந்த திரு. அரு. சங்கர் அவர்களை சிறுவையார் பெரிதும் மதித்ததும் நம்பியதும் அவர் தம் கட்சிக்கு அப்பாற்பட்ட தமிழ்க் காதலுக்குப் பெருஞ் சான்று. ஆனால் ஒன்று: தேசியர்களுள்ளும் சிலம்புச் செல்வர், அரு. சங்கர் போன்ற சிறந்தவர்களையே அவர் மதித்தார்.

அதிலும் அரு. சங்கரிடம் அவர் வைத்திருந்த அன்பும் மதிப்பும் நெஞ்சை நெகிழ்விக்கக் கூடியது. அந்த அன்பு வீண்போகாது.

இறுதியாகவும் உறுதியாகவும் சொல்லத் தக்கன இரண்டு. (1) சிறுவையார் எல்லாத் துறைகளிலும் தூய்மையைப் போற்றினார்—உணவில், உடையில், உரையில், உணர்வில், ஒழுக்கத்தில். (2) மறைமலை அடிகளார், பண்டிதமணி, பாரதியார், நாட்டார், சொல்லின் செல்வர், செந்தமிழ்க் காவலர் சிதம்பரனார், முத்தமிழ்க் காவலர், தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அவர் வைத்திருந்த அன்பும் மதிப்பும் அளப்பரியது. ★★

---

## ஞாயிறின் ஒளி

**''ஞாயிறின் ஒளியாம் நந்தம், நற்றமிழ்க் 'காசு' மீது**
**தாயினும் அன்பு கொண்டோர் தலையாய விழாக் கண்டிட்டார்**
**ஆயிரம் பாராட்டுக்கள், ஆன்றநல் விழாசி றக்க,**
**வாயினால் மட்டு மல்ல மனதாலும் வாழ்த்துவேனே.''**

—**கவிஞர். அரங்கமுத்துமணி**



# பெரியவை மூன்று

புலவர். மீ. தங்கவேலனார்

சோழ மன்னனுக்கு ஓரையம் எழுந்தது. சோழ நாட்டுப் பகுதியில் வயல்வெளிகளான மருதநிலமே மிக்கிருக்கும். அதனால் மலையைக் கண்டால் சோணாட்டார் வாயங்காந்து மலைத்திருப் பர். சோழ மன்னனுக்கும் அப்படியெழுந்ததாம் ஐயப்பாடு. மலையை விடப் பெரியது யாதென்பதே அந்த ஐயம். அதனை யொட்டிக் கடலினும், உலகினும் பெரியவைகளையும் அறிய ஆவலுற்றான். தன் வினாக்களைத் தொடுத்துத் தன்னாட்டிலும் ஏனைய நாடுகளிலும் விடை வேண்டி விடுத்தான். விடைகள் வந்தில; புலப்பட்டில.

வினாக்கள் தொண்டை நாடடைந்தன. அங்கிருந்த அறிஞர் பெருமகனாரொருவர், மூன்று வினாக்களுக்கும் விடைகளாகத் தனித்தனி மூன்று குறட்பாக்களை எழுதியனுப்பினார். அம் மூன்று குறட்பாக்களும் பொருத்தமான விடைகளாயமைந்தமை கண்ட சோழ மன்னன் மகிழ்ந்து, விடைதந்த பெருமகனாரை அழைப்பித்துத் தன் அரசவையில் அமைச்சராக்கிக்கொண்டான். இஃதொரு செவிவழிச் செய்தி.

சைவ சமயப் பன்னிரண்டாந் திருமுறையான திருத் தொண்டர் புராணஞ் செய்த சேக்கிழார் பெருமானே மன்னன் தொடுத்த வினாக்கட்கு விடை தந்தவர். மதிநுட்பம் நூலோடு டைய சான்றோரான சேக்கிழார் முதல் வினாவுக்குரிய விடையாக,

''நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது'' (124)

எனவும், கடலினும் பெரிதாகப்

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது'' (103)

எனவும், உலகினும் பெரிதாகக்

''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'' (102)

எனவும் மூன்று திருக்குறட் பாடல்களை எழுதி விடையாக அனுப்பினார் என்பர். இவைபற்றிய எண்ணம் வரலாறாகக் கேட்டு மகிழ்ந்ததன்றிப் பிறிதொன்றும் அன்று எழவில்லை. ஆனால், மக்கட்குத் திருக்குறள் பயிற்றும் நாளில் தெளிவு

பெற்றும் மகிழும் முகங்கள் வினாக் குறியொடு திகழ்தலைக் கண்டு துணுக்குற்று அவர்கட்குத் தெளிவுண்டாக்க முயன்றிருக்கிறோம்.

சைவ சமயத்திலும், அச்சமய நூற் பயிற்சியிலும், தமிழ் இலக்கண, இலக்கிய மரபுகளிலும், அறிவியல் வழிப் புலமையிலும் சிறந்த தேர்ச்சியிருந்தாற்றான் இவைகட்குத் தக்க விடை கூறல் இயலும். அத்தகு புலமை நலம் கணிந்த அறிஞர் பெருமகனார் தமிழ் கா. சுப்பிரமணியனார் அவர்கள். எம். எல். பிள்ளையென்ற அவர்கள் தந்த விளக்கங்களாக அறிந்தவை சிலவுண்டு!

மலையினும் மாணப் பெரிய நிலையினைச் சிந்திப்போம். மலை துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும் உடையது. அஃது என்றும் ஒரு பெற்றியாயிருந்து வருந் தன்மையில் மருட்கையொன்றுமில்லை. ஆனால், மனிதன் அத்தகையனல்லன். அவ்வந்நிலை தோறும் மாறுந் தன்மை யுடையவன். அவ்வணம் மாறும் நிலைமை நேர்ந்த போதும், மாறாமல் ஒரு தன்மையனாகத் திரிபின்றி யிருத்தல் மலையினும் பெரிதென வியந்து நோக்கி, மலையினும் மாணப் பெரிதென்று தெய்வப் புலவரால் சுட்டப் பெற்றது.

அதைப் போலக் கடலிற் பெரியதாமாறியாங்ஙனம் என்று நினைந்து, ஆழ்ந்து சிந்தித்தால், கடல் நீர் ஆவியாய், முகிலாய், மழையாகிப் பெய்கிறது. கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டிற் பெய்தாலும், கடல்நீர் ஆவியாதல் பயனோக்காப் பண்பிற்றன்று. ஒரு பயனும் நோக்காமல் ஒருவர் செய்யும் உதவி கடல் செய்யும் —பெய்யும்—மழையைக் காட்டினும் உயர்ந்ததாகலின் பெரிது ஆகின்றது.

மற்றொரு பெரியது நெடுங்கடலையும், உயர் மலையையும் தன்கட் பொதிந்து கொண்டுள்ள உலகினும் பெரியதாகும். தன்னை வெட்டியும், கொற்றியும் வடுச் செய்து வருத்துவாரையும் தாங்கித் தண்ணளி செய்து வருகிறது. அம்மட்டோ? அவர்தம் வெட்டுதல் கொற்றுதலால் தன்னை வளம்ர்க்கிக் கொள்கிறது. ஆயினும் என்னாம்? காலங் கருதி யுழத்தலால் பயன் தந்து காக்கும் பண்புடையதாகின்றது. உரிய காலமல்லாத காலத்தில் ஒரு பொருளும் உதவுவதில்லை.

அது போலன்றி, ஒருவர்க்குத் தேவையான காலத்தில் தாமே வலிய வந்து உதவுவார் உதவி, பருவத்தே விளைதல் செய்யும் மண் போல்வதன்றாதலின் மண்ணினும் பெரிதென்கிறார். இல்லையில்லை மண்ணினும் மிகப் பெரிய தென்கிறார். ஆம்! ஞாலத்தின் மாணப் பெரியதுதான்.

இவ்வாறு பயில்வார் நெஞ்சிற் பதியத் தக்க காரண காரியங்களுடன் பாடம் பயிற்றிபேராசிரியப் பெருமகனார் தமிழ்க்கா.சு. நூற்றாண்டு விழா நிறைவில் நினைந்து தமிழ்ப் பெருமையும் திருக்குறட் சிறப்பும் உணர்ந்து மகிழ்வு கொள்வோம்.



# வாழ்த்துப்பா சொல்லும் வரலாற்றுச் செய்தி

கவிக்கொண்டல்: மா. செங்குட்டுவன்

பாவேந்தர் பாரதிதாசன் யாருக்கேனும் வாழ்த்துமடல் வழங்கினால்கூட அந்தக் கவிதையில் உயிர்த்துடிப்புள்ள சொற்கள் துள்ளி விளையாடும். அது சில செய்திகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். இதற்கொரு சான்று, இதோ :—

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா, 28–8–1943 அன்று திருவாரூர் மடப்புரத்தில் கொண்டாடப்பெற்றது.

அவ்விழாவினையொட்டி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திரு.வி.க.வுக்கு ஒரு வாழ்த்துமடல் வழங்கினார். அதில் சில செய்திக் குறிப்புகளும் அடங்கியிருந்தன.

புதுச்சேரியில் பாரதியார் வாழ்ந்த காலம், அப்போது புதுவையில் உள்ள பாலைய சாமி மடத்தில் தமிழ்த்தென்றல் திரு,வி.க. சொற்பொழிவாற்றினார்.

திரு.வி.க.வின் சொற்பொழிவைக் கேட்க, பாரதியார் தம் நண்பர் குழாமுடன் வந்திருந்தார். அதாவது பாரதிதாசன், வ.வே.சு. ஐயர், சீனிவாசாச்சாரியார் முதலியோர் பாரதியாருடன் வந்திருந்தனர்.

திரு.வி.க. தமது பேச்சினூடே ஒரு செய்தியைச் சொன்னார். அதாவது,

''நான் ஒரு முஸ்லீம் நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அந்த நண்பர் எனக்கு நல்ல பசுவின் நெய் மணக்க அறுசுவை விருந்தளித்தார். உண்டு களித்தேன்'' என்பதே அந்தச் செய்தி.

திரு.வி.க. பழுத்த சைவர். வைதீகரான அவர் ஒரு முஸ்லீம் வீட்டில் உணவு கொண்டார் என்பது அந்தக்காலத்தில் எவ்வளவு வியப்புகுரிய செய்தி? அந்தக்காலத்தில் என்ன? இந்தக் காலத்தில் கூட முஸ்லீம் வீட்டில் உணவு உண்ணும் சைவர் எத்தனை பேர் இருக்க முடியும்?

திரு.வி.க. வின் உருவத்தோற்றமும் உடையும் அவரை ஒரு வைதீகராகவே காட்டும். ஆனால் அவரது உள்ளம் எத்துணை முற்போக்கானது என்பதற்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு.

'மக்கள் எல்லோரும் ஓர் குலம்; ஏற்றத்தாழ்வு என்பது எங்கும் இருக்க முடியாது' என்று கூறி, தாம் விருந்துண்ட நிகழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். இதனைக் கேட்ட பாரதி யார் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாராம். எழுந்து எழுந்து விழுந்து விழுந்து கைதட்டி ஆரவாரம் செய்தாராம்.

கல்யாணசுந்தரனாருக்கு இணையாகத் தமிழ்நாட்டில் எவரும் இல்லை என்று கூறிப் பாரதியார் பாராட்டினாராம். இது இன்றைக்கு இருபத்தைந்தாண்டுக்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சி.

இன்னொரு நிகழ்ச்சி: ஏழெட்டு ஆண்டுகளுக்குமுன் பெரியார் தங்கியிருந்த வீட்டிற்குத் திரு.வி.க. வந்தாராம். பெரியாரும் திரு.வி.க.வும் உரையாடி மகிழ்ந்த நேரத்தில், திரு.வி.க. அவர்கள், பெரியாரிடம்,

'நாத்திகத்தை நல்ல சைவம் எதிர்க்கவில்லை; என்னால் இதனை மெய்ப்பிக்க முடியும்' என்று கூறினாராம்.

அதனைப் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெளிந்த அறிஞர் திரு.வி.க. என்பதை உணர்ந்தாராம்.

மேலும் அந்தக் கவிதை, தாக்க வேண்டியவர்களைத் தாக்கவும் தவறவில்லை.

இளைய தலைமுறையில் முற்போக்குக் கொள்கைகளை ஏற்க மறுத்து எதிர்க்கும் இயல்புடைய பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரைப் போன்ற பாசி படிந்த பழைமைப்போக்கு திரு.வி.க.விடம் இல்லை என்பதையும் எடுத்துக்காட்டுகிறார் கவிஞர்.

பிள்ளையின் முற்போக்குக் கருத்துக்களைக் கேட்டுத் தந்தை மகிழ்வதுபோலத் திரு.வி.க. இளஞர்களை ஊக்குவிப்பவர் என்கிறார்.

'கம்பன் கவிதையை மாற்றியும் நீக்கியும் எழுதிப் புகழ் தேடும் நரிக்குணம் படைத்த' புலவர்களைச் சாடி, அப்பட்டவர் அல்லர் திரு.வி.க. என்கிறார்.

செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்ற செல்வர்கள் அந்தக்காலத்தில் தமிழிசைஇயக்கம் நடத்தியவர்கள். இத்தகைய செல்வர்களிடம் போய் சிலர் 'தமிழிசைதான் தேவை' என்று குழைந்தும் நெளிந்தும் கூறிப் பயனடைவார்களாம். அதே நேரத்தில் தமிழில் இசையே இல்லை என்றும் சொல்லித் தமிழ்ப் பகைவரிடத்திலே பாராட்டை பெறுவார்களாம். இத்தகைய வஞ்சகர்களைச் சுட்டிக்காட்டி, அப்படிப்பட்டவர் அல்லர் திரு.வி.க. என்கிறார்.

அந்தப் பாடல் வரிகள் தமிழ்நாட்டில் அந்தக் காலத்து நிலைமையைத் தெளிவுபடுத்தும் வரலாற்று வரிகளாகவே இன்றும், எதிர்காலத்திலும், அடுத்த தலைமுறையினருக்கும் பயன்படும்.

இதோ அந்தப் பாடல் :—

பழகுதென் புதுவை பாலைய சாமி
அழகு மடத்தில் அறிஞர் திரு.வி.க.
சொற்பெருக் கிடையில் சொன்னதாவது,
''நான்ஓர் முசுலீம் நண்பர் வீட்டில்
ஆன்நெய் மணக்க அறுசுவை யுணவை
உண்டேன். மக்களில் உயர்வு தாழ்வுகள்
எண்டிசை யுலகில் எங்கும் இல்லை''

* * *

மற்றும், அறிஞர் வண்டமிழ்ச் சிலம்பின்
சொற்சுவை தன்னைச் சுளைசுளை யாகச்
செவியினில் ஊட்டினார் கவிதை உரித்தே.

* * *

இச்சொற் பெருக்கை இனிது கேட்டிருந்த
வ.வே.சு. சீனிவாசாச் சாரியார்
பக்கத் திருந்த பாரதி யார்உளம்
கண்ட மகிழ்ச்சிக்குக் கரையே இல்லை
எழுந்தெழுந்து விழுந்துகை தட்டினார்
''செந்தமிழ் உணர்வும் சீர்திருத்தமும்
இந்த நாட்டுமுன் னேற்றத் திற்குஉயிர்''
இது பாரதி யார் எண்ண மன்றோ?

* * *

மணவழ கனார்க்கு வண்டமிழ் நாட்டில்
இணையென எவரும் இல்லை என்று
பாரதி யார்இரு பத்தைந் தாண்டுமுன்
ஊர றிந்திட உரைத்தார் புதுவையில்

* * *

ஏழெட் டாண்டுமுன் என்தலை வராம்
ஈ.வே.ரா அடர்ந்திருந்த வீட்டில்
கலியாண சுந்தரக் கவிஞர் வந்தார்
காதற் புறாக்கள் கனிந்துண்ட தீனியை
மாற்றிக் கொள்ளும் வழக்கம் போலப்
பன்மொழி மாற்றிப் பருகினார் அப்போது
''நாத்தீ கத்தை நல்ல சைவம்
எதிர்க்க வில்லை; எண்பிப் பேனிதை!''

தெளிந்த அறிஞர் திரு.வி.க. என்பதை
உள்ளங்கைநெல்லிபோல் உணர்ந்தேன் அன்று நான்
நாவினாற் புதுமை நடாத்துவார் கோவையிற்
கோவாப் பண்டிதக் குறுமணிகள் போல்
இளைஞர் முற்போக்கை எரிக்க நினைக்கும்
சுளிமுகம் கலியாண சுந்தரர்க் கில்லை
மைந்தர் முற்போக்கைத் தந்தை மகிழ்தல்போல்
இளைஞர் முன்னோக்கி எடுத்து வைக்கும்
ஒவ்வோர் அடிக்கும் உவகை கொள்ளுவார்.


* * *

கம்பனை நெருங்கும் கையிருப் பின்றிக்
கம்பன்நூல் மாற்றியும், கவிதை நீக்கியும்
நற்புகழ் தேடும் நரிபோ லன்றிக்
கலியாண சுந்தரர் கட்டுரை வன்மையால்
புலிஎன்று புலவரால் புகழப் பெற்றார்.
செல்வ ரிடத்தில் செந்தமி ழிசைதான்
வல்ல தென்று வாலைக் குழைத்தும்
தில்லையில் தமிழிசை இல்லை என்றும்
சொல்லும் வஞ்சகர் சூழுமிந் நாட்டில்
மணவ ழகனார் வண்டமிழ் நாட்டின்
துணையாய்ப் பற்பல துறைகளில் மிகுதியும்
நேர்மையாய் உழைக்கும் சீர்மை யுடையவர்.

* * *

நல்வினை தெரிந்த நாள்முதல் இதுவரை
அல்லும் பகலும் ஆவிஉடல் பொருள்
நாட்டுக் கென்று நல்கும் நோக்கொடும்
ஈட்டுதல் அறத்தால் எய்தும் இன்பென்னும்
அறிஞர் இருமுப் பானாண் டாயுள்
நிறையப் பெற்றார் நீடு வாழ்க!
தமிழரின் பேரால் சாற்றுகின்றேன்
கலியாண சுந்தரர் அடிமண நாளில்
பேர்நிறை கட்டிலில் மங்கையின் புதுச்சுவைக்குத்
துடித்த இளமை சேரனின்
படைக்களம் போல்அவர் படைத்து வாழ்கவே!

—டாக்டர் சு. ச. விசுவநாதன் தொகுத்த
'தமிழ்த் தென்றல் திரு.வி.க.' என்ற
என்ற நூலிலிருந்து.




தமிழ் வளர்த்து, தமிழர் புகழ் வளர்த்த பாண்டிய மன்னரிலே வடிம்பலம்ப நின்ற நன்மாறன் என்பவன் ஏழிசையைப் பற்றி நன்கறிந்தவன். அவன் தமிழ் ஏழிசை நூல்களைத் தொகுத்து மேலும் அதற்குத் தனிச் சங்கம் அமைத்து நடத்தி அச்சங்கத்திலேயே தனது வாழ்நாளெல்லாம் கழித்தான் என்பது வரலாறு.

பிற்கால மன்னன் குலோத்துங்கன் மனைவியருள் ஒருவள் ஏழிசையில் பெரும் வல்லமை பெற்றிருந்தாள். அதனால் இவளுக்கு ''ஏழிசை வல்லபி'' என்று பட்டமாம். இது வரலாற்றுக் காலத்தின் சிறப்புக் குறிப்பு.

தென்றல் வந்து வீசியும் தேன் மொட்டு மலரவில்லை. பிறகு வண்டு வந்து அதனருகே ரீங்காரமிசைக்க வண்ண மலர் மலர்ந்திடக் கண்ட உலக மூத்த குடியான ஆதி தமிழன், இசைக்கு இயற்கையில் உள்ள பெருமையைக் கண்டான். சிந்தித்தான். இசை பிறந்தது. அதைத் தன் தேனினுமினிய தமிழிலே பாடல் அமைத்துப் பாடி மகிழ்ந்தான். தான் கண்ட இசையை கண்டபடி யாரும் பாடி அதன் உயரிய தரம் கெட்டு விடக் கூடாதேயென்று அதற்கு இலக்கணமும் வகுத்தான்.

அவை—பெரு நாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு, பதினாறு படலம், வாயப்பியம், இந்திர காளியம் மற்றும் இன்னும் சில உள. இப்படி உலகத்திலேயே முதன் முதலில் இசைக்கு இலக்கணம் கண்ட தமிழன் அதில் 103 ராகங்களை அமைத்தான். மேலும் அதைத் தரம் பிரித்தான். அதாவது—காலையில் பாடும் ராகம், மதியம் பாடும் ராகம், மாலையில் பாடும் ராகம், இரவில் பாடும் ராகம், வசந்த விழாவில் பாடும் ராகம் என முறைமை வைத்தான்.

அது மட்டுமா? குணப்பண்கள் என சில பண்களைப் பிரித்தான். அவை—இரக்கம், துக்கம், மகிழ்ச்சி, வீரம் இப்படிப் பிரித்து பண்ணிசைத்துப் பாடி மகிழ்ந்தவன் தமிழனே!

அப்படிப்பட்ட தமிழ் நாட்டிலே இன்றைய நிலை என்ன? எங்கும் இசையரங்குகளில் பிறமொழி ஆதிக்கம் செலுத்துகிறதே! இதைக் கண்டும் காணாதவன் போல் எது எப்படிப் போனால் நமக்கென்ன என்றிருக்கும் தமிழனை நினைக்க நெஞ்சு பொறுக்குதில்லையே? என்ன செய்வோம்?

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு தமிழர்கள் ஒற்றுமை குன்ற, தமிழர்கள் ஆட்சி முற்றிலும் ஒழிக்கப்பட்டு தெலுங்கு

மன்னர்கள் ஆட்சி தோன்றியது. இசை வல்லுநர் பலர் தோன்றிய தஞ்சைத் தரணியிலே நாயக்க மன்னரின் அமைச்சர் மகன் வேங்கடமகி என்பார் தமிழ் இசையிலக்கணத்தையும் மேலும் இந்த இந்திய உபகண்டத்திலுள்ள இசை நூல்களையும் வைத்து 72 மேள கர்த்தா ராகங்களைக் கற்பனை செய்து ''சதுர்தண்டி பிரகாசிகை'' என்னும் இசை நூலை கி. பி. 1650இல் எழுதி முடித்தார்.

அதில் நமது தமிழிசைப் பண்களுக்கு பெரும்பாலும் மாற்றுப் பெயர் வைக்கப்பட்டது. அவைகளில் சில—

| **தமிழர் பண் (இராகம்)** | | **மாற்றப்பட்ட பெயர்** |
|---|---|---|
| செம்பாலை | ... | ஹரி காம்போதி |
| படுமலைப் பாலை | ... | கல்யாணி |
| செவ்வழிப் பாலை | ... | தோடி |
| கோடிப்பாலை | ... | சங்கராபரணம் |
| அரும் பாலை | ... | கரகாப்பிரியா |
| இந்தளப் பண் | ... | ஹிந்தோளம் |
| முல்லைப் பண் | ... | மோகனம் |

என்த் தமிழர்தம் பண் பெயரும் இலக்கணமும் மறைந்து புது இசை நூல் உருவாக்கப்பட்டது.


சதுர் தண்டி பிரகாசிகையில் 500க்கும் மேற்பட்ட ராகம் வருகிறது.

மேற்கூறிய வேங்கடமகியின் கற்பனை கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் பயனற்றுக் கிடந்தது. அந்த இசை நூலுக்கு— அதாவது வேங்கடமகியின் கற்பனை உருவத்திற்கு உயிரூட்டிய வர்கள் முதலில் மூன்று தமிழர்கள். அவர்கள்—

1. சீர்காழி முத்துத்தாண்டவர்
2. தில்லை விடங்கள் மாரிமுத்தாப்பிள்ளை
3. சீர்காழி அருணாசலக் கவிராயர்

என்ற கர்நாடக இசை மேதைகளாவர். இவர்களுக்குப் பிறகு தான் திருவாரூரில் பிறந்த இசைமேதைகள்: முத்துசாமி தீட்சிதர், தியாகராச சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள் என்னும் பெரியோர்கள் சாகித்யங்கள் இயற்றினார்கள். திருவாரூரில் பிறந்தும், தமிழ் தெரிந்தும், தமிழில் பாடாத, சாகித்ய கர்த்தாக்களுக்கு வருடா வருடம் விழா எடுக்கிறார்கள் திருவாரூரிலே!

தமிழில் கர்னாடக இசைக்கு சாகித்யங்கள் இயற்றிய சீர்காழி முத்துத் தாண்டவர், தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர், இசையறிஞர் சோமீஸ் அய்யர், பாபநாசம் சிவன், யோகி சுத்தானந்த பாரதியார் மற்றும் பல தமிழிசைப் பாடல்கள் பாடிய பெரியோர் களுக்கு ஆண்டு விழா எடுக்கத் தவறிய தமிழனை நினைக்கத் தான் நெஞ்சு பொறுக்கதில்லையே? என்ன செய்வோம்? ●●




கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் என்பது ஆன்றோர் வாக்கு.

முத்தமிழ், மூவாத் தமிழ், செந்தமிழ், செழுந்தமிழ், பைந் தமிழ்; பாத்தமிழ் இயற்றமிழ், இசைத் தமிழ், இன்பத் தமிழ், உயர் தமிழ், உயிர்த் தமிழ் என்றெல்லாம் இந்தத் தமிழ் புகழ்ந்து பேசப்படுகின்றது.

கன்னடமும், கனி தெலுங்குந் துளுவும் மலையாளமும் ஆகிய சேய்களை ஈன்றெடுத்தும் ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழியாது சிறப்புடன் வளர் சீரிளமைத் திறன் கொண்டது தமிழ் என்றார் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. இத்தகைய தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கும் மேல் என்றார் புரட்சிக் கவி பாரதிதாசன்.

வடமொழி ஆதிக்கத்தால் தமிழ் தாழ்த்தப்பட்டு கன்னடம், மலையாளம், தெலுங்கு, துளு தோன்றின. இதற்கு பல்லவரும், மராத்தியரும் மொகலாயரும் காரணமாவார்கள்.

உச்சம் பெற்ற தெலுங்குப் பேரரசின் தாக்கம் தமிழ் நாட்டில் ஏற்பட்டபோதுதான் தமிழ் மொழியிலும் தமிழர் வாழ்விலும் மாறுதல் ஏற்பட்டதாக மகாகவி பாரதியே கூறுகிறார்.

இந்த அவலங்கள் ஏற்படத் தமிழர்கள் தமிழ்மொழி மீது வைத்துள்ள பற்றும் பாசமும்தான் முதற் காரணமாக உள்ளது. வேற்று மொழியினர் சந்தர்ப்பவாதத் தமிழ்ப் புலவர்களை அரசவைப் புலவர்களாக்கிக் கொண்டு தமிழை வளர்ப்பதாக நடித்ததைத் தமிழர்கள் நம்பி மோசம் போனார்கள். அவர்கள் 'தமிழ்' என்று சொன்னாலே போதும், இவர்கள் பாகாக உருகித் தம்வசம் இழந்து முழந்தாளிட்டு அவர்களைப் போற்றினார்கள்.

மொழிவழி மாநிலம் பிரித்த தேசியவாதிகள்கூட இப்படித் தான் செய்கிறார்கள்.

இன்பச் சுதந்திரம் கிடைத்துவிட்டால் இந்தியா எப்படி இருக்கும் என்று பாரதி கண்ட கனவை தேசியவாதிகள் நிறை வேற்றியிருந்தால் யாதும் ஊராகவும் யாவரும் கேளிராகவும் இருந்திருப்பார்கள். □



# இன்பக் குறள்கள்

புலவர் திருக்குறள். நாவை. சிவம்

வையத்தின் நாகரிக உச்சிக் கூரையில் நின்று ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று முதன் முதலாகப் பொதுமை அறை கூவல் விடுத்தவர்கள் நம்மருமைத் தமிழ்மக்களே ஆவர். இவ்வாறே பண்பாடு, கலை, இலக்கியம், வாழ்வியல், அறிவியல், அரசியல் போன்ற எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் அறநெறியைக் கண்டறிந்தும், கடைப் பிடித்தும், கற்றுக்கொடுத்தும் வாழ்ந்தவர்கள் பண்டைய நம் செந்தமிழ் மக்கள் என்றால் மிகை ஏதுமில்லை.

கத்து கடல்சூழ் உலகில் தித்திக்கும் தேன் தமிழைத் தாய் மொழியாகப் பெற்று, எத்திக்கும் போற்ற வாழ்ந்த இன்பத் தமிழ் மக்களின் வாழ்வியல் அறவளங்கெழு கொள்கை அகவை முதிர்சியை வெளிப்படுத்திக் காட்டும் வீறுதமிழ் நூல்கள் எண்ணிலடங்காமல் இருப்பினும், இப்பாலும், அப்பாலும், எப்பாலும் காணவொண்ணா முப்பால் என்னும் முத்தமிழ் திருக்குறள் ஒன்றே நம் ஒப்பிலாச் செந்தமிழ் இனத்தின் உயர்புகழை உலகிற்குச் செப்பிப் பறைசாற்றும் சீர்திகழ் நூலாம். இதனால் தான் பாவேந்தரும்,

> '' இல்லாத தில்லை! இணையில்லை!
> முப்பாலுக் கிந்நிலத்தே!''

—என்று பாடுகின்றார். முப்பால் பாடிய திருவள்ளுவரால்தான் இப்பாருக்கே புகழ் வந்து சேர்ந்தது என்றும் கூறுவார்கள்.

> '' வள்ளுவரைப் பெற்றதால் பெற்றதேபுகழ்
> வையகமே!''

—என்னும் பாடல் வரிகளால் தமிழால் வள்ளுவரும், வள்ளுவரால் தமிழும், தமிழாலும், வள்ளுவராலும் நாமும், உலகும் புகழ் பெற்றோம் என்று கூறுவதில் வியப்பில்லை.

செந்நாப்போதாரின் நன்னெறிக் குறட்பாவில் பல்லாயிரம் பல்லாயிரம் சிறப்பு நலன்கள் புதையுண்டு கிடப்பதை, ஆழ் கடலுள் மூழ்கிடுவார் தம் மூச்சு வலிமைக்கேற்ப முத்தெடுப்பது போல திருக்குறளை நுணுகி நுணுகி ஆயும் நுண்மாண் நுழை புலச் சான்றோர்களின் அறிவு வலிமையால் இனிதே உணர்வர்; இன்பம் பூப்பர்.

உள்ளுதோறும் உவப்பூட்டும் தெள்ளு தமிழின் எள்ளுத லில்லா ஏற்றந் தரும் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் களுள் ஈற்றடியால் ஒன்றுபட்ட இன்பக் குறள்களும் உள்ளன. உலகியலின் பல்வேறு தாக்கங்களால் மாந்தர் மயக்குறுவதும், நினைவு தடுமாறுவதும், திசை மாறுவதும் இயல்பே. அந் நிலையில் ஒரு கருத்தை வலியுறுத்திக் காட்ட மீண்டும் மீண்டும் கூறுதல் மரபு. இவ்வகையில்தான் உலகோர்க்கு அறிவு கொளுத் தவும், ஆழமாய் நெஞ்சில் நிறுத்தவும் வேண்டி திருவள்ளுவ னாரும் ஒரே ஈற்றடியை வேறு வேறு அதிகாரங்களில் அமைத்து உணர்வையும், உய்யும் வழியையும் நமக்கு ஊட்டுகிறார். அவற்றை ஈண்டு கண்டு இன்புறுவோமாக.

**திருக்குறள் ஈற்றடியும்**

**ஒற்றுமைத் திருக்குறள் எண்—அதிகாரக் குறிப்பும்**

**1. ஆக்கம் பலவும் தரும்**

| | | | |
|---|---|---|---|
| குறள் எண் : | **492.** | அதிகாரம்: | இடன் அறிதல் |
| ,, | 522. | ,, | : சுற்றந்தழால் |

**2. உட்பகை உற்ற குடி**

| | | | |
|---|---|---|---|
| கு.எ: | 887; 888 | அதி: | உட்பகை |

**3. உள்ளினும் உள்ளம் சுடும்**

| | | | |
|---|---|---|---|
| கு.எ: | 799 | அதி: | நட்பாராய்தல் |
| | 1207 | ,,: | நினைந்தவர் புலம்பல் |

**4. எழுமையும் ஏமாப் புடைத்து**

| | | | |
|---|---|---|---|
| கு.எ: | 126 | அதி: | அடக்கமுடைமை |
| ,, | 398 | ,,: | கல்வி |

**5. ஏதம் படுபாக் கறிந்து**

| | | | |
|---|---|---|---|
| கு.எ: | 136 | அதி: | ஒழுக்கமுடைமை |
| ,, | 164 | ,,: | அழுக்காறாமை |

இவை போல இன்னும் பலவுள.

திருக்குறளுக்குக் கையடக்கமான எளிய, இனிய உரைகண்ட தமிழ்க் கா.சு. அவர்களின் நூற்றாண்டு விழா நாளில், திருக் குறளையும், தமிழ்க் கா.சு. அவர்களின் சீரிய தமிழ்த்தொண்டை யும் நினைவு கூர்வது தமிழ்ப் பெருமக்களின் தனிப் பெருங் கடனாகும்.

வெல்க திருக்குறள் நெறி!



# திருவள்ளுவரின் உவமை நலம்

பாவலர். வலம்புரி ஏழிலன்

மனித நடமாட்டம் இல்லாத வனப்பகுதியில் ஒருநாள் ஏகாந்தத்தை நாடித் திருவள்ளுவர் செல்லுகிறார். செல்லும் வழியில் பற்பல காட்சிகளைக் காண்கிறார். அக்காட்சிகளின் மூலம் மக்களுக்கு அறத்தைக் கூறுகிறார்:

எங்கிருந்தோ, ''கட முடா'' என்ற சப்தம் கேட்டது' வானம் பொழியப் போகிறதோ! வானத்தை நோக்கினார் வள்ளுவர். கருமுகில் கூட்டத்தைக் காணவில்லையே! மழை வரும் அறிகுறி ஏதும் இல்லையே!

மீண்டும் ''கட முடா'' சப்தம், தொடர்ந்து யானைப் பிளிறல்.

இது எங்கிருந்து வருகிறது?

கீழே இருந்தல்லவா இவ்வொலி வருகிறது.

குன்றின் உச்சியில் நின்றவாறே, கீழே என்ன நடக்கிறது என்பதைக் காண்கிறார்.

ஓ! இரண்டு பெரிய யானைகள்! ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளுகின்றன.

பேரிரைச்சல் போலப் பிளிறல் ஒலி!

மலையும், மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிப் பகுதி முழுவதும் கிடுகிடுக்கின்றனவே!

இந்த யானைகளுக்கு மதம் பிடித்து விட்டதா?

இரு யானைகளும் கோட்டோடு கோட்டை மோதி, துதிக்கையால் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளுகின்றனவே!

நல்ல வேளை! நாம் பத்திரமான இடத்தில் இருக்கின்றோம்.

ஆம்! வள்ளுவர் குன்றின் உச்சியில் நின்றல்லவா ''யானைப் போரைப்'' பார்க்கிறார்.

குறிஞ்சி நிலப்பகுதியில் ஒரு குன்றின் உச்சியில் நின்று பார்ப்பது, பார்ப்பவர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பானது.

இந்த யானைப் போரையும், குன்றின் உச்சியில் நின்று பார்ப்பவரையும் உவமையாகக் கொண்டு ஒரு நன்மையை உலகுக்கு உணர்த்த விழைந்தார்.

ஆம்! ஒரு குறள் மலர்ந்தது!

''குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை.''

குறள்—768

குன்று என்பதன் விளக்கம் :

கரடு என்பது மிகவும் சிறியது. கரடை விடப் பெரியது பாறை. பாறையை விடப் பெரியது குன்று. குன்றை விடப் பெரியது மலை.

கரடு = பொய்மான் கரடு, முதலானவை.

பாறை = கரடிப் பாறை, யானைப்பாறை முதலானவை.

குன்று = குன்றக்குடியில் முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பது குன்றின் மேல்தான். திருப்பரங்குன்றமும் குன்றின் பாற்படும். ஈங்கோய்மலை முதலானவையும் குன்றில் அடக்கம்.

மலை = இமய மலை, ஊட்டி மலை, சேர்வராயன் மலை, (ஏற்காடு) மேருமலை, கொடைக்கானல் மலை, கொல்லிமலை முதலானவை.

இவற்றுள் இமயமலை உலகில் ஈடும் இணையுமற்றது. குன்றின் மேல் நின்று யானைகள் போரிடுவதைப் பார்த்தால், யானைப் போர் தெளிவாகத் தெரியும். மலையின் உச்சியில் நின்று யானைப் போரைப் பார்த்தால், யானைகளிரண்டு போர் செய்வது எறும்புகளிரண்டு போர் செய்வதைப்போலத் தெரியும். எனவேதான் திருவள்ளுவர், ''குன்றேறி யானைப் போர் கண்டற்றால்'' என்று குறிப்பிடுகின்றார். குன்றின்மேல் நின்று யானைப் போரைப் பார்க்கின்றவனுக்கு எவ்வாறு அச்சமில்லாத மகிழ்ச்சியும், பாதுகாப்பும் கிட்டுமோ அதைப் போலத் தன் கைப் பொருளைக் கொண்டு தொழில் செய்பவனுக்கு பாதுகாப்பான வியாபாரப் பெருக்கமும், நன்மை பயக்கும் ஊதியமும் கிட்டும் என்பதை வள்ளுவர் இக்குறள் மூலம் விளக்குகிறார்.

பின்னர் குன்றைவிட்டுக் கீழே இறங்குகிறார்.

சற்று தூரத்தில் உள்ள புதரில் ஏதோ, ''சல சல'' என்ற சப்தம் வருகிறது.

சூரைக் காற்றோ அல்லது தென்றலோ கூட வீசாத இந்த நேரத்தில் புதரில் ஏதோ சப்தம் வருகிறதே!

ஏதேது...நீண்ட வால் ஒன்று தென்படுகிறது! உடலைக் காணோமே!

வள்ளுவர் மீண்டும் அக்குன்றின் மேலேயே ஓடி ஏறிக் கொள்கிறார்.

இப்போது உடலும் தென்படுகிறது.

ஆ! அழகிய வரிகள் அமைந்த கொடிய புலி!

ஆம்! எட்டடி வேங்கை!

ஏன் பதுங்குகிறது?—! கால்களைப் பின்னோக்கி வைத்துப் புதரில் பதுங்கிக் கொள்ளுகிறதே!

கீழே போரிட்டு வெற்றி கொண்ட மதயானை வெற்றிப் பெருமிதத்தோடு வீர நடை போட்டு வருகிறது.

புதரில் புலி ஒளிந்திருக்கிறது. யானை கம்பீரமாக நடந்து வருகிறதே!

ஆம்! புதரை நெருங்கிவிட்டது யானை.

புலி பின்னோக்கி நகர்ந்து பதுங்குகிறதே!

இப்போதும் என்னவோ நடக்கப்போகிறது!'' என வள்ளுவர் குன்றின் உச்சியில் நின்றவாறே கவனிக்கிறார்.

புலிப்புதரின் அருகில் யானை வந்துவிட்டது.

நொடிப் பொழுதில் யானை எதிர்பாராதவண்ணம், புலி திடீரெனத் தாவி மத்தகத்தின்மேல் அமர்ந்து விட்டது.

அவ்வளவுதான், யானை தன்னுடைய பெரிய உடம்பை மிகவும் சிரமப்பட்டு வெகுவிரைவாகத் திருப்பிக்கொண்டு வந்த வழியே ஓட ஆரம்பித்தது.

மத்தகத்தில் இரண்டு மூன்று முறை புலி அறைந்துவிட்டது. தன் கொடிய நகங்களினாலும், வலிய பற்களினாலும் யானையின் தலையிலும், முதுகிலும் கீறி யானையின் ரத்தத்தை ருசி பார்க்கத் தொடங்கிவிட்டது.

''அப்பாடா!'' ஒரு வழியாக மத்தகத்திலிருந்த புலியைக் கீழே தள்ளியது யானை. பின்னரும் யானை அஞ்சி ஓடவே ஆரம்பித்தது.

புலியோ அந்த யானையைத் துரத்திச் சென்றது.

கரியோடு கரி பொருதியபோது அஞ்சாத களிறு, தன் நீண்ட கோடுகளிருந்தும், வலிமை மிக்க துதிக்கை இருந்தும், பருத்த உடம்பிருந்தும், பனை போன்ற கால்களிருந்தும், நெஞ்சில் உர மில்லாத காரணத்தால், துரத்திவரும் புலிக்கு அஞ்சி யானை உயிர் பிழைக்க ஓடுகிறது.

வள்ளுவர் சிந்தித்தார்.

யார்க்கும் நெஞ்சுரம் வேண்டும். உடல் பருத்திருப்பதால் ஒரு பயனுமில்லை.

குறள் ஒன்றைத் தீட்டினார்.

> ''பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
> வெரூஉம் புலி தாக்குறின்.''
>
> குறள்—**598**

குன்றின் மேலேயே சற்று சிந்தனையோடு நின்றார் வள்ளுவர். இனிமேலும் இங்கே தன்னந்தனியே தாமதித் திருக்கக்கூடாது, என்று எண்ணி வீட்டை நோக்கி வேகமாகப் புறப்பட்டார்.

மலையினின்றும், குறுக்கு வழியில் இறங்கித் தான் வாழும் சிற்றூரை நோக்கிப் புறப்பட்டார்.

வழியில் ஒரு சேற்றுநிலம் எதிர்ப்பட்டது. சேற்றுக்குள்ளே பாதி அமிழ்ந்தும், அமிழாமலும் ஒரு யானை தத்தளித்துக் கொண்டிருந்தது.

யானையின் மத்தகத்தில் புலி அறைந்த அறையும், கொடிய பற்களினால் கடித்துக் குதறிய காயங்களும், பொங்கிவரும் ரத்தமும் உடம்பு முழுவதும் சிதறிக் கரியின் கடுமையைச் செந்நிறமாக்கி யிருந்தன.

வள்ளுவர் பார்த்தார்.

புலிக்கு அஞ்சி ஓடி வந்து சேற்றில் மாட்டிக் கொண்டு விட்டதே இந்த யானை.

இதற்கு ஏதாவது உதவி செய்யலாம் என்று எண்ணினார் வள்ளுவர். ''யானையோ காட்டு யானை. பழக்கப்படாத யானை. மனிதர்களைக் கண்டாலே விரட்டிக் கொல்லும் சுபாவம் உடையது. அதனை எப்படி நாம் காப்பது?—அதுவும் தன்னந்தனியனாக...''

''சரி, விரைந்து நம் சிற்றூருக்குச் சென்று, கிராம மக்கள் அனைவரையும் கூட்டி வந்து, இந்த யானையைக் காப்பாற்றலாம்''

என எண்ணி வள்ளுவர் புறப்பட்டார்.

சிறிது தூரம் கூடச் செல்லவில்லை.

''ஊளைச் சப்தம்.''

ஆம்! நரி ஊளையிடுவதைப் போன்ற ஒலி!

ஐயகோ! இனி நரி வேறு வருகிறதா? ஏதேது, நாம் புறப் பட்ட நேரம் நல்ல நேரம் இல்லை போலும்! வீட்டை விட்டுக் கிளம்பி ஐந்து தினங்களாகிவிட்டன. வாசுகி என்ன ஆனாளோ? எங்கே என்னைத் தேடி அலைகிறாளோ? நான் வீட்டைவிட்டு வரும்போது, போகுமிடம் சொல்லாமல் வந்தேனே! பின் தூங்கி முன்னெழும் பெண்ணல்லவா அவள். வழிமேல் விழிவைத்துக் காத்திருந்து, ஏசமாந்து கரைந்து போயிருப்பாளவள். நான் இப்போது நரியிடமிருந்து தப்பித்து வீட்டிற்குப் போனால் போதும்.

ஆ! நரி வந்துவிட்டதே!

ஆம்! சேற்றில் அகப்பட்ட யானையை நோக்கி ஓடு கின்றதே!

அடடா! பாவம்! யானையைக் காப்பார் ஒருவரும் இல்லை.

ஓடிய நரி ஒரே பாய்ச்சலாக யானையின் முதுகில் ஏறி விட்டதே! யானை புலியிடமிருந்து தப்பித்து வந்து நரியிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டதே! யானையின் மூச்சுக் காற்றுக்குத் தாங்காத நரி, இப்போது யானையைக் கடித்துக் குதறிக்கொண் டிருக்கிறதே!

சேற்றில் சிக்கிய யானை, யானைப் போரில் வெற்றிகண்டு, புலியிடம் தோற்று, சேற்றில் சிக்குண்டு, நரியிடம் உயிரைப் பறி கொடுத்துவிட்டதே!

வள்ளுவரின் சிந்தனை ஓட்டத்தில் ஒரு குறட்பா உதய மாயிற்று. ஆம்! இதோ! இதோ அக்குறள்!

'' கால்ஆழ் களரில் நரியடும் கண்அஞ்சா
வேல்ஆள் முகத்த களிறு '' —குறள். 500

வீட்டிற்கு வந்தார் வள்ளுவர். காட்டில் தான் கண்ட காட்சிகளையெல்லாம் வாசுகியிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

வள்ளுவர் காட்டும் உவமைகள் நம் அறிவுக்கு விருந்தாக அமைந்திருக்கின்றன அல்லவா?

# நான் கண்ட பேரின்பம்



பண்டுவர். பழனி தங்கவேல்சாமி

இப்புவியில் இந்த அற்புதமான மானுடப்பிறவி எடுத்து பிறவியின் பயன் அறியாது ''கண்டதே காட்சி; கொண்டதே கோலம்'' என வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பிறவியின் அற்புதத்தை சிந்தித்துப் பார்த்தால்தான் அதன் உண்மை விளங்கும். ''எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ அறிகிலேன்'' என்று சித்தர்கள் எழுதியுள்ளார்கள். ''எழுகடல் மணலை அளவிடில் அதிகம் எனதுயிர் பிறவி அவதாரம்'' என்று சொல்லுகிறார். அப்படிப் பட்ட பிறவிதான் மானுடப்பிறவி. எண்ணிக்கையடங்காத பல பிறவிகள் எடுத்து கடைசியாக இந்த மனிதப் பிறவி எடுத் திருக்கின்றோம். அதிலும் கூன், குருடு, செவிடு, ஊமை, முடம் நீக்கி இந்தப் பிறவியை எடுத்திருக்கின்றோம். இந்தப் பிறவி யிலாவது இந்தப் பிறவியை அறுத்து பிரம்மமாக நிலைத்து பேரின்பத்தை அடைய வேண்டாமா?

தலைகீழாய் உள்ள விருட்சம் தன்னை அறிந்தவன் சம்சார சாகரத்தை அறிந்தவன்; ஞானத்தை அடைந்தவன்; பிறவியை அறுத்தவன் என்று சொல்லுகின்றார்கள்.

வெளி உலகத்தில் ஓர் தென்னை மரத்தை நட்டு அதற்குக் கீழே உள்ள வேர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தால் அது மேல் நோக்கி வளர்ந்து அதன் பலனை (இளநீர்) தருகிறது. அதைப் போன்ற இகம் என்ற சரீரத்திற்கு மூளை ஆகிய வேருக்கு மேலே வாய் வழியாகத் தண்ணீர், ஆகாரங்களைக் கொடுக்கின்றோம். அதனால்தான் உடல் உறுப்புகள் கை, கால், உடலுறுப்பு கீழ் நோக்கி வளர்ந்து சரீரம் திடகாத்திரமாக இருக்கிறது.

குமரனுக்கு ஆறுபடை வீடு என்று சொல்லுகின்றார்கள். அதன் பொருள்ஆறுஆதாரங்கள். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பது. இந்த ஆறு ஆதாரங்களையும் கடந்து ஏழாவது அந்தரம் என்று சொல்லப் பட்ட பிரம்ம ரந்திரத்தில் லகித்து ஜோதியாக நின்றால்தான் குமரனாக இருக்க முடியும். இதற்கு ''குண்டலி யோகம்''

என்று பெயர். இதை அக்காலத்தில் வாழ்ந்து வந்த நந்தனார் ஓர் பாடல் பாடியுள்ளார்.

'' வாசியாலே மூலக்கனல் வீசியே
சுழன்று வரும் மாசற குண்டலியை
விட்டு ஆட்டுமே அருள் அமுது ஊட்டுமே
அய்யே மெத்தக்கடினம் என்று சொன்னார்.''

அப்படி இந்த யோகத்தால்தான் இளமையாகவே வாழ முடியும் என்று தெளிவாகச் சொன்னார்கள்.

ஆலய வழிபாடு என்பது

'' உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தவர்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளா மணி விளக்கே.'' —திருமூலர்

கடைச்சங்க காலத்தவரான திருமூலர் இந்தச் சரீரம் எடுத்து கடவுளைக் காண முடியவில்லையே என்று காளிகோயில், சிவனாலயம் இவைகளில் பல ஆண்டுகள் தவங்கள் இருந்தும் கடவுளைக் காண முடியவில்லை. மலைப் பிரதேசத்தில் சென்று ஜீவ இம்சை இல்லாமல் உதிர் சருகு கந்த மூலங்களைச் சாப்பிட்டும் பல ஆண்டுகள் இருந்தார். அதைப் பார்த்த கடவுள், ''பக்தா! உன் பக்தியை மெச்சினேன். யாது வரம் வேண்டும்?'' என்று கேட்கவில்லை. உண்மை அவருக்குத் தோன்றியது. அப்போது தான் திருமந்திரம் என்ற நூலை எழுதினார்.

'' உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேன்.''

என்று உணர்ந்தார். அதனால்தான் கடவுள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். கடம் என்ற சரீரம் உள் என்ற ஜீவன். அதுதான் கடவுள் என்று உணர்ந்தார். அந்நிலை உணர்ந்த சித்தர்கள் சொன்னது போல ஆலயமாகிய மனிதனுடைய சரீரத்தை 96 தத்துவங்களையும் உணர்ந்து,

'' உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தர்களும் பாலர் ஆவார் மேனியும் சிவந்திடும்
அருப்பொழிந்த நாதர் பாதம் அம்மை ஆணை உம்மையே''

—சிவ வாக்கியம்

இதுதான் உண்மையான வழி. குண்டலி யோகத்தை மக்களாகிய நாம் எல்லோரும் பின்பற்றினால் நரை, திரை, மூப்பு, சாக்காடு என்ற பிறவி நோய்கள் வராது. சித்தர்கள் கண்ட இன்பத்தை நாமும் அடைந்து மரணமிலாப் பெருவாழ்வு பெற்று பேரின்பத்தை அடைவோமாக. ●○



# மனிதன் வளர்ச்சியைத் தடுப்பது எது?..

அருளாளர் நா. மகாலிங்கம்

மனிதனைச் சீரழிப்பது ஆணவம்; ஆணவம் என்றால் கர்வம்; அல்லது மமதை என்று சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால் தான் என்ற அகம்பாவம் என்று இதைத் தெளிவாகவே சொல்லி விடலாம்.

ஆணவத்தைப் போன்ற பெரும் பகை மனிதனுக்கு வேறொன்றுமில்லை. எந்தத் துறையில் இருந்தாலும் சரி; மமதை வந்துவிட்டால் போச்சு; அவ்வளவோடு அந்தத் துறையின் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதுதான்.

''என்னைப்போலப் படித்தவன் வேறு யார்? எனக்கு மீறினவர்தான் வேறு எவர்?'' என்று படித்த ஒருவன், நினைத்துக் கொண்டான் என்று வைத்துக் கொள்வோம்.

அவ்வளவுதான், அவன் வேறு எதையும் படிக்க மாட்டான். வளர்ந்து வரும் உலகத்திலே பிறந்து வரும் புதிய புதிய கருத்துகளைக் காணவே மாட்டான்.

தான் எந்த அளவு படித்தானோ அவை பற்றியே பேசிக்கொண்டு இருப்பான். நினைத்துக்கொண்டு இருப்பான்.

நான்தான் சங்கீத சிரோன்மணி; என்னைவிடச் சங்கீத நுட்பம் தெரிந்தவர்கள் வேறு எவரும் இல்லை என்று பாடகன் ஒருவன் எண்ணிவிட்டால் போதும். அவனுடைய சங்கீத வளர்ச்சி அவ்வளவோடு முடிந்துவிட்டது!

மேலும் மேலும் சாதகம் செய்ய அவன் துணிய மாட்டான்; புதிய புதிய சங்கதிகளைக் கண்டுபிடித்து முன்னேற மாட்டான்;

'நான்தான் சிறந்த ஓவியன்; என்னைத் தோற்கடிப்பார் எவரும் இல்லை; எனக்கு இணையாகச் சித்திரம் தீட்டுவார் ஒருவரும் இல்லை' என்று ஓவியன் ஒருவன் எண்ணிவிட்டால் போதும்.

அதன்பின் அவன் சிந்தனை கருகிவிடும்; கற்பனையிலே செல்லாது. கற்பனைத்திறன் இல்லாதவன் சிறந்த ஓவியனாக முடியாது,

கற்பனைத்திறன்தான் கைத்திறனை வளர்க்கும்: இந்த உண்மையை அறியாத ஓவியன்தான் மமதை கொள்வான்.

'நான்தான் சிறந்த கவிஞன்; என்னைப்போல் கவி கட்டு கின்றவன் வேறு எவனும் இல்லை' என்று கவிஞன் ஒருவன் எண்ணிவிட்டால் போதும்.

இந்த மண்டைக் கர்வம் அவன் உள்ளத்தில் உதிக்கும் கற்பனை ஊற்றை அடைத்துவிடும். புதிய சுவை பொருந்திய கவிகளை அவனால் இயற்றமுடியாது.

கவிஞன் ஒருவனுக்கு எப்பொழுது அகங்காரம் வந்ததோ அப்பொழுதே அவன் கவிஞன் பதவியை இழந்து விடுகின்றான்.

மண்டைக் கர்வம் பிடிக்காததற்கு முன் அவன் எழுதிய கவி களைத்தான் நாம் படித்துச் சுவைக்க முடியும்.

கர்வம் தலைக்கேறியபின் அவன் எழுதும் கவிகளைச் சுவைக்க முடியாது.

புலவன் ஒருவன் எழுதும் கவிதைகளைக் கொண்டே அவனைக் கர்வம் — செருக்கு — அகங்காரம் ஆட்கொண்டு விட்டதா? இல்லையா? என்பதை நாம் தீர்மானித்து விடலாம். இதற்கு அவன் கவிதைகளே அளவுகோலாக நிற்கும்.

எந்தத் துறையிலும் அடக்கம் உள்ளவன்தான் மேலும் மேலும் முன்னேறுவான்; வளர்ச்சிக்கு வழிகாட்டுவது அடக்கம் தான்; பொறுமைதான்; ''எனக்குத் தெரிந்தன சில; தெரியா மலிருப்பன பல; நான் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டும்; கற்றுக்கொள்ள வேண்டும்'' என்ற உணர்வுள்ளவன்தான் வளர்ச்சிப் பாதையிலே செல்வான்.

புதிய செய்திகளைப் புரிந்து கொள்ளுவான். வாழ்க்கை யிலும் முன்னேறுவான்.

வளர்ச்சிப் பாதையைத் தடுப்பதுதான் ஆணவம். வளர்ந்து வரும் முளையைக் கிள்ளி எறிவதுதான் கர்வம்.

கர்வம் கொண்டவன் தற்பெருமை பேசிக்கொண்டு திரியத் தொடங்குவான்.

பிறர் கூறும் புத்திமதிகள் அவன் காதில் ஏறாது. அப்படியே ஏறினாலும் அவன் உள்ளத்தில் நுழையவே நுழையாது.

மமதை பிடித்துத் திரிகின்றவர்களைத்தான் 'தான் தோன்றிகள்' என்பார்கள். இந்தத் தான்தோன்றிகள் பிறர் தூற்றும் வசை மொழிகளைக் கூடப்பொருட்படுத்த மாட்டார்கள். அவ்வளவு கிறுக்குப் பிடித்தவர்களாகி விடுவார்கள்.

அகங்காரம் பிடித்தவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காணலாம்.

ஆணவம் கொண்ட அதிகாரி ஒருவன் சட்டதிட்டங்களுக்கு அடங்கிக்கூட நடக்கமாட்டான்.

தான் சொல்வதுதான் சட்டம், தான் செய்வதுதான் ஒழுங்கு, நீதி என்று நினைப்பான்.

அவனைப் பிடித்த அகங்காரம் இவ்வாறு அவனுடைய அறிவை அழித்துவிடுகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒருவனை உயர்த்தி விடுவது அடக்கம், பொறுமை என்பதையும் மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் ஆவல் என்பதையும் புரிந்துகொள்ள லாம்.

ஒருவனைப் படுபாதாளத்தில் தள்ளிவிடுவது அடக்கம் அற்ற மண்டைக் கர்வம், அகங்காரம், மமதை, என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

இந்த உண்மையை அறிந்த முன்னோர்கள், மமதையை ஒரு பெருந் தீமையாகக் கருதினர்.

அது மனிதனிடம் அமையவே கூடாது; உள்ளத்திலே கர்வம் பிறந்தால் உடனே அதைக் களைந்தெறிய வேண்டும்.

மமதையை ஒழிப்பதுதான் மாசற்ற வாழ்வு வாழ்வதற்கு வழி என்றெல்லாம் கூறினார்கள்; பாடினார்கள்; அறவுரை தந்தார்கள்.

செருக்கடைந்த புலவர்களை நோக்கி ஔவையார் ஒரு பாட்டு பாடியிருக்கிறார், அப்பாடலைக் கேளுங்கள்.

"கற்றதுகைம் மண்அளவு கல்லாதது உலகளவு என்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்;—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம், புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண்."

இதுதான் ஔவையார் பாடிய பாட்டு.

"நாம் படித்திருப்பது — கற்றிருப்பது — தெரிந்துகொண் டிருப்பது நம் கையில் அள்ளும் மண் அளவுதான்."

"நாம் கற்காமலிருப்பது நம் கையில் உள்ள மண்ணை நீக்கி இவ்வுலகம் எவ்வளவு பரப்பு இருக்கின்றதோ, அவ்வளவு விரிந்து பரந்தது ஆகும்."

''இந்த உண்மையைக் கலைமகளே உணர்ந்திருக்கிறாள்.''

''ஆதலால், அவள் இன்னும் படிந்துக்கொண்டே இருக்கின்றாள்.''

''எனவே, புலவர்களே! என் கவிதான் சிறந்தது என்று வீண் பந்தயம் பேசவேண்டாம்.''

''நம் கண்ணுக்குச் சிறிதாகக் காணப்படும் எறும்பும் அதன் கையால் அளந்தால் எட்டுச் சாண் அளவுடையதாகத்தான் இருக்கும்.''

''நாமும் நம் கையால் எட்டுச் சாண் அளவுள்ளவர்களாகத் தான் இருக்கின்றோம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்'' இதுதான் இந்தப் பாடலின் பொருள்.

நாலு வரி கொண்ட இந்தச் சிறிய வெண்பாவிலே பெரிய உண்மை அடங்கி இருக்கின்றது.

இந்த உண்மை என்றும் நிலைத்திருக்கும் உண்மை. இந்த உண்மையைமறந்த மனிதர்கள் சின்னப்பட்டுச் சீரழிந்து தான் வாழ்வார்கள்.

இந்த உண்மையை மறவாமல் வாழ்கையில் மேற்கொள்பவர்களே படிப்படியாக உயர்ந்து உன்னத நிலையை அடைவார்கள்.

---

## வல்லவர் வாழ்க!

பல்கலைப் புலவர் கோமான்
　　பைந்தமிழ்க் கா.சு. வுக்கு
நல்லவர் போற்றும் பாங்கில்
　　நூற்றாண்டு விழாந டாத்தும்
வல்லவர் மீ.சு. தம்மை
　　வள்ளுவர் நெறியில் தோய்ந்த
நல்வளம் பூத்த பாவால்
　　நாமெலாம் வாழ்த்து வோமே!

—பாவலர் இடிமுரசு

# தமிழ் இலக்கிய வரலாற்றின் முன்னோடி

## கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன்



பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை நூற்றாண்டு விழா நடைபெறப் போவதை அறிந்து மிக மிக மகிழ்ச்சியுற்றேன். பேராசிரியர் அவர்கள், வழக்கறிஞர் பட்டத்தில் மிகவுயர்ந்த பட்டமாகிய எம்.எல். பட்டத்தைப் பெற்றுப் பெருமையும் மிக்க வராகத் திகழ்ந்தவர். இவ்வகை உயர்ந்த பட்டத்தைப் பெற்று வழக்கறிஞராகவோ உயர்நீதி மன்ற நீதிபதியாகவோ திகழ்ந் திருக்க வேண்டிய ஒருவர், தமிழ்ப்பணி செய்வதற்குத் தம்மைத் தம் வாழ் நாள் முழுமையும் ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது பெருவியப்பிற்குரியது ஆகும். தமிழிலே அவர் கொண்ட ஈடு பாட்டிற்கு வேறு எச்சான்றும் தேவையில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராக இருந்து பெருமை பெற்றவர், அப்பல்கலைக் கழகத்திற்கும் பெருமை தேடித் தந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாரம்பரியம் மிக்கதொரு தமிழ்த் துறையைக் கொண்டு விளங் குவது. கடந்த '60' ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றில் பல தமிழ்ப் பேரறிஞர்களின் பணிகளைப் பெற்றுச் சிறந்தது என்பது நினைக்கத் தகுவதாகும்.


மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர், சுவாமி விபுலானந்த அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் ந. மு. வேங்கட சாமி நாட்டார், பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் என்று முதலிய பேராசிரியர் தம் நினைவுகள் கா.சு. பிள்ளையை நினைக்கின்ற காலத்து நமக்கு வருவது இயல்பே.

பேராசிரியர் கா.சு. பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இன்றைய இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு அவரியற்றிய இலக்கிய வரலாறு இன்றளவும் கையேடாகத் திகழ்வதைக் காணலாம். நல்ல தொலைநோக்கு உணர்வும் செம்மையான செயல் திறமும் இயல்பில் அமையப் பெற்றவர்கள். இவ்வாறான நிலைத்த பணியினைச் செய்தமை வியப்புக்குரியது ஒன்றன்று. தாயுமானவர் 'வரலாறும் நூலாராய்ச்சியும்', சிவஞான முனிவர் 'வரலாறும் நூலாராய்ச்சியும்' போன்ற பல ஆசிரியர்களின் வரலாறுகளையும்; அவர்கள் செய்த நூல்களையும் ஆராய்ந்து நூல்கள் செய்த பெருமை இவர்களுக்கே உரியதாகும். அவையெல்லாம் இன்றளவும் ஆராய்ச்சியாளர்களுக்குத் துணையாக அமைந்துள்ளன என்பது நினைந்து இன்புறத் தக்கது.

தமிழையே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்ட அத்தகைய பேராசிரியரின் நூற்றாண்டு விழாவினைத் தமிழகம் எங்கணும் கொண்டாட வேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு உரியதாகும் அரசாங்கமும் இத்தமிழ்ப் பெரியாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளது என்பதும் கருதத்தக்கதாகும்.

அன்னாரின் நினைவைப் போற்றும் வகையில் வெளிவர இருக்கும் விழா மலர் எல்லா வகையிலும் சிறப்புற அமையும் என நம்புகிறேன். விழாமலர் சிறந்து விளங்க என் நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# கவிதை மலர்



# கா.சு. நினைவுச் சின்னம்

## கவிஞர் கருணானந்தம்

போற்றிடுவார் புகழ்ந்திடுவார் எனநி னைத்தா
பொழுதெல்லாந் தமிழ்நலனே மூச்சாய் வாழ்ந்தார்?
தூற்றிடுவோர், எதிர்த்திடுவோர், துரோகம் செய்வோர்,
தொண்டுக்கு மதிப்பளியாத் தொல்லை யாளர்,
மாற்றாரும் கூசிடவே வணங்கி வீழ்ந்து
மருளாது கால்வாரி விடுவோர்—கூட
வேற்றாராய் வெறுக்காமல் அன்பு பூண்டு,
வெற்றியொன்றே குறிக்கோளாய் நடந்தார் கா.சு.

நூற்றாண்டு விழாக்காணும் தமிழர் கா.சு.
நுவன்றுசென்ற கொள்கையாவுந் தொடர்ந்து வாழ்வில்
ஏற்றவாறு நாடுணர எடுத்துக் காட்டும்
இளமுருகு பொற்செல்வி தொய்வே இன்றி
ஆற்றிவரும் தமிழ்ப்பணியின் உச்ச மாக
அன்னார்க்குப் பொருத்தமிகு நினைவுச் சின்னம்
தோற்றுவித்தல் முறையாகும்; தொடங்கு வீரே!
தூய்மைக்கு வாய்மைதான் துணையாய் நிற்கும்.

குன்றின்மேல் ஒளிவீசத் தகும்வி ளக்கைக்
குடத்துக்குள் அடைத்திட்டால், நமதே குற்றம்!
ஒன்றேனும் நன்றாகச் செய்வோம்; இந்த
உலகுமுற்றும் காசுபுகழ் வீச வேண்டும்!
என்றென்றுந் தமிழுணர்வு குன்றா வண்ணம்
இவ்வூற்றுச் சுரக்கவேண்டும்; மறந்தி டாதீர்!
நன்றியுள்ளோர் நாமெனவே நிலைநாட் டற்கு
நல்வாய்ப்பும் இஃதாகும்; முன்னே வாரீர்!




திருநெல்வேலிச் சீமையின்
தென்பொதிகைக் கிளியே!
ஒருநல்ல சேதி சொல்வேன்!—கிளியே!
உலகுக்கே கூறுவயோ!

தமிழன்னை பெற்ற பிள்ளை
தமிழ்க்கா.சு. என்னும் பிள்ளை
தமிழ்ப்பிள்ளை எம் எல். பிள்ளை!—கிளியே!
தாமிரவருணி தந்த பிள்ளை!

நெல்லையின் ஞானப் பிள்ளை!
நெஞ்சினில் வாழும் பிள்ளை!
பிள்ளையிற் சிறந்த பிள்ளை!—அவர்போல்
இல்லை என்னும் சைவப்பிள்ளை!

சமயத்தைச் சொன்ன பிள்ளை!
சமயத்தில் வந்த பிள்ளை!
தமிழ்மொழிதோற்றம் சொல்லும்—கிளியே!
தலைமுறை தெரிந்த பிள்ளை!

சட்டத்தைத் தாகூர்போலச்
சொன்னதோர் சட்டாம்பிள்ளை!
பட்டங்கள் பெற்றபிள்ளை!—கிளியே!
பாசத்தில் பச்சைப் பிள்ளை!

இலக்கிய வரலாறு
இவர் தமிழ்த் தேனாறு
தலைச்சங்கம் பேசும் பிள்ளை—கிளியே!
தமிழ் மூன்றை விளக்கும் பிள்ளை!

தொல்காப்பியம்தான் என்ன!
குறளின் தெளிவும் என்ன!
பல்கலைப் புலமை என்ன!—கிளியே!
பாடுவயோ, பிள்ளைத் தமிழே!

'சுப்பிரமணியம்' என்றால்
தமிழ்த்தெய்வம் என்றுரைப்பார்
இப்பொழுதே புரியுதடீ!—கிளியே!
இவரல்லோ, தெய்வமடீ!

இன்றோடு நூறு ஆண்டாம்!
இவருக்குக் கொண்டாட்டமாம்!
தென்றலுக்கு வயதுமுண்டோ?—கிளியே!
தேவனுக்குத் தேதி கணக்கோ...!

உள்ளம் இருக்கும் வரை
உள்ளே இவர் இருப்பார்!
வள்ளுவர்க்குப் பேரப்பிள்ளையோ!—கிளியே!
தொல்காப்பியன் செல்லப் பிள்ளையோ!

விஞ்ஞானம், சமயம், தமிழ்
மருத்துவம், சிந்தனையில்
மெய்ஞானி இவரல்லவோ!—கிளியே!
மணிமாலை சூடுவயோ!

சாதியின் மூலம் என்ன!
சரித்திரக் காலம் என்ன!
பேதங்கள் நாலும் என்ன!—கிளியே!
பிள்ளை சொல்லி கேட்டதுண்டோ!

முத்தமிழ் தானுரைப்பார்!
மூத்த தமிழும் சொல்வார்!
சித்தாந்த தலைப்பிள்ளையே!—இதெல்லாம்
செப்புவயோ, கிளிப்பிள்ளையே!

உலக நன்மையே அல்லோ
ஒருவனின் வாழ்வு என்றார்
நிலையான தத்துவமடீ!—கிளியே!
நெஞ்சினில் கோவிலடீ...!

வானநூல் வாயுரைத்தார்!
வாழும் உடல்நூல் சொன்னார்!
ஞானநூல் பிள்ளையல்லோ!—கிளியே!
மானநூல் தந்தாரல்லோ!

நூலைவெல்லும் நூலையே
நுட்பமாகத் தந்தவரை
நூலெழுதி வணங்குவமோ!—கிளியே!
நூறாண்டு போற்றுவமோ!

தமிழும், தமிழரும்தான்
தமிழ்நாட்டில் பலபேர்க்கு
சமயத்தில் மறக்குதடீ!—கிளியே!
சரித்திரம் என்னாமடீ!

ஊர் ஊருக்குச் சிலைகள்!
உருவப்பட விழாக்கள்!
நூறாண்டு பிள்ளைக்கு நாம்—கிளியே!
செய்வதென்றோ, நுவலாயோ!

பிள்ளைகள் நம் வீட்டிலே
பிறந்ததும் தமிழ்க்கா. சு. என்று
பிள்ளையின் பேர் இடுவோமோ!—கிளியே!
பெரியமனம் கொள்வோமோ!

பல்கலைப் புலவரய்யா!
தமிழ்க்கா. சு. பிள்ளைக்கதை!
வில்லிசையில் பாடுவேனே!—கிளியே!
வேதம் இதைச் சொல்லாயோ! ○○

---

## தொண்டரில் ஒருவன்

"தாழாப் பணியாய்த் தமிழ்ப்பணி யாற்றி
வீழாப் புகழ்சேர் வித்தகர் கா.சு.வின்
பெயரால் விழாவினைப் பெருமகிழ் வோடு
பழித்த வில்லாக் குழித்தலை நகரில்
தொடர்ந்து நடத்தும் தொண்டினைப் போற்றும்
தொண்டரில் ஒருவன் தொடர்க பணியை!
கண்டை நிகர்த்த கனித்தமிழ் பேணுவார்
காண்டற் கரியராய்க் காணப் படுகிறார்
நின்ற புகழ்பெற நீள்பணி யாற்றுக
பொன்றுந் துணையும் புகழே!
என்றும் நிலைபெறும்; வாழ்க இனிதே!"

—புலவர் திருமாவளவன்



# காசு வேண்டாக் கா.சு.

## பாவலர் கருப்பத்தூர் கணேசன்

நெல்லை நிலந்தந்த பிள்ளை—சைவ
நெறிபேணும் மரபிலே தோன்றிய கிள்ளை! (நெல்லை)

கனத்த தலைப்பாகை கட்டி—தலை
கனக்காத செந்தமிழ்க் கருவூலப் பெட்டி!
இனமொழி மணக்கின்ற சாந்து—எம்.எல்.
எனுமுடி சூடிய பல்கலை வேந்து! (நெல்லை)

திருநீறு மறவாத உள்ளம்—சிவ
சிந்தனைத் தேனூறும் தமிழின்ப வெள்ளம்!
கருவிலே தமிழ்நலம் உண்டான்—சட்டக்
கலையினை நற்றமிழ் பீடுறக் கண்டான்! (நெல்லை)

கண்ணிற் புலப்படா நுண்மை—காணக்
கண்ணாடி அணிந்ததால் கண்டபே ருண்மை
கொண்டு படைத்திட்ட நூல்கள்!—பகைக்
கொட்டம் ஒடுக்கிடும் வீரன்கை வேல்கள்! (நெல்லை)

பொல்லா உரைகண்டு நாணி—தமிழ்ப்
புத்துரைக் கடல்நீந்த நமக்குற்ற தோணி!
நல்ல கருத்தூறும் கேணி—பல்கலை
நடமாட ஆணுரு வாகிய வேணி! (நெல்லை)

உரைகண்ட நூல்களோ நூறு—புதிதாய்
உருவாக்கித் தந்ததோ முக்கனிச் சாறு!
கரையிலாப் புலமையின் வாரி—தமிழ்க்
கடிமலர் முல்லைக்குத் தேரீந்த பாரி! (நெல்லை)

தமிழ்நின்று சைவமும் வேறு—என்று
தனித்துமே நோக்காத தகைமிக்க பேறு!
நமதன்னை முடியொளிர் முத்து!—தமிழ்
நானிலம் முழுமையும் நயக்கின்ற சொத்து! (நெல்லை)

காசை விரும்பாத கா.சு.—நெஞ்சங்
களிக்கவே நாடோறும் அவன்புகழ் பேசு!
கூசாமல் அவன்வழிச் செல்வோம்—தமிழைக்
குறைகூறும் மாந்தரைக் கொதித்துமே
வெல்வோம்! (நெல்லை)

இளமுருகு பொற்செல்வி நெஞ்சம்—கா.சு.
இருந்திடும் அரியணை தமிழங்கு 'கொஞ்சும்!
உளமாற நூற்றாண்டைப் போற்று!—கா.சு.
உலகெலாம் புகழ்பெற தமிழ்ப்பணி ஆற்று! (நெல்லை



# தமிழுக்கு வளம்சேர்த்தோன்

பாவலர் இறையரசன்

பொன்னிமகள் நடைபயின்று பொன்வி ளைக்கும்
புகழ்மகுடக் குழித்தலையில் வாழும் எங்கள்
பொன்மனத்தார் இளமுருகும், இணைந்து நிற்கும்
பொற்செல்வி அம்மையொடும், தமிழ்வ ளர்க்கத்
தன்னுயிரும் தருமன்பர் பலரும் சேர்ந்து
தமிழ்க் கா.சு. நூற்றாண்டு விழாவை இந்நாள்
தொன்மையளாம் தமிழ்த்தாயே களிப்பில் துள்ளத்
துலக்கும்பணிக் கென்தலையை அவர்தாள் வைத்தேன்!

கா.சுப்ர மணியமெனும் வேந்தே! உன்றன்
கடமையினால் தமிழ்வளர்த்த பாங்கை யெல்லாம்
மீ.சுவென்றால் தமிழினமே தெரிந்து கொள்ளும்
மேலோராம் ''இளமுருகு'' எனும்பேர் கொண்ட
மாசுமரு வற்றவர்தான் ஆண்டு தோறும்
மனமுவந்து போற்றுகின்றார் விழாவெ டுத்தே!
காசுபணம் இழந்தாலும் கவலை இன்றிக்
கனிந்துன்றன் புகழுயர்த்தி உயரு கின்றார்!

உன்னாலே தமிழ்வளர்ந்த பாங்கை யெல்லாம்
உரைப்பதிந்தச் சிறியோனால் முடிவ தாமோ?
உன்னாலே பயனடைந்து வாழ்வோர் இந்த
உலகத்தில் பலரென்றால் மிகையா? நாளும்
உன்னாலே தமிழ்படித்தே உயர்வ டைந்தோர்
உரைப்பதெனில் சிறுதொகையா? தமிழ்த்தாய் என்பாள்
உன்னாலே பெற்றவளம் சொலும்வ கையா?
உன்னுடைய பணியென்ன ''குறுந்தொ கையா?''

உன்னுழைப்பின் கூலிஎட்டுத் தொகையா? அல்ல
ஒருகோடி தொகையெனினும் குறைவே யாகும்!
உன்னுழைப்பால் 'நற்றிணை'யாய் நீசி றந்தாய்!
உவந்தோதும் 'கலித்தொகை' நீ எனில்மி கையா?

உன்பணியின் பயன்'அய்ங்குறு' நூறா? இல்லை.
உரைக்கின்ற அய்நிலத்தில் 'பாலை' நீக்கி
நன்மைதரும் குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல்,
நல்குபல பன்னூறு பயன்கள் ஒக்கும்!

தமிழென்னும் பெருங்கடலுள் நிதமும் மூழ்கித்
தமிழ்மொழியான் வளமனைத்தும் தனக்குள் தேக்கித்
தமிழ்மொழியின் தொன்மையையும், பண்டை நாளில்
தமிழர்தம் தனித்தநெறி வாழ்வி னையும்,
தமிழ்மீதும், தமிழ்மாந்தர் வாழ்க்கை மீதும்
தாவிவந்த ஆரியத்தால் விளைந்த தீங்கும்
தமிழ்மொழிக்குச் சமற்கிருதம் விளைத்த தீங்கும்
தனித்தாய்ந்தும் நுணித்தாய்ந்தும் விளங்க வைத்தாய்!

இந்துமதம் எனும்சேற்றில் ஆழ்ந்து நொந்த
எந்தமிழர் தெளிவுபெற்றுத் தழைக்க வேண்டி
இந்துமதம் என்பதொன்று தமிழர் நாட்டில்
இல்லையெனத் தெளிவிமயம் ஏறி நின்றே
இந்துமதச் சழக்கர்கள் அலறும் வண்ணம்
எக்காளம் முழங்கினையே எழுத்தின் மூலம்!
வந்தமதம் அத்தனையும் தமிழர் வாழ்வின்
வளஞ்சிதைத்த சூழ்ச்சிசொன்ன வல்லோன் நீயே!

கயல்பொறித்து, வில்பொறித்துப் புலிபொறித்துக்
கவின்புகழில் வாழ்ந்திருந்த தமிழன், இந்நாள்
மயல்விரித்து, மடம்விரித்து, மடிவி ரித்து
மாண்பிழந்து வாழ்கின்ற கொடுமை கண்டு
புயல்மிகுத்துப் புனல்கொதித்தாற் போல்சி னந்தே
புன்மையெலாம் களைவதற்குச் சூள்எ டுத்தே
அயல்விரித்த கொள்கையெலாம் அழியும் வண்ணம்
ஆராய்ந்து நூல்தந்த அறிஞன் நீயே!

பாவல்லோன் தாகூரின் குடும்பப் பேரால்
பல்கலையின் கல்கத்தாக் கழகம் அங்கே
நாவல்லோன் உனக்களித்த போட்டி வென்று
நற்'தாகூர் சட்டவிரி வுரையர்' என்னும்
தாவில்லாப் பட்டத்தை வென்று நின்று
தகுதிப்பணம் பத்தாயி ரமும்தான் பெற்று
மேவுகின்ற நற்புகழைத் தமிழர்க் கெல்லாம்
மிகச்சேர்த்தாய்! எந்தாய்நீ மிகச்சி றந்தாய்! □



# பழந்தமிழர் "கா.சு"

பாவலர் செ. சீ. இளந்திரையன்

வெண்தலைப் பாகை! நீறு
விளங்கிடும் நெற்றி! கூர்மைக்
கண்களின் மகுட மாகக்
கண்ணாடி வீற்றி ருக்கும்!

குரிசில்போட் டமர்ந்தாற் போன்ற
குறுநகை இதழ்கள்! கீழ்வான்
விரிகதிர் போல்மு கத்தின்
விலாசம்! கறுப்பாம் அங்கி

அணிந்திடும் தேகம்! வாய்ச்சொல்
தமிழ்மழை பொழியும் மேகம்!
பணிந்திடும் உள்ளம்; மெத்தப்
படித்ததால், பண்பி னாலே!

பன்மொழிப் புலவர்! சட்டப்
படிப்பினில் முதலாம் எம்.எல்!
இன்மொழி தமிழுக் கிங்கே
இலக்கிய வரலா றோடு,

'பழந்தமிழர் நாக ரீகம்'
'பழந்தமிழர் சமயம்' கண்ட
பழத்தமிழ் அறிஞர்; சைவப்
பழம்அவர் 'கா.சு.' பிள்ளை;

ஒருநூற்றாண் டென்றால் இங்கு
முழுமையைக் குறிக்கும்; கா.சு.
பெருவாழ்வு தமிழுக் கின்னும்
பெருமையாம் புகழைச் சேர்க்கும்.



# கா.சு. உணர்வு வெல்க!

குறள்மணம் புலவர் செ. வரதராசன்

தென்பொதிகைச் சங்கமொடு மதுரைச் சங்கத்
தேனமுதப் புலவரொடு காப்பி யத்துப்
பொன்னினிய தமிழ்ச்சான்றோர், கம்பர், வெண்பாப்
புகழேந்தி, சயங்கொண்டார், கூத்தர், வாழும்
சன்மார்க்கத் தமிழ்வள்ளல், தமிழின் ஏறாம்
ச.சோம சுந்தரனார், பூர்ண லிங்கர்,
நன்மகேசு வரரோடு நாட்டார் போன்ற
நம்புலவ ரிடைகா. சு. ஞாயி றாவார்!

கல்விநலக் காந்திமதி பிரமு அம்மை
கருத்தொன்றும் இல்லறத்தின் பயனாய்த் தோன்றி
சொல்லழகுத் தமிழுடனே ஆங்கி லத்தும்
சூழ்கின்ற புலமையொடு சட்டம் கற்று,
வெல்கின்ற எம்.எல்.எனும் பட்டம் தானும்
விழைந்துகவி தாகூர்தாம் வைத்து வந்த
நல்லதொரு பரிசுதனைப் பெற்ற கா.சு.
நாடுபுகழ் திறங்காட்டிப் பெருமை சேர்த்தார்.

நற்சைவ சித்தாந்த சங்கம், நட்பின்
நலம்பாடும் உயர்வுற்ற நண்பர் சங்கம்,
பொற்புடைய திருக்குறட்கோர் கழகம், பண்பு
பொங்குதமிழ்ச் சங்கமென இளமை தொட்டே
அற்புதமாய்ச் செயலாற்றும் அமைப்பு கண்டு
அருந்தமிழ்க்குத் தொண்டுசெய்த கா.சு. வாழ்வு,
பற்பலரும் தமிழ்வளர்க்கும் தொண்டு செய்யப்
பண்பட்ட எடுத்துக்காட் டாகு மன்றோ?

விழைகின்ற தாய்த்தமிழை வளர்த்தே மாண்பு
விளைத்திட்ட தமிழ்க்கா.சு. நூறாம் ஆண்டின்
தழைக்கின்ற விழாநாளாம்! இந்நாள் மக்கள்
தமிழ்ச்சுவையில் திளைக்கின்றார்; இளைஞர், தாயர்
மழைகண்ட மயிலாக மகிழ்வார்; யாரும்
மலைவாழைத் தமிழின்பம் மாந்து கின்றார்!
இழைகின்ற தமிழ்க்காதல் சான்றோர் வாழ்த்த
**இளமுருகு பொற்செல்வி இனிது வாழ்க!**



# தமிழ்க் "கா.சு"

**பாவலர். அரங்க. முத்துமணி**

வையத்தில் வாழ்பவன்தான் அறத்தில் நின்று
வாழ்ந்திட்டால் வானுறையும் தெய்வத் தோடே
வைத்தெண்ணப் பட்டிடுவான் என்ற நந்தம்
வள்ளுவரின் வளமான கருத்திற் கேற்பத்
தைமாதம் விளைகின்ற கரும்பைப் போலத்
தமிழ்ச்சுவையைத் தந்திடவே நெல்லை தன்னில்
பைந்தமிழின் பகலவனாய் நந்தம் ''கா.சு''
பார்போற்றத் தோன்றினார்; பட்டம் பெற்றார்.

ஆங்கிலமும் அருந்தமிழும் ஒருங்கே கற்றே
ஆன்றதொரு தாகூரின் சட்ட நூலில்
தாங்கிட்டார் ஓர்பட்டம்; தமிழர் வாழ்வின்
தலையாய நாகரிகம் இன்ன தென்று
வீங்குபுகழ்த் தமிழினிலே நூலே செய்து
விரிமலர்போல் மணம்வீசச் செய்தார்; அங்கே
தேங்கிநிற்கும் கருத்தெல்லாம் காப்பி யத்தின்
தெளிவான ஆராய்ச்சி யென்பர் நூலோர்.

படிக்காசுப் புலவர்போல் இவரின் நூலில்
பதிந்திருக்கும் கருத்தெல்லாம் தமிழ ருக்கே
படிக்காசு பெற்றிட்ட அப்பர் மூலம்
பயன்பெற்ற தன்மையினை நாமும் காண்போம்!
படிக்காது விட்டுவிட்டால் இழப்பு நம்மைப்
பற்றிடத்தான் செய்திடுமால்; எனவே வண்டு
குடிக்காது விட்டுவிட்டால் தேனுக் கென்ன?
கொண்டுபயன் அடைவதுவும் கடனே யன்றோ!

குற்ளுக்கே பொழிப்புரைகள் தந்தார்; வானம்
கொடுக்கின்ற நன்கொடையாம் மழையைப் போலச்
சிறப்பான கருத்தெல்லாம் மக்கள் வாழ்வைச்
செழிப்படையச் செய்கின்ற அமுத வெள்ளம்!
திறமுடைய தொண்டெல்லாம் நாமும் எண்ணிச்
சீர்தூக்கிப் பார்த்திடவே வேண்டு மன்றோ!
துறைதோறும் தமிழ்வளர்க்க வேண்டு மென்ற
தொண்டினிலே ''மணிமாலை'' ஏடுகண்டார்;

சமயமுடன் சமுதாயம் சார்ந்தே யோங்கச்
சைவத்தின் வழிநின்ற பெரியர்; நந்தம்
இமயமெனத் தமிழகத்தின் தொன்மை யெல்லாம்
ஏற்றத்தைக் கண்டிடவே தொண்டு செய்தார்.
அமைதிக்கே அவர்வாழ்வு சான்றாம்; அன்று
அண்ணாமலைப் பல்கலையில் பணிக ளாற்றி
இமிழ்கடலின் வரைப்பெல்லாம் போற்று மாறு
இலக்கியமாய் நிற்கின்றார்; நாமம் வாழ்க!

# மூவாத் தமிழின் சாகாத் தலைமுறை!

**மா. செங்குட்டுவன்**

காசு கையில் இல்லார் எனினும்
மாசு கொள்ளா மனத்தவர் புலவர்;
மாசில் புலவர் கா.சு. பிள்ளையை
மீசை முறுக்கும் மீ.சு. முருகு
மறவார் என்றும்; மற்றோர் மறப்பினும்!
இறவாப் புகழை யெய்திய கா.சு.வின்
நினைவாய் இலக்கிய விழாவினை எடுத்தே
இணையிலாக் கலைகளாம் இயலிசை கூத்து
முத்தமிழ் நிகழ்ச்சிகள் முனைப்பாய் நடாத்தி
சித்திரை விழாவாய் முத்திரை பதித்துக்
குழித்தலை நகரில் கொண்டாடும் காட்சி
அழித்திட இல்லாத் தமிழின் மாட்சி!
வருகை தந்திடும் அறிஞர் தம்மை
இருத்து மகிழ்ந்து இல்விருந் தோம்பும்
இளமுரு கும்பொற் செல்வி யாரும்
வளமும் நலமும் பெற்று வாழ்க!
மூவாத் தமிழின் சாகாத் தலைமுறையைப்
பாவால் வாழ்த்தி வழிபடு வோமே!



# மாந்தருள் தெய்வம்

பாவலர் கலைவாணன்

தாண்டவம் புரியும் தமிழ்ப்பெருங் கடவுள்
தனிப்பெருங் கருணையின் வடிவாய்
ஈண்டுநம் இடையே ஈடிணை ஏதும்
இல்லதோர் தலைவனாய்த் தோன்றி
நீண்டதம் பணியால், நிலைத்துநம் நெஞ்சில்
நின்றிடும் ''கா.சு'' முன் தோன்றி
ஆண்டொரு நூ(று) ஈண்டாயினும் அந்த
அற்புதம் தனைமறந் திடவோ!

மந்திரி யாயும் மாகவி யாயும்
மாநிலம் புகழமுன் வாழ்ந்த
செந்தமிழ்ச் சைவச் சேக்கிழார் பெருமான்
சித்தரித் திட்டமாக் கதையில்
வந்துறும் மாறன் போலவெம் மிடியில்
வதங்கிடும் நாளிலும் செம்மை
சிந்திடாப் பண்பில் சிவம் பெருக்கிட்ட
செம்மலை—'கா.சு'வைப் பணிவாம்.

சொந்த மென்றோதிச் சூழ்ச்சியால் பற்றிச்
சுருதியும் மிருதியும் கூறி
நந்தமிழ்ச் சைவ நடுவினில் புகுந்து
நாசமாக் கிடுவதற் கென்றே
வந்ததீ வழிநம் வழக்கல என்னும்
வாய்மையை எடுத்துரைத் திடவே
உந்திடும் உள்ளத் துடிப்புடன் போந்த
ஒப்பிலாத் தலைவன் நம் 'கா.சு.'

மண்ணெலாம் பொய்ம்மை மாயைஇவ் வாழ்வே
மகிழ்ச்சிஇங் கிலைஎனத் துணிந்தே
எண்ணிடும் சமயத் தத்துவச் சூழலில்
இழுபடும் தமிழினம் உய்யப்
புண்ணியச் சைவப் பெருநெறி விளக்கப்
புகலியில் தோன்றிய ஞான
வெண்ணில வொளியை விளக்கிடப் புகுந்த
வித்தகன் நம்தமிழ்க் 'கா.சு.'

தனித்தமிழ் இயக்கத் தானைஒன் றினைமுன்
தவத்திரு மறைமலை யடிகள்
இனித்தசெந் தமிழில் ஏனைநாட் டவர்தம்
இழிமொழிச் சொற்களைக் கூட்டும்
மனித்தரை எதிர்க்கு மாறுகூட் டிடஅம்
மறப்படைத் தலைவனாய்—மொழியின்
புனித்துவம் காக்கும் போர்க்களம் புகுந்த
புண்ணியன் நம்தமிழ்க் 'கா.சு.'

வறுமையில் தனது வாழ்க்கையே வதங்கி
வாடும் அந்நாளிலும் நெஞ்சில்
பொறுமையோ டாற்றும் புண்ணியத் தவத்தில்
புந்தி மாறாமலே—காய்ந்தும்
நறுமணங் குறையாச் சண்பகம் போலெந்
நாளுமே சேவையால் உயர்ந்(து) ஓர்
நிறுவனத் துருவில் நிலைத்துநின் றிருக்கும்
நிதியமே நம்தமிழ்க் 'கா.சு.'

மொழிச்சமர் பண்டு மூண்டநாள்—வெகுண்டு
முன்னணிப் படையின்முன் நின்று
அழித்துநம் தமிழை ஒழித்திடப் புகுந்த
ஆட்சியை எதிர்த்தறை கூவிப்
பழித்திடும் பகையின் வசையெலாம் தாங்கி
பவித்திர மானசொற் கணையால்
கிழித்தமா வலியைத் தமிழகம் மறந்து
கீழ்மையுற் றிழிந்தொழிந் திடவோ?

பூந்தமிழ்ப் பண்பு, புண்ணியச் சைவம்,
பொற்புடைத் திராவிடக் கலைகள்
தாந்தனித் துயர்ந்த தாய்த்தமிழ், ஈண்டித்
தன்நிக ரற்றமுந் நிதியும்
ஏந்திய கருத்தோ(டு) ஏறுபோல் எங்கட்(கு)
ஈந்துவப்புறும் திரு.'கா.சு.'
மாந்தருள் தெய்வ மாம்,அவர் தூய
மலரடிக் கஞ்சலி புரிவாம்.

அனைத்தையும் தமிழர்க் கர்ப்பணித் திட்டோர்
அருந்தமிழ் முனிவனாய் வாழ்ந்த
மனித்தருள் உயர்ந்த மாணிக்க மணியை
மாநிலம் சுப்பிர மணியென்(று)
இனித்த சொல்லால்—என்றும்நின் றழைக்கும்
எங்கள் நற்றலைவன் 'கா.சு.'வை
பனித்திடும் கண்ணீர் மணிச்சரம் சூட்டிப்
பரிவொடென் றென்றுமே தொழுவோம்.




தென்தமிழ் மொழிசேர் தேனிலக் கியங்கள்
தன்வர லாறெ(ன்) என்றறி நோக்கொ(டு)
ஆங்கிலம் மற்றும் ஆரிய மொழிகள்
தாங்கிடு(ம்) இலக்கிய வரலா றொப்பிட
என்றமிழ்ப் பெற்றிட வில்லையே எனத்தமிழ்க்
கன்னலைச் சுவைத்துக் கலங்கிடும் மாணவ,

(மறைமலை அடிகள் போலும் மாணவனே!)

நேர்காண் பொழுது நிறைகாண் நினைவில்
''சீர்தமிழ் இலக்கணந் தேர்வையோ? உயிர்த்தொடர்
குற்றிய லுகரம் சற்றெனக் காட்''டென,
தெற்றெனத் தெளிந்த தீந்தமிழ்ப் பெரியார்
**பரிதிமாற் கலைஞர்** பைந்தமிழ் **மறைமலை**
பரிதியைக் கேட்டிட **'தெரியா'** தென்றே
சரியாய்ச் சொல்லி நிறைவாய்ப் பணிகொள்
கரியினை ஒத்த கருத்துடைச் செல்வ,

எதையும் நினைவில் இருத்து(ம்) ஆற்றலர்;
எதையுந் திட்டமாய் எடுத்துரை செய்பவர்;
தமிழா ராய்ச்சிக் கட்டுரை யியற்றிக்
குவித்தார் நற்பெயர் **பவல்மோர்க் கெட்டுப்**
**பரிசி**னைப் பெற்றனர், **சுப்பிர மணியனார்**
விரிவாய்க் காளிக் கோட்டபல் கலையில்
தாகூர் சட்டப் பொழிவுகள் வரிசை
நா-கூர் நம்மவர் நற்பொழி வாற்றிக்
குற்றங் களின்நெறி முறைக ளென்பது
பற்றிய பொழிவாற் பதினா யிரம்பொன்
ஈட்டிய தென்பதும் நாட்டிய பெயர்மதிப்
பூட்டிடும் **''தாகூர் சட்டப்பே ராசா''**

னிப்படி யாகநம் மேந்தலும் பெருமை
தப்படி யின்றித் தகுதியாற் பெற்றுப்
**பல்கலைப் புலவர்** பட்டமும் சான்ற
'**பல்கலைப் புலவராம் கா.சு. பிள்ளை**''

''**யார்தமிழ் மக்கள்?**'' எனுந்தொடர் முதலாய்
நேர்**முச் சங்கக் கால**மு மந்நாள்
**தமிழ்ப்புல வோர்கள் தலையிடைச் சங்கத்**
**தமிழ்ப்பே ராளர்** தகையாய்த் தந்தும்
தமிழிலக் கியவர லாறியற் றிந்து
தமிழ்வர லாற்றில் தனியிடம் பெற்ற
தமிழ்க்கா.(சு) வின்புகழ் தமிழ்மா ணவ!கேள்;

தமிழுள் ளளவும் தருக்கோ டிருக்கும்,
பல்கலைப் புலவர் தமிழ்க்கா.(சு) அடைய
நல்வழி கூறுவன் தமிழ்க் கா.சு. அடைவாய்!
**குழித்தலை** என்னும் பழியிலா மூதூர்
மொழியினைப் போற்றுங் **குளிர்தண் டலை**யில்
**ஈசுவர வடிவகம்** இருக்கு மிடத்தைக்
கா.சு.வை நினைந்துக் கேட்டுநீ அணுகிடில்
**இளமுரு கென்**னும் எழிற்பெய ரோடு
வளமாய்ப் **பொற்செல்வி** வலிந்தி ணைத்தோர்
'**தமிழர் ஊழியன்**' தங்கிடக் காண்பாய்
தமிழே வாழ்வாய்த் தாங்கிடுங் கிழவோன்

தமிழ்க்கா சென்னுந் தவப்பெயர் கேட்டதும்
தமிழ்த்தே னுண்டபோல் தாங்கி யுன்னைப்
பல்கலைப் புலவர்க் கறிமுகப் படுத்துவர்,
பல்கலைப் புலவர் பழகிய பின்றை
பொன்னும் மணியும் பொற்குவை யெல்லாம்
மின்னு மிலக்கியப் பெருங்குவை யோடு
அறிவுப் பசியும் அடங்கிட, உள்ள
வறிய நிலைபோம்; புத்தணி பூணுவை
இனியநற் புலவோர் இன்னுமங் குண்டு;
கனியின் சுவையிற் களித்தூண் படைப்பர்
குழித்தலை சென்றிடு மாணவ,
வழித்தொலை வன்று; ஆற்றுவர் செலினே!



# தமிழ்க் கதிரவன்

புலவர் அ. மணிவாசகன்

(எழுசீர்)

கதிரவனே! நின்னெழுச்சி கண்டுணர்ந்தேன்
கழிமகிழ்வால் எனைமறந்தேன் களிப்பிலாழ்ந்தேன்!
அதிர்கடலின் மேற்பரப்பில் பொற்றகட்டை
அணிபெறவே அமைத்திட்டாய் அருகிலுள்ள
பொதியலர்கள் வாயவிழத் தென்றலதிற்
போயளைந்தே எங்குமணம் பரபப எங்கள்
உதிரத்தில் கலந்தினிக்கும் உயர்தமிழ்போல்
உலகிருளை அகற்றிடவே யெழுந்தாய் வாழி!

(எண்சீர்)

அழகுறவே கோலமிட்டார் அணிசேர் பெண்டிர்
அவருளமும் நின்வரவால் மகிழ்ந்த தன்றோ!
பழகுதமிழ்ச் சொல்லாலே இளங்கோ உன்றன்
பயனெல்லாம் சீர்தூக்கி வாழ்த்தக் கண்டேன்!
விழுமியநற் குறள்போல விளங்கி யிந்த
வியன்ஞாலம் முழுவதுமே போற்றக் கீழ்பால்
எழுகதிரே! நின்னுடைய எழிலை யெல்லாம்
இயம்புதற்கே என்னாவொன் றெங்கன் போதும்!

இன்னமுதின் சுவைபெரிதோ என்று பேசும்
இயற்பிற்றா யிலங்குதமிழ் இனிய ஆட்சி
நன்மொழியென் றாகியதால் நனியு வக்கும்
நலஞ்சான்றார் முகம்போல நளினந் தோன்றும்!
இன்னல்விழை வேற்றுமொழி வந்தால் நந்தம்
ஏற்றமுறு தமிழ்ச்சீர்மைக் கீடையூ றாகும்
என்றெண்ணி நொந்துழல்வார் இதய மொப்ப
எழிலாரும் அல்லிமலர் கூம்பு மந்தோ!

மண்ணுலகிற் காணியெனும் உழவ ருன்றன்
வரவுணர்ந்து மிகமகிழ்ந்து பாடல் பாடித்
திண்ணியதோள் மேற்கலப்பை சார்த்திச் செல்வர்!
தேனுண்டு களித்திடுநற் றும்பி யந்தப்
பண்ணினுக்கு யாழ்முரலும்; பறவை யெல்லாம்
பார்ப்பினுக்கங் கிரைதேடப் பறந்து செல்லும்!
கண்பெற்ற பயனுன்றன் கவின்சேர் தோற்றம்
கண்டுமகிழ் கொள்வதுவே, யென்ப துண்மை! ❑



# நற்றமிழே! அன்னையே!

பாவலர். மணமேடு குருநாதன்

உள்ளுக்குள் உள்ளே! உயிர்க்குள் உயிர்ப்பொருளே!
வெள்ளத் தனையநூல் வேகமுள்ள பேராறே!
நாடி நரம்புகளில் நற்குருதி ஓட்டத்தில்
ஓடிப்பாய் கின்ற உணர்வுக் குளுணர்வே!
கேட்கும் செவிக்கமுதே! பேசும்நா வுக்கமுதே!
ஏட்டுக் கமுதே! எழுதுகோல் மைக்கமுதே!
மாமறையும் மேல் மறையும் மங்கா நெறிமுறையும்
பாமுறையாற் காட்டிப் பழகும் இலக்கியத்தின்
மாமலையி னின்று மணந்துவரும் தென்றலே!
சாமளவும், அப்பாலும் சார்ந்துவரும் பொன்னிழலே!
வண்ணம் குழைத்து வடிவெழுத மாட்டாமல்
எண்ணம் இனிக்க இருந்துவளர் ஓவியமே!
தாள நயமும் தனித்த ஒலிவளமும்
நீளக் கிடந்து நெளியும் அலைகடலே!
காலமெலாம் எங்கும் கருத்து மழைபொழிந்து
ஞாலங் குளிர்விக்கும் கோலக் கருமுகிலே!
பாரில் அறிவுப் பசிக்குவரும் நல்லுணவே!
வேரில் விளைவிலின்பம் வீற்றிருக்கும் மாமரமே!
சிந்தனையும், கற்பனையும் சேர்ந்த களஞ்சியமே!
வந்தவரும் போற்றி வளர்ந்த உறைவிடமே!
மாஇருளை நீக்கி மனத்தில் ஒளிமலர்த்தும்
ஞாயிறே! திங்களே! நற்றமிழே! அன்னையே!
சீர்பெருகும் நின்றன் சிறப்பனைத்தும் ஓர்பொழுதில்
ஓர்பொறியி னாலே உரைக்கமுடி யாதென்று
பைம்பு னலினருவி பாய்வதுபோல் தாள்பணிந்தே
ஐம்பொறியாற் பாடிடுவேன் ஆய்ந்து!



# தமிழ்ப்பொற்காசு

கவிஞர்கோ. ஞா. மாணிக்கவாசகம்

ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறையே
பூக்கின்ற அறிவுப் பூ ஞான
ஆசிரியர்! தமிழ்த்தா யின்கோயில்
கொடிமரம் கோபுரத் தீபம்இவர்!
கா. சு. பிள்ளைஇது தனிமனிதர்
பெயரல்ல தமிழருக்குத் தாய்ப்பால்!
வாழ்வைத் தமிழுக்கு; இல்லையில்லை
வாழ்வே தமிழாக வாழ்ந்தசீலர்!

சட்டநூல் பலகற்ற மேதைதாகூர்
பல்கலைப் பட்டம் பெற்றமேலோர்!
தொட்டதற் கெல்லாமும் பிறமொழியின்
துணைதேடிக் கொண்டிருக்கும் புலவருக்குச்
சுட்டெரிக்கும் பெருநெருப்பு! சுயமரியாதை
இவருக்குச் சுவாசிக்கும் மூச்சுக் காற்று!
சட்டவிரி வுரையாளர் மட்டுமில்லை
சமதர்ம நோக்காளர் கா. சு. பிள்ளை!

தமிழ்க் காசு தமிழர்க்குப் பொற்காசு
தமிழன்னை கொலுவிருந்த மணித்தவிசு!
தமிழர் முன்னேற்றம் தம்வாழ்வின்
முனைப்பாகக் கொண்டிருந்த மூதறிஞர்
இப்படியோர் பத்துப்பேர் இல்லாத
குற்றம் தமிழ்ச்சாதி இடுப்பொடிந்து
கிடக்கிறது! எழுகதமிழ் இனமே இவர்
விட்டபணி தொடரவருக தமிழ்இனமே!



# மாசிலாக் கா.சு

பாவலர் இலாவை. புகழேந்தி

திருநெல் வேலி நகரினிலே — நம்
    தீந்தமிழ் அன்னை அகமகிழப்
பெருமகன் சுப்பிர மண்யமெனும் — தமிழ்ப்
    பேரறி வாளரும் தோன்றினரே!

தண்டமிழ்க் காத்தநல் தொண்டரடி — காசு
    தன்னையே நல்கிய கொண்டலடி!
மண்டிக் கிடக்கும் புகழுடையார் — தமிழ்
    மாண்பை வளர்த்த தகவுடையார்!

அறிஞர்கள் போற்றும் அறிஞரடி — பல
    அறிஞரைத் தந்தபே ராசானடி!
நெறிமுறை மாறாத் தூயரடி — எந்த
    நிலையிலும் திரியா வீரரடி!

நிறைகுட மாகத் திகழ்ந்தாரடி — தமிழை
    நெஞ்சாரப் போற்றி மகிழ்ந்தாரடி!
இறைப்பணி என்றும் மறந்தாரிலை—அவர்
    ஏற்றகுறிக் கோளைத் துறந்தாரிலை!

நீறினைப் பூசிய நெற்றியராம்—சைவ
    நினைவுகள் மாறாப் பெற்றியராம்!
நூறாம் ஆண்டினைக் கொண்டாடுவோம்—அவர்
    நுவலரும் பேர்புகழ்ப் பண்பாடுவோம்!

ஆடுங்கடி பெண்ணே ஆடுங்கடி — அந்த
    அருளாளர் புகழ்பாடி ஆடுங்கடி!
நீடூழி வாழ்கெனப் பாடுங்கடி — கா. சு.
    நினைவுகள் போற்றியே ஆடுங்கடி!

* * *



# நிழற் கொடையே...!

## புலவர் ஆ. முத்துராமலிங்கம்

நீண்டபுகழ் நிழற்குடையாம்! சமய மென்னும்
நெடும்புகழில் திளைத்துவரும் அன்புத் தோணி!
தீண்டிவரும் கோடைக்கோர் அமுத ஊற்று!
தெள்ளுதமிழ் வரலாற்றின் இருக ரைகள்!
ஆண்டுவரும் நெல்லைச்சீ மைமண் கண்ட
முல்லைப்பூ! 'கா. சு. பிள்ளை' இதய வானில்
மூண்டுவரும் புயற்காற்று! இனிமைத் தென்றல்!
முத்தமிழின் புதுவடிவம்! புரட்சி வாழ்க!

இளமையிலே பாட்டிக்குச் 'சாலி வாடி'
ஏந்துகின்ற நீதிக்கோ 'சட்டாம் பிள்ளை'
களங்கண்ட 'தாகூர்சட் டவிரி வாளர்'
கன்னித்'த மிழ்த்தலைவர்' தமிழர் வீட்டில்!
இளகாத உள்ளங்களை இனிக்க வைத்து
'பல்கலைப்பு லவ'ரென்றும் பெயரை யேற்றார்!
வளமையிலா வாழ்க்கையினால் 'ஏழைப் பிள்ளை
வரலாற்றால் தமிழுலகின் 'மூத்த பிள்ளை!'

பேச்சென்றால் இவர்போலப் பேச வேண்டும்
பெரும்புகழும் இவர்போல எட்ட வேண்டும்
மூச்சென்றால் தமிழ்மூச்சுப் படைய மைத்து
இவர்போலத் தனிமூச்சாய் முழங்க வேண்டும்!
வீச்சென்றால் சொல்வீச்சில் தொடுத்தெ டுத்து
இவர்போல வாள்வீச்சாய் நிலைக்க வேண்டும்!
பூச்சென்றால் இடிமுழங்கி இடித்துத் தள்ள
இவர்போலப் புரட்சிப்பூ பூக்க வேண்டும்!

மாணிக்க வாசகத்தை வெல்லு கின்ற
மாணிக்க வாசகங்கள் எங்கு முண்டோ?
காணிக்கை யாத்தந்த தேவா ரத்தின்
கற்கண்டு வழிபாடல் உலகி லுண்டோ?
ஆணிப்பொன் தமிழ்கொடுத்து கண்ணீர் மல்க
ஆண்டவன்முன் பாடுங்கள் வந்து நிற்பான்!
நாணிச்செ விபுதைக்கும் தவளைக் கூச்சல்
நமக்கெதற்கு எனக்கேட்டார் 'கா. சு.' அண்ணல்!

தேனாசை கொள்ளுமிவர் உரையைக் கேட்டு
தெளிவாசை கொள்ளுமிவர் சமயம் வேட்டு!
நானாசை கொள்கின்றேன் 'ஆமாம்' என்று
நல்லதமிழ்ப் புத்தகத்தின் காடு சொல்லும்!
வானாசை கொள்ளுமிவர் புகழை ஏந்தி
வாயாசை கொள்ளுமிவர் தமிழை மாந்தி!
ஏனாசை கொள்ளவில்லை இதுவ ரைக்கும்
என்றிதயம் துடிதுடிக்கும் படித்த பின்னே!

வாதநோயும் இவருடலை வருத்தப் பார்க்கும்
வறுமைநோய் இவர்மனத்தை வறுத்துப் பார்க்கும்!
வேதநோயும் இவராய்வில் உளுத்துப் போகும்
வடமொழிநோய் இவர்முன்னே உதிர்ந்து சாகும்!
சாதல்நோய் இவரருகே நெருங்க அஞ்சும்
சஞ்சலநோய் எதிர்ப்பின்பால் ஓடிக் கெஞ்சும்!
மோதுகின்ற நோயெல்லாம் தமிழென் கின்ற
மூலிகையால் பொடிப்பொடியாய்த் தூள்தூள்,
தூளாம்!



# ஓவிய மனிதர்

**பாவலர். வண்ணப்பூங்கா வாசன்**

பல்கலைப் புலவர் கா.சுப் ரமண்யர்
நெல்வே லியிலே பிறந்த புனிதர்
எம்எல் பிள்ளை என்றே இவரை
எங்கள் தமிழர் சிறப்பாய் விளிப்பர்.

தமிழைச் சுவைத்தார்; சுவைக்கவும் பணித்தார்
தமிழரை உயர்த்திக் காட்டியே களித்தார்
ஆங்கிலப் புலமை அதனிலும் திளைத்தார்
பாங்குடன் பைந்தமிழ் பரப்பிட அழைத்தார்.

குற்ற நெறிகள் முறைகளைப் பற்றி
மற்ற நீதிகள் தத்துவம் ஒற்றி
புத்தகம் எழுதி புகழும் சேர்த்து
பத்தா யிரமும் பெற்றவர் பிள்ளை!

எளிய தோற்றம்; ஏழைகள் என்றால்
வலியச் சென்று உதவிடும் உள்ளம்!
தமிழின் சிறப்பைத் தரணியில் பரப்பி
இமிழ்கடல் முத்தாய் இனித்திட வாழ்ந்தார்!

ஓவியம் போலவே உலகினில் சிறந்தார்
காவியம் தீட்டும் கலையினில் நிறைந்தார்
சட்ட மேதையாய் சரித்திரம் உரைத்தார்
திட்டம் தீட்டியே ஒருசிலர் மறைத்தார்!

மங்காத் தமிழின் மேதகு புலவர்
திங்கள் ஒளியாம் தென்புல ஞாயிறு
எங்கள் காசுவுக்(கு) ஆண்டுகள் நூறு!
பொங்கிடும் அவர்புகழ் பாவிலே கூறு!



# வணங்க வாரீர் தோழர்களே!

பாவலர் ஆலந்தூர் கோ.மோகனரங்கம்

கா.சு. பிள்ளை நூற்றாண்டு
    கருத்தில் இனிக்கும் கற்கண்டு!
காசு பணத்தைக் கருதாமல்
    கா.சு. பிள்ளை வாழ்ந்ததனால்
வாசம் உள்ள மலரொன்று
    வையம் வியக்கப் படைக்கின்ற
பாசம் கொண்டே பணிகின்றோம்!
    பாடிப் பாடித் தொழுகின்றோம்!

மணக்கும் தமிழின் இலக்கியங்கள்
    மக்கள் நெஞ்சில் பதியவைத்தார்!
தனக்கும் தன்னைச் சேர்ந்தோர்க்கும்
    தனியே சொத்துச் சேர்க்காமல்
இனிக்கும் தமிழே சொத்தென்று
    எண்ணி எண்ணி வாழ்ந்தோராம்!
வணக்கம் வணக்கம் என்றவரை
    வணங்க வாரீர் தோழர்களே!

பழகு தமிழின் இலக்கியங்கள்
    பலரும் அறிந்து கற்றிடவே
எழுதி வைத்த வரலாற்றில்
    ஏற்றம் மிகுந்த இலக்கியங்கள்
அழகு காட்டி அணிவகுக்கும்!
    அந்நாள் அவரே முதல்முதலாய்
உழைத்துப் படைத்த வரலாற்றில்
    ஓங்கு தமிழின் ஒளிகண்டோம்!

சட்டம் படித்த மேதையவர்
தமிழை மறக்க முடியாமல்
எட்டுத் திசையும் தமிழ்முழக்கம்
என்றும் செய்த வித்தகராம்!
கொட்டும் அருவி இவரென்றார்
கொஞ்சும் தமிழைக் கேட்டவர்கள்!
பட்டம் பதவி பெரிதல்ல
பாரில் தமிழே பெரிதென்றார்!

எண்ணித் துணிந்து நடப்பதிலும்
எடுத்த செயலை முடிப்பதிலும்
திண்மை நிறைந்த பிள்ளையவர்
தெளிவாய் வாழ்ந்த வாழ்க்கைமுறை
உண்மை அறிஞர் இவரென்றே
உலகுக் கெல்லாம் பறைசாற்றும்!
விண்ணும் மண்ணும் வியக்கின்ற
வீரப் பிள்ளை வாழியவே!

அடக்கம் நிறைந்த பிள்ளையிடம்
அன்பின் அடிமை ஆனார்கள்!
எடுக்க எடுக்கக் குறையாத
எழுச்சித் தமிழின் சுரங்கத்தைப்
படித்துப் படித்து வளர்ந்தார்கள்!
பழம்போல் தமிழை அள்ளியள்ளிக்
கொடுத்து வாழ்ந்த பிள்ளைக்குக்
கொடுக்க உலகில் பொருள்உளவோ?



# வெஞ்சமர் வேழம்!

பாவலர் உலகக்குடிமகன்

நெஞ்சம் தமிழ்ச்சோலை நீலவான் தண்மதி
துஞ்சாப் புலிநிகர்க்கும் தன்மானம்—பஞ்சுபொதி
அஞ்சுகக் கூட்டுறவார் அய்ம்புலன் பாட்டுணர்வு
வெஞ்சமர் போர்க்குணவே ழம்.

வேழப் படைநடையார் வெற்றி வழக்கறிஞர்
தாழாத் தனிப்பண்புத் தாளாளர்—வாழ
வளரத் தழைத்தோங்க வேட்கை உரிமைக்
களம்கண்ட நற்கழ கம்.

கழகப் புலவோர் கடைமணி ஓசை
பழகு கலைநயப் பாங்கார்—உழவர்
தொழிலனைய ஆய்வு திகழ்மலை உச்சி
வழிச்சுழற்சி அருவிவெள் ளம்.

வெள்ளநீ ரோட்டம் விசைவுந்து பே(ா)ராற்றல்
தெள்ளறிவுத் தாகத் தலைமகன்—கள்ளமிலா
அன்பருட் செல்வராம்ஆகமத் தேர்ச்சிநூல்
தென்புலக் காப்பரண் தூண்.

தூண்மாடக் கோட்டை, துலங்குமெய் வாய்மைநெறி
காண்தமிழ்க் காதல் கொடித்தோளார்—மாண்பழகர்
செந்தமிழ்த் தொண்டர் செழிநிலப் பக்குவத்தார்
சிந்தனைத் தேன்மலர்ச்செம் மல்.

செம்மல் சிறப்பெய்தும் சீர்விழா நூற்றாண்டாம்
அம்புவிக்கோர் ஆர்வ அழைப்பாம்— இம்மட்டோ!
காலைக் கதிரோன் குறிப்புணர்ச்சிக் காந்தமின்
சாலைப்பூக் கொன்றைநறுஞ் சால்பு. □



# உயிர்என்று ஓம்பு

**பொன். அய்யனாரப்பன்**

கல்வியே உயிராக ஓம்பு—உன்றன்
கைப்பொருள் எல்லாம் கசப்பாகும் வேம்பு;
வெல்லம்போல் என்றுமே இனிக்கும்—மன
விருப்பத்தை நிறைவேற்றி உன்னாவல் தணிக்கும்

படித்திடும் காலத்தில் கசக்கும்—அதைப்
பார்க்கின்ற போதெல்லாம் கள்போலப் புளிக்கும்
கடித்திடும் கரும்பாக இனிக்கும்—பின்னால்
கனியுதிர் தோப்பாக அறிவையே பெருக்கும்!

எல்லாமே அறிவாலே கிடைக்கும்—அதற்கு
ஈடான பொருள்ஒன்றும் உலகினில் உண்டோ?
கல்லாதார் இடராலே தாழ்வர்—தனைக்
கருநாகம் கடித்தாற்போல் மண்மீதில் வீழ்வார்!

கல்வியால் அனைத்துமே நடக்கும்—அக்
கல்விப் பிடிக்குள்ளே எப்பொருளும் அடக்கம்
எல்லைகள் தாண்டியும் கடக்கும்—நம்
இன்ப நல்வாழ்வின் அடையாள தொடக்கம்!

அறிவின் உச்சிக்கே ஏற்றும்—மனதின்
ஆறாத புண்ணையும் அன்றாடம் ஆற்றும்
குறிக்கோள் உள்ளோராய் மாற்றும்—உயிர்க்
கொள்கை வழிசெல்லும் உயர்ந்தோரைப் போற்றும்!

மண்மிசை துயர்ப்பெருக்கைத் தடுக்கும்—உன்
மதிக்குள் வாட்டுகின்ற கவலையை ஒடுக்கும்
கண்முன்னே சொர்க்கத்தைப் படைக்கும்—வாழ்வில்
காணாத இன்பத்தை நீர்காணக் கொடுக்கும்!




# தமிழ்க் "கா.சு." நெறி வெல்க!

நாட்டுராய சண்முகப்பிரியன்

எண்ணுகிற எண்ணமெலாம் தமிழுக் காக.
ஏற்றமுறப் போற்றிவந்த வேளே கா.சு.
மண்ணினிலே உன்போன்றோர் தோன்றத் தானே
மானமுறத் தமிழன்னை பெற்ற பிள்ளை
விண்ணளவு துயருறினும் வீரத் தாலே
விதிநீசம் வென்றிடவே தோளைத் தூக்கி
அண்ணனிடம் அளித்திட்ட வாக்கைக் காக்க
ஆர்வமுடன் எந்நாளும் முழங்கு கின்றோம்!

கா. சுப்பிர மணியம்நீ தந்த நூலை
கருத்துறவே இளைஞரெலாம் வீரத் தாலே
நா சுகமாய் நடனமிடும் தமிழைப் பாடி
நாட்டினிலே எந்நாளும் காவல் கொண்டு
வா சிரத்தைத் தட்டுகிறோம் இந்தித் தேளே
வாலினையும் வெட்டுகிறோம்! என்றே உன்றன்
பா சிரத்தைப் போற்றுகிற பனுவ லுள்ளே
பாவலனாய் ஒளிபெறவே ஊக்கு வாயே!

இன்னலெலாம் தூசுஎன ஊக்கத் தாலே
இதயமதில் கா.சு. கவி எண்ணி மூவர்
மன்னனைப்போல் எந்நாளும் மாற்ற மின்றி
மதிவளங்கள் மேன்மையுறத் தமிழைக் காக்க
தன்னிகரே இல்லாத கொள்கை மேவி
தரணியிலே உம்நினைவு கொண்டு தூய
அன்னையெனும் போதுதமி ழோசை நேய
அகிலமெலாம் பரப்புகிற பணியில் வெல்வோம்!



# நற்றமிழ் வேந்தர்

## பாவலர் பூங்கோவன்

சங்கம் வளர்த்த தமிழறிவர்
　　தமிழில் நூல்கள் பலகண்டார்
மங்கா தமிழில் சட்ட நூல்கள்
　　வழங்கி மேன்மை பெற்றவராம்
கங்கை காவிரி நதியோட்டம்
　　கருத்தில் இழையும் சிந்தனைகள்,
பொங்கும் புதுமை கருத்துக்கள்
　　பிழிந்து கொடுத்தார் கா.சு.பிள்ளை!

இலக்கிய உலகின் மாமேதை!
　　'இலக்கிய வரலா'ற் றைப்படைத்தார்
பலகலை யறிந்துப் போற்றியதால்,
　　''பல்கலை மன்னர்'' சிறப்புற்றார்!
இலங்கிடும் நூலை வடிவமைத்தே
　　ஈந்தார் நமக்கு நற்பேறாய்
நலந்தரும் குறளுக்(கு) உரையமைத்த
　　நற்றமிழ் வேந்தர் கா.சு.பிள்ளை!

★★★★



# தமிழ்நறும்புலவர்

## பாவலர் இடிமுரசு

ஆர்த்திடுக இடிமுரசம் தயக்க மின்றி
அன்னைமொழி செந்தமிழுக் கிழுக்கு நேர்ந்தால்
பார்முழுதும் ஒலிக்கட்டும் இடியின் ஓசை!
பகுத்தறிவு மணங்கமழும் கருத்தைச் சொல்லி
பேர்பூத்த தமிழ்ச்சுடராய்; அறிவின் ஊற்றாய்ப்
பிழையில்லாத் தமிழ்பரப்பி வாழ்ந்து சென்ற
சீர்பூத்த பல்கலையின் புலவர் கோமான்
செந்தமிழர் கா.சு.வின் தொண்டு வாழ்க!

அயல்மொழிகள் வாழட்டும்; விரும்பு வோர்கள்
அம்மொழிகள் கற்கட்டும் உணர்வி ணைத்தே
அயல்மொழிகள் கற்கின்ற தமிழ ராயின்
அன்னைமொழித் தமிழ்மொழியை ஒதுக்கி வாழ்தல்
உயர்வல்ல, உயர்வல்ல என்றே சொல்லி
உணர்வேற்றி உறுதியுடன் நாமி ருக்க
அயர்வின்றி எப்போதும் தமிழுக் கென்றே
ஆருயிரைத் தாமளித்த கா.சு. வாழ்க!

முல்லைக்குத் தேரீந்தான் பாரி வள்ளல்
முடிதுறந்தான் இளங்கோவும் கவிதை செய்ய
எல்லாமித் தமிழ்நாட்டில்! வேறெந் நாட்டில்
இவையாவும் நிகழ்வதுண்டு? பெருமை பாடாக்
கல்நெஞ்சம் நீங்கிடுக; தமிழ ரின்பம்
கண்டுள்ளம் பொங்கிடுக! தமிழைப் பாடி
நல்லவராய் நூற்றாண்டைக் காணும் வல்ல
நாவேந்தர் தமிழ்க்கா.சு. நாமம் வாழ்க! □○

உ

உயர்திரு எம்.ஏ,எம் எல்., அட்வகேட்,
தாகூர் சட்ட விரிவுரையாளர்

**கா சுப்பிரமணிய பிள்ளையவர்கள்**
நினைவின் பொருட்டு

# நடுகல் விழா

*1078–ஆம் திருவள்ளுவராண்டு புரட்டாசித் திங்கள்*
*27–ஆம் நாள் (13—10—1947) திங்கட்கிழமை*

# நடுகல்லிற் காணும் வரலாற்றுச் சுருக்கம்

இந்நடுகல்

நுண்மாண் நுழை புலச் செம்மல்
பல்கலைப் புலவர், வழக்குரைஞர் (அட்வகேட்)

# கா. சுப்பிரமணிய பிள்ளை

*5—11—1888–ல் திருநெல்வேலியில் காந்திமதிநாத பிள்ளை (பி.ஏ.) க்கும் மீனாட்சியம்மைக்கும் திருமகனாகப் பிறந்து; ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் எம்.ஏ. பட்டமும்; சட்டக்கலையில் எம்.எல். பட்டமும்; 1920–ல் குற்றங்களின் நெறிமுறைகள்* **(Principles of Criminology)** *என்னும் நூலியற்றிப் பதினாயிரம் ரூபாய் பரிசுடன் தாகூர் சட்ட விரிவுரையாளர் பட்டமும் பெற்று; 1919 முதல் 1927 வரையில் சென்னைச் சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும்; 1929–1930, 1940-1944 இவ்வைந்தாண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கி; 1926–32ல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும்; 1932 முதல் 1937 வரை நெல்லை நகராட்சி மன்ற உறுப்பினராகவும்; நெல்லையப்பர் கோயில் அறங்காப்பாளராகவும் அமர்ந்து, சீர்திருத்தங்கள் பல செய்து, மணிவாசக மன்றம் நிறுவி, மணிமாலை என்னும் தாளின்வழிப் பல கலை நூல்களை இயற்றி வெளியிட்டு, நூலாராய்ச்சியுடன் நால்வர் வரலாறுகள், சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், குமரகுருபரர், சிவஞான முனிவர், மெய்கண்டார் வரலாறுகள், திருக்குறள் திருவாசகப் பொழிப்புரைகள், தமிழிலக்கிய வரலாறு, தமிழர் சமயம், வானநூல், மெய்கண்ட நூல்களின் உரைநடை, நீதிநெறி விளக்கம், சிவப்பிரகாசம் இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள், இந்தியத் தண்டனைத் தொகுதி விரிவுரைகள்* **(Lectures on the Indian Penal Code)** *முதலிய நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களியற்றி, பல பேரவைகளில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தமிழ் மக்கட்குப் பல்லாற்றானும் பணிசெய்து 30-4-1945ல் மனைவியாருடன் மக்கள் மூவரையும் பிரிந்து திருவருட்பேறெய்தியதை நினைந்து நிலைநாட்டப் பெற்றது.*

தென்னிந்திய தமிழர் சங்கம்,
திருநெல்வேலி.

வ. சுப்பையா பிள்ளை,
அமைச்சர்.

திருநெல்வேலி மாநகரில்
பல்கலைப்புலவர்—தாகூர் சட்ட விரிவுரையாளர்
பேராசிரியர் கா. சுப்பிரமணியம் எம்.ஏ., எம்.எல்.,
அவர்களது நினைவாக
திருவள்ளுவராண்டு 1978 புரட்டாசித் திங்கள்
27 (13-10-1947) ஆம் நாளன்று நடைபெற்ற

# நடுகல் விழாவின்போது

சித்தாந்த பெரும்புலவர் பேராசிரியர்
**ஔவை சு. துரைசாமிப்பிள்ளை**
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துப்பா

கல்நின்ற எந்தைதிரு கா.சுப் பிரமணியன்
முன்நின்ற மெய்ந்நூல் முதுபுலவன்—சொல்நின்ற
செல்வன் வழக்குரைஞன் சீர்த்த வழக்கறிஞன்
பல்கலைஞன் செந்தமிழ்ப்பண் பன்.

தமிழ்வாழ்வு கண்டான் தமிழ்ச்சமயம் கண்டான்
தமிழரது பண்டைமறை கண்டான்—தமிழ்மக்கள்
கொண்டஇயல் இன்னவெனக்கூறி அவர்மேம்படற்கு
கண்டான் பலகொள்கை கள்.

வாழிதிரு கா.சுப் பிரமணியன் வாழ்கவே
வாழியவன் தன்பேர் வண்டமிழர்—வாழியவாழ்தற்
பொருட்டு
வாழிய தன்செய்ய தமிழருளச் செய்தினிதுவாழ்க
தமிழ்த் தெய்வ மகனாகச்சிறந்து.



யாரிவர்? 'தமிழ்க்கா.சு.' தானிவர்.

எளிய தமிழர் உடையில்

பழகு தமிழ்ப் பாவலர் தமிழ்க்'கா.சு.'வின்


அற்புதத் தோற்றம் அடக்கமுடைமையில்!




விருதுநகர் வி.வி.ஆர். தமிழர்
வாழ்வுக்குத் தந்த ஏடு தமிழ்த் தென்றல்
தென்றலின் தென்றலாக
தமிழ்க் 'கா.சு.'




நாற்பது ஆண்டுகட்கு முன்னே தமிழ்க் 'கா.சு.'
நினைவு இலக்கியக் குழுவின் நிறுவனர் நடத்திய
'தமிழ்ச் சுடர்' ஏட்டின் முகப்பில் 'தமிழ்க் கா.சு.'



குடந்தை தமிழன்னை கொலுவிருக்கும் ஒளிமாடம்!
குடந்தை தமிழிசைக் கல்லூரி நல்லறிஞர் குழுவிலே நம் தமிழ்க் 'கா.சு.'
நல்லிசைக் குடந்தை சுந்தரேச நண்பருடன்.

# விளம்பர மலர்

**சாதனை புரிந்த சட்ட வல்லுநர்**
**கா.சு. பிள்ளை புகழ் வாழ்க!**

* மணிவாசகர் பதிப்பகம் தமிழ்நாட்டில் தலை சிறந்த ஐந்து பதிப்பகங்களில் ஒன்று.
* ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுவதில் முதலிடம் பெறுகிறது
* இலக்கிய வெளியீட்டிற்குப் பல பரிசுகளைக் குவித்த பதிப்பகம்
* எங்கள் நூல்களை தமிழ் வழங்கும் இந்தியப் பல்கலைக் கழகங்களனைத்தும் பாட நூல்களாக ஏற்றுக் கொண்டுள்ளன.
* தமிழ் மறுமலர்ச்சிக்குத் துணை நிற்பன
* புதியதோர் உலகு காண வழிவகை காண்பன
* புதிய தமிழ் ஆய்வுக்கு வழி வகுப்பது
* அறிஞர்களின் சிந்தனைப் பதிவு எங்கள் வெளியீடு
* முத்தான நூல்கள் முந்நூறு வெளியீடுகளை அழகிய அமைப்புடன் வெளியிட்ட பதிப்பகம்

# மணிவாசகர் பதிப்பகம்

கிளைகள் : **சிதம்பரம், சென்னை, கோவை, திருச்சி, மதுரை.**

**12-பி, மேல சன்னதி, சிதம்பரம்.**
**55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001**
**14, சுங்குராம் தெரு, சென்னை-600 001.**
**28-ஏ, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை-625 001.**
**3/4, ராஜவீதி, கோயமுத்தூர்-641 001.**
**20, தந்திக்கோயில் தெரு, திருச்சி-620 002.**

M/s. SWASTIK CORPORATION
M/s. SARAVANA CHEMICALS
M/s. MADRAS INDUSTRIAL PRODUCTS CORPORATION
M/s. SATISH CHANDRA AGENCIES
M/s. PERIYAR AGENCIES

## 30, SATHY ROAD, ERODE-638 003

Tel : CORPORATION Phone : 75500, 77262, 77485

Branches : MADRAS - MADURAI - COIMBATORE - SALEM, TIRUPPUR - KARUR - COCHIN - CALICUT - PALGHAT - PONDICHERRY.

SELLING AGENTS FOR

M/s. DCW Ltd., Bombay.
M/s. Tamil Nadu Chemical Products Ltd., Madras.
M/s. Deepak Nitrite Ltd., Bombay.
M/s. Tuticorin Alkali Chemicals & Fertilisers Ltd., Madras.
M/s. Modi Alkalies & Chemicals Ltd., New Delhi.
M/s. Indian Dyestuff Industries Ltd., Bombay.
M/s. Mafatlal Dyes & Chemicals Ltd., Bombay.
M/s. Ramakem Private Ltd., Bombay.
M/s. Vanavil Dyes & Chemicals Ltd., Madras.
M/s. Travancore Chemical & Manufacuring Co. Ltd. Mettur Dam.

தமிழ்ப் பெருமகனார் ''கா.சு.'' அவர்களின்
நூற்றாண்டு நினைவு விழாவிற்கு எங்கள்
நல்வாழ்த்துக்கள்!

தந்தி : Cotton
Komarapalayam

டெலிபோன்கள் :
(பவானி எக்ஸ்)

டெலக்ஸ் : 0856-244

ஆபீஸ் : 2016
தனி : 2612
வீடு : 2310

# சுந்தரம் நூற்பு ஆலை
# பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி எண். 25
சேலம் மெயின் வீதி
குமாரபாளையம்-638 183

மானேஜிங் டைரக்டர்கள் :

**ஜே. கே. கே. சுந்திரம்**
**ஜே. கே. எஸ். மாணிக்கம்**

★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★

# சக்தி பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : **478, டாக்டர் நஞ்சப்பா சாலை**

கோவை-18

தொலைபேசி : 32240, 30500

நிறுவனர் :

டாக்டர் **நா. மகாலிங்கம்**

★ 190 கோடி ரூபாய் பெறுமதியுள்ள சக்தி குழுவின் ஓர் அங்கம்

★ செலுத்தப் பெற்ற மூலதனம் 2 கோடி ரூபாய்; உபரியும் ஒடுக்கீடும் சுமார் 3 கோடி ரூபாய்

★ ஐந்து மாநிலங்களில் 25 கிளைகளும், 8 பாதுகாப்புப் பெட்டகங்களும்

★ 7000 பங்குதாரர்கள்: 42,000 டெபாசிட்டர்கள். 14,000 வாடிக்கையாளர்கள் நிறைந்த 'சக்தி' குடும்பம்

★ டெபாசிட்டர்கள் 29 கோடி ரூபாய்க்கும் அதிகம். வழங்கப் பெற்ற கடன்கள் 32 கோடி ரூபாய்க்கும் அதிகம்

★ டெபாசிட்டர்களுக்கு ஒப்பற்ற நன்மைகள் ரிஸர்வ் வங்கி விதித்துள்ளதில் உயர் வட்டி விகிதம்

★ பின் தேதியிட்ட வட்டி வாரண்டுகளை முன் கூட்டியே வழங்குதல்—மிக விரைந்த சேவை

★ டெபாசிட் தொகையை எப்போது வேண்டுமாயினும் திரும்பப் பெறவோ அவற்றின் மீது கடன் பெறவோ வசதி

★ நாட்டிலேயே மிக விரைந்து வளரும் நிதி நிறுவனம்

**பாதுகாப்புப் பெட்டகங்களுடன் இணைந்த எங்கள் சென்னை கிளைகள் :**

76, சர் தியாகராயர் சாலை

**தி. நகர், சென்னை-17**

தொலைபேசி : 444081 — 444159

32, முதல் அவினியு, சாஸ்திரி நகர்

**அடையாறு, சென்னை-20**

தொலைபேசி : 410453

47, எஃப் முதல் மெயின் ரோடு

**அண்ணா நகர், சென்னை-40**

தொலைபேசி : 619029

★★★★★★★★★★★★★-★★O★★★★★★★★★★★★

With best compliments from :

## Sri Aarvee Electrodes Limited

Post Box No. 11, Karamadai, P.O.

*COIMBATORE-641 104, TAMILNADU*

Phones : Karamadai 338
Coimbatore 89577, 89578
Mettupalayam 311

Telex : 0855 - 286 SRSI IN
0855 - 460 ARVE IN

## Madras Oxygen & Acetylene Company Limited

Thekkupalayam P.O. Perianaickenpalayam

Coimbatore-641 020

Phones : 89211, 89233 Cable : MAXYGEN

## Sri Aarvee Hotels

308, 309, Bharathiar Road, Sidhapudur,

Coimbatore-641 044

Phone : 23201 (6 Lines)

Telex 0855 - 460 ARVEIN

Cable : ARVEE HOTEL

With best compliments from :

**Sri Raamakrishna Steels Industries Limited**

**Karamadai. Coimbatore-641 104**
**Tamilnadu**

Telex : 0855 - 286 SRSI IN    Phones : 89577 - 89578
Grams : "CASTSTEEL" KARAMADAI

And Its Subsidiary

**Inductocast Steel Foundry Limited**

**Bhattarahalli**
**14th K.M. Old Madras Road**
**BANGALORE-560 049**

Telex : 0845 - 8079 ISF IN    Phone : 58676 - 58544
Grams : "NICKELCAST" BANGALORE

Manufacturers of Steel Castings to Various International Standards to the Weight Range From Fraction of Kgs to 7500 Kgs A Single Piece in Cast Steel And A 3000 Kgs A Single Piece in High Alloy Steels

**V. Ramakrishnan**
Managing Director

பல்கலைப் புலவர் தமிழ்க் 'கா.சு.' நூற்றாண்டு விழாவிற்கு
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்
நல் வாழ்த்துக்கள்

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
# நூல் வெளியீட்டுத் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெளியீட்டுத்துறை
500-க்கும் மேற்பட்ட சிறந்த பதிப்புக்களை
வெளியிட்டும், பதிப்பித்தும் வருகின்றது

*முக்கிய நூல்களில் சில :*

1. Rajah Sir Annamalai Chettiar — K. Nagarajan
2. Annamalai University Short History — K. Nagarajan
3. Universal Vision of Saint Ramalinga — R. Ganapathy
4. திருவருட்பா – மூலமும் உரையும் (1-7 தொகுதிகள்) — உரை: ஔவை சு. துரைசாமி பிள்ளை
5. ஞானாமிர்தம் — ஔவை சு. துரைசாமி பிள்ளை
6. சிவஞானபோதம் — ஔவை சு. துரைசாமி பிள்ளை
7. திருவாசகம் - மூலம் — நீ. கந்தசாமி பிள்ளை
8. மிருதங்க பாடமுறை — மைலாட்டூர் சாமி

மேலும் விபரங்களுக்கு :

**சிறப்பு அதிகாரி**
நூல் வெளியீட்டுத்துறை
**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**
**அண்ணாமலை நகர்-608002**

With best compliments from :

Telegrams : VICTORY
Telephone No. 351

Tn. G.S.T.Rc. No. 849671
C. S T. No. 468133
Manure L. No.
Pesticides L. No.

M/s. M. S. S. VENKATACHALAM
CHETTIAR SONS

Fertilizer Dealers & General Merchants

KOVILPATTI-627 701

தமிழ்க் 'கா.சு.' சிந்தனை

வாழ்க! வெல்க!!

தேவி கிளினிக் நர்சிங் ஹோம்

17-A, காஜா தெரு, தெற்குவெளி வீதி

மதுரை-625001

பண்டுவர்

விசயலட்சுமி வீரமணி

தொலைபேசி :
வீடு : 22889

மருத்துவமனை
30274

தமிழ்க் கா.சு.வின் நூற்றாண்டு விழா
சிறப்புடன் நடைபெற எங்களது உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்!

ஆனந்தா லாட்ஜ், போர்டிங் & லாட்ஜிங்
402, மெயின் ரோடு
கோவில்பட்டி-627 701

தமிழ்க் கா.சு.வின் நூற்றாண்டு விழா
இனிதே நடைபெற எங்களது உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்!

கியாரண்டியுள்ள 22 காரட் தங்க நகைகள்
மற்றும் வெள்ளி நகைகள் வாங்க
நகரில் கைராசியான
ஸ்தாபனம் :

சூரியா ஜுவெல்லர்ஸ்

உரிமையாளர் :
அ. காந்தி
139, தெற்கு பஜார்
கோவில்பட்டி-627 701

With the best compliments from :

# EAST INDIA MATCH FACTORY

Post Box No. 5

*KOVILPATTI-627 701*

Manufacturers of :

*ROSE brand* & *WATCH brand*

*Safety Matches*

Tel : Prabhat & Watch Phone : 2281 & 2322

*With the best compliments from :*

# T. Yuvaraja Indrani & Co.

*17-2. Pearli Road*

Manufacture Cottanseed washed Oil & Oil Cake

*VIRUDHUNAGAR*

Branch Office :

*25, Dhadikombu Road, Dindugal*

Phone : 4286

நல் வாழ்த்துக்கள்!

சுவையான

தமிழ் நூல்கள்

வெளியிடுவோர்

※

**வானதி பதிப்பகம்**

13, தீனதயாளு தெரு

தி. நகர் சென்னை-600017

For Strength & Durability

**"Chettinad Brand"**

**Pertland / Portland Pozzolana Cement**

*Manufactured by :*

**CHETTINAD CEMENT CORPORATION LIMITED**

*Registered Office :*

"Rani See'hai Hall Building"
4th & 5th Floors

*No. 603, Anna Salai, Madras-600 006*

**Telegram :** "Bestcement" **Telepnone :** 472727
**Telex :** 41-7829 CCC IN

*Factoty :*

*"KUMARARAJAH MUTHIAH NAGAR"*

Puliyur Cement Factory Post
Karur Taluk, Trichy District, Taminadu PinCode-639 114
Telegram ; "Cement" Karur
**Telephone:** 21144-22744-21745, **Telex:** 456-215 CCC IN
*Branches at* : Bombay - Bangalore - Calcutta - Cochin

## குறளாயம்

திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு
இருபதாம் நூற்றாண்டில் எழுந்த **சமுதாய இயக்கம்**
திருக்குறளை நடைமுறைப்படுத்தும் செயல் இயக்கம்
அன்பால் அருளால் இணைந்து இயங்கும் ஓர் **அறிவியக்கம்**
பண்பைப் பயில்விக்கும் **கல்லூரி**
பல்துறை மிளிரும் **பல்கலைக்கழகம்**
வாழ்வியலைக் கூட்டும் **வளமனை**

உரிமை, குடிமை, சமன்மை, பொதுமை
ஆகிய அனைத்தையும்
மாசற்ற மனத்தின் அடிப்படையில் உருவாக்குவதே
இதன் குறிக்கோள்.

அமைப்பாளர் :

**வேலா அரசமாணிக்கம்**

தலைமைக்குழுச் செயலர்கள் :

பேரா: **முருகு** (உ.பா.) க.மு. தில்லை
புலவர் **மீ. தங்கவேலனார்** பட்டுக்கோட்டை
**3, மண்டபத்தெரு, ஈரோடு-638001**

தமிழ்க் கா.சு.வின் நூற்றாண்டு விழா சிறப்புடன்
நடைபெற எங்களது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

**கோவில்பட்டி நகரில் ஆங்கில மருந்து வகைகள்**
**வாங்க கைராசியான ஸ்தாபனம்**

## எம். எஸ். பி. மெடிக்கல்ஸ்

**மாதாங்கோவில் தெரு, கோவில்பட்டி-627 701**

தமிழ்க் கா.சு.வின் நூற்றாண்டு விழா
சிறப்புடன் நடைபெற எங்களது நல்வாழ்த்துக்கள்!

*M. S. A. SETHURAMALINGAM*
*CHETTIAR*

**Exporter, Gold and Silver Jewellery**
**South Bazar**
**KOVILPATTI-627 701**

நல்வாழ்த்துக்கள்

அரிசி ஆலை உரிமையாளர் சங்கம்

மணப்பாறை

தலைவர் — K. நல்லுச்சாமி ரெட்டியார்

செயலாளர் — V. S. சிதம்பரம்

---

நல் வாழ்த்துக்கள்!

இல்லத்திற்கு வெண்மை தரும் ஒரே செம்

RE ROYAL CEM

ராயல் செம் அனைத்து பெயிண்டு கடைகளிலும் கிடைக்கும்

இராசா எண்டர்பிரைசஸ்

இராசபாளையம்

முகவரி : இரா. தியாகராசன்
121, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை–1

---

நல்வாழ்த்துக்கள்

அங்கீகாரம் பெற்ற சாலிடைர் T. V.
விற்பனையாளர்கள்

**இதயம் எலக்ட்ரானிக்ஸ்**

T. V. சேல்ஸ் & சர்வீஸ், 208-B, புதுத்தெரு,
மணப்பாறை-621 306

Our sisters concern : இதயம் ஏஜன்ஸிஸ்
T. V. S. மொபெட் விற்பனையாளர்
52, R. S. ரோடு, மணப்பாறை-621306

With best compliments from :

Ponmani Chem-Glass Agencies

4, Elango Adigal Street, K. K. Nagar

MADURAI-625 020

Phone : 44870

*Aathorised Stockist*

Borosil (R) Brand Glassware

Qualigens/Sd's/Ranbaxy/Fischer Fine Chemicals

**Acetylene Cylinders**
**From Stock**

★ Cylinders manufactured as per IS : 7312 in collaboration with M/s. Coyne Cylinder Company U.S.A.

★ Mass of 90 to 92% porosity and shells by MIG TIG-plasm are welding.

★ Febate for bulk purchase.

*ACETYLENE & INDUSTRIAL GAS CYLINDERS LTD.*

*(A Joint Enterprise with TIDCO)*

4, Saradambal Street, Gokulam Colony

T. Nagar, Madras-600 017

Grams : WELDCYL Phone : 427063

With the best compliments of

அனுமான் மார்க் கடலை எண்ணை

தயாரிப்பாளர்கள்

N. A. தங்கராசன் & பிரதர்ஸ்

330, தெப்பம் மேற்கு பஜார், விருதுநகர்

With best compliments :

# S. P. Muthuraman

**நல்வாழ்த்துக்கள்!**

| | | |
|---|---|---|
| இந்திரா திரையரங்கம் | — | K. ரெங்கராசு B.A. |
| கற்பகம் திரையரங்கம் | — | P. V. சின்னையா |
| பாலகிருஷ்ணா திரையரங்கம் | — | P. M. கனி |
| அருணாசலம் மளிகை | — | A. வேலாயுதம் |
| வளநாடு சில்க் ஹவுஸ் | — | A. அப்துல் முத்தலிபு<br>மாரியம்மன் கோயில்<br>பின்புறம் |
| சுல்தானியா ஜவுளி ஸ்டோர் | — | A. சுல்தான் மொய்தீன்<br>திருச்சி ரோடு, மணப்பாறை |

With the best compliments of

## Hajee P. Syed Mohamed

Props. **Syed Industries**

*Mfrs.* of Superior Quality Water Proof
Papers & Converters

VIRUDHUNAGAR-626001

தமிழ்க் 'கா. சு.'வின் நூற்றாண்டு விழா சிறக்க
எனது நல் வாழ்த்துக்கள்!

## திண்ணப்பா லாட்ஜ்

உரிமையாளர்

**T. முத்துக்கருப்பன் செட்டியார்**

திண்ணப்பா லாட்ஜ், கரூர்

தமிழ்க் 'கா.சு.' நூற்றாண்டு விழா சிறக்க
எனது நல் வாழ்த்துக்கள்!

ஆபீஸ் 20422
வீடு 22713

**M. லோகநாதன்**
தலைவர்
இனாம் கரூர் பேரூராட்சி மன்றம்
வெங்கமேடு அஞ்சல் கரூர்-639006

தமிழ்க் 'கா.சு.' நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துக்கள்

தொலைபேசி 22562

**ராஜா பேப்பர் மார்ட் — ராஜா வெட்டிங் லேண்ட்**

திருமண அழைப்பிதழ்கள் மற்றும் கார்டு கவர்
வாங்க சிறந்த இடம்

**100 திண்டுக்கல் ரோடு கரூர்-639001**

நல் வாழ்த்துக்கள்!

**'ஆர்.எஸ். போட்டோஸ்' 'ஆர்.எஸ். பார்சல்'**

8 அடி உயர அளவிலும் நல்ல முறையில்
போட்டோ எடுத்துக் கொடுக்கப்படும்

**திண்ணப்பா காம்ப்ளக்ஸ்**
(சுப்பையாபிள்ளை மளிகைக் கடை அருகில்)

**219, ஜவஹர் பஜார், கரூர்**

**வாழ்த்துச் செய்தி**

யான் பயின்ற சென்னை சட்டக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த பேரறிஞப் பெருந்தகை தமிழ்க் 'கா.சு.'வின் நூற்றாண்டு விழா நடைபெறும் நன்னாளில் என்னுள்ளம் உவகை கொள்கிறது. ஓங்குக அவர் புகழ்!

**S. ராமசாமி (நாடார்) & சன்**
பனை வெல்ல வியாபாரம் தென்னிலை 639 206

சகோதர நிறுவனம் :
**S. ராமசாமி நாடார் & கோ, உப்பு பனை வெல்ல வியாபாரம்**
52-A பாரதியார் தெரு, கரூர்

**இராம. கோவிந்தன் க.மு.ச.இ., தலைவர் முத்தமிழ் மன்றம்**
பனைவெல்ல வணிகம் 5-29 H. அன்பு இல்லம்
**தென்னிலை 639 206. கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்.**

## "ஈரோடெக்ஸ் தயாரிப்புகள்"

★ படுக்கை விரிப்புகள் ★ துண்டு ரகங்கள்
★ திரைச் சீலைகள் ★ தலையணை உறைகள்
★ லுங்கிகள் ★ நேப்கின்கள் மற்றும்
★ பாலியஸ்டர் ரகங்கள்

தந்தி: 'ஈரோடெக்ஸ்'' டெலக்ஸ்: 856–239-Loom-in
போன் : 74170 & 75568

# ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,

'ஜெகநாத நிலையம்' 218, நேதாஜி ரோடு
ஈரோடு-638001

卐

ஷோரூம்கள் :

தமிழ்நாடு : * சென்னை * மதுரை * திருச்சி
* கோவை * திருநெல்வேலி
* புதுக்கோட்டை * விழுப்புரம்
* வேலூர் * பரமக்குடி * சேலம்

ஆந்திரம் : * ஹிந்துப்பூர் * சிராளா

கர்நாடகம் : * பெங்களூர்

ஜெ. சுத்தானந்தன்
தலைவர்

'கா.சு.' பிள்ளையவர்களின் கவின்புகழ்
காசினி உள்ளவரை வாழ்க!

**கல்யாணம் மற்றும் விஷேசங்களுக்கு பட்டு அண்டு**
**மில் ஜவுளி ரகங்கள் வாங்க**
**கைராசியான ஸ்தாபனம்**

**Phone : 21793**

**K. P. M. கிளாத் சென்டர்**

**802-803, ஜவஹர் பஜார், கரூர்-1**

---

நல் வாழ்த்துக்கள்!

**ஸ்ரீ விசாலாட்சி மில்ஸ் பிரைவேட் லிமிடெட்**

உயர் ரக பஞ்சு, செயற்கை இழை நூல்,
காகிதத் தயாரிப்பாளர்கள்

**நூற்பாலைகள்**
யூனிட் ஏ. பி. விசாலாட்சி நகர்-625 401
யூனிட் ஸி வாடிப்பட்டி 624218
மதுரை மாவட்டம்

**காகித ஆலை**
மணலூர்-623 611
பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

**எல். நாராயணன் செட்டியார்**, தலைவர்

---

நல் வாழ்த்துக்கள்!

டெலிகிராம் : "பேரடைஸ்" போன் : 21514

**ஹேண்ட்லூம் பேரடைஸ்**

புகளூர் ரோடு, தபால் பெட்டி எண் 111
**கரூர்-639001**

தயாரிப்பாளர்கள் :
**எல்லா வகை படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள்**
**திரைச் சீலைகள், ஜக்கார்டு வகைகள், மேட்டி**
**கேஸ்மெண்ட், துண்டுகள் முதலியவை**

---

**Please Visit** **Phone : 22020**

**அரிஸ்டோ ரெஸ்டாரெண்ட்**

963, கோவை ரோடு, கரூர்

**அரிஸ்டோ ஒயின்ஸ் (மேல் மாடியில்)**

சுகாதார முறைப்படி உடனுக்குடன் சூடாக, சுவையாக் சாப்பாடு, பிரியாணி, மட்டன், கோழி, மீன் வகைகள் செய்து தரப்படும். பார்சல்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். தந்தூரி வகைகள் மற்றும் சைனீஸ் வகைகள் கிடைக்கும்.

**Aristo Restaurant, Karur**

சர்வீஸ் நேரம் : காலை 10-30 to இரவு 12-00
சனி, ஞாயிறு, புதன், ஆப்பம்-பாயா கிடைக்கும்

'' நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு ''

அன்புடன்

**நியூ காலேஜ் ஹவுஸ்**

2, டவுன் ஹால் ரோடு, மதுரை-625 001

நல் வாழ்த்துக்கள்!

தொலைபேசி 567684 பதிவு எண் 6178 M.S.

**பாண்டியன் டிரைவிங் ஸ்கூல்**

(அரசு அங்கீகாரம் பெற்றது)

பாண்டியன் டிரைவிங் ஸ்கூல்

47, சிங்கண்ணசெட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-600 002

With best compliments from

**OM ENTERPRISES**

114, Luzchurch Road

Mylapore, Madras-600 004.

Dealers In :

*'TVS Mopeds'*

With best compliments from :

Phone : 74744

**GOLDEN PHARMACEY**

*66, Santhome High Road*

*MADRAS-600028*

With best compliments from :

Phone : 413171 Show Room : 416351

**Ramkay Agencies**

*Dealers :* T.V.S-Suzuki TVS 50

*R. R. MANOHAR B Sc. M.Bt.,*

Managing Partner

*12, Sardar Patel Road Adayar*

**Madras-600020**

நல் வாழ்த்துக்கள்!

**அல்லும் பகலும் அனவரதமும் அரிய**
**சேவைக்கு அணுகுங்கள்**

**'பர்வீன் டிராவல்ஸ்'**

*சுற்றுலா பேருந்து மற்றும் சீருந்து இயக்குபவர்*
*தலைமை அலுவலகம், ராக்சி தியேட்டர் எதிர்புறம்*

**எண். 24, மூக்காத்தாள் வீதி, புரசைவாக்கம்**
**சென்னை-600007**

தொலைபேசி எண்கள் : 665011-567638-661158-567639

With best compliments from :

Grams : THULA NIVAS Phone : 563870

**Venkateswara**
**Weighing Services**
(Regd.)

*Specialists in :*

Weights & Measures, Weighing &
Measuring Instruments

*13, Nyniappa Naick Street, Madras*-600003

With best compliments from :

Phone : 513668

**S. T. Arasu & Company**

**8, Rajaji Salai, Madras-600 001**

XXXXXXXXXXXXXXX-XXXXXXXXXXXXXX

நல் வாழ்த்துக்கள்!

மதுரை மாநகரில் எவர்சில்வர் பாத்திரங்கள்
மொத்த வியாபாரத்தில் சக்கரவர்த்தியாகத் திகழும்
ஒரே நிறுவனம்

**P. S. குணசேகரன் எவர்சில்வர்**

மொத்த வியாபாரம்

லட்சுமிபுரம் 4வது தெரு, மதுரை-625001

உரிமையாளர் : கே. எசு. பி. சுங்கரலிங்கம்

XXXXXXXXXXXXXXX-XXXXXXXXXXXXXX

With best compliments from

*Head Office :*

56 Salem Road
NAMAKKAL-637 001
Phone : 2010, 2610, 3310

*Administrative Office :*

No 82 Walltax Road
Post Bag No. 2835
MADRAS-600 003
Phone : 30410, 39510, 32610
Telex : 041-8510 NSIT IN
Grams : 'ENNESITY'

**Namakkal South India Transports(Reg )**

*Our Fleet :* Normal Trucks, Special Heavy Duty Taurus, Open Platform Trucks, Articulated Trailers, Beaver / Hippo Semi Low Bed Trailers to haul upto a maximum weight of 90 mt at any part of INDIA with Inter-state, Zonal and National permits.

*Branches :* Alangulam, Ariyalur, Bangalore, Bhadravathi Bharuch, Bombay, Calcutta, Cochin, Coimbatore, Davangere. Erode Hubli, Kanpur. New Delhi, Pondy, Ranipet, Salem-1, Salem-2, Salem-6, Tiruverambur, Tricy, Tuticorin, Velayuthapalayam, Visakhapatnam and Associates all over INDIA.

*C.H.A. :* We are also the accredicated Agents for the instrumentation of C H A Licence in respect of Imports and exports through MADRAS PORT.

தமிழ்க் 'கா.சு'வுக்கு வாழ்த்துக்கள்

தரமான பொருள்கள் – இனிய வரவேற்பு

**கற்பகம் கார்ப்பரேசனில்**

**ஸ்டீல் பர்னீச்சர்**

**வெட்கிரைண்டர் - மிக்சி - மின்விசிறி கிடைக்கும்.**

**கற்பகம் கார்ப்பரேசன்**

**59/A-3, காந்தி சிலை அருகில்**

**குளித்தலை - 639 104.**

உரிமையாளர் : எசு. இராசு

கரூர் நகரில் நவீன வசதிகளுடன் கூடிய
ஏர்கண்டிஷன் மற்றும் டீலக்ஸ் அறைகளுக்கு

**அரசி லாட்ஜ் A/c**

(தலைமைத் தபால் நிலையம் எதிரில்)

**போன் : 22663, 22763 P.M.Bx.**

**781, ஜவஹர் கடைவீதி, கரூர்.**

**குறிப்பு :** டெலிபோன் மற்றும் ரேடியோ வசதியும் ஒவ்வொரு அறைக்கும் இணைக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி பெட்டி வசதி உள்ளது.

உரிமையாளர்

**K. C. பழனிசாமி**

**நகரசபை துணைத் தலைவர், கரூர்.**

with best compliments :

ECONOMIC
TRANSPORT
ORGANISATION

21, Armenian Street, Madras-600 001.
Phone : 20143 20144, 35129, 25810, 25811
H. O. : P-3, New C.I.T. Road, Calcutta-700 073
Phone : 276114 (4 Lines) Grams : 'ECOSAFE'

நல் வாழ்த்துக்கள்

சபா பேக்கரி — டவுண் ஹால் ரோடு மதுரை-1

தமிழ்ப் பெருமகனார் 'கா.சு' பிள்ளை
அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவிற்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்!

இலக்கியம், நாவல், சிறுகதை
மற்றும் ஆண்டுமலர்கள், கல்லூரி மலர்கள்
சிறந்த முறையில் அச்சிட

# அன்னை அஞ்சுகம் அச்சகம்

94 கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை சென்னை-14

நூற்றாண்டு விழா நாயகன்
தமிழ்க் 'கா.சு.' பணி வெல்ல வாழ்த்துக்கள்

**வாசன் சொக்சு**

**ஆனந்தா பிரிண்டர்சு**

**குழித்தலை 639104**

**தமிழகம்**

**பால் போன்ற வெண்மைக்கு**
**நிர்மா வாஷிங் பவுடர்—நிர்மா டிடர்ஜெண்டு கேக்**

பூரண விநியோகஸ்தர்கள்

**M/s. உதயா சேல்ஸ் கார்ப்பரேஷன்**

**குகை - சேலம்-6**

போன் : 68546; 68064

பிற்பட்ட வகுப்பினருக்காகத் தொடங்கப்பெற்றும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் வழியைப் பின்பற்றியும் வருவதும் ஆகும். பி.எச்.டி. (தமிழ்) ஆய்வு மையமும் இதன் தனிச் சிறப்பு ஆகும்.

**எமது கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும்**
**வகுப்புகள்**

பி.ஏ., தமிழ் வரலாறு, பி.எசி., கணிதம், இயற்பியல், வேதியல், விலங்கியல், பி.காம்., எம்.ஏ., தமிழ், எம் எசி., விலங்கியல், எம்.காம்., எம்ஃபில் (தமிழ்) முழு நேரம் மற்றும் பகுதி நேரம், பி.எச்,டி. (தமிழ்) முழு நேரம் மற்றும் பகுதி நேரம்.

**சான்றிதழ், பட்டயப் படிப்புகள்**
காந்திய சிந்தனை, பகுத்தறிவுச் சிந்தனை
மார்க்சீய சிந்தனை

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்**
**முதல்வர், யாதவர் கல்லூரி**
**மதுரை-625 014**

பானங்களின் அரசன் அட்லஸ் ரிஜிஸ்டர்டு லவ்ஜ

அருந்தி ஆனந்தமடையுங்கள்

## அட்லஜ் ரிஜிஸ்டர் லவ்ஜ

போன் : 67797

தயாரிப்பாளர் :

**A. K. நாகராஜன் - P. S. செல்வம்**

**தி சேலம் லவ்ஜ பாட்லர்ஸ்**

**216, சங்ககிரி மெயின்ரோடு, சேலம்-6**

நயம்! சுவை!! நாணயம்!!!

புகழ்பெற்ற நிறுவனம்

பொன்விழா கண்ட வாணிபம்

சுவைமிக்க காபித்தூள்

## ஸ்ரீ கிருஷ்ணா காபி ஒர்க்ஸ்

காபித்தூளே! என்பதுதான்
குளித்தலைவாழ் மக்களின் ஒருமித்த கருத்தும்
பாராட்டும். வாங்குவீர் ஸ்ரீ கிருஷ்ணா காபித் தூள்
பருகி சுறுசுறுப்பை சுவையுடன் நுகர்வீர்

அருட்செல்வர்

**சு. நடராசன்** — நிர்வாக இயக்குனர்

**ந. ஆனந்தகோபாலகிருஷ்ணன்** — உரிமையாளர்

## தச்சு கொல்லு உற்பத்தி நிலையம்

**ஊராட்சி ஒன்றியம், குளித்தலை**

எங்கள் தச்சு கொல்லு உற்பத்தி நிலையத்தில் விவசாய பள்ளிக்கூடங்கள் ' அலுவலக கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவையான எல்லா விதமான பர்னிச்சர் இரும்பு கிராதிகள், தேசீய சாண எரிவாயு கலன் தயாரிக்க டிரம்கள் குறைந்த விலையில் குறித்த காலத்தில் தயாரித்து வழங்கப்படும்.

**(ஒ-ம்) எ. சிவராமன்** — ஒன்றிய பெருந்தலைவர்

**(ஒ-ம்) ஆர். பாலகிருஷ்ணன்** — ஆணையர்

அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக்
காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே

சொல்லும் பொருளும் மற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும் எனக் காசை பராபரமே

கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொலலுவது என் இச்சை
பராபரமே

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

—தாயுமானவ சுவாமிகள்.

(!) (!)
(!)

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்,
10/13-.5, காளிங்கராயன் வீதி,
ராம் நகர்.
கோயமுத்தூர் - 641 009.

பல்கலைப் புலவர் தமிழ்க் " கா. சு. " அவர்களின் நூற்றாண்டு விழா மலருக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள் !


இந்தியாவிலேயே, IBR பாய்லர் தயாரிப்பதில்

திருச்சி **வீகேயென்** நிறுவனம்

முன்னணியில் இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

பாய்லர் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்.

☎ TRICHY OFF: 842571, 2572, 2573, 2574, 2575, 2576, 842671, 2672, 842771.

RANIPET - 4174

RES: 27834, 29344, 29434, 32674 ☎ TRICHY

2173 - RANIPET

**வீகேயென்**

துவாக்குடி, திருச்சி-15.